குருபரம்பரை
விளக்கம்

மஹான்களின் சரித்திரம்

உ

சிவமயம்.

முகவுரை.

திருச்சிற்றம்பலம்.

அருள்வளர்நந்திமேதகைவிளக்கியருள்சிவஞானபோதத்தைத்
தெருள்வளர்தமிழ்ச்செய்தளித்தமெய்கண்டதேவநற்சந்ததிவிள [ங்க
வருமொருதுறைசைத்திருநகர்நமச்சிவாயதேசிகனெடுமிந்தக்
குருபரன்வழிவந்தருணனிகொழிக்குங்குரவர்கள் பலரையுந்துதி [ப்பாம்.

திருக்கயிலாயமலையிலே திருக்கோயில்கொண்டெழுந்தருளியிருக்குஞ் சீகண்டபரமசிவன்பால் ஞானதீக்ஷையும், ஞானபிடேகமும், அபரசிவன் என்னுஞ் சிறப்பபிதானமும் பெற்று விளங்கும் சயிலாதி எனவும், செப்பேசுரன் எனவும் பிள்ளைத் திருநாமமுடைய திருநந்திதேவர் திருவருளுபதேசமரபிலே பத்தாவது பிற்றோன்றலாகப் பயிலுஞ் சித்தர் சிவப்பிரகாசதேசிகர் திருவருளாணையின்படி சீடர்களுக்குத் தீக்ஷைபுரிந்து சித்தாந்த சாத்திரோபதேசஞ் செய்துவரும் வண்ணந் திருவுளத்தெண்ணி, திருவாவடுதுறை என்னுந் திவ்விய ஸ்தலத்தைச் சுதந்தர வாசஸ்தானமாகக் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீபஞ்சாக்கரப்பெயரிய குருவினது அருளுபதேசபரம்பரை மான்மியத்தை விளக்குதலின்; இந்நூல் திருவாவடுதுறை ஆதீனக் குருபரம்பரை விளக்கம் எனப் பெயரெய்தியதாம் என்க.

அந்நூலில், தவசிரேஷ்டர்களாகிய தம்பிரான்சுவாமிகள் ஏனைய அடியவர்கள் சரித்திரங்களும் உளவேனும் முதன்மை பற்றி குருபரம்பரைவிளக்கம் எனப்பெயரெய்தியதாம் என்க.

இக்குருபரம்பரை விளக்கம் என்னும் இந்நூலை என்சிற்றறிவிற்கெட்டியவண்ணம் ஆராய்ந்து இயற்றி அச்சிற்பதிப்பிக்குமாறு செய்தேன். இதில் சரித்திரவேறுபாடு முதலியவை உளவேல் அறிஞர்கள் தெரிவிக்கின் அவைகளை இரண்டாவது பதிப்பில் அச்சிடுமாறுசெய்யும் அருத்தியுடையவனாகவுமிருக்கின்றேன்.

சுபம்.

இங்ஙனம்,

திருவாவடுதுறை ஆதீனம் மாதவச்சிவஞானயோகி
சுப்பிரமணியதேசிகர் அருளுபதேசம்பெற்ற
பூஜை சுப்பிரமணியத்தம்பிரான்.

உ

சிவமயம்.

சிறப்புப்பாயிரம்.

திருநெல்வேலி இந்துகாலேஜ் முதன்மைத் தமிழ்ப் பண்டிதன் மே. சொ. சுப்பிரமணியக் கவிராயரவர்கள் இயற்றிய அறுசீரடியாசிரிய விருத்தம்.

சீர்மருவு சிவதலங்கள் பலசூழ்ந்து சொல்வளங்கள் சிறந் தெப் போதுங், கார்மருவு காவிரியுங் காவிரியின் கரையில்வளங் கணித்தற் காகா, ஏர்மருவு மியற்புலவ ருவப்புடனே சோறுடைத்தென் றெடுத்துச் சொல்லும், பேர்மருவு தலைமையினாற் சென்னிநா டெனவுரைக்கப் பெறுஞ்சோ ணாட்டில். (க)

திருஞான சம்பந்த ராயிரம்பொன் பெறவருளித் தேவா ரங்கொண், டருண்ஞான வடிவுகொண்மா சிலாமணியொப் பின் முலையோ டமர்ந்து மோரும், பெருஞான நவகோடி சித்தர்கள்வா சஞ்செய்யப் பெற்று முண்மைக், குருஞான மணிகளுறு மாவடு தண் டுறைமேலாக் குலவு மாதோ. (உ)

அந்தநகர்க் கயிலாய பரம்பரையிற் றிருவெண்ணெ யமர் மெய் கண்டான், சந்ததியிற் சிவஞான போதநெறி தழீஇ ப்பூ தலத்தோ ருய்ய, வந்திடுசற் குருபரம் பரைவிளக்க நேயநூல் வயங்கச் செய்தான், புந்தியினிற் பொறப்பருத்தி யாலுலகர் மல விருளைப் போக்கு மாறே. (ங)

அன்னவன்யா ரெனிலாசு சூழ்துறைசை யாதீன மழகுற் றோங்கி, மன்னவரோ தயமாகச் சித்தாந்த குருபீடம் வயங்கச் செய்த, முன்னவரா கியபஞ்சாக் கரதேவின் பதினறு மொழியும் பட்டத், தென்னருமே புகழுஞ்சுப் பிரமணிய குருமணியி னிரு தாள் போற்றி. (ச)

செம்மையுறு கலையுடுத்துச் செம்மையுறு கலைபயின்று தீட் சை பூசை, யம்மையுமத் தனுமாமவ் வாசிரியன் கருணையின லரு ளப் பெற்று, மும்மையினுங் கதிதருமம் மூலகுரு பூசையினை

முறையே செய்து, மெய்ம்மையுறவ் வாதீன வதிகார பூசைகளை மேவச் செய்வேன். (௫)

புனையுமொழிற் கல்விபுரி யொழுக்கமெய்த் தறமெவரும் போற்றத் தக்கோன், எனையுமனக் குரியதுணை யாகவுட னிருந்து கற்க விசைந்த தூயன், இனையவனற் சுப்பிரம ணியசாமி யெனி லெவருந் தெரியும் பேரோன், நினைந்மனத் தின்புறுமந் நூலையிவ ணரங்கேற்ற நினைவு கொண்டு. (௬)

பல்லோரும் புகழ்ந்திடுமம் மரபுபதி னென்பானும் பட்ட மாக, எல்லோரும் புகழுவிருந் தான்மார்த்த லிலிங்கமுறு மெழிற் பேர் பூண்டு, சொல்லோரும் புலவர்கள்கற் பகஞ்சிந்தா மணியெ ன்று துதித்திதன் றம்பா, வல்லோர்கள் புகழுத்தன் சந்நிதியி லெந்நிதியும் வழங்கு மேலோன். (௭)

யாந்துளிகை யிளிற்கல்வி யாரம்பஞ் செயுநாட்டொட் டிந் நாள்காறும், ஆந்தகவின் வேண்டுவன காலமறிந் தெமக்கருள் வோ னகத்தியன்போற், போந்தபெருங் கல்வி*நமச் சிவாயகுரு பேரன்பு பூணப் பெற்ற, சாந்தகுண தயாநிதியெத் தவத்தோருந் தவப்பணிபூஞ் சலசத் தாளான். (௮)

காசுலா மலவிருநோய் தீர்மருந்தாக் காசினியி னுபதேசஞ் செய், தேசுலா மணியெனவே வயங்குவயித் தியலிங்க தேசிகன் பால், மாசிலா மனத்தொடறி வித்தவன்சந் நிதியவைநா வல்லோர் முன்னே, யேசிலா வின்பினரங் கேற்றின னிவ்வுலக மென்று மேத்த. (௯)

தனையொருவர் நிகரில்வயித் தியலிங்க தேசிகனூற் றகைமை நோக்கி, யனையதொரு மெய்ந்நூலைச் செய்தவனு மெமதுகுரு வானோனென் றனும், புனைபெயரோன் றுகையினு ளச்சிடுவோ னைப் பெயரே பூண்டோன் வேண்டு, மெனவுமெளி யெளிந்நூல் செய் தவனோ டுடன் கற்ற வியைபு மெண்ணி (௧௦)

பேரருள்கொண் டெனையச்சி லேற்றுகென்று னனையனருட் பெற்றினலே, பெருநுமிந் நூலுணர்ந்தோ ரிறைவனடி யெய்து வரென் றியாரு மெண்ணப், பாருறுதந் தவப்பேறு வந்தகுரு பரம்பரையின் விளக்க தூலென், ஆருயிர்குஞ் சிதசான வச்சேதி யவனியெலா முலாவிற் றன்றே. (௧௧)

இங்ஙனம்,

மே. சொ. சுப்பிரமணியன்.

---

*நமச்சிவாயகுரு சிவஞானசித்திப் பதவுரை ஆசிரியராகிய சுப்பிர மணியதேசிகசுவாமிகளுக்குப் துவிதீய ஆசிரியர் என உணர்க.

சிவமயம்.

திருக்கைலாய பரம்பரை திருவாவடுதுறை ஸ்ரீபஞ்சாக்கரதேசிகராதீனம் ஆசிரியர்கள் பரிபூரணதசை அடைந்த தலமும், மாசமும், திருநக்ஷத்திரமும் சரித்திரபக்க நம்பரும் வருமாறு:—

நெ.	ஆசாரியர்கள்.	பரிபூரணஸ்தலம்.	மாசம்	திருநக்ஷத்திரம்.	சரித்திர பக்க நம்பர்.
	மங்கலவாழ்த்து ...				க
க	திருநந்திதேவர் ...				எ
உ	சனற்குமாரமுனிவர் ...				கச
ங	சத்தியஞானதரிசனிகள் ...				கரு
ச	பரஞ்சோதிமுனிவர்				கஎ
ரு	மெய்கண்டசிவாசாரியர் ...	திருவெண்ணெய்நல்லூ[ர்	ஐப்பசி	சுவாதி	உக
சு	அருணந்திசிவாசாரியர் ...	திருத்துறையூர்	புரட்டாசி	பூரம்	உச
எ	மறைஞானசம்பந்தசிவாசாரியர் ...	திருக்களாஞ்சேரி	ஆவணி	உத்தரம்	உகூ
அ	உமாபதிசிவாசாரியர் ...	கொற்றவன்குடி	சித்திரை	அஸ்தம்	ஙக

நெ.	ஆசாரியர்கள்		பரிபூரணஸ்தலம்.	மாதம்.	திருநக்ஷத்திரம்	சரித்திர பக்க நம்பர்.
௯	அருணமச்சிவாயதேசிகர்	...	கொற்றவன்குடி	மார்கழி	திருவாதிரை	௪௩
௧௦	சித்தர்சிவப்பிரகாசதேசிகர்	...				௪௫
௧௧	ந்மசிவாயதேசிகர்	...	திருவாவடுதுறை	தை	அசுவநி	௫௪
	துவிதீய சிவப்பிரகாசதேசிகர்	...	பட்டீச்சுரம் வடதளி	ஆனி	பரணி	
	ஷை தெக்ஷிணாமூர்த்திதேசிகர்	...	திருவாவடுதுறை	மாசி	சித்திரை	
௧௨	மறைஞானதேசிகர்	....	ஷை	தை	சுவாதி	௬௪
௧௩	அம்பலவாணதேசிகர்	...	ஷை	சித்திரை	அவிட்டம்	௬௫
௧௪	உருத்திரகோடிதேசிகர்	...	மதுரை	கார்த்திகை	அனுஷம்	௭௫
௧௫	வேலப்பதேசிகர்	...	திருப்பூவணம்	ஷை	உத்தராடம்	௮௬
௧௬	குமாரசுவாமிதேசிகர்	...	சுசீந்திரம்	ஷை	ஷை	௮௯
௧௭	பிற்குமாரசுவாமிதேசிகர்	...	ஷை	ஆவணி	உத்திரட்டாதி	௯௧
	துவிதீய மு;க்தம்பலவாணதேசிகர்.		திருக்குற்றாலம்	மாசி	சித்திரை	
௧௮	மாசிலாமணிதேசிகர்	...	திருவெண்காடு	சித்திரை	உரோகணி	௯௬
	துவிதீய சிவக்கொழுந்துதேசிகர்...		திருவாவடுதுறை	மார்கழி	மூலம்	
	திரிதீய சுவாமிநாததேசிகர்	...	திருவண்ணாமலை	கார்த்திகை	உத்திரம்	
௧௯	இராமலிங்கதேசிகர்	....	திருவாவடுதுறை	ஷை	அனுஷம்	௧௧௩
௨௦	வேலப்பதேசிகர்	...	சங்கரநாயனார்கோயில்	புரட்டாசி	மூலம்	௧௧௫
	துவிதீய வேலப்பதேசிகர்	...	பேரூர்	ஆனி	பரணி	

நெ.	ஆசாரியர்கள்	பரிபூரணஸ்தலம்.	மாதம்.	திருநக்ஷத்திரம்	சரித்திர பக்க நம்பர்.
உக	பின்வேலப்பதேசிகர் ...	திருப்பெருந்துறை	வைகாசி	பூரட்டாதி	கஉஉ
உஉ	திருச்சிற்றம்பலதேசிகர் ...	திருவாவடுதுறை	ஆனி	பரணி	கஙரு
உங	அம்பலவாணதேசிகர் ...	ஷை	மார்கழி	கேட்டை	கருசு
உச	சுப்பிரமணியதேசிகர்	ஷை	கார்த்திகை	கார்த்திகை	களஉ
	துவிதீய கனகசபாபதிதேசிகர்	தளிகை	தை	கார்த்திகை	
	திரிதீய சுப்பிரமணியதேசிகர்	திருவாவடுதுறை	மாசி	அவிட்டம்	
உரு	அம்பலவாணதேசிகர் ...	ஷை	ஆனி	பூரம்	கஅச
உசு	சுப்பிரமணியதேசிகர்	ஷை	மார்கழி	சுவாதி	உ0உ
	துவிதீய நமசிவாயதேசிகர்	தளிகை	தை	கார்த்திகை	
உள	அம்பலவாணதேசிகர் ...	திருவிடமருதூர்	சித்திரை	சதயம்	

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

* முத்திபஞ்சாக்கரமாலை.

கட்டளைக்கலித்துறை.

திருவேயென் செல்வச் சிறப்பே சிவானந்தத் தெள்ளமுத
வுருவே யுருவமு மூருடன் பேருமொன் றும்புணரா
அருவே தெளிந்த வறிவேமெய் யன்பர்க் கருளுந்தெய்வத்
தருவேதென் கோமுத்தி முத்திபஞ்சாக்கர சற்குருவே. (௧)

சுந்தர மாலயன் வாழ்வுமைந் தாரிற் சுவர்க்கவைப்பு
மிந்திர ஞாலங் கனவெனக் கண்டு நினையடிக்கே
யந்தமில் காதலுற் றுபாத வின்பத் தமர்ந்திருக்கத்
தந்தருள் கோமுத்தி முத்திபஞ்சாக்கர சற்குருவே. (௨)

பண்டறி யாமை பிடித்துவிட் டேனை விடாதுபற்றிக்
கொண்டு குணவழி விட்டுத் திருத்தியென் கோதகற்றிப்
புண்டரி கப்பதந் தந்தாய்க்கென் னாலொரு போகமுண்டோ
தண்டமிழ்க் கோமுத்தி முத்திபஞ்சாக்கர சற்குருவே. (௩)

மாயாபடலங் கிழித்தருண் ஞானம் விளங்க வைத்துன்
னேயானந்தத்தி லமிழ்த்திடுவாய் நித்தமுத்த சுத்த
தூயாசராசர பேதங்கள் யாவையுந் தோற்றி விக்குந்
தாயான கோமுத்தி முத்திபஞ்சாக்கர சற்குருவே. (௪)

அரணங்கண் மூன்று மெரித்தாய் சரணமதிலுமன்பர்
மரணம்படா தருள் வைத்தாய் சரணம் வலியவந்தக்
கரணங்களான் மெலிந்தெய்த்தேன் சரணநின் பொற்கழலே
சரணந்தென் கோமுத்தி முத்திபஞ்சாக்கர சற்குருவே். (௫)

* இப்பாமாலை செய்தோர் பெயர் புலனாகவில்லை.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

திருக்கயிலாயபரம்பரைத்

திருவாவடுதுறை ஆதீனக்

குருபரம்பரை விளக்கம்.

மங்கலவாழ்த்து.

திருச்சிற்றம்பலம்.

தேவாரம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே. (௧)

காப்பு.

வானுலகு மண்ணுலகும் வாழ்மறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத வைந்துகர மூன்றுவிழி நால்வா
யானைமுக னைப்பரவி யஞ்சலிசெய் கிற்பாம். (௨)

சபாநாதர்.

சீராருஞ் சதுர்மறையுந் தில்லைவா ழந்தணரும்
பாராரும் புலிமுனியும் பதஞ்சலியுந் தொழுதேத்த
வாராருங் கடல்புடைசூழ் வையமெலா மீடேற
வேராரு மணிமன்று ளெடுத்ததிரு வடிபோற்றி. (௩)

சிவகாமசுந்தரி.

பாங்கெழுந்த சமண்முதலாம் பரசமய விருணிங்கச்
சிரந்தழுவு சைவநெறித் திருநீற்றி னொளிவிளங்க
வரந்தைகெடப் புகலியர்கோ னமுதுசெயத் திருமுலைப்பால்
சுரந்தளித்த சிவகாம சுந்தரிபூங் கழல்போற்றி. (ச)

தக்ஷிணாமூர்த்தி.

இருள்வினையா திகளகலக் கடைக்கணளித் தறமாதி யின்ப நான்கி
னொருமுடிவே புத்திமுத்தி யாகவதி லொன்றைந்து முணர் பத்தாகப்
பொருள்விரவப் பத்திலொன் றின் புணர்ப்பெழுத்தஞ் சக்கரத்திற் போ
தெருளவருள்பரமகுரு தட்சிணாமூர்த்திபதஞ்சிந்திப்பாமால். [ந்த ரூபந்

விநாயகர்.

ஒளியான திருமேனி யுமிழ்தான மிகமேவு
களியாரு வரும்யானை கழனாளு மறவாம
லளியாளு மலர்தூவு மடியார்க ளுளமான
வெளியாகும் வலிதாய வினைகூட நினையாவே. (கூ)

சுப்பிரமணியர்.

அருமறையர் கமமங்க மருங்கலைநூ றெரிந்த
வகத்தியனுக் கோந்துரைக்கு மருட்குருவாங் குருவை
திருமறைமா முனிவர்முனி தேவர்கடந்தேவன்
சிவனருள்சேர் திருமதலை தவநிலையோர்தெய்வம்
பொருமறையார் கழல்வீரர் வீரன் கையிற் பூவீர்கொன்
டோவாது போற்றுமடி யார்கள்
கருமறையா வகையருளிக் கதிவழங்குங் கந்தன்
கழலிணைக ளெஞ்சிரத்திற் கருத்தில் வைப்பாம். (எ)

சண்டேசுரர்.

புண்ணியம் பாதக மாகப் போற்றிய
வண்ணலங் தக்கனு ரகத்து நாணிய
புண்ணியம் பாதக மாகப் போற்றிய
வண்ணலங் தன்முடித் தடிகள் போற்றுவாம். (அ)

திருநந்திதேவர்.

காநான்குங் கறைமிடறு மூன்று கண்ணுங்
கங்கைமதிச் சடைமுடியுங் கரங்க டம்மின்
விரவாரை வென்மழுவு மானு மிக்க
விறற்சுரிகை பொற்பிரம்பும் விளங்கி யோங்க
வரனார்தம் மருளதனாற் பெற்றே நாளு
மபரபா மேசுர னென் றறைய வுண்டாய்த்
திரமேவுந் திருநந்தி தேவன் பொற்றாள்
சிந்தையினுஞ் சிரத்தினிலுஞ் சேர்த்தல் செய்வாம். (௯)

சைவசமயாசாரியர்.

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
யாழிமிசைக் கன்மிதப்பி லணைந்தபிரா னடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
யூழிமலி திருவாத வூர்திருத் தாள்போற்றி. (௰)

திருத்தொண்டர்கள், சேக்கிழார்நாயனார்.

தில்லைவா ழந்தணரே முதலாகச் சீர்படைத்த
தொல்லையதாந் திருத்தொண்டத் தொகையடியார் பதம்போற்றி
யொல்லையவர் புராணகதை யுலகறிய விரித்துரைத்த
செல்வமலி குன்றத்தூர்ச் சேக்கிழா ரடிபோற்றி (௧௧)

மெய்கண்டதேவர்.

பண்டைமறை வண்டரற்றப் பசுந்தேன்ஞானம்
பரிந்தொழுகச் சிவகந்தம் பரந்து நாறக்
கண்டவிரு தயகமல முகைக ளெல்லாங்
கண்டிறப்பக் காசினிமேல் வந்தவருட் கதிரோன்
விண்டமலர்ப் பொழில்புடைசூழ் வெண்ணெய் மேவு
மெய்கண்ட தேவன் மிகுசைவ நாதன்
புண்டரிக மலர்தாழச் சிரத்தே வாழும்
பொற்பாத மெப்போதும் போற்றல் செய்வாம். (௧௨)

சந்தானகுரவர்.

தேவர்பிரான் வளர்கயிலை காவல் பூண்ட
திருநந்தி யவர்கணத்தோர் செல்வர் பாரிற்
பாவியசத் தியஞான தரிசனிக ளடிசேர்
பரஞ்சோதி மாமுனிகள் பதியா வெண்ணெய்
மேவியசீர் மெய்கண்ட திறலார் மாறா
விரவுபுக ழருணந்தி விறலார் செல்வத்
தாவிலருண் மறைஞான சம்பந்த ரிவரிச்
சந்தானத் தெமையாளுந் தன்மை யோரே. (கக)

உமாபதிசிவாசாரியார்.

அடியார்க்கெளிய னெனத்தில்லை யண்ண லருளுந் திருமுகத்தின்
படியே பெற்றான் சாம்பாற்குப் பரம முத்தி யப்பொழுதே
உடலுங் கரைவுற் றடைந்திடவா னுயர்திக்கையினை யருணேக்காற்
கடிதிற் புரிகொற் றங்குடியார் கமல மலரின் கழல் போற்றி. (கச

அருணமச்சிவாயதேசிகர்.

பெற்றான்சாம்பான்மனைவி யிறைமுதலோர் பேதுறவாற் பெற்றவையம்
இற்றேடத் தம்பூசை யீசனுக்காட் டருணீர்பாய்ந் தெளிதாய்ப் பாகம்
உற்றேங்கு முள்ளிக்கு வீடந்த வுமாபதியா ருபதே சத்தின்
முற்றேன்ற லாயிய மருணமச்சி வாயகுரு முதற்றாள் போற்றி. (கரு)

திருவளர் கொற்றங் குடியிடை யமர்ந்த சீருமா பதிசிவாசிரியன்
அருளுப தேசத் தோடுதன் பூசை யம்பல வாணர்பூ சனையும்
புரிதரு மதிகா ரத்தையு மீந்து பொன்னடி சூட்டிடப் பெற்ற
குருவரு ணமச்சி வாயகோ மான்றன் குலமலர்த்தாளிணைபோற்றி

சித்தர் சிவப்பிரகாசதேசிகர்.

உத்தமக்கோ முத்திபெறு மொருபதியின் வதிந்தருளி
எத்திறத்த வுயிர்களுக்கு மெளிதாக வொளிர்ஞானம்
பத்திகொள வறிவுறுத்திப் பாவிடு தரும்பெரிய
சித்தர்சிவப் பிரகாச தேசிகர்தாள் சிரத்தணிவாம். (கஎ)

நமச்சிவாயதேசிகர்.

இருதய நாப்ப ணஞ்செழுத் துருவி னிறைவனை யுயிர்க் கொலை செயாமை, அருள்பொறி யடக்கல் பொறைதவம் வாய்மை யன்பறி வென்னு மென் மலர்கொண், டொருமையோ டருச்சித் திடகவென் றடியார்க் கொள்ளிய தீக்கைசெய் துணர்த்தத், திரு வமர் துறைசை யுறையருட் குருவாந் திருநமச் சிவாயர்தாள் போற்றி. (கஅ)

கயிலாய பரம்பரையிற் சிவஞான போதநெறி காட்டும்வெண் ணெய், பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர் மெய்ஞ் ஞான பானு வாகிக், குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ் குருநமச்சி வாய தேவன், சயிலாதி மரபுடையோன் திருமரபு நீடூழி தழைக மாதோ. (கசு)

சுப்பிரமணியதேசிகர்.

கேவலத்திற் கிடந்தவெனைச்சகலகே வலத்தினிடைக் கெழுவு வித்தே, யாவலா யிருவினையின் பயனருந்தச் செய்வித்தங்கன் பாசுத்த, மேவவத்தைச் சகலமுதற் றுரியாதீ தம்வரையு மேவச்செய்யுந், தேவனையா வடுதுறைச்சுப் பிரமணிய குருமணி யைச் சிந்தைசெய்வாம். (உ0)

துன்னியபஞ் சாக்கரதே சிகர்க்கிரேட் டாகியபிற் றோன்ற லாகித், தன்னிகரி லடியவருக் கமுதாகித் தாயாகித் தந்தை யாகி, மின்னியநன் னிதியாகிப் பதியாகித் துறைசைநகர் விளங்க வென்றும், மன்னியசுப் பிரமணிய குருமணிதன் மரு மலர்த்தா ளிணைகள் போற்றி. (உக)

அம்பலவாணதேசிகர்.

பரவுபுகழ்த் துறைசைப்பஞ் சாக்கரசற் குரவர்க்குப் பஃதொ
விரவிடுபிற் றோன்றலென வந்தடியா ரிடேற விமல னாகி [டேழா
அரவமதிச்சடைமறைத்த வரனெய்கற்பகதருவா யமர்ந்துவாழுங்
குரவர்சிகா மணியாமம் பலவாண குரவனடி குறித்து வாழ்வாம்.

குருபாரம்பரை.

திருநந்திகுருசனற்குமாரசத்தியஞானதரிசனிபரஞ்சோதியார்
திகழுமெய்கண்டாருணந்திமறைஞானசம்பந்தருமாபதிதேசிகர்
அருணமச்சிவாயர்சித்தருசிவப்பிரகாசரணிதுறைசைநமசிவாயர்
ஆரணம்பாவுமறைஞானாம்பலவாணரைவிருத்திரகோடியார்
பொருவில்வேலப்பரிருகுமாசாமிக்குரவர்புகழ்மாசிலாமணியர்தம்
புதல்வரெனவருராமலிங்கரிருவேலப்பபோதரெமையாளவே
வருதிருச்சிற்றம்பலக்குரவரம்பலவாணகுருசுப்பிரமணியர் [ண்டி
வரதனம்பலவாணகுருசுப்பிரமணியரம்பலவாணரடிகள்போற்றி

அருள்வளர்நந்தி மேதகைவிளக்கி யருள்சிவஞானபோ தத்தைத்
தெருள்வளர் தமிழ்ச்செய் தளித்தமெய் கண்டதேவனற் சந்ததி
[விளங்க
வருமொரு துறைசைத்திருநகர் நமச்சிவாயதேசிக னெடுமிந்தக்
குருபரன் வழிவந் தருணிகொழிக்குங் குரவர்கள் பலரையுந்
[துதிப்பாம். (உச)

சிவஞானயோகிகள்.

சிலநிகழ் மூலவா கமப்பொருளோன் றென்றுகி திறம்பு றுது
ஞாலநிகழ் குலதெய்வ மெனப்பலருங் கொண்டாட நாங்க ளுய்யச்
சாலநிகழ் சமவாத முதலியபோ யொளித்திடவு தயமாய் வந்த
பாலநிகழ் விழிமறைத்த சிவஞான யோகிபதம்பணிந்துவாழ்வாம்.

பேயன்னபுறச்சமயப்பிணக்குநூல் வழியனைத்தும்பிழையே யன்றி
வாயன்மை தெரிந்துசைவ சித்தாந்த வழிதேறி யதீத வாழ்விற்
போயன்மி யஞ்செழுத்துந் திருநீறுங் கண்டிகையும் பொருளாக்
[கொண்ட
நாயன்மார் திருக்கூட்டம் பணிந்திறைஞ்சும் பெரும்பேறு
[நான்பெற் றேனால். (உரு)

மங்கலவாழ்த்து முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

உ

கணபதி துணை.

குருபரம்பரைவிளக்கம்.

முதலாவது
திருநந்திதேவர் சரித்திரம்.

திருச்சிற்றம்பலம்.

அங்கணன் கயிலை காக்குமகம்படித்தொழின்மை பூண்டு
நங்குரு மரபிற் கெல்லா முதற்குரு நாத னாகிப்
பங்கயந் துளவ நாறும் வேத்திரப் படைபொ றுத்த
செங்கையெம் பெருமானந்தி சீரடிக் கமலம் போற்றி.

பூர்வகாலத்திலே சகல வேதாகமங்களையும் உணர்ந்து சிவ ஞானச்செல்வராய்ச் சிவபெருமானிடத்து மெய்யன்புடையராய், ஐம்புலன்களுந்தம் ஏவல்வழிநிற்ப அறநெறிவழுவாதொழுகும் அந்தணர்குல திலகராய், *சிலாதரென்னுஞ்சிறப்புபெயர்வாய்ந்த

* சிலாதர் என்றது, காரணப்பெயர். சிலா + அதர் = மலையையுணருஞ் செய்தவர் என்பது பொருள். அவர் பிள்ளைமைப் பருவத்திலே தன் வீட்டிற்குப் பிச்சைக்கு வந்தவேதியனது அன்னபாத்திரத்தில் அவ்வந் தணன் அறியாமல் ஓர் சிறுகல்லைவீசினர். அந்தணன் அதையோராது அச்சிறுகல்லுடன் உணவைப்புசித்தனன். அவர் வயது வளருந்தோ றும் விவேகமிகுந்தவராகி ஞானமுதலியன குறைவில்லாமற் பெற்றுத் தமது தவப்பலனால், பரலோகங்களைத் தோழர்களுடன் சென்று பார்த்து வருகையிலே, யமபுரத்தில் அந்தகனது அரசிருக்கைக்கு அருகே ஓர் பெரும்பாறையிருக்கக் கண்டு இஃதென்ன ! நல்ல இடத்தில் பெரும் பாறையிருக்கின்றதேயென அங்கு நின்றவர்களை விசாரிக்க அவர்கள், உலகத்தில் ஒருவன் சற்பாத்திரமான ஒரு பிராமணனது போசனத்திற் கல்லைவீசினன். அதுவே இந்தப் பாறையாக வளர்ந் திருக்கிறது. அச்சிறுவன் இறந்த பின்னர் இவ்வளவையும் எங்கள் தண்டனை யுட்பட்டுக்கொண்டு அவன் புசிக்கவேண்டு மென்றார்கள்.

ஒருமுனிவர் இருந்தார். அம்முனிவர் தாம் புத்திரப்பேறு கருதித்திருவையாற்றை அடைந்து, அயனரி தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து, சிவபூசைமுடித்துத், திருக்கோயிலைப்பிரதக்ஷணஞ் செய்து, சிவபெருமான் திருமுன்புநின்று வணங்கி, ஸ்ரீபஞ்சாக்ஷரத்தைச் செபித்துப் பஞ்சாக்கினிமத்தியில் ஒருகாலினின்று, அநேக நாட்கள் தவஞ்செய்துகொண்டிருந்தார்.

சிவபெருமான் அதற்கிரங்கி இடபவாகனத்தின்மேற் பார்வதிசமேதராய் எழுந்தருளிவந்து, முனிவனே! நீ விரும்பிய வரத்தைக்கேள். என்ன; அவர் எம்பெருமானே! அடியேனுக்கு ஒரு சற்புத்திரனைத் தந்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தார். அதற்கு எண்ணிரண்டாண்டு வாழ்நாள்பெறும் ஒருசற்புத்திரன் நீ செய்யும் யாகபூமியில் உழுபடையின் மூலமாக வெளிப்படுவானெனக்கூறி மறைந்தனர்.

பின்னர் அவ்வாறே சிலாதமுனிவர் யாகஞ்செய்யக்கருதி, பொன்னேர்பூட்டி யாகசாலையை யுழுதபொழுது உழுபடைச்சாலின் மூலமாக ஒரு மாணிக்கப்பெட்டி தோன்ற, அதனை முனிவர் திறந்து பார்த்தனர். அதனுள்ளே நெற்றிக்கண்ணும், இளம்பிறை தவழுஞ்சடையும், நான்கு தோளுமாக விளங்குஞ் சிவமூர்த்தத்தைக்கண்டு, மயங்கி தோத்திரஞ்செய்து நின்றார். அப்போது முனிவனே! பெட்டியை மூடித்திற என்று, ஆகாயத்தில் ஓர் அசரீரிவாக்குத்தோன்றலும், அவ்வாறே மூடித்திறந்தபொழுது அப்பெருமானார் முன்தோன்றிய திருவுருமாறி ஒரு இளங்

அப்பொழுது அவருக்குத் தஞ்செயலேயெனத் தெளிந்து மனந்துடித்து இதற்குஏதேனும் பரிகாரமுளதோ எனவினவ; யமகிங்கரர்அவன் இவ்வளவு பாறையைப் பூமியிலே அரைத்துக்குடித்தால் இதுகரையுமென்றார்கள். அதனையுட்கொண்டு முனிவர் தமது நகரத்தையடைந்து, அவ்வளவினையுடைய பாறையைக் குறிப்பிட்டுச் சிவயோகத்திலிருப்பதும் அதை உடைத்துக்கரைத்துக் குடிப்பதுமாக நியமமுற்றும் மலைவடிவான பாறையைக் கரைத்தொழித்து விட்டனர். இப்படி யமபுரத்தில், தமக்காக வளர்ந்திருந்த சிலையை ஹதஞ்செய்தகாரணத்தால் சிலாதர் எனக்காரணப்பெயர் பெற்றனர்.

குழவியாகி அழுதனர். முனிவர், திருவருளை நினைந்து, ஆனந்த சாகரத்தழுந்தி, ஒருவாறுதெளிந்து, அக்குழந்தையையெடுத்து மார்போடணைத்து, உச்சிமோந்து, தமது மனைவியாரிடத்துக் கொடுப்ப; அவ்வம்மையார் அக்குழந்தையைத் தமது இருகாங்களாலும் ஏந்தி வாங்கிப்பாலூட்டி வளர்த்து வந்தனர் முனிவர் அக்குழந்தைக்குப் பெரியோர்களால் செப்பேச்சுரன் என்று நாமகரணஞ்செய்வித்து, கல்விபயிலச்செய்துவருநாட்களில் அப்பிள்ளைக்கு எண்ணிரண்டாண்டெய்தாநிற்ப; தாய் தந்தையர் அது நோக்கி வருந்துவாராயினர்.

அதனையுணர்ந்த அப்புத்திரர், பெற்றோரைநோக்கி நீங்கள் மனம்புலர்தற்குக் காரணம் யாதென வினவ, அவர்கள் தமது கருத்தைத் தெரிவிக்க, அவர் தாய் தந்தையரை நமஸ்கரித்து "நீவிர் வருந்தற்க யான் தவஞ்செய்து அழியாவரம் பெறுகின்றேன்" என்று தேறுதல்கூறி, அநுமதிபெற்று அவ்விருவரையும் வணங்கி விடைபெற்றுத் திருவையாற்றை அடைந்து, திருக்கோயிலின் பாங்கருள்ள அயனரிதீர்த்த மத்தியினின்று அருந்தவஞ்செய்ய, அதற்கு இரங்கிச் சிவபெருமான் இடபவாகனத்தின்மீது உமாதேவியாரோடும் எழுந்தருளி நித்திய தேகந் தந்து, ஞானதீக்கைபுரிந்து, அவருக்கு நந்தி யென்னுந் திருநாமஞ்சாத்தி, ஞானபிடேகஞ்செய்து சாரூப்பியமளித்து, அவரோடு திருக்கயிலையை யடைந்து, அங்குச் சிவகணங்களுக்கெல்லாம் தலைவராயிருந்து, காவற்றிருத்தொண்டு புரிந்து வரும் வண்ணம் அவருக்குச் சுரிகையும் பிரம்பும், கொடுத்துத் திருமுடிசூட்டியருள, அவர் அவ்வாறே அங்கமர்ந்து அருட்பணி புரிந்து வருவாராயினர். அங்ஙனம் அருட்பணிபுரிந்து வருநாட்களில் ஸ்ரீகண்டபெருமான் கருணைகூர்ந்து வேதசிவாகமங்களை உபதேசித்து அபரசிவனென்னும் சிறப்பபிதானங்கொடுத்தருளினர்.

அங்ஙனம், வேதசிவாகமங்களெல்லாம் கேட்டருளிய நந்திபெருமான் சீகண்டமுதல்வரை வணங்கிநின்று, வேதசாரமாகிய சிவாகமங்கடோறும் சரியை முதலிய நாற்பாதங்களுஞ் சிறுபான்மை வேறுவேறாகக்கூறப்பட்டன. அவற்றுள் உண்மையாவது

இதுவென்று அருளிச்செய்யவேண்டுமென இரந்து விண்ணப்பஞ்செய்து வினுவவழிச், சிகண்டமுதல்வர் கருணைகூர்ந்து "நன்றே வினவினய்! * அநந்தேவர் எமக்கு அருளிச்செய்த வாறே கூறுகின்றோம்; கேட்பாயாக" என்றருளிக், "கற்பந்தோறும் படைப்பு வேறுபாடுங் கேட்போர்கருத்து வேறுபாடும் பற்றி அவற்றிற்கு இயையச்சரியைமுதலிய மூன்றுபாதங்களும் ஆகமங்களின் வெவ்வேறாகக் கூறப்பட்டன. ஆகலான்; அவற்றுள் எவ்வாகமத்தின்வழி யார்நீக்கைபெற்றார்? அவ்வாகமத்தின் வழி அவர் ஒழுகற்பாலர். இனி, ஞானபாதமாவது பொருட்டன்மை உணர்த்துவதாகலான் அது பல திறப்படுதல் பொருந்தாமையின், அவையெல்லாந் தூலாருந்ததி முறைமைபற்றிக் கூறப்பட்டனவன்றி மாறுகோளல்லவென்பது வகுத்துணர்த்து தற்பொருட்டு, இரௌரவாகமத்துட் பன்னிரு சூத்திரத்தாற் கூறப்பட்டது சிவஞானபோதம். என்பதோர் படலம்: அது கேட்டார்க்கு எல்லாவாகமப் பொருள்களும் மாறுகோளின்றி இனிது விளங்கும்" எனக்கூறி, அச்சிவஞானபோதத்தை நந்தி பெருமானுக்கு அருளிச்செய்தார். நந்தி பெருமானும் அது கேட்ட துணையானே எல்லா ஐயமும் நீங்கி, மெய்ப்பொருள் தெளிந்து, சிவாநந்த வாரிதியின் மூழ்கி, முன்போலச்சிவபிரான் திருவணுக்கத்திருத்தொண்டு புரிந்து வருவாராயினர்.

அங்ஙனம் நந்திபெருமானுக்குச் சிவபிரான் வேதாந்தத் தெளிவாஞ் சைவசித்தாந்தத்தரும் பொருளுண்மையை விளக்கியருளிய திருவருட்டிறத்தினை, பிரமபுத்திரராகிய சனற்குமார முனிவர் முதலாகிய எண்மருந்தெரிந்து, திருக்கயிலையடைந்து, சிவபிரானைத்தெரிசித்துத், தமக்கும் அங்ஙனம் பதி, பசு,பாசத் துண்மையை உபதேசித்தருளவேண்டுமென இரந்து விண்ணப்பஞ்செய்துநிற்ப; சிவபிரான் அவர்களது பரிபாக நிலைமையைத்

---

* அநந்ததேவர் வித்தியேசர் எண்மரில் ஒருவர்; இதனுண்மை சிவஞானபாடியத்தில், சிவஞானபோத நூற்சிறப்புப் பாயிரத்துள், அந் நூல்வரலாறு கூறியவாற்றால் இனிது விளங்கும்.

திருவுளத்திற்கொண்டருளி நந்திபெருமானை அழைத்துக் *குரு சந்தானம் விளங்க அவர்களுக்கு முறையானே அருளுபதேசஞ் செய்யும்படி ஆணைதந்தருள, நந்திபெருமான் அவர்கட்குச் சிவ தீக்ஷைபுரிந்து ஞானபிடேகஞ்செய்து தமக்குச்சிவபிரான் உப தேசஞ்செய்தருளியமுறையாக சிவஞானபோதமென்னும் ஞான நூலினை உபதேசித்தருளினர்.

இங்ஙனம், முனிவர்கட்கும், தேவர்கட்கும், சிவகணங்கட் கும், ஞானோபதேசஞ்செய்துகொண்டு, அங்கணன்கயிலை காக்கும் அகம்படித்தொழின்மையை இடையறாப்போன்போடு இயற்றி, நங்குருமாபிற்கெல்லாம் முதற்குருநாதனாகி அங்கு வீற்றிருந்த ருளினர்.

திருநந்திதேவர் திருக்கயிலாயபதியாகிய சீகண்ட பரமசிவ னால் சாரூப்பியமும், சிவகணங்களுக்குத் தலைவராய்ச் சுரிகையும் பிரம்பும், பெற்று அங்கணன் கயிலைகாக்கும் அகம்படித்தொழின் மையும் அபரசிவனென்னுஞ் சிறப்பபிதானமும் பூண்டருளினர் என்பதூஉம், குருசந்தானம் விளங்க இவர்பால் அருளுபதே சம்பெற்றவர் சனற்குமார முனிவர்முதலாகிய எண்மர்என்பதூ உம், திருத்தொண்டர் பெரியபுராணம் சிவநெறிப்பிரகாசம் திரு மந்திரம் முதலிய நூல்களிற் கூறியவாற்றால் இனிது புலப்படும்.

அவைவருமாறு:—

திருத்தொண்டர் புராணம்.

பொன்னின் வெண்டிரு நீறு புனைந்தெனப்
பன்னு நீள்பனி மால்வரைப் பாலது
தன்னை யார்க்கு மறிவரி யானென்று
மன்னி வாழ்கயி லைத்திரு மாமலை. (க)

---

* சிவமகாபுராணத்துள் தர்மசங்கிதையில் மன்மதன் கதையுரைத்த அத்தியாயத்திலும், அப்புராணத்துள் ஏனையசங்கிதைகளிலும், குருசந்தானத்தின் உண்மை நன்கு விளங்கும். ஆண்டுக்காண்க.

வேதநான் முகன்மால் புரந்தரன் முதலாம் விண்ணவ ரெண்ணிலார் மற்றுங், காதலான் மிடைந்த முதற்பெருந் தடையாங் கதிர்மணிக் கோபுரத் துள்ளான், பூதவே தாளப் பெருங்கண நாதர் போற்றிடப் பொதுவினின் றாடு, நாதனு ராதி தேவனூர் கோயி லுபக னந்தியெம் பெருமான். (௨)

நெற்றியிற் கண்ணர் நாற்பெருந்தோளர் நீறணி மேனிய ரநேகர், பெற்றமேல்கொண்ட தம்பிரானடியார் பிஞ்ஞகன் றன்னருள் பெறுவார், மற்றவர்க் கெல்லாந் தலைமையாம் பணியு மலர்க்கையிற் சுரிகையும் பிரம்புங், கற்றைவார் சடையா னருளினாற் பெற்றான் காப்பதக் கயிலைமால் வரைதான். (௩)

சிவநெறிப்பிரகாசம்.

கரநான்குங் கறைமிடறு மூன்றுகண்ணுங் கங்கைமதிச் சடைமுடியுங் கரங்க டம்பில், விரவாரை வென்மழுவு மானு மிக்க விறற்சுரிகை பொற்பிரம்பும் விளங்கி யோங்க, வரனார்தம் மருளதனாற் பெற்றேநாளு மபரபர மேசுரனென் றறையவுண்டாய்த், திரமேவுந் திருநந்தி தேவன்பொற்றாள் சிந்தையினுஞ் சிரத்தினினுஞ் சேர்த்தல் செய்வாம். (௪)

திருமந்திரம்.

நந்தி யருள்பெற்ற நாதரை நாடிடின்
நந்திகள் *நால்வர் சிவயோக மாமுனி
மன்று தொழுத பதஞ்சலி வியாக்கிரம
ரென்றிவ ரென்னோ டெண்மரு மாமே. (௫)

பெற்றமு மானு மழுவும் பிரிவற்ற
தற்பரன் கற்பனை யாகுஞ் சராசரத்
தற்றமு நல்கி யடியேன் சிரத்தினி
னற்பத மும்மளித் தானெங்க ணந்தியே. (௬)

---

* அகத்தியர், புலத்தியர், சனகர், சனற்குமார் என்னுமிவர்களை.

உடல்பொருளாவி யுதகத்தாற்கொண்டு
படர்வினை பற்றறப் பார்த்துக் கைவைத்து
நொடியினடி வைத்து நுண்ணுணர் வாக்கிக்
கடிய பிறப்பறக் காட்டினன் நந்தியே. (எ)

சூர்வ னுயிர்முச் சொரூபமுங் கைக்கொண்
டரிய பொருண்முத் திரையாகக் கைக்கொண்டு
பெரிய பிரானடி நந்திபேச் சற்று
வுருகிட வென்னையங் குய்யக்கொண்டானே. (அ)

பேச்சற்ற வின்பத்துப் பேரானந் தத்திலே
மாச்சற்ற வென்னைச் சிவமாக்கி மாள்வித்துக்
காச்சற்ற சோதி கடன்மூன்றுங் கைக்கொண்டு
வாச்ச புகழ்மாளத் தாடந்து மன்னுமே. (கூ)

இதயத்து நாட்டத்து மென்றன் சிரத்தும்
பதிவித்த பாதம் பரம்பர நந்தி
கதிவைத்த வாறுமெய் காட்டிய வாறும்
விதிவைத்த வாறும் விளம்பவொண் ணாதே. (க0)

திருவடி வைத்தென் சிரத்தரு ணோக்கிப்
பெருவடி வைத்தந்த பேர்நந்தி தன்னைக்
குருவடி விற்கண்ட கோனையெங் கோவைக் (கக)
கருவழி வாற்றிடக் கண்டுகொண் டேனே.

சந்திப் பதுநந்தி தன்றிருத் தாளிணை
சிந்திப் பதுநந்தி செய்ய திருமேனி
வந்திப் பதுநந்தி நாமமென் வாய்மையாற்
புந்திக்கு னிற்பது நந்திபொற் போதமே. (கஉ)

திருநந்திதேவர் சரித்திரம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

இ ர ண் டா வ து,

சனற்குமாரமுனிவர் சரித்திரம்.

திருச்சிற்றம்பலம்.

ஆசிரியவிருத்தம்.

துன்னி முனிவர் சூழ்கயிலைத் தூயநந்தியுபதேசம் [றும்
பன்னி மண்பொன் பாசமெனும் பற்றைநீக்கும் பரிசென்
மன்னி விளங்குஞ் சனற்குமர வரமாமுனிவ நின்சரண
முன்னி வழுத்தியி னிப்பிறவியுறாதவண்ணமிறைஞ்சுவனே.

திருக்கயிலாயத்திலே சீகண்டபரமேசுரன் திருவருளாணை யளித்தவண்ணம் அபரசிவனாகிய திருநந்திதேவர்பாற் சென்று ஞானோபதேசம்பெற்ற அகத்தியர், புலத்தியர், சனகர், சனற்குமாரர், சிவயோகர், வியாக்கிரமர்; பதஞ்சலியார், திருமூலர், ஆகிய எண்மருள் ஒருவராகிய சனற்குமாரமுனிவர், தமது ஞானாசிரியராகிய நந்திபெருமான் உபதேசித்தருளிய சிவஞானபோத மென்னும் பன்னிரு சூத்திரங்களையுஞ் சிந்தித்துத், தெளிந்து, நிஷ்டைகூடி வெள்ளியங்கிரியில் வீற்றிருந்து,தம்பால் வந்தடைந்த பக்குவச்சீடர்களுக்குச் சிவதீக்கை புரிந்துதமது ஆசிரியர் உபதேசித்தருளிய முறையாக ஞானோபதேசஞ் செய்துவருநாட்களில்; அருந்தவச்செல்வராய், வீடுபேற்றின் கண்வேட்கை மிக்குடையராய், நல்லாசிரியனை நாடிவரும் ஓர் முனிவரர், சிவபெருமான் திருவருள்கூட்டத் திருக்கயிலாயத்திற்சென்று, அங்குத்தமது அருந்தவப்பயனே ஒருவடிவங்கொண்டு நேர்வந்து நின்றாலொப்பஆங்கு எழுந்தருளியிருக்குஞ் சைவசித்தாந்தஞான பாஸ்கரராகிய சனற்குமாரமுனிவரைக் கண்களாரத்தரிசித்து, இவரேஎன்னையடிமை கொண்டு இறவாவின்பவீடளிக்க வெழுந்தருளிய ஞானதேசிகராவாரெனச் சிந்தைசெய்து, அத்தேசிகோத்தமர் திருவடிகளில் வீழ்ந்துநமஸ்கரித்து, நாயினேன் உய்ந்தேன்! உய்ந்தேன்! என்று விண்ணப்பஞ்செய்து நின்றனர்.

ஞானதேசிகர் அங்ஙனம் மெய்யன்பினால் வழிபட்டுநிற்கும் அம்முனிவரைநோக்கி, அவரது பரிபாகசீர்மையை நன்காராய்ந்து, இம்மாணவகன் நமது ஞானோபதேச பரம்பரை அங்குரித்தற்கோர்களைகணுவானெனத் திருவுளத்தோர்ந்து, ஞானதீக்கை புரிந்து, உண்மைஞானத்தினை முன்செய் தவப்பேற்றால் அகக்கண்ணால் இயல்பாகவே தேர்ந்திருந்தமை யாராய்ந்து தீக்ஷா நாமஞ் சத்தியஞானதரிசனியெனச் சாத்தி, ஞானபிடேகஞ் செய்து, தமது ஞானதேசிகர்பால் தாம் கேட்டமுறையானே சிவஞானபோதம் என்னும் பன்னிரு சூத்திரங்களையும் உபதேசித்தருளினர்.

சனற்குமாரமுனிவர் சரித்திரம்.

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

மூன்றாவது,

சத்தியஞானதரிசனிகள் சரித்திரம்.

திருச்சிற்றம்பலம்.

ஆசிரியவிருத்தம்.

ஞானதீக்கை யபிடேகம் நந்திகுருவாற் செயப் பெற்றோர்
நலமார் சனகர் வியாக்கிரமர் நயக்குமூலர் பதஞ்சலியார்
வானம் பணியுஞ் சிவயோகர் வரமார் மலைய மாமுனிவர்
மன்னுந் தவமார் புலத்தியர்சீர் வயங்கு சனற்கு மாரரெனும்
ஞான முனிவ ரெண்மரென நவின்றார் பத்தாந் திருமுறையி
னம்மை யாளுந்திருமூலர் நவிலு மிவரு ளொருவரெனுஞ்
சான மிகுந்த சனற்குமரர் தம்பாற் றீக்கை யபிடேகம் [ற்றி.
தவத்ததாற் பெறுஞ்சத்தியஞான தரிசனிகள் பொற் சரண்போ

திருக்கயிலாயத்திற் சித்தாந்த ஞானபானுவாய் எழுந்தருளி யிருக்குஞ் சனற்குமார முனிவர்பால் அருளுபதேசம்பெற்றமாத் திரையானே முற்றறிவுடையராகி விளங்கிய சத்தியஞான தரிச னிகள், தம்பால்வந்த மாணவர்களுக்குத் தமது ஞானாசிரியர் தம க்கு அருளிய திருவருளாணையைச் சிரமேற்கொண்டு, தீக்கை புரிந்து, சித்தாந்த ஞானோபதேசஞ்செய்து வெள்ளியங்கிரியில் வீற்றிருந்தருள்வாராயினர்.

ஞானதேசிகராகிய சத்தியஞானதரிசனிகள் அங்ஙனம் ஞா னோபதேசஞ்செய்து வருநாட்களில், ஓர் நாள் பரஞ்சோதி முனி வர் என்னுந்திருநாமந்தாங்கிய பற்றறுத்த பண்பாளர் ஒருவர் நம்பழவினையறுத்துப் பரமுத்திக்கண்சேர்த்தருளும் பரமகருணா நிதியாகிய சிவபிரான் திருவருள் செலுத்தா நிற்ப, உள்ளத்தில் ஒப்புயர்வில்லாப் பேரின்ப வீடு பெற்றுய்தற்கண் பெருவிருப்பு டையராகிச், சத்தியஞானதரிசனிகள் எழுந்தருளியிருக்கும் இட த்தைச்சார்ந்து, அவ்வுண்மை ஞானச்செல்வரை, உள்ள நெக் குருக உழுவலன்புடையராய்த் தரிசித்து, திருவடிகளில் வீழ்ந்து பணிந்து நின்றனர்.

ஞானதேசிகர், அத்தவச்செல்வர் மீது திருக்கண்சாத்தி, அவரது பரிபக்குவம் நன்காராய்ந்து, தமது சீடர்களுள் ஒருவ ராகப்பணிபுரிந்து வரும்வண்ணம் திருவருள் பாலித்தருளினர். ஞானதேசிகர் கட்டளையிட்டருளிய வண்ணமே, அம்மாதவர் அன்று முதல் அன்பு மீதூர அருட்பணி அடைவே புரிந்து வரு வாராயினர். அம்முனிவர்க்குச் சிவதீக்கைபுரிந்து ஞானபிடே கஞ்செய்து சிவஞானபோதமென்னும் பன்னிரு சூத்திரங்களை யும், தாம் சற்குருபாரிடங் கேட்ட முறையாக உபதேசித்தரு ளினர்.

சத்தியஞானதரிசனிகள் சரித்திரம்.

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

நான்காவது
பரஞ்சோதிமுனிவர் சரித்திரம்.

திருச்சிற்றம்பலம்.

அருட்குழக செழிற்கயிலை முழுக்காவ னந்திபிரா னடிகள் போற்றி, தெருட்சிபெறு மனக்கமல சனற்குமர முனிவனிரு திருத்தாள் போற்றி, இருட்டுமலத் தகல்சத்ய ஞானதரி சனி சரண விணைகள் போற்றி, மருட்சியறு பரஞ்சோதி யருஞ்சீல குருபரன்றான் மலர்கள் போற்றி.

வெள்ளியங்கிரியினோர்பால் மெய்ஞ்ஞானபானுவாய் வீற்றிருந்தருளுஞ் சத்தியஞானதரிசினிகளிடம் அருளுபதேசம்பெற்று ஞானனுபவ முற்றிய நல்லாசிரியராகிய பரஞ்சோதிமுனிவர், தமது ஞானதேசிகர் ஆணைப்படி அநேக சீடர்களுக்கு அருளுபதேசஞ்செய்துகொண்டு அங்கு வீற்றிருந்தருளுவாராயினர்.

அங்ஙனம் வீற்றிருக்கு நாட்களில் ஓர்நாள் அம்முனிவர், தமது சந்தான முதற்குரவராகிய திருநந்திதேவர் அருளுபதேசம்பெற்ற தவமுனிவர் எண்மருள் ஒருவராகிய அகத்தியமகாமுனிவர்பாற்றமக்குளதாகிய மெய்யன்பின் மிகுதியினல், அம்முனிவரைத் தரிசித்தற்பொருட்டுப் பொதிகாசலத்திற் செழுந்தருளத் திருவுளத்திற்கொண்டு, கயிலையினின்றிழிந்து கேதாரமுதலாகிய பல ஸ்தலங்களையுந் தரிசித்து வருவாராயினர். இது நிற்க.

நடுநாடு என வழங்குந் திருமுனைப்பாடி நாட்டிலே, திருத்தூங்கானைமாடம் என்னுஞ் சிவாலயத்தைத் தன்னகத்தே கொண்ட திருப்பெண்ணாகடம் என்னுஞ் சிவநகரிலே, வேளாளர்குல திலகரும், சைவத்திருநெறியாளரும், களப்பாளர் கோத்திரத்தினரும், சிவபத்தி, அடியார்பக்திகளிற் சிறந்தவரும், அச்சுதனென்னும் பெயரையுடையவரும் ஆகிய ஒருவர் இருந்தார்.

அவர் களப்பாளர்கோத்திரத்திற் பிறந்தமைபற்றி அச்சுதகளப்பாளர் என்று பெயர் விளங்கப்பெறுவர். அவ்வச்சுதகளப்பாளர், கல்விச்செல்வம் பொருட்செல்வம் என்னும்இரண்டானுஞ் சிறப் புற்றோங்கியும் புத்திரப்பேறின்மையால் மனந்தளர்ந்து, திருத் துறையூரில் ஆதிசைவகுலத்தில் அவதரித்தவரும் சகலாகமபண் டிதருமாகிய தமது குலாசாரியர்பாற்சென்று வணங்கித் தமது குறையை விண்ணப்பஞ் செய்தனர்.

அதுகேட்ட சற்குருபரர் தம்ஆன்மார்த்த பூசையை முடித் துக்கொண்டு, தேவாரத்திருமுறையை விதிப்படி அருச்சித்து, வணங்கி, அச்சுதகளப்பாளரை அத்திருமுறையிற் கயிறுசாத் தும்படி ஆஞ்ஞைசெய்தார். அச்சுதர்களப்பாளர் எட்டுறுப்பும் பூமியிலேதோயும்படி அத்திருமுறையைப் பன்முறை நமஸ்கரித் தெழுந்து, சிவபிரானைத்துதித்துத், தியானித்து அத்திருமுறை யிலே கயிறு சாத்தினர். சாத்துதலும், திருஞானசம்பந்தமூர் த்திநாயனர் அருளிச்செய்த "கண்காட்டுநுதலானும்" என் னுந் திருவெண்காட்டுத் திருப்பதிகத்திலே;

"பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினே டுள்ளநினை
வாயினவே வரம்பெறுவ ரையுறவேண்டா வொன்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையாரவர் தம்மைத் தோயாவாந் தீவினையே."

என்னும் இரண்டாவது திருப்பாடல் உதயமாயிற்று. ஆத லும்; இவரது குலாசாரிய சுவாமிகள் அதனையோர்ந்து மிக வும் மகிழ்வுற்று அத்திருப்பாடலின் பொருளையும், திருவெண் காட்டின் மான்மியத்தையும், அங்கேயுள்ள முக்குளத்தீர்த்தங்க ளின் பெருமைகளையும், அவைகளில் ஸ்நானஞ்செய்து சுவாமி தரிசனஞ் செய்யவேண்டிய விதிகளையும், அச்சுதர்களப்பாளரு க்கு உபதேசித்துத், திருவெண்காட்டிற்சென்று அங்குப் புத்திரப் பேறு கருதித் தவமியற்றும்வண்ணம் அவருக்கு ஆஞ்ஞைசெய் தனர்.

அச்சுதர்களப்பாளர் ஆசிரியரை வணங்கி விடைபெற்றுத் தமது மனைவியாரோடும் திருப்பெண்ணாகடத்தினின்றும் நீங்கி,

மார்க்கத்திலுள்ள சிவஸ்தலங்களைத் தரிசித்துக்கொண்டு, திருவெண்காட்டை யடைந்து, சோமசூரியாக்கினி என்னும் முச்சுடர்களின் திருநாமம்பெற்ற மூன்று தீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்து, சுவேதவனப்பெருமானையும், பிரமவித்தியாநாயகியையும் காலந்தோறும் தரிசித்து வழிபட்டு அங்கேவசித்து வருவாராயினர். அங்ஙனம் தரிசித்து வழிபட்டு வருநாட்களில், ஒருநாள், சுவேதவனப்பெருமான் அச்சுதர்களப்பாளர் சொப்பனத்திலே தோன்றி, அன்பனே! உனக்கு இப்பிறவியிலே பிள்ளைப்பேறு அரிதாயினும் சர்வாபீஷ்டமுந் தரத்தக்கதாய், நமக்கு மிக்க பிரீதியுள்ளதாய், மெய்யன்போடு தன்னை ஓதுவோர்க்குச் சகலபேறுகளையுந் தருவதாயுள்ள தேவாரத்திருப்பதிகத்தையே பரமப்பிரமாணமாகக்கொண்டு வழிபடுகின்றாய்; ஆகலின் அத்தேவாரத்தைப் பாடிச் சைவஸ்தாபனஞ்செய்த ஞானசம்பந்தப்பிள்ளையென்றே சொல்லும்படி நமது திருவருளினாலே இன்னுந் தமிழ்நாடு உய்யும்வண்ணம் அத்தேவாரத்தின் மெய்ப்பொருளை உள்ளடக்கிய சைவசித்தாந்தசாத்திரத்தை வெளிப்படுத்திச்சைவஸ்தாபனஞ் செய்யத்தக்கவனாக உன்னிடத்தில் ஒருசற்புத்திரன் அவதரிப்பான் என்று திருவாய்மலர்ந்து மறைந்தருளினார். உடனே அச்சுதர்களப்பாளர் விழித்தெழுந்து பெருமகிழ்ச்சி கொண்டு சுவேதவனப்பெருமான் திருவருளைத் துதித்துக் கனவில் நிகழ்ந்தசெய்தியைத் தமது மனைவியாருக்குத் தெரிவித்து அவரோடு தாமுஞ் சிவாலயத்திற்சென்று சிவபெருமானையும், உமாதேவியாரையுந்தரிசித்து வழிபட்டனர். இங்ஙனம் நாடோறுஞ் சிவதரிசனஞ்செய்துகொண்டு அங்குவசித்து வருநாளிலே, சுவேதவனப்பெருமான் திருவருளினாலே உலகமெல்லாம் உய்யும்படி அச்சுதர்களப்பாளர் மனைவியாரது அருமைத்திருவயிற்றிலே கருப்போற்பத்தியாகிய பெரும்பேறுளதாயிற்று. அச்சுதர்களப்பாளர் அதனையுணர்ந்து திருவருளைத்துதித்து, உள்ளத்தில் மூளுகின்ற பெருமகிழ்ச்சியோடு சிவாகமவிதிப்படிச் செய்யவேண்டுஞ்சடங்குகளைப் பத்துமாசங்களினுஞ் சிறப்பாகச் செய்து பேரின்ப நுகருநாளிலே, அருக்கன் முதலிய கோள்களெல்லாம் அழகிய உச்சங்களிலே பெருகவலியுடன்நிற்பப் பிறங்கும் மிகமேலாகிய சுபதினத்திலே பரசமயத் தருக்கு நீங்கவும்,

எல்லாரும் அத்துவிதந்துண்மை அறியவும், வடமொழிச் சிவ ஞானபோதம் தென்மொழியில் வழங்கவும், சிவனடியார் என்ஞான்றும் பேரானந்தம் பெற்றோங்கவும், பலவுலகங்களுள்ளும் பூலோகமும், அப்பூலோகத்திலுள்ள எந்நாடுகளுள்ளும் தென்னாடுமே மிகச்சிறக்கவும் ஒருபுத்திரர் திருவவதாரஞ்செய்தார். தந்தையார் பேருவகையுற்றுச் சாதகன்மமுதலியவற்றை விதிப்படிசெய்து, சுவேதவனப்பெருமான் எனத்திருநாமஞ்சாத்தினர்.

பின்பு அச்சுதர்களப்பாளர், தம்மனைவியாரோடும், அரும் பெறற்புதல்வரோடுந் திருவெண்காட்டிறைவனை இறைவியோடும் வணங்கிவிடைபெற்றுக்கொண்டு திருப்பெண்ணாகடத்தை அடைந்தனர். அச்செய்திகேள்வியுற்ற அவ்வூருளாரனைவரும் அச்சுதர் களப்பாளரில்லத்திற்கு வந்து தெய்வத்திருவருளால் அவதரித்த அக்குழந்தையைத் தரிசித்துப் பெருங்களிப்புற்றுச் செல்வாராயினார். அத்திருக்குமாரர் பாலசந்திரன்போல வளர்ந்து வருங் காலத்தில் திருவெண்ணெய்நல்லூரில் வசித்த அவருடைய நன் மாமனார் வந்து தரிசித்து, அவரைத் தம்மில்லத்திற்கொண்டு சென்று பெருங்காதலோடும் வளர்த்து வந்தனர்.

இங்ஙனம் வளருநாளில், அப்புதல்வருக்கு இரண்டாம் ஆண்டு நிறைவுறலும்; அவர், பரம்பொருளை உள்ளவாறுணரும் மெய்யுணர்வு நிறைந்து ஞானபாநுவாய் விளங்கினார்.

அங்ஙனம் இருக்குநாளிலே, திருக்கயிலையினின்றும் புறப்பட்டுக், கேதார முதலாகிய பலஸ்தலங்களையுந் தரிசித்து வருபவராகிய பரஞ்சோதிமுனிவர், திருவெண்ணெய்நல்லூரை யடைந்து, அங்கே பண்டை நற்றவத்தால் அவதரித்து மெய்யுணர்வின் முற்றுப்பேறுடையராய் விளங்கிய சுவேதவனப்பெருமான் என்னும் பிள்ளைத்திருநாமமுடைய அப்புத்திரரைச் சந்தித்து, அவரது பரிபாக நிலைமையை யோர்ந்து மகிழ்வுற்றுச் சிவதீக்கை புரிந்து, ஞானபிடேகஞ்செய்து, சிவஞானபோதம் என்னும் பெயரிய பன்னிருசூத்திரங்களையும் தாம் சற்குருபரம்பரையாற் கேட்ட முறையாகஉபதேசித்து, “வடமொழியில்விளங்கும் இப்பன்னிரு சூத்திரங்களாகியஇச்சிவஞானபோதத்தை ஈண்டுள்ளோர்உணர்ந்

துப்தற்பொருட்டுத் தென்மொழியாகமொழிபெயர்த்துப் பொழிப்பும் உரைக்க'' வென்றருளிப் பொழிப்புரைக்குமாறும் சத்திய ஞானதரிசனிகள்பால் தாங்கேட்டவாறே வகுத்தருளிச்செய்து, பொய்ச்சமயங்களின் நெறி இது இது என்று கண்டுகழிப்பித்து மெய்ச்சமயமாகிய சைவத்தின் உண்மையை உணரும் வித்தகத் திறமைக்கும், தமது ஞானாசிரியர் சத்தியஞானதரிசனிகள் திருநாமத்திற்கும் இணங்க; அம்மெய்யுணர்வுடையார்க்கு மெய்கண்டான் எனச்சிறப்புத் திருநாமஞ்சாத்தி, "இவ்வுலகின்கண் சுத்தாத்துவித சைவசித்தாந்த சற்குரு சந்தானம் விளங்கப் பரிபக்குவர்களுக்கு ஞானோபதேசஞ் செய்துவருவாயாக'' எனத் திருவருளாணைதந்து, தாம் அங்குநின்றும் அரிதினீங்கி அகத்தியமுனிவரர்பால் தமக்குளதாகிய மெய்யன்பினால் அம்முனிவரரைத் தரிசித்தற்பொருட்டு அவர் எழுந்தருளியிருக்கும் பொதிகாசலத்திற் கெழுந்தருளினர்.

பரஞ்சோதிமுனிவர் சரித்திரம்.

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

ஐந்தாவது
மெய்கண்டசிவாசாரியர் சரித்திரம்.

திருச்சிற்றம்பலம்.

திங்களொடு கங்கைபுனை யங்கணனார் செப்புதிரு வருளினோடு, தங்குருவாம் பரஞ்சோதி முனிவனினி தறைகுறிப்புந் தகவாக் கொண்டு, துங்கமுறு சிவஞான போதமும்வார்த் திகப் பொழிப்புஞ் சுழிப்பு நீர்சூழ்ந், திங்கமருந் தமிழ்நாடு வீடு பெறப் புரிகுரவ ரிருத்தாள் போற்றி.

அல்லாத பரசமய வலகைத் தேர்வின் டகலவகல் புனற்பெண்ணை யயல்சூழ் வெண்ணெய்ப், பொல்லாத விபமுகத்துப் புத்தேடன்பாற் புனித சிவா கமப்பொருண்மை பொருந்த வாய்

ந்து, நில்லாத நிலையிதுமற் றென்று மொன்றாய் நிற்குநிலை யிது வெனமெய் நெறிதேர்ந் தியாரும், வெல்லாத சிவஞான போதஞ் சொன்ன, மெய்கண்டான் சரணமுடி மீது கொள்வாம்.

பரமகாருண்ணியப் பிழம்பாகிய பரஞ்சோதிமுனிவர்பால் இரண்டு பிராயத்திற்றானே சிவதீக்கையையும், ஞானபிடேகத் தையும் பெற்று, சித்தாந்தசூத்திரம் எனப்படும் சிவஞானபோத நூற்கேள்வியும், மெய்கண்டான் என்னுந்தீக்ஷாநாமமும், சுவேத வனப்பெருமான் என்னும் பிள்ளைத்திருநாமமும் உடையராய்த், திருவெண்ணெய்நல்லூரில் எழுந்தருளியிருந்த ஞானதேசிகர் அத்திவ்யஸ்தலத்திற் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் சுய ம்புமூர்த்தியாகிய பொல்லாப்பிள்ளையார் சந்நிதியிலே அச்சிவ ஞானபோதத்தைச் சிந்தித்துத்தெளிந்து நிஷ்டைகூடிச், சிவாநந் தாநுபூதி கைவரப்பெற்றுச், சிவபிரான்றிருவருளையும், தமதாசி ரியர் பரஞ்சோதிமுனிவரர் ஆஞ்ஞையையுந் திருவுளங்கொண்டு, தமிழ்நாடு உய்யும்வண்ணம்; அவ்வடமொழிச் சிவஞானபோத த்தைத் தமிழில் மொழிபெயர்த்துச், சூத்திரக்கருத்து, மேற் கோள், ஏது, என்னும் மூன்றையும் உரைச்செய்யுளானும், உதா ரணம், பாச்செய்யுளானும் உரைத்தலாகிய வார்த்திகம் என்னும் பொழிப்புரையும் இயற்றியருளினர்.

பின்னர்; ஞானதேசிகர் தமது உண்மைச் சிவாநுபூதிப் பேற்றினை ஒருவாறுணர்ந்து சரண்புகுந்த அநேக மாணவர்களு க்குச் சிவதீக்கைபுரிந்து, சித்தாந்த ஞானுபதேசஞ் செய்து திருநந்திதேவர் அருளுபதேச மரபு தழைத்தோங்கச் சிவஞான பாஸ்கரராக வீற்றிருந்தருளினர்.

இங்ஙனம் ஞானதேசிகர் வீற்றிருந்தருளுதலைக் கேள்வி யுற்ற ஆதிசைவரும் சகலாகமபண்டிதர் என்னுங்காரணப்பெயர் பெற்றவரும் ஞானதேசிகரது குலாசிரியருமாகிய ஒருவர் தமது செனனபூமியாகிய திருத்துறையூரினின்றும் புறப்பட்டுத் திரு வெண்ணெய்நல்லூரை யடைந்து, அங்குப் பற்பலமாணவர்களு க்குச் சித்தாந்த உபதேசஞ் செய்துவரும் ஞானதேசிகராகிய மெய்கண்டதேவரைச் சந்தித்தனர். அத்தருணத்தில் ஞான

தேசிகர்பால் அங்குப் பாடங்கேட்கும் மாணவர்கள் ஆணவம் என்னுஞ்சொல்லை யெடுத்தோதுதலும்; அதனைக்கேட்ட அக் குலாசாரியர் ஞானதேசிகரைநோக்கி ஆணவத்தின் சொரூபம் யாதென வினவினர். வினவிய அவர்பால் ஞானதேசிகர் பரிவுற்று அவரை அடிமைகொண்டருளத் திருவுளங்கொண்டு, தமது தற்சனி விரலால் அவரைச்சுட்டி, "இங்ஙனம் நிற்கும் நுமது நிலையே" அதுவாகும் எனத் தெளிவித்தருளினர். அங்ஙனம் தெளிவித்த அளவில் அவர், தருக்கொழியப்பெற்று மெய்யன்பின் வயத்தராய், அச்சத்தோடும் ஞானதேசிகர் திருமுன்பு வீழ்ந்து, அத்தேசிகோத்தமரது அடியிணைமலர்களை அருத்தியோடு தமது இருகரங்களாற் பற்றிக்கொண்டு, தேவரீரிடத்து ஆணவ வலியாலிழைத்த அஞ்ஞானச்செயலினைத் திருவுளத்தடையாது அடிமைகொண்டு உய்வித்தருளவேண்டுமெனப் பிரார்த்திக்க; ஞானதேசிகர் அவர்பாற்றிருவருள் பாலித்து அன்பனே! எழுந்திரு, எனத் திருவாய்மலர்ந்தருளினர்.

பின்பு ஞானதேசிகர் அவர்க்குச் சிவதீக்கைபுரிந்து, தமது சந்தான முதற்குரவரது திருநாமத்தையே தீக்ஷாநாமமாகச் சாத்தி ஞானபிடேகஞ்செய்து, தாம் அருளிச்செய்த தமிழ்ச் சிவஞானபோதத்தினைக்கொண்டு வேதாந்தத் தெளிவாம் ஆகமாந்தத்தரும் பொருள்களெல்லாம் ஐயந்திரிபறவுணர்த்தியருளினர்.

இங்ஙனம், சைவசித்தாந்த பிரதிட்டாசாரியராக எழுந்தருளியிருந்த ஞானதேசிகர் நெடுங்காலஞ் சிவானந்த நிஷ்டையில் வீற்றிருந்தருளி, அத்திருவெண்ணெய்நல்லூரின்கண்ணே ஐப்பசிமாசத்துச், சுவாதிநக்ஷத்திரத்திலே, அகண்டாகாரநித்தியவியாபக சச்சிதானந்தப்பிழம்பாகிய சிவபெருமானோடு இரண்டறக் கலத்தலாகிய சுத்தாத்துவிதமுத்தியை யடைந்தனர்.

மெய்கண்டசிவாசாரியர் சரித்திரம்

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

ஆறுவது

அருணந்திசிவாசாரியர் சரித்திரம்

திருச்சிற்றம்பலம்

முப்பொருளி னீரியல்பு மோரியல்பா நுவலாது முறைவெவ் வேறுய்ச், செப்புசிவா கமங்களின்றன் பொருளொருமை பெற வுணர்ந்து திறமுன் னூலே, ஒப்பவிரி யாப்பதனுற் சித்தியெ னும் வழிநூலா யொளிர்பிற் காலத், திப்புவியோர் தெளிர் துய்ப மொழிந்தவரு ணந்திசிவ னிணைத்தாள் போற்றி.

திருமுனைப்பாடி நாட்டிலே, திருத்துறையூர் என்னுந் திருப் பதியிலே, ஆதிசைவமரபிலே, "வேதமோடாகமம் மெய்யாமிறை வனூல், ஓதும் பொதுவுஞ் சிறப்புமென்றுன்னுக" என்பதனுலே தேற்றியருளப்பட்டசிவாகமங்களெல்லாம், முன்னைநாளிற் போல இந்நாளினும் விளங்க ஒரு சற்புத்திரர் திருவவதாரஞ்செய்தார். *அவர் உரிய பிராயத்திலே வித்தியாரம்பஞ் செய்யப்பெற்று, வேதவேதாங்கமாதி கலைகளெல்லாம், ஓதியுணர்ந்து பின்னர் விதிப்படி சிவதீக்கைபெற்று சிவாகமங்களைமிக்க அவாவினேடு விரைந்து பயில்வாராயினர்.

அக்காலத்திலே அவர் தந்தையாரும் மற்றையசான்றேரும் அவர் தாம் அவதரித்த மரபிற் கியைய, கல்வியறிவொழுக்கங்க ளால் நிரம்பிக்கற்றேரும் மற்றேரும் ஒருங்கு வழிபடும் பெருந் தகைசான்று விளங்குவதையோர்ந்து, ஓர்சுபதினத்திலே ஆசாரி யாபிடேகஞ்செய்து ஆராமகிழ்ச்சிகொண்டிருந்தனர். அங்ஙு னம்; தங்குலமுறைப்படி அபிடேகம்பெற்று, ஆங்காங்குள்ள தமது சீடவர்க்கத்தினர்க்குத் தீக்கையாதிகள் சிறப்புறச்செய்து வருபவராகிய அப்பெருந்தவத்தர், முன்னைப்பிறவியிற்றெடர்ந்த

---

* இப்பரமாசாரியார் முதலிய சிலருடைய பிதா மாதாக்களின் திருநாமமும், இயற்கைத்திருநாம முதலியனவுந் தெரிதற்குரிய ஆதா ரங்கள் கிடைக்கவில்லை.

சிவபுண்ணிய விசேடத்தால் மேன்மேலுஞ் சிவாகமங்களை யெல்லாம் முற்ற வாராய்ந்து, பிரசங்கித்து, தமிழ்நாட்டுவேந்தராற் சகலாகமபண்டிதர் என்னுங் காரணச் சிறப்புத் திருநாமஞ் சாத்தப்பெற்றுத், தமக்கு ஒப்புயர்வின்றி விளங்குவாராயினர்.

இங்ஙனம் நிகழுநாளினில் சகலாகமபண்டிதர், தமது சீடவர்க்கத்தினருள் ஒருவராய்த் தமது கட்டளைப்படி மெய்யன்போடு சிவபுண்ணியங்களை இயற்றிவந்த அச்சுதர் களப்பாளருக்கு அவர் செய்தபுண்ணியப்பயனாக அவதரித்த சுவேதவனப் பெருமான் என்னும் பிள்ளைத் திருநாமமுடைய மெய்கண்டதேவர் செப்பருந்தெய்வ அற்புதச் செயலுடையாரெனச் சிறிதுந்தோாதவராகித் தமது சீடரது தனயரென மதித்து, அவரது கல்வியறிவின் ஆற்றலால் அவர் பல மாணவர்களுக்குச் சிறிய பிராயத்திலேயே சிவஞானசாத்திரோபதேசஞ் செய்துவருதலைக் கேட்ட அளவிலே அவரைத் தாம் பார்த்துவர அவாவுற்றுத், திருத்துறையூரினின்றும் புறப்பட்டுத் திருவெண்ணெய்நல்லூரையடைந்து, மெய்கண்டதேவரைக் கண்டு, அளவளாவி, அவர்பால் அடிமை புகுந்து, சிவதீக்ஷையும் அருணந்தி என்னும் தீக்ஷாநாமமும், ஞானபிடேகமும், சிவஞானபோதநூல் உபதேசமும் எய்தப்பெற்று, அச்சிவஞானபோதத்தைச் சிந்தித்துத்தெளிந்து தமது ஞானசற்குரவரைவிட்டு நீங்காமல் இடையறா மெய்யன்பினால் திருவணுக்கத்திருத்தொண்டியற்றிச்சிவானந்தவாழ்வு பெற்றிருக்கு நாட்களிலே; குரவர் பெருமானாகிய மெய்கண்டதேவர் திருமேனி சோதிர்மயமாகக் கரந்தருளத்தாம், தமது சற்குரவர்க்குத் தசதினத்திலும் பூசையுமாகேசுரபூசையுஞ் சிறப்புறவியற்றி, ஞானசற்குரவர் திருவுருக்கரந்தருளிய திவ்விய புண்ணியஸ்தலத்திலே திருக்கோயில் நிருபணஞ்செய்து, குரவர் பெருமான் திருவுருப்பிரதிஷ்டைசெய்து கும்பாபிடேகமியற்றி வசிப்பாராயினர். அங்ஙனம் வசிக்குநாட்களிலே தமது ஞானசற்குரவர் வடமொழியினின்றும் மொழிபெயர்த்து உபதேசித்

தருளிய தமிழ்ச்சிவஞானபோதநூல் நுண்ணுணர்வு சான்றமேல வர்க்கேயன்றி ஏனையோர்க்கு எளிதிலுணரவொண்ணாத அரிய நூலாக இருத்தலைநோக்கி, அதுதான் விளக்கமுற விரித்தல் யாப்பினால் சிவஞானசித்தி எனப்பெயர் தந்து பெருநூல் ஒன்றி யற்றியதுமன்றி இருபாவிருபது எனச்சிறுநூல் ஒன்றுமியற்றிப், பற்பல மாணவர்களுக்கு ஞானோபதேசஞ்செய்துவருவாராயினர். இஃதிங்ஙனமாக.

திருமுனைப்பாடிநாட்டிலே மருதூர்ப்பதியிலே மறையவர் குலத்திலே பாராசரகோத்திரத்திலே ஒருசற்புத்திரர் அவதரித்து தந்தையாரால் பரமானந்தசிவம் என நாமகரணஞ் சூட்டப் பெற்று வளர்ந்து, உபநயனஞ்செய்து வேதாதிகலைகளையெல்லாம் ஓதுவிக்க முன்னைத் தவத்தான் முற்றவுணர்ந்து, மனந்தூயராகி, வீடுபேற்றின் கண் வேட்கை மிகவுடையராய், எமக்கு வீடு பேற்றினை விரைவில் அருளவல்ல ஞானசாரியரை எங்குச்சென்ற டைவோம் என இடையீடின்றிக் கவலாநிற்கும் உள்ளத்தோடு சமீபத்திலுள்ள திருப்பெண்ணாகடத்திலே தேவாரத்திருப்பதிகம் பெற்ற திருத்தூங்கானைமாடம் என்னும் திருக்கோயிலுக்குத் தினந்தோறுஞ் சென்று தெரிசித்து, மெய்யன்பினால் வழிபட்டு வருவாராயினர்.

அக்காலத்திலே ஞானதேசிகராகிய அருணந்திசிவாசாரிய சுவாமிகள், திருமுனைப்பாடிநாட்டின்கண்ணுள்ள பற்பல சிவஸ்த லங்களைத் தரிசிக்கத் திருவுளங்கொண்டு, திருவெண்ணெய்நல்லூ ரினின்றும் புறப்பட்டுப் பலஸ்தலங்களையுந்தரிசித்து, திருப்பெண் ணாகடத்திற் சென்று திருத்தூங்கானைமாடச்சுடர்க்கொழுந்தைத் திருக்கோயிலிற்சென்று தரிசித்து, அத்திருக்கோயிலுக்குப் புறத் துள்ள ஓர்மடத்திலே எழுந்தருளியிருந்தார். அத்தினத்திலே திருக்கோயிலில் தினந்தோறும் வந்து சுவாமிதரிசனஞ் செய்து வரும்நியமமுடைய பரமானந்தசிவம்என்னும் பற்றறுத்த பண்பா ளராகிய, அப்புத்திரர் ஞானதேசிகர் எழுந்தருளியிருப்பதைத் தெரிந்து, அணைந்து சற்குருபரரைத்தரிசித்து, மகிழ்ச்சிப்பெருங் கடலுக்கோர் வரம்பு காணாராய், அன்று கல்லாலின்புடையமர்ந்த

கருணைவடிவம் இதுவே என்று கருத்துட்கொண்டு, உடல்முழுதும் உரோமாஞ்சிதங்கொள்ள நெஞ்ச நெக்குருகக் கண்களில் ஆனந்த அருவிபொழிய அடியற்ற மரம்போற் படிமிசை வீழ்ந்து நமஸ்கரித்தெழுந்து நின்று ஏத்துவாராயினர்.

இங்ஙனம், மெய்யன்பின் வயத்தராய் ஏத்துந்தீவிரதரசத்திநிபாதம் உடைய அவர்பால் ஞானதேசிகர் திருவருள் சுரந்து, அவரைத் தமக்குத் தலைமை மாணாக்கராகக் கொள்ளுமாறு திருவுளங்கொண்டு, அத்தருணத்திற்றானே அவருக்குஞானவதிமுறைப்படி சிவதீக்கைபுரிந்து, மறைஞானசம்பந்தன் என்னும் தீக்ஷாநாமஞ்சாத்தி, ஞானபிடேகஞ்செய்து, தமிழ்ச் சிவஞானபோதமும் அதன்வழிநூலாகத் தாம் இயற்றிய சிவஞானசித்தியும் இருபாவிருபதும் ஆகிய ஞானநூல் மூன்றினையும் முறையாக உபதேசித்தருளினர்.

பின்பு ஞானதேசிகர் அங்குச் சிலகாலம் வசித்திருந்து, அத்தலத்தினின்றும் அரிதினீங்கி, வழியிடையிற் பலஸ்தலங்களையுந் தரிசித்துக்கொண்டு தமதுஸ்தானமாகிய திருத்துறையூர்க்கெழுந்தருளித் திருக்கோயிலுக்குச்சென்று சுவாமிதரிசனஞ்செய்துகொண்டு மீண்டனர். மேலும் ஞானதேசிகர் துவிதீய ஆசிரியராகிய மறைஞானசம்பந்தசிவாசாரியருக்கும் மற்றைய மாணவர்களுக்கும் சித்தாந்தத்தெள்ளமுதசாகரமாகிய சிவஞானபோதம்அதன் வழி நூலெனவழங்குஞ் சிவஞானசித்தியார் இருபாவிருபதுஎன்னும் ஞானநூல்களில், இலை, மறை, காய்போல் இலங்கிய நுண்மைப்பொருள்களை இறும்பூதுற எளிதிலுணருமாறுசெய்து, ஆங்குச் சிலகாலம் வசித்திருந்து, அத்திருப்பதியிலே, புரட்டாசிமாசத்துப் பூரநக்ஷத்திரத்திலே; அவர்தந்திவ்விய திருமேனிஜோதிர்பிழம்பாக பெருங்கருணைக்கடலாகிய சிவபிரான் திருவடிக்கண் இரண்டறக்கலத்தலாகிய சிவசாயுச்சியம் அடைந்தருளினர்.

அருணந்திசிவாசாரியர் மெய்கண்டதேவர்பால் அருளுபதேசம் பெற்றனர் என்பதூஉம், மெய்கண்டதேவர் திருநந்திதேவர் அருளுபதேசமரபினர் என்பதூஉம், அருணந்திசிவாசாரி

யாரியற்றிய சிவஞானசித்தியென்னும் அரியநூல் தேசிகோத்தமராகிய மெய்கண்டதேவர் மொழிபெயர்த்தருளிய தமிழ்ச்சிவஞானபோதத்திற்கு வழிநூலென்பதூஉம், அச்சிவஞானசித்திக்கண் பரபக்கம், சுபக்கம் என்னும் இரண்டனுள்ளும் மங்கல வாழ்த்து முதலாகக்கூறும் திருவிருத்தங்களானும் இருபாவிருபது என்னும் ஓர்நூலானும் இனிது பெறப்படும்.

அவை வருமாறு:—

சிவஞானசித்தியார் பரபக்கம்

மங்கலவாழ்த்து.

பண்டைமறை வண்டரற்றப் பசுந்தேன் ஞானம்
பரிந்தொழுகச் சிவகந்தம் பரந்து நாறக்
கண்டவிரு தயகமல முகைக ளெல்லாங்
கண்டிறப்பக் காசினிமேல் வந்தவருட் கதிரோன்
விண்டமலர்ப் பொழில்புடைசூழ் வெண்ணெய் மேவு
மெய்கண்ட தேவன் மிகுசைவ நாதன்
புண்டரிக மலர்தாழச் சிரத்தே வாழும்
பொற்பாத மெப்போதும் போற்றல் செய்வாம்.

போதமிகுத் தோர்தொகுத்த பேதை மைக்கே
பொருந்தினோ ரிவர்க்கன்றிக் கதிப்பாற் செல்ல
வேதுநெறி யெனுமவர்கட் கறிய முன்னா
ளிறைவனரு ணந்தி தனக் கியம்ப நந்தி
கோதிலருட் சனற்குமா ரற்குக் கூறக்
குவலயத்தி னவ்வழி யெங்குருநாதன் கொண்டு
தீதகல வெமக்களித்த ஞானநூலைத்
தேர்ந்துரைப்பன் சிவஞான சித்தி யென்றே.

சிவஞானசித்தியார் சுபக்கம்.

என்னையிப் பவத்திற் சேரா வகையெடுத் தென்சித் தத்தே
தன்னைவைத் தருளி ஞாலே தாளிணை தலைமேற் சூட்டு
மின்னமர் பொழில்சூழ்வெண்ணெய் மேவிவாழ்மெய்கண் டானூல்
சென்னியிற் கொண்டு சைவத் திறத்தினைத் தெரிக்க லுற்றாம்.

அருணந்திசிவாசாரியர் சரித்திரம்

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

ஏழாவது

மறைஞானசம்பந்தசிவாசாரியர் சரித்திரம்.

திருச்சிற்றம்பலம்.

திருவளருஞ் சாமமறை திகழ்பரா சான்மரபோன்
விரசுநர்பான் மறையுணர்வு விரிந்தொளிரப் புணர்த்துவோன்
மருதமொடு கடந்தையையான் மறைஞான சம்பந்த
குருமணிதன் மருமலர்த்தாள் குறித்துருகிப் பரசிடுவாம்.

முன்னைப் பெருந்தவத்தால் முதல்வனூலாகிய வேதசிவாகமங்களெல்லாவற்றையும் முற்றவோதியுணர்ந்தமை காரணமாகச் சகலாகமபண்டிதர் என்ச்சிறப்புத்திருநாமமும், திருநந்திமரபில் அருளுபதேசம்பெற்ற மெய்ம்மைதோ அருணந்தி எனத் தீக்ஷாநாமமுங் கொண்டெழுந்தருளியிருந்து, நந்தி சந்தானம் விளக்கிவந்த ஞானதேசிகர்க்குத் துவிதீய ஆசாரியராகிய மறைஞானசம்பந்த சிவாசாரியர் தமது ஞானசிரியசுவாமிகள் திருத்துறையூரில் திருவுருக்காந்தருளுதலும், ஞானசாரியசுவாமிகளுக்குத் தாம் தசதினத்திலும் பூசை மாகேசுரபூசை சிறப்புறவியற்றி,

அத்தலத்திற் சிலகாலம்வசித்திருந்து, அங்குநின்றும் புறப்பட்டு, அடியவர் குழாத்தோடு திருவதிகைமுதலாகிய சிவஸ்தலங்களைத் தரிசித்துக்கொண்டு, திருவெண்ணெய்நல்லூருக்குச் சென்று, திருக்கோயிலைச் சார்ந்து சுவாமிதரிசனஞ்செய்து, பொல்லாப் பிள்ளையார் பூங்கழலிறைஞ்சித் தமதுதிருமடத்துக்கெழுந்தருளி, மெய்கண்டசிவாசாரிய சுவாமிகள் குருமூர்த்தந் தரிசித்து, அங்குப் பற்பல மாணவர்களுக்கு ஞானோபதேசஞ்செய்து எழுந் தருளியிருந்தனர். இங்ஙனம் பலகாலம் அத்தலத்திற் றம்பாற் சான்புகும் பக்குவச் சீடர்களுக்குத் தீக்கையாதிகள் செய்து கொண்டிருந்து, பின் அங்குநின்றும் அரிதினீங்கி, நடுநாட்டின் கண்ணுள்ள பற்பல ஸ்தலங்களையுந் தரிசித்துக்கொண்டு, சிதம் பரத்தின் எல்லைக்குப் புறத்தேயுள்ள திருக்களாஞ்சேரியையடைந்து, திருக்கோயிலிற்சென்று, பிரமபுரீசுரரைத்தரிசனஞ்செய்து அங்குள்ள சிருங்காரவனத்தில் எழுந்தருளியிருந்தனர்.

பின்னர், அங்குநின்றும் புறப்பட்டுச் சிதம்பரம் சென்று, திருக்கோயிலுக்கெழுந்தருளி சிற்சபேசரைத் தரிசனஞ்செய்து, பேரானந்த மகிழ்வெய்தி, மீட்டுந் திருக்களாஞ்சேரியிற்சென்று சிருங்காரவனத்திலே எழுந்தருளியிருந்துகொண்டு, நாடோறும் சிற்சபேசரைத் தரிசனஞ்செய்து வருவாராயினர்.

இங்ஙனம் நாடோறுஞ் சிதம்பரஞ்சென்று சிற்சபேசரைத் தரிசித்துவருந்நியமமுடையஞானதேசிகர், திருக்களாஞ்சேரியின் கண்ணுள்ள சிருங்காரவனத்திலே எழுந்தருளியிருந்து பக்குவ ஆன்மாக்களுக்கு ஞானோபதேசஞ்செய்து வருவதைக் கேள்வியுற்றும், அத்தேசிகோத்தமரது அற்புத ஞானச்செயல்களைக் கண்டு வியந்தும் தில்லைவாழந்தணருள் தலைமைவாய்ந்து சிறந்த உமாபதியார், சிருங்காரவனத்திற்சென்று ஞானதேசிகரைத் தரிசித்தனர். பின்பு ஞானதேசிகர் உமாபதியாரது அதிதீவிரதர பக்குவத்தை நோக்கி, அவருக்கு ஞானதீக்ஷையும், ஞானபிடேகமுஞ்செய்து, சிவஞானபோதம், சிவஞானசித்தி, இருபாவிருபது என்னும் ஞானநூல்களைத் தமது சற்குருபரர்பாற் றாங்கேட்ட முறையாக உபதேசித்து, அவரைத் தமது ஞானோபதேசமரபு

தழைத்தோங்குதற்குக் களைகணாகிய துவிதீயாசிரியராக வைத் தருளினர்.

பின்பு ஞானதேசிகர், துவிதீயாசிரியராகிய உமாபதிசிவா சாரியருக்கும், ஏனைய மாணவர்களுக்கும் திரிபதார்த்தத்தின் நுண்பொருளை எளிதினுணரச்செய்து, ஞானநிஷ்டைகூடி அத் திருப்பதியிலே ஆவணிமாதத்து உத்திரநக்ஷத்திரத்திலே தமது திருவுரு ஜோதிவடிவாக சிற்சபேசன்றிருவடி நீழலடைந்தருளி னர்.

மறைஞானசம்பந்தசிவாசாரியர் சரித்திரம்

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

எட்டாவது

உமாபதிசிவாசாரியர் சரித்திரம்.

திருச்சிற்றம்பலம்.

திருமறுமா லயன்முதலோர் மணிப்பிரம்பின் வழிபுரியத் தேவ தேவன், கருணைவிழி கடைக்கணித்த பணிகள்புரிந் தத்து விதக் கலப்பான் மும்மைப், பொருள்வினவிப் பெறுஞான போத த்தைச் சனற்குமரர் போற்ற நல்குங், குருமணியைத் திருநந்தி நாயகனைப் பரம்பரையிற் குறித்து வாழ்வாம்.

பன்னரும் பெருமைச் சைவசித் தாந்தபரம்பரை நந்தியால் விளங்கத், தென்மொழி முறையாற் போதமெய்ச் சித்தி சிவப்பிர காசமென் றின்ன, முன்வழி சார்பி னுமாபதி யார்க்கு முதன்மை சா லருணந்தி தேவர், பொன்னடி பரவும் வெண்ணெய் மெய் கண்டதேசிகர் பூங்கழல் புகழ்வாம்.

கட்டளைக் கலித்துறை.

திருவார் கயிலைத் திருநந்தி தேவர் திருமரபில்
வருமா சிரியன் மறைஞான சம்பந்த மாகுரவன்
அருள்சா ருமாபதி தேசிகன் செஞ்சா ணும்புயமென்
மருவார் மலரிணை யுள்கி வழுத்தி வணங்குதுமே.

அநாதிமலமுக்தராயும், உயிர்களுக்கு மாதாவும், பிதாவு மாவாராயுமுள்ள நடராஜப்பெருமானே, ஓர் காலத்தில் * நாம் அவர்களுள் ஒருவரென்றருளிச்செய்யப் பெற்ற பெருமையை யுடைய தில்லைவாழந்தணர் மரபிலே சைவசித்தாந்த சன்மார்க்க மும், ஸ்ரீகைலையிலே எழுந்தருளியிருக்கும் ஸ்ரீகண்டபரமசிவன் பால் ஞானதீக்ஷையும் ஞானபிடேகமும் சிவஞானபோதோப தேசமும் பெற்ற திருநந்திதேவர் அருளுபதேசமரபினராகிய மெய்கண்டதேவர் சந்ததியும், மேலோங்கும்வண்ணம் ஓர் சற்புத் திரர் திருவவதாரஞ்செய்தார். அவர், தம்மரபினுக்குரிய சாத கன்மமாதியான சற்கருமங்களும், உமாபதி என்னும் நாமகரண மும், தந்தையார் செய்யப்பெற்று, முன்னைத்தவத்தானெய்திய முதுக்குறைவு துணையாக நிற்ப ஆரியமும் செந்தமிழும் அமைவு பெறப் பயின்று, வேதசிவாகமமாதியான மெய்க்கலைகள் யாவும் விரைவிற்றானே விழைந்தோதி வருவாராயினர்.

---

* நாம் அவர்களுள் ஒருவர் என்றது கோயிற்புராணம், இரணியவன்மச் சருக்கம் ௧௨அ-ம் பாட்டு.

செம்மை மெய்ப் பெரியோர் போலத் தேடரி தென்று மைந்தன்
மெய்ம்மையிற் றுயர நோக்கி விமலன்விண் ணவருங் கேட்ப
வெம்மையொப் பவர்கள் யாரும் யாமவர்க் கொப்பே மென்றே
யம்மையப் பனுமா வானு மவர்களி லொருவ ரென்றான். என்பதனுற் றாண்க.

இங்ஙனமாகச் சிலஆண்டுகளுள் எக்கலைகளும் எளிதிற் பயின்று சகலகலாவல்லுநராய் விளங்குந் தவப்புதல்வராகிய உமாபதியார், பின்னர் தந்தையாரால் சிவதீக்ஷைபெற்றுத் தமக்குரிய ஆன்மார்த்த பூசையையும், கோயிற் பூசையையுங் கைக்கொண்டு உரியகாலங்களில்திருக்கோயிலிற்சென்று, உள்ளத்துப் பதிந்த உழுவலன்பினால் நடராசப்பெருமானைப் பூசித்துவரும் பெரும்பேறுடையராய் வாழ்ந்துவருவாராயினர். அக்காலத்தில்; அவர்தமிழில் கோயிற்புராணம், திருமுறைகண்டபுராணம், திருத்தொண்டர்புராணசாரம், திருத்தொண்டர்புராணவரலாறு, திருப்பதிக்கோவை, திருப்பதிகக்கோவை என்னும் நூல்களை இயற்றினர். அன்றியும் வடமொழியில் பௌஷ்கராகம வியாக்கியானம் முதலியனவுஞ் செய்தனர்.

பின்னர் உமாபதியார்க்கு முற்பிறவிகளினும் இப்பிறவியினும் உள்ள சிவபுண்ணியப்பயன்களெல்லாம், ஒருங்கே முற்றி இருவினையொப்பும் மலபரிபாகமும் எய்துவிக்க; நாலாஞ்சத்திநிபாதம் வந்து சார்தலால், அப்பெருந்தகையார், வீடுபேற்றின் கண் அவாமிகவுடையராகி, "ஞானசாரியரை எங்ஙனம் நேடி எப்போது காண்பேம்'' எனக் கவலைகூர்ந்திருந்தனர். இங்ஙனம் கவலை கூர்ந்திருப்பவராகிய உமாபதியார், சின்மயவியோமமாகித் திகழுஞ் சிற்சபையிற்றிருநடனம்புரியுஞ் சிவபிரான் திருவருள் பிரேரித்திட "மறைஞானசம்பந்தர் என்னும் ஞானசாரியர் ஒருவர் திருக்களாஞ்சேரியிலுள்ள சிருங்காரவனத்தில் எழுந்தருளியிருக்கின்றார்'' எனத்தேர்ந்து, அங்குச்சென்று, ஞானதேசிகரைத் தரிசித்து, ஞானதீக்ஷையும், சிவஞானோபதேசமும், ஞானபிடேகமும் பெற்று, அவ்வாசிரியருக்குத் துவிதீயஆசிரியராகிய பெரும்பதவியையும் எய்தினர். பின்பு உமாபதிசிவாசாரியர் தமது ஞானாசிரியர்பால் அத்துவித சித்தாந்த நுண்பொருள் அமைதிபெற நன்காராய்ந்து, அருட்பணிவிடைபுரிந்து வருநாட்களில், ஞானதேசிகர் சிவபரிபூரணமுற்றருளத்தாம் வேதசிவாகம விதிப்படி ஞானதேசிகருக்குப் பூசை மாகேசுரபூசை சிறப்புறச் செய்து, அங்கு எழுந்தருளியிருந்தனர்.

அக்காலத்தில் சித்தாந்த சூத்திரமாகிய தமிழ்ச்சிவஞான போதத்திற்குச் சார்புநூலாகச் சிவப்பிரகாசமும், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப்பஃறொடைவெண்பா, *கொடிக்கவி, உண்மைநெறிவிளக்கம், நெஞ்சுவிடுதூது, †சங்கற்பநிராகரணம் என்னும் சித்தாந்த சாத்திரங்களும் இயற்றியருளினர். அன்றியும் தம்பால் அன்பாற் சரண்புகுந் தீக்ஷைசால் மாணவர் பற்பலருக்கு ஞானதீக்ஷைசெய்து, சிவஞானபோதம், சிவஞானசித்தி, இருபாவிருபது என்னும் மூன்று ஞானநூல்களையும், தாம் இயற்றிய சிவப்பிரகாச்முதலாகச் சங்கற்பநிராகரணம் ஈறாயுள்ள எட்டு ஞானநூல்களையும் உபதேசித்து அங்கு நெடுங்காலம் வசித்திருந்தருளினர்.

அங்ஙனம் வசிக்கு நாட்களிலே, ஞானதேசிகர் அன்பர்கள் பிரார்த்தனைக்கு இசைந்து, கொற்றவன்குடிக்கு எழுந்தருளி, அன்பர்களால் நிருமிக்கப்பட்ட திருமடத்திலே அமர்ந்து, பரிபக்குவம் ஆராய்ந்து, மாணவர்களுக்கு ஞானோபதேசஞ்செய்து வருவாராயினர். இது நிற்க.

சிதம்பரத்தின் எல்லைக்காவற்றொழில்புரியும் பெத்தான் என்னும் பெயருடைய சாம்பானூர் ஒருவர், முன்னைப்பிறவிகளில் முதறிவானியற்றிய பெருந்தவத்தாற் கருணைப்பெருங்கடலாகிய நடராஜப்பெருமானிடத்துத் தமக்கு மெய்யன்பு பெருகா நிற்பத், திருக்கோயிலையடைந்து, மதிற்புறத்தே நின்று சுவாமிதரிசனஞ் செய்து வெளியேவருஞ் சிவனடியார்களைத் தரிசித்து, அன்பினுல்

---

* சிதம்பரம் நடராஜரது உற்சவத்தொடக்கம் ஒன்றிலே ஏறுது நின்றிருந்த துவஜம் ஏறும்படி கொடிக்கவி என்னும் நூலினைச்செய்தனர் என்பர்.

† சங்கற்ப நிராகரணம் செய்தகாலம் (சாலிவாகன சகாப்தம் ௧௨௩௬) என்பது அந்நூலில் நூற்காரணஞ் முதலானவை விளங்கக்கூறிய திருப்பாசுரத்தால் வெளிப்படும்.

நெக்கு நெக்குருக நிலமிசை வீழ்ந்து நமஸ்கரித்தெழுந்து, ஆன ந்தபரவசராய் ஆடிப்பாடிச்செல்வாராயினர். இங்ஙனமாக நிகழு நாளினில் ஓர் நாள், நடராஜப்பெருமான் திருவருளால் அப்பெரு மானுக்கு நிவேதனம் அமைத்தற்கு நாடோறும் விறகுகொடுக் குந் திருத்தொண்டு நாம் செய்யத்தக்கதே எனத்துணிந்து அந் நாள் தொடங்கி அத்திருத்தொண்டினை அன்போடு அடைவே இயற்றி வருவாராயினர்.

இங்ஙனஞ் சிலநாட்சென்றபின் ஓர்நாள் சாம்பானர் வழக் கப்படியே விறகுகட்டினைக்கொண்டு, கீழைக்கோபுரவாயினிலிற க்கிவைத்துவிட்டு நிற்கும்போது நடராசப்பெருமான், தம்மை அருச்சிக்கும் அந்தணர் ஒருவர்போல அங்குச்சென்று, சாம்ப னரைநோக்கி "அன்பனே! நீ நாளைமுதலாகக் கொற்றவன்குடி யில் உமாபதிசிவாசாரியசுவாமிகள்திருமடத்திற்கும் விறகுகொடு த்து வருவாயாக" எனப்பணித்து அக்கணத்திலே மறைந்தருளி னர். உடனே சாம்பானர் மனந்திகைத்துச், சிறிதுபோழ்து மரம்போல அசைவற்றுநின்று, பின் ஒருவாறு தெளிந்து, இங்கு எழுந்தருளியவர் நம்மிறைவராகிய ஞானநடராஜர் எனநிச்சயித் துத், திருவருளை நினைந்து நினைந்து மனம் உருக உரோமஞ்சிலி ர்ப்பக் கண்ணீர் ஆறாகப்பெருகிவழிய நாத்தழுதழுப்பப் பலவாறு துதித்துக்கொண்டுசென்று, தெற்குக்கோபுரவாயிலை அடைந்து பலமுறை வீழ்ந்து நமஸ்கரித்துத், திருவீதி வலம்வந்து மீண்டும் நமஸ்கரித்தெழுந்து விடை பெற்றுக்கொண்டு அரிதின்நீங்கித் தமது குடிசைக்குச் சென்றனர்.

பின்பு சாம்பானர் மற்றைநான் முதலாக உமாபதிசிவாசாரிய சுவாமிகள் திருமடத்திற்கும் விறகு கொடுத்துவந்தனர். அங்ங னமாக நாடோறும் அவர் மெய்யன்பினேடு அப்பணிபுரிந்துவரு நாட்களிலே, ஞானநடராசப்பெருமான், அத்திருப்பணிக்கு இர ங்கி, ஓர்நாள் சாம்பானர் வழக்கப்படி மத்தியான பூசையில் சுவாமிதரிசனஞ்செய்து வெளியேவந்த சிவனடியார்களைத் தரிசி த்துக்கொண்டு வீதிவலம் வரும்போது, தெற்குவீதியிற் கோபுர

வர்சனுக்கு நேராக இரண்டு பணம் வைத்தருளினர். சாம்பா ஞர் அதனைக்கண்டு, இஃது வழிச்செல்வோர் ஒருவர் கையினின் றும் வழுவியதாகுமெனக் கழித்துவிட்டுத் திருவடித்தியானம் இடையறாது செய்துகொண்டு தாம் முன்போல் வீதிவலம்வந்த னர். அப்பொழுதில் அம்பலவாணர் அசரீரியாக நின்று; "அன் பனே! இந்த இரண்டுபணமும் உனக்காகவே வைத்தோம். எடு த்துக்கொள்வாயாக" என்றுதிருவாய்மலர்ந்தருள, அதைக்கேட்ட சாம்பானுர் அதிசயமுற்று எம்பெருமான் திருவுள்ளமிருந்தவண் ணம் இதுவே! என்று நினைந்து, அன்பினுல் கண்களினின்றும் ஆனந்த அருவிபொழிய நின்று, சிவநாமங்களையோதி வழிபட்டுப் பின்பு அப்பணத்தினை எடுத்து இருகண்களினுமொற்றிக்கொண்டு சென்று, வீதிவலம் வந்து விடைபெற்றுக் கடைவீதியிற் சென்று உணவிற்கு வேண்டியவற்றை வாங்கிக்கொண்டு, குடிசைக்குச் சென்று அங்கே தமக்குநிகழ்ந்ததை மனைவியாரிடத்துக்கூறினர். அதனைக்கேட்ட அவர் மனைவியார் ஆநந்தமும் அதிசயமும் எய் தித் தம்நாயகரிடத்து மிகவும் அன்புபாராட்டி யொழுகினர். இங்ஙனமே அடியார்க்கெளியராகும் அம்பலவாணர் நாடோறுந் தெற்குக் கோபுரவாயிலுக்கு நேராக இவ்விரண்டு பணம் வைத் தருளச்; சாம்பானுர் அதனை யெடுத்துப்போய் யாதொரு குறைவு மின்றி வாழ்ந்திருந்தனர்.

இங்ஙனம் நிகழுநாளிலே திருச்சிற்றம்பலவர், பெத்தான் சாம்பானுர்க்குப் பிறவித்துன்பம் ஒழித்தருளவும், தலையன்பு சார்ந்த அச்சாம்பானுராகிய தவப்பெரியார் செய்துவரும் மெய் மைத் திருத்தொண்டின்றிறத்தை நாமெல்லா முணர்ந்துய்யவும் திருவுளங்கொண்டு ஓர்நாள் எங்கும் வெள்ளம்பெருகுமாறு மழை பொழியச்செய்தனர். அதனுற் சாம்பானுர் காட்டிற் செல்லுதற்கு வழிதெரியாது மயங்கிச் செய்வதொன்றுமுணராமற் கவலைக்கடலு ளாழ்ந்துகிடந்தனர். அன்று மாலையில் அம்பலவாணர் ஓர் அந்த ணர்குலத்து மெய்யடியார்போல் அங்குச்சென்று, சாம்பானுரைக் கூவியழைத்து "நீ இன்றையதினத்தில் திருக்கோயிலுக்கும், திருமடத்திற்கும் ஏன் விறகு கொடுக்கவில்லை" யெனவினவியருள; அவர் அதனைக்கேட்டஅளவில் முன்னையினும் மிகுந்த அச்சமுடை

யாகி நின்று, "சுவாமி! இவ்விடம் எங்கும் மழைபெய்து காடு முழுதும் வெள்ளம் நிறைந்துகொண்டதனால் விறகு வெட்டிக் கொண்டு போய்க்கொடுத்தற்குத் தடைநேர்ந்தது" எனக்கூற; அதற்கு அடியவர் வடிவந்தாங்கி வந்த அம்பலவாணர், "நீ இன்று கொடுக்கவேண்டிய விறகையுஞ்சேர்த்து நாளைக்குத் தவறாது கொடுப்பாயாக" எனத்திருவாய்மலர்ந்தருள; அதனைச்செவியிற் கொண்ட சாம்பானார், "சுவாமிகள் கட்டளையிட்டருளியவண்ணமே செய்கிறேன், வழியில் வெள்ளப்பெருக்குத் தடைசெய்கின்றதே" என மீண்டும்விண்ணப்பஞ்செய்ய; அம்பலவாணர் சாம்பானரை நோக்கி, "அன்பனே! நீ விறகுகொண்டுபோகும்போது வெள்ளப் பெருக்கினைப்பார்த்து, யான் சிற்சபேசன் எழுந்தருளியிருக்கும் திருக்கோயிலுக்கும், கொற்றவன்குடியில் உமாபதி சிவாசாரியசுவாமிகள் திருமடத்திற்கும், விறகுகொண்டுபோவதற்கு இப்போது வழிவிடவேண்டுமெனக்கேட்டால் உடனே அவ் வெள்ளப்பெருக்குப்பிரிந்து வழிவிடும்" எனத் திருவாய்மலர்ந்து,

அடியார்க் கெளியன்சிற் றம்பலவன் கொற்றங்
குடியார்க் கெழுதியகைச் சீட்டுப்—படியின்மிசைப்
பெத்தான்சாம் பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து
முத்தி கொடுக்க முறை.

என்னும் திருப்பாசுரம் வரையப்பட்டசீட்டைப் பூமியில்வைத்து, "திருமடத்தில் எழுந்தருளியிருக்கும் ஆசாரியசுவாமிகள் திருமுன்பு அடைவிப்பாயாக" எனப்பணித்துவிட்டு உடனே மறைந்தருளினர். சாம்பானார் பேரதிசயமுற்று, இஃதென்ன விந்தை! இவ்விடத்தில் அன்பர் வடிவந்தாங்கி யெழுந்தருளியவர் சிற்சபேசர் எனத்தேறி, எம்பெருமானுக்கு எளியேன்பாலும் இத்தகைய பெருங்கருணையுளதோ! எனநினைந்து, அன்பினால் மனங்கரைந்து, கண்ணீர்வார ஆனந்தக்கூத்து ஆடியும் பாடியும் நெடிதுபோழ்து நின்று, பின்பு தன்குடிகைக்குச்சென்று, மனைவியார்பால் நிகழ்ந்தனயாவுங்கூறி மகிழ்ந்திருந்தனர். இஃதிங்ஙனமாக,

ஞானதேசிகர், அன்று திருமடத்தில் மாகேசுரபூசைக்குக் காலந்தாழ்த்தமை யாதுபற்றி? என அமுதமைப்போரைவினவி யருள; அதற்குஅவர்கள் "வழக்கமாக ஓர்பஞ்சமன் விறகுகொடுத்துப்போவான். இன்று அவன் வாராமையால் திருவமுதமைக்கக் காலந்தாழ்த்துவிட்டது" என்று விண்ணப்பஞ்செய்தனர். அதனைத் திருவுளத்திற்கொண்டருளிய ஞானதேசிகர் அவ்வடியவர்களை நோக்கி, அவன் நாளைக்கு இங்குவந்தால் நம்மிடத்துத் தெரிவிப்பீராக எனத் திருவாய்மலர்ந்தருளினர். இது நிற்க.

பின்பு சாம்பானர், அடியவர் வடிவந்தாங்கிவந்த அம்பலவாணர் ஆணையளித்தருளியவாறு திருக்கோயிலுக்கும், திருமடத்திற்கும், மறுநாட்காலையில் விறகுசேகரித்து மனைவியுடன் செல்வார், வழியிற் பெருகியோடும் வெள்ளத்தை நோக்கி அம்பலவாணர் தமக்கருளியவாறுவேண்ட; அத்தருணத்தில் அவ்வெள்ளமானது பிரிந்து வழிவிட்டு நிற்ப; அதுகண்ட பெத்தான் சாம்பானாரும் அவர்மனைவியாரும் பெரிதும் ஆச்சரியமுற்று, அம்பலவாணரது அருள்விளையாடலே எனச்சிந்தித்து, மகிழ்ந்து, துதித்துக்கொண்டு, அவ்வழியே திருக்கோயிலுக்குச்சென்று, வழக்கப்படி திருவிறகுப் பணிவிடை புரிந்து, அங்குநின்றும் புறப்பட்டுக், கொற்றவன்குடிக்குச்சென்று, உமாபதிசிவாசாரியசுவாமிகள் திருமடத்தின் சமீப எல்லையை யடைந்து, அங்கு விறகுக்கட்டுக்களை மனைவியுடன் கீழே இறக்கிவைத்துக்கொண்டு நின்றனர். அதை அடியவர்களில் ஒருவர் ஞானதேசிகர் திருமுன்புசென்று "விறகுகொண்டுவரும் பஞ்சமன் இப்போது இங்குவந்து நிற்கின்றான்" என்று விண்ணப்பிக்க; ஞானதேசிகர் திருவுளமகிழ்ந்து தமது அடியார்களோடு திருமடத்து வாயிலிலே எழுந்தருளிவந்தனர். அங்ஙனம் ஞானதேசிகர் எழுந்தருளியதைக் கண்டமாத்திரத்தே பெத்தான் சாம்பானர் அடியற்ற மரம்போல் வீழ்ந்து, பலமுறை நமஸ்கரித்தெழுந்து, உடனே அம்பலவாணர் அளித்தருளிய திருமுகத்தைத் திருமுன்னர்வைத்து, மீண்டும் நமஸ்கரித்து நின்றனர். அத்தருணத்தில் அங்குநின்ற அடியவர்களில் ஒருவர் அத்திருமுகத்தை யெடுத்துவந்து கொடுக்க; ஞானதேசிகர் தமது

ளாத்திலேற்று வாசித்துத்திருவுளம் மகிழ்ந்து, பெத்தான் சாம் பானரைப் பெரிதும்நோக்கி, அவர்தம் பக்குவமேன்மையை முற்றவோர்ந்து திருவருள்சுரந்தருளுவாராயினர்.

பின்பு ஞானதேசிகர் பெத்தான்சாம்பானுருக்கு உடனே பர முத்தியைப்பயப்பதாகிய சத்தியோ நிருவான தீக்கைசெய்யத் திருவுளங்கொண்டு அங்ஙனமே திருநோக்களித்தருள; அக்க ணமே யாவருங் காணும்படி அத்தவப்பெரியோரைச் சூழ்ந்து ஓர் சோதி தோன்றிச் சிறிதுபோழ்தினுள் அவரது பொய் யுடலை மறைத்தது. அதனைக்கண்ணுற்று நின்ற அடியவர் யாவ ரும் பேரற்புதமெய்தி, ஆனந்தபரவசராய்த் தமது ஞானதேசிகர் திருமுன்பு வீழ்ந்து, நமஸ்கரித்து நின்றனர். அப்பொழுது அங்குநின்ற பெத்தான்சாம்பானர் மனைவியார், தங்கணவரைக் காணப்பெறாது மயங்கி, அச்சமும் அவலமும் எய்தி, நிலத்தில் விழுந்து கிடந்து புலம்பினர். அதனைக்கண்ட திருக்கூட்டத்தன் பர்கள் அவருக்கு நிகழ்ந்த உண்மையை எடுத்துக்கூறிப்பலவாறு தேற்றவும்; அவர் செவிக்கொள்ளாது எழுந்து புலம்பிக்கொண்டு விரைந்தோடிச் சென்று, தமது சுற்றத்தாரோடு அரசனது அரண்மனையின் புறத்தையடைந்து, அங்குமுறையிட்டு நின்றனர். அதனைக் காவலாளரால் உணர்ந்த அரசன், பெரிதும் வியப்புற்று, இதனையிப்பொழுதேசென்று ஆராய்தல்வேண்டுமெனத் தன்னுள் ளத்திற்கொண்டு, மந்திரிமுதலானோர் புடைசூழ்ந்துவரப் புறப் பட்டுத் திருமடத்தையடைந்து, அவ்விடத்து ஞானதேசிகரைத் தரிசித்துப்பணிந்து நிற்க, ஞானதேசிகர் அவ்வரசனைத் தம் அரு கிருக்கப்பணித்து, அன்புமீதூர அளவளாவிக்கொண்டிருந்தனர். பின்பு ஞானதேசிகர் அரசன் உள்ளத்திற்கொண்டுவந்த ஐயத்தை நீக்கியருளத் திருவுளங்கொண்டு நிகழ்ந்தன யாவும் எடுத்துரைத் தருள, அரசன் பேரற்புதமெய்தி, ஞானதேசிகரை நோக்கித், தேவரீர் இங்ஙனமியற்றிய திருவருட்செயல் யாவருக்கும் புலப் படுமாறு செய்தருள்வேண்டுமென வேணவாவோடும் இரந்து விண்ணப்பஞ்செய்துநிற்ப; ஞானதேசிகர் அதனைத் திருவுளத்திற் கொண்டு, அவ்விடத்திற்றானே கோமுகையின் பக்கத்தில், தாம்

நாடோறும் அழகிய திருச்சிற்றம்பலஉடையவருக்கும், அம்பலவாணருக்கும் ஆட்டும் அபிடேக நீரால் வளர்ந்து மாகேசுரபூசையிற் கறியமுதுக்குக் காய்கொடுத்துவந்த முள்ளிச்செடி ஒன்று பரிபக்குவம் வாய்ந்திருப்பதையோர்ந்து, அதற்கு முத்திகொடுத்தருளத் திருவுளங்கொண்டு, அதனை அரசனுக்குத் தெரிவித்தருள; அரசன் ஆணையால் யாவரும் வந்துகூடினர். பின்பு ஞானதேசிகர் அரசன் முதலானோரை அழைத்துக் கொண்டு முள்ளிச் செடிக்கு முன்னாக வெழுந்தருளி, அதனிடத்துத் தாம் திருவுளநோக்கஞ் செய்தருள; அங்கு யாவருங்காணும் படி ஓர்சோதி வடிவந் தோன்றி, அம்முள்ளி வடிவத்தை மாற்றி, ஆகாயத்தில் எழுந்துமறைந்தது. அதனைக்கண்ணுற்ற அரசனும் மற்றுமுள்ளோரும் பேரற்புதமெய்தி, ஞானதேசிகர் திருவடிகளில் வீழ்ந்து நமஸ்கரித்து மெய்யன்பினால் பலவாறு துதித்துக்கொண்டு விடைபெற்றுச் சென்றனர்.

பின்பு சிலகாலங்கழித்து ஞானதேசிகர், "நான்பெற்ற வின்பம் பெறுகவிவ்வையகம்" எனத்தமது சந்தானமுதற்குரவராகிய திருநந்திதேவரிடம் அருளுபதேசம்பெற்ற *திருமூலநாயனர் திருமந்திரத்துத் திருவுளம்பற்றியருளியவாறே, தாமும் அச்சந்தானமுறையிற்பெற்ற அருளுபதேசமாண்பினால் அநுபவிக்கும் மெய்யின்பவாழ்வினை இத்தமிழுலகம்வழிமுறையிற் பெற்றுய்யும் வண்ணம் திருவுளம்பற்றித், தம்பால் மூவகைத் தீக்கையுஞ் சித்தாந்தோபதேசமும்பெற்ற அருணமச்சிவாயர்க்கு ஓர்சுபதினத்திலே ஞானபிடேகஞ்செய்து தமக்கு துவிதிய ஆசிரியராக

---

* திருமூலர் திருநந்திதேவர் அருளுபதேசம் பெற்றவரென்னும் இதனுண்மை திருத்தொண்டர் பெரியபுராணத்துள் கூறியவாற்றால் இனிது விளங்கும். அன்றியும் அந்நாயனர் அருளிச்செய்த திருமந்திரத் திருமுறையுள் "நான்பெற்றவின்பம் பெறுகவிவ்வையகம், வான் பற்றிநின்ற மறைப்பொருள் சொல்லுவன், ஊன்பற்றிநின்ற வுணர்வுறு மந்திரம், தான்பற்றப்பற்றத் தலைப்படுந்தானே" என்பதனாற் அவரது வேகாருணியம் நன்கு புலப்படும்.

வைத்தருளினர். பின்னர் சிலபகல்சென்று, தாம் பூசித்து வந்த ஆன்மார்த்த அழகிய திருச்சிற்றம்பலவுடையவரையும் அம்பலவாணரையும் என்றும் பூசித்துவரும் அதிகாரத்தையுங் கொடுத்து, வீடுபேற்றினை விரும்பிவந்தடைவர்க்குப் பரிபாக நோக்கி அருளுபதேசஞ்செய்யும் முறைமையை விளக்கி, அந் நெறிநிற்கவைத்துத்தாம் கொற்றவன்குடியிலே சித்திரைமாதத்து அத்தநட்சத்திரத்திலே தமது திருவுருஜோதிர்மயமாக, அம்பல வாணர் திருவடிநீழலை அடைந்தருளினர்.

உமாபதிசிவாசாரியசுவாமிகள், திருநந்திதேவர் அருளுபதேசமரபினராகிய மறைஞானசம்பந்தசுவாமிகள்பால் அருளுபதேசம்பெற்றனர் என்பதூஉம், திருச்சிற்றம்பலவர் திருமுகம் பெற்றுப் பெத்தான்சாம்பானுக்கு முத்திகொடுத்தருளினர் என் பதூஉம், இவ்வாசிரியசுவாமிகள் இயற்றிய சிவப்பிரகாச முத லிய ஞானநூல்களிற்கூறிய சந்தானபரம்பரைக் குருதோத்திரங் களானும் சேக்கிழார் பிள்ளைத்தமிழுள் செங்கீரைப்பருவத்தில் நான்காவது செய்யுளானும் இனிது புலப்படும்.

அவை வருமாறு:— சிவப்பிரகாசம்.

தேவர்பிரான் வளர்கயிலை காவல் பூண்ட
திருநந்தி யவர்கணத்தோர் செல்வர் பாரிற்
பாவியசத் தியஞான தரிசனிக ளடிசேர்
பரஞ்சோதி மாமுனிகள் பதியா வெண்ணெய்
மேவியசீர் மெய்கண்ட திறலார் மாறா
விரவுபுக ழருணந்தி விறலார் செல்வத்
தாவிலருண் மறைஞான சம்பந்த ரிவரிச்
சந்தானத் தெமையாளுந் தன்மை யோரே.

பார்திகழ வளர்சாம வேத மல்கப்
பராசரமா முனிமரபு பயில ஞானச்
சார்புதர வந்தருளி யெம்மை யாண்ட
சைவசிகா மணிமருதத் தலைவ னந்தன்
கார்மருவு பொழில்புடைசூழ் மதின்மீதே மதியங்
கடவாமை நெடுங்கொடியின் கரந்தகையுங் கடந்தைச்
சீர்நிலவு மறைஞான சப்பந்த னெந்தை
திருவளரு மலரடிகள் சென்னி வைப்பாம்.

சேக்கிழார் பிள்ளைத்தமிழ்.

தூயவொளி யிருட்புபொன் மாளிகைத் தில்லைச் சபாநடன நாதர் பெத்தான், சாம்பானை யுய்த்தனம் நிருவான தீக்கையாற் றருமுத்தி யடைவி யென்றே, யாயதிரு முகமுய்த் திடப்பெற்ற கைலாய வம்பரம் பரையி லளவா, வருளுருவ மாயவ தரித்திட்ட மெய்ஞ்ஞான வற்புத வுமாபதிசிவ, னேயமிக விம்மைக்கு மறு மைக்கு மாதார நிலயநி தென்றுணர்ந்து, நினதுவர லாறருமை பாராட்டி யருள்செய நிரம்புமான் மியமடைந்தாய்,தேயநிகழ்குன் றையம்பதிபருண் மொழித்தேவ செங்கிரை யாடியருளே, திருத் தொண்டைநன்னாட்டுவேளாளர்குலதிலக செங்கீரையாடியருளே.

* மெய்கண்டசாத்திரம் பதினான்கு.

வெண்பா.

"உந்தி களிறு வுயர்போதஞ் சித்தியார்
பிந்திருபா வுண்மை பிரகாசம்—வந்தவருட்
பண்புவினா போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு
வுண்மைநெறி சங்கற்ப முற்று."

---

* [மெய்கண்டதேவர் அருளிச்செய்த சிவஞானபோதம் ஒன்றும், அருணந்திசிவாசாரியர் அருளிச்செய்த சிவஞானசித்தியார் இருபாவிரு பது ஆகிய இரண்டும், மனவாசகங்கடந்தார் அருளிச்செய்த உண்மை விளக்கம் ஒன்றும், உமாபதிசிவாசாரியர் அருளிச்செய்த சிவப்பிரகாச முதலிய எட்டும், திருவியலூர் உய்யவந்ததேவநாயனார் அருளிச்செய்த திருவுந்தியார் ஒன்றும், திருக்கடவூர் உய்யவந்ததேவநாயனார் அருளிச் செய்த † திருக்களிற்றுப்படியார் ஒன்றும் ஆகப்பதினான்கு சைவசித்தா ந்த சாத்திரங்களும் மெய்கண்ட சாத்திரமென அடிப்பட்ட சான்றோ ரால் வழங்கப்பட்டுவருகின்றன.

† திருக்களிற்றுப்படியார் அருளிச்செய்த உய்யவந்ததேவநாயனார், திருவியலூர் உய்யவந்ததேவநாயனார் மாணாக்கராகிய ஆளவந்தநாயனார் அருளுபதேசம் பெற்றவர். இந்நாயனார் சிதம்பரத்தில் வசிக்கும் நாட் களில், தமது ஞானாசிரியராது சற்குருவர் அருளிச்செய்த திருவுந்தியார் என்னும் சைவசித்தாந்த சாத்திரத்தை விரித்துத் தம்மையடைந்த ஓர் அதிபக்குவர்பொருட்டு ஓர் ஞானசாத்திரத்தை அருளிச்செய்து, அதன் பெருமையை உலகத்துள்ளாரும் உணர்ந்துய்யுமாறு திருவுளங் கொண்டு, திருவம்பலத்திற்சென்று வணங்கி அந்நூலைத் திருக்களிற் றுப்படியிலே வைக்குமளவில், அத்திருக்களிற்றுக்கைநிமிர்ந்து அதனை வாங்கிப் பரமகருணாநிதியாகிய ஞானநடராஜப்பெருமான் திருவடியிலே கொடுத்தமையால்,அங்குத்திருவணுக்கத்தொண்டராகிய தில்லைவாழந் தணர்கள் முதலாகிய பெரியவர்கள்கண்டு வியப்புற்று அந்நூற்குத் திருக்களிற்றுப்படியாரெனத் திருநாமஞ் சாத்தினார்கள்.]

சந்தானகுரவர் திருநட்சத்திரம்.

சித்திரை யத்த முமாபதி யாவணித் திங்கடனி
லுத்திரஞ் சீர்கொண் மறைஞான சம்பந்த ரோதுகன்னிச்
சுத்தமெய்ப் பூர மருணந்தி யைப்பசிச் சோதிதனில்
வித்தக மெய்கண்ட தேவர் சிவகதி மேவினரே.

உமாபதிசிவாசாரியர் சரித்திரம்.

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

ஒன்பதாவது
அருணமச்சிவாயதேசிகர் சரித்திரம்.

திருச்சிற்றம்பலம்.

சந்தான குரவர்களிற் சிவஞான போதம்வட மொழியாற் சாற்று
நந்தீசர் சனற்குமர பகவான்சத் தியஞான நலத்தோ னின்பப்
புந்திபெறுபரஞ்சோதிமாமுனிகடிருவடியைப்புகழ்ந்துபோற்றிச்
சிந்தைமகிழ்ந் தார்வமுறத் தினந்தினமு நினைந்துருகிச் சிந்தை
[செய்வாம்.

தமிழ்நூலா லந்நூன்முன் னூலாக்கு மெய்கண்டான் சர
ணம் போற்றி, திமிரமகற் றிடுகதிர்போல் வழிநூல்செய் யருண
ந்தி திருத்தாளேத்திச், சுமையுடனே யகற்றுதிரு மறைஞான
சம்பந்தர் துணைத்தாள் வாழ்த்தி, யமுதெனச்சார் பருணூல்சொ
லுமாபதிதே வன்றிருத்தா ளடைந்துய் வாமே.

பெற்றான்சாம் பான்மனைவி யிறைமுதலோர் பேதறவாற்
பெற்ற வையம், இற்றேடத் தம்பூசை யீசனுக்காட் டருநீர்பாய்ந்
தெளிதாய்ப் பாகம், உற்றேங்கு முள்ளிக்கு வீடீந்த வுமாபதியா
ருபதே சத்தின், முற்றேன்ற லாகியம ரருணமச்சி வாயகுரு
முதற்றாள் போற்றி.

திருவளர் கொற்றங் குடியிடை யமர்ந்த சிருமா பதிசிவா சிரியன், அருளுப தேசந் தோடுதன் பூசை யம்பல வாணர்பூ சனையும், புரிதரு மதிகா ரத்தையு மீந்து பொன்னடி சூட்டடிப் பெற்ற, குருவரு ணமச்சிவாயகோ மான்றன் குலமலர்த் தாளிணை போற்றி.

திருநந்திசந்தானகுரவரென்மருள் ஒருவராகிய உமாபதி சிவாசாரியாருளுபதேசம்பெற்ற அருணமச்சிவாயதேசிகர், தமது ஞானசாரியசுவாமிகள் திருவருளாணையின் வண்ணம் அக்கொற் றவன்குடியில் எழுந்தருளியிருந்து அழகிய திருச்சிற்றம்பலவு டையவரையும், அம்பலவாணரையும் தமது ஆன்மார்த்த சிவலிங் கப்பெருமானோடு எழுந்தருளப்பண்ணிப் பூசித்துக்கொண்டு, தம் மிடம் வந்தடைந்த பரிபக்குவர்களுக்கு ஞானதீக்கையும், சித் தாந்த ஞானோபதேசமுஞ்செய்து தமது குருசந்தானமோம்பி வருவாராயினர். இஃதிங்ஙனமாக.

சோழமண்டலத்திலேவேதாரணியத்திலும் நவகோடிசித்த வாசபுரமாகிய திருவாவடுதுறையிலும் நெடுங்காலமாக வசித்தி ருந்த சித்தமூர்த்திகளாகிய சிவப்பிரகாசர் என்னும் பெயரிய ஒருவர், பரிபாகவயத்தினுல் ஞானசாரியரையடைய விரும்பி, மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாகச் சென்றுடித் தரிசனஞ் செய்து, வார்த்தைசொலச் சற்குருபரன் என்று நமக்கு வாய்க்கு மென்று பரிவெய்தி வருவாராயினர். அங்ஙனம் பலதலங்களி னுஞ் சென்றுதரிசித்து வருபவராகிய அவர் சிதம்பரத்தையடை ந்து சிற்சபேசரைத் தரிசனஞ்செய்து அங்குவசிக்கு நாட்களில், ஞானசாரியராகிய அருணமச்சிவாயதேசிகரது அருளுபதேச மாண்பினைக் கேள்வியுற்று, அத்தேசிகோத்தமர்பால் அடைந்து குறையிரந்தனர்.

அப்போது ஞானதேசிகர் சித்தமூர்த்திகளது பக்குவச் செவ்வியாராய்ந்து ஓர் நல்லோரையில் அவர்க்கு ஞானதீக்கை யும் ஞானபிடேகமுஞ்செய்து சிவஞானபோத முதலாகிய சித் தாந்த நூல்களை உபதேசித்துத் தமக்குத் துவிதீயாசாரியராக

வைத்தருளினர். பின்னர் சிலகாலஞ்சென்று ஞானதேசிகர் தம தாசிரியரது ஆன்மார்த்த பூசையாகிய அழகிய திருச்சிற்றம்பல வுடையவரையும், அம்பலவாணரையும் பூசைசெய்யும் அதிகார த்தையளித்து வீடுபேறுகருதி விரும்பிவந்தடைவர்க்கு உபதே சஞ்செய்யுமுறைமையை விளக்கி அந்நெறிநிற்கவைத்துத் தாம் கொற்றவன்குடியிலே மார்கழிமாதத்துத் திருவாதிரை நட்சத் திரத்திலே சிற்சபாநடேசர் திருவடிநீழலிற் கலந்தருளினர்.

அருணமச்சிவாயதேசிகர் சரித்திரம்
முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

பத்தாவது
சித்தர்சிவப்பிரகாசதேசிகர் சரித்திரம்.

திருச்சிற்றம்பலம்.

உத்தமக்கோ முத்திபெறு மொருபதியின் வதிந்தருளி
எத்திறத்த வுயிர்களுக்கு மெளிதாக வொளிர்ஞானம்
பத்திகொள வறிவுறுத்திப் பரவீடு தரும்பெரிய
சித்தர்சிவப் பிரகாச தேசிகர்தாள் சிரத்தணிவாம்.

திருக்கயிலாயமலையில் ஸ்ரீகண்டபரமசிவன் திருவருளாணை மேற்கொண்டு, சித்தாந்தஞானபாநுவாய் சீடர்கள்பக்குவம் நன் காராய்ந்து * எழுவகைத் தீக்கையுள் ஞானஅவுத்திரி சாத்திரம்

---

* எழுவகைத் தீக்கைளாவன:—நயனம், பரிசம், வாசகம், மாநதம், சாத்திரம், யோகம், அவுத்திரி என்பனவாகும்.

அவை சிவஞானசித்தியார் சுபக்கம் அ-ம் சூத்திரம் ந-வது செய் யுளால் நன்குபுலப்படும். அச்செய்யுள்:—

" பலவிதமா சான்பாச மோசனந்தான் பண்ணும்
படிநயனத் தருள்பரிசம் வாசகமா னதமு
மலகில்சாத் திரமியோக மவுத்தி ராதி
யநேகமுள வவற்றினவுத் திரியிரண்டு திறனு
மிலகுஞா னங்கிரியை யெனஞான மனத்தா
லியற்றுவது கிரியையெழிற் குண்டமண்ட லாதி
நிலவுவித்துச் செய்தல்கிரி யாவதிதா னின்று
நிர்ப்பீசஞ் சபீசமென விரண்டாகி நிகழும்."

என்பதாம்.

முதலிய சிவதீக்கைகள்செய்து வீற்றிருக்கும் திருநந்திதேவர்க்கு ஒன்பதாவது பிற்றோன்றலாகியும், தமிழ்ச்சிவஞானபோத வழிநூலென வழங்குஞ் சிவஞானசித்திக்குப் பதவுரைசெய்தருளிய துறைசைச் சுப்பிரமணியதேசிகர்க்குப் பதினெட்டாவது முற்றோன்றலாகியும், விளங்கும் அருணமச்சிவாயதேசிகர்பால் அருளுபதேசம் பெற்றுக் கொற்றவன்குடியில் அமர்ந்தருளுஞ் சித்தமூர்த்திகளாகிய சிவப்பிரகாசதேசிகர் தமது ஞானாசிரியர் திருவருளாணையின் வண்ணம் நித்தியநைமித்திக ஆராதனையை நியமமாகச்செய்து, அங்குத் தம்பாலுற்ற பக்குவர்களுக்குச் சித்தாந்த ஞானோபதேசஞ்செய்தருள்வாராயினர். இஃதிங்ஙனமாக.

சோழமண்டலத்திலே திருமூவலூரிலே, சைவவேளாளர் குலத்திலே முழுதுலகும் புகழ்ந்தேத்தும் முன்னைத் தவமுடையார் ஒருவர், தமக்கு நெடுநாளாக புத்திரப்பேறின்மையால் வருத்தமுற்று மனைவியாரோடு புள்ளிருக்கு வேளூரையடைந்து, அவ்விடத்திற் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் வைத்தியநாதரையும் தையநாயகியையும் மெய்யன்பினுல் வழிபட்டு அருந்தவமியற்றினர். அந்நாளில் வைத்தியநாதர் அவ்வருந்தவத்திற்கு இரங்கி அவர்க்கு வரமளித்தருள, அவ்விருவரும் மகிழ்ச்சிகொண்டு, வைத்தியநாதரையும் தையநாயகியையும் வணங்கி விடைபெற்றுச்சென்று தம்மூரையடைந்து வாழ்ந்திருந்தனர். அங்ஙனம் வாழ்ந்திருக்குநாளில் வைத்தியநாதர் திருவருளால் அவர் மனைவியார் திருவயிற்றில் கருப்போற்பத்தியுளதாக, அதனையுணர்ந்த அறப்பெருந்தலைவர் அளவுகொள்ளா மகிழ்வுகொண்டு, தம்மரபினுக்குரிய மங்கலவறங்கள் மதிதொருமியற்றி, மாநில மதிப்ப வதிந்து சிறந்தனர். அங்ஙனம் ஐயிருமதியும் அடைவினில் அமைய வையகமுய்ய மாணுவர் சைவமெய்ந்நெறியோங்க வெண்ணெய் மெய்கண்டார் சந்ததி யென்றுந் தழைத்தினிது வைக ஓர் சற்புத்திரர் திருவவதாரஞ்செய்தார்.

அவர் தாம் வைத்தியநாதர் திருவருளால் அவதரித்தமையால், தந்தையாரால் வைத்தியநாதன் எனப் பிள்ளைத்திருநாமஞ் சாத்தப்பெற்று வளர்ந்து, ஐந்தாம்பிராயத்தில் வித்தியாரம்பஞ்

செய்யப்பெற்று கல்விபயின்றுவருங் காலையில், அவர்க்கு ஏழாம் பிராயம் எய்திநிற்ப, ஓர்நாள் முன்பு தம்பொருட்டாகச்செய்து கொண்ட பிரார்த்தனையை முடித்துவருமாறுநிச்சயித்து, சுற்றத் தாருடன் புறப்பட்டுச்செல்லும் தாய் தந்தையரோடு தாமுஞ் சென்று புள்ளிருக்குவேளூரையடைந்தனர். அங்கு அவர்கள் திருக்கோயிலிற் பிரார்த்தனையை முடித்துக்கொண்டு வைத்திய நாதரையும் தையநாயகியையும் வணங்கி விடைபெற்றுச் சண்டே ஸ்வரர் சந்நிதியையடையத், தாம் மெய்யன்பின்வயத்தால் வைத் தியநாதசுவாமியின் சந்நிதியைவிட்டு நீங்காமல் அங்குவழிபட்டு நின்றனர். அப்பொழுது சண்டேஸ்வரர் சந்நிதியையடைந்த தாய் தந்தையர்கள் அவ்விடத்தில் தமது தனயராகிய வைத்திய நாதரைக்காணுமல் மனக்கலக்கமுற்று, உடனே அங்குநின்றும் திரும்பி வைத்தியநாதசுவாமியின் சந்நிதியை நோக்கிவர அவ்வி டத்தில் தம்மைந்தர் சந்நிதியினின்றும் வெளியேவருதலைத் தூர த்திற்கண்டு, மகிழ்வுற்று நின்றனர். அவர் தம்சமீபத்தில் வர வும் அவரது கையில் ஓர் சிவலிங்கமிருக்கக்கண்டு, இதனை யாவ ரிடத்துப்பெற்றுய் எனவினுவ, அதற்கு அப்புதல்வர் ஆதிசைவா சாரிய சுவாமிகள் ஒருவர் உள்ளேநின்று, இப்பெருமானுரை எழுந்தருளப்பண்ணிக்கொடுத்து உறுதிமொழியுமுரைத்துவிட்டு உள்ளே சென்றனர் என, விடையளித்தனர். இதைக்கேட்ட இரு முதுகுரவரும் சுற்றத்தினரும் பேரற்புதமெய்தி, இது வைத் தியநாதர் திருவருட்செயலாகுமென மதித்து, அக்கடவுளின் திருவருட்பெருமையையும், அப்புதல்வரின் புண்ணியப் பேற்றி னையும், நினைந்து நினைந்து அன்பும் மகிழ்ச்சியும் பொங்கிவழிவது போல் கண்களினின்றும் அருவிநீர்பொழிய நாத்தழுதழுப்பப் பலவாறு துதித்துநின்று, பின்னர் அவ்விடத்தினின்றும் அரிதி னீங்கி, புதல்வரை முன்னுக நடத்திக்கொண்டு சென்று சண்டே ஸ்வரர் சந்நிதியையடைந்து வணங்கி விடைபெற்று வெளியே சென்றனர். பின்பு அங்குநின்றும் புறப்பட்டு இடையிலுள்ள சிவஸ்தலங்களையுந் தரிசித்துக்கொண்டு திருமுவலூரையடைந்து தமது இல்லத்திற்சென்று மகிழ்வோடிருந்தனர். பின்னர் சிறு

வராகிய வைத்தியநாதர், தாம் திருவருளாற் பெற்றுக்கொண்ட வைத்தியநாததம்பிரானென்னுஞ் சிவலிங்கப்பெருமானைத் தமது இல்லத்துச் சிறுகோயிலில் எழுந்தருளப்பண்ணி மெய்யன்போடு பூசித்துக்கொண்டிருந்தனர். இஃதிவ்வாறாக.

முன்புகொற்றவன்குடியிலெழுந்தருளியிருந்து குருசந்தான மோம்பிவரும், ஞானசாரியராகிய சிவப்பிரகாசதேசிகர், ஏனையோர்க்குளவாகிய பற்பலவாண்டுகள் தமக்குச் சிற்சில பகலாகக் கழியாநிற்பத், தாம் நெடுங்காலமாக வீற்றிருந்த நகரங்கள் இரண்டனுள் ஒன்றாகிய வேதாரணியத்திற்கு எழுந்தருளத் திருவுளங்கொண்டு, தமது அடியவர் கூட்டத்துடன் அங்குநின்றும் புறப்பட்டு, சிதம்பரத்தையடைந்து சபாநாயகரைத் தரிசித்து விடைபெற்று வழியிடையிலுள்ள சிவஸ்தலங்களையும் தரிசித்துக் கொண்டு திருமூவலூரை யடைந்தனர். அங்கு ஞானதேசிகர் திருக்கோயிற் சந்நிதியின்முன்னர் பணிந்துசென்று வீதிவலம் வரும்போது, முன்னரே திருக்கோயிலிற்சென்று சுவாமிதரிசனஞ்செய்து வெளியேவந்த தவப்பெருஞ்செல்வராகிய வைத்தியநாதர், அங்குத் திருவருள் கூட்ட, ஞானதேசிகரைத் தரிசித்து, அப்பொழுதே பெருங்கருணைக்கடலாகிய சிவபெருமானே ஏழையேனை அடிமைகொண்டருளும் பொருட்டு இங்ஙனம் மானுடச் சட்டைசாத்தி எழுந்தருளியதாகுமெனச்சிந்தித்து அழலிற்பட்ட மெழுகென அகமுருகிப் பரவசமுற்று வேணவாவோடு விரைந்து சென்று, ஞானதேசிகர் திருவடிகளில் வீழ்ந்து பன்முறை நமஸ்கரித்தெழுந்து உச்சிமேற்கரங்கள் கூப்பிநின்று, தமியேனுடைய தவப்பயனாக ஈண்டெழுந்தருளிய சற்குருபரனே! ஏழையேனை யிப்பொழுதே அடிமைகொண்டு, தேவரீரது திருவடித்தொண்டு பூண்டொழுகும் இத்திருக்கூட்டத்தினர்க்கு என்றுங் குற்றேவல் செய்தொழுகும் பெருவாழ்வினை அடியேனுக்கு அளித்தருள வேண்டுமென இரந்து நின்றனர்.

அத்தருணத்தில் அடியவர் குழாத்தினுட் டலைமையெய்திய ஒருவர், இவரது இளமைச் செவ்வியினையும் பேரின்பநுகர்ச்சிக்

கன் இவர் மனத்துற்ற பெருவேட்கையினையும் உய்த்துணர்ந்து பரிவெய்திய சிந்தையராய், ஞானதேசிகர் திருமுன்புவந்து பணிந்துநின்று, ஐயனே! இம்மெய்யன்பனை இப்பொழுதே ஆண்டருளவேண்டுமென இரந்து விண்ணப்பஞ்செய்தனர். ஞானதேசிகர் அதனைத்திருவுளத்திற்கொண்டு, சிறுவராகிய வைத்தியநாதர் பாற்றிருவருணோக்கஞ்செய்து, அன்பனே! நம்முடன் வருவாயாகவெனப் பணித்தருளிச்செல்ல, அவர் இரும்பைக் காந்தம் இழுக்கின்றவாறுபோலத் தம்மை ஞானதேசிகர் திருவருணோக்கம் முன்னின்றிழுக்கவும், தம்மிடையறாப் பேரன்பு பின்னின்று தள்ளவும், தாம் ஞானதேசிகர் பின்னாகநடந்து செல்வாராயினர்.

பின்பு ஞானதேசிகர், முறையே வீதிவலம்வந்து திருக்கோயிலிற் சென்று சுவாமிதெரிசனஞ்செய்து, அங்குநின்றும் புறப்பட்டுப் பாங்கருள்ள ஓர் திருமடத்தையடைந்து அன்பர் பலரும் ஒன்றுகூடிவந்து மாகேசுரபூசையியற்றி வழிபட, அவர்களுக்கெல்லாந் தண்ணருள் சுரந்துஅங்குவீற்றிருந்தருளினர். அத்தருணத்தில் வைத்தியநாதர்,தமதுஆன்மார்த்தசிவலிங்கப்பெருமானை வீட்டினின்றும் எழுந்தருளிப்பண்ணி வருவதற்கு, இதுவே சமயமென நினைத்து, ஞானதேசிகரிடத்து விண்ணப்பித்து விடைபெற்றுக்கொண்டு வீட்டிற்குச்சென்று, தாய்தந்தையரிடத்து நிகழ்ந்ததைத் தெரிவித்துத் தமக்கு விடையளிக்கும்வண்ணம் பணிந்துநின்று வேண்டினர். அதனைத் தாய் தந்தையராகிய இருவரும் அதிசயமும் ஆற்றாமையும் பெரிதுமுடையராய், முன்னாளிலே புள்ளிருக்குவேளூரின்கண் திருக்கோயிலினுள்ளே தமது புதல்வர்க்கு வைத்தியநாதர், தம்மை பூசனைபுரியும் ஓர் ஆதிசைவாசாரியர்போல் வெளிவந்து அநுக்கிரகித்தருளிய திருவருட்செயலினுக்கு இயைய இந்நாளில் நிகழ்ந்த செயலை உற்றுநோக்கி, இதுவும் வைத்தியநாதர் திருவருட்செயலேயாகுமெனத் தெளிந்து, எல்லாமுடைய இறைவன் திருவுளம் இதுவேயாயின் யாம் செய்யக்கடவது யாது எனச்சிந்தித்து, மனம் நெக்குநெக்குருகி கண்ணீர்வாரத் தமது புதல்வரைத் தழுவிக்கொண்டு ஆராமைப்பெருக்கினால் நெடிதுபோழ்து நினைந்து நினைந்து பல

வாறு புகன்று, பின்னர் ஒருவாறு தம்மனத்து ஒருப்பாடுற்று, விடையளிக்க, வைத்தியநாதர் என்னும் பெயரிய அப்புத்திரர் உடனே அவர்கள் பாதங்களில் விழ்ந்து நமஸ்கரித்தெழுந்து சென்று, தமது ஆன்மார்த்தசிவலிங்கப்பெருமானை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு, தம்பெற்றாரும் உற்றாரும் பின்றொடர்ந்து வர ப்புறப்பட்டுத் திருமடத்தையடைந்தனர். அங்கு அவர் தம் இருமுதுகுரவரும் ஏனையோரும் ஞானதேசிகர் திருமுன்பு சென்று நமஸ்கரித்து நிற்ப; ஞானதேசிகர் அவர்மாட்டுத் திரு வருள்சுரந்து அவரை நோக்கி இதுவரை நுமக்குப் புதல்வனுக் யிருந்த இச்சிறுவன், இன்று எமக்குப்புதல்வனாக ஏன்றுகொள் ளப்பட்டான். ஆதலால், இனிமேல் நீவிர் இவனைக்குறித்து வருந்துவது தகுதியல்ல எனவும், இன்னும் இவ்வரும்பெறற் புதல்வனைப் பெற்றளித்ததனால், நீவிர் எடுத்த மானுடப்பிறவியின் பயனைமுற்ற அடைந்துகொண்டீர் எனவும் திருவாய்மலர்ந்து, பின்பு அவர் கவலைநீங்கி இன்புற்று வாழுமாறு திருவருள் பாலித்து விடையளித்தருளினர்.

பின்பு ஞானதேசிகர் அங்கு நின்றும் புறப்பட்டு வழியிடை யுள்ள சிவஸ்தலங்களைத் தரிசித்துக்கொண்டு, வேதாரணியத்தை யடைந்து திருக்கோயிலிற் சென்று சுவாமிதரிசனஞ் செய்து, அந்நகரின் பாங்குள்ள ஓர் வனத்தில், தாம் முன்பு வீற்றிருந்த தபோதனர் வசிக்கும் ஓர் சூழலில், எழுந்தருளியிருந்து தமது மாணவர்களுக்குச் சித்தாந்த ஞானேபதேசஞ்செய்துகொண்டு அத்தலத்திற் சிலகாலம் வசித்திருந்து, பின்பு அங்குநின்றும் புறப்பட்டு இடையிலுள்ள பலஸ்தலங்களையுந் தரிசித்துத் திருவா வடுதுறையை அணுகுவார், தம்சிந்தை நெகிழ்ந்துருகக் கண்களி னின்றும் ஆனந்த அருவிபொழிய, முகிழ்த்ததிருக்கரங்கள் முடி மீது பொருந்தப் பின்றொடருந் திருக்கூட்டம் தேவாரத் தமிழ் மறையைப் பண்முறையோடு பாடிவரத், தாம் மென்மெல நட ந்து திருக்கோயின் முன்சென்றுபணிந்து உள்ளேபுகுந்து இடப நந்தியின் பாங்கர் இறைஞ்சி, இரண்டாவது கோபுரவாயிலைக் கடந்து, மூன்றாவது கோபுரவாயிலில் நங்குருமரபிற்கெல்லாம் முதற்குருநாதனாகிய நந்திபிரானைவணங்கியருள்பெற்று, உள்ளே

சென்று மாசிலாமணியீசரையும், செம்பொற்றியாகரையும் தரிசனஞ்செய்து வெளிவந்து, ஒப்பிலாமுலையம்மையை உமுவலன்புடன் தரிசித்து, வலமாகவந்து திருமூலநாயனரைத் தரிசனஞ்செய்து, படாசினியும் பணிந்து மகிழ்வெய்தி அங்குநின்றும் அரிதினீங்கிப் புறத்தேவந்து, கோயிலுக்குத் தென்பாங்கரிற், குருவடிவங்கொண்டெழுந்தருளியிருக்கும் திருமாளிகைத்தேவரைத் தரிசனஞ்செய்து அங்குத் தமது திருமடத்தில் வீற்றிருந்தருளுவாராயினர்.

இங்ஙனம் வீற்றிருந்தருளும் ஞானதேசிகர் தம்பாலுற்ற சத்திநிபாதத்துத்தமராகிய வைத்தியநாதர்க்கு ஓர் சுபதினத்திலே ஞானதீக்கைபுரிந்து, தமது ஞானசாரியசுவாமிகள் திருநாமமாகிய பஞ்சாக்கரப் பெரும்பெயரையே அவர்க்குத் தீக்ஷாநாமமாகச் சாத்தித் திருவுளமகிழ்ந்தனர். பின்னர் தமது நற்றவச்சீடராகிய நமச்சிவாயர்க்கு சிவஞானபோதமுதலாகிய சித்தாந்தநூல்கள்யாவும் உபதேசித்தருள, அவர் அவற்றின் பொருள்களெல்லாம் அடியவர் குழாத்தோடிருந்து சிந்தித்துத் தெளிவாராயினர். இங்ஙனமாக நமச்சிவாயர் தாம் தீவிரதர பக்குவ முதிர்ச்சியால் விரைவாகவே ஞானநூற் பொருள்களை முற்றத் தேர்ந்து உண்மைநிட்டை பொருந்திச் சிவாநுபூதிச்செல்வராய்ச் சிறந்து திகழ்ந்தனர். இதுநிற்க.

எக்காலத்தினும் தன்னையடைந்தவர்க்கு மெய்ஞ்ஞானமும், வீடும், ஒருதலைபாகப் பயப்பதும், ஈசுவரிக்குப் பசுத்துவ நீக்கியதும், நவகோடி சித்தர்கள் நாளும் வாசஞ்செய்யப்பெறுவதும், ஆகலான் அநாதிமுக்திக்ஷேத்திரம், ஞானக்கோமுத்தி, நவகோடி சித்தவாசபுரம் என்பனமுதலாகப் பலநாமங்கள்கொண்டு பரவப்படுவதாய்ச், சைவசந்தான முதற்குரவராகிய நந்திபெருமானிடத்தே ஞானோபதேசம் பெற்றுவந்த சிவயோகிகளில் ஒருவர், சிவபிரானது திருவருளாணைபால் தன்னகத்து மூவாயிரமாண்டு மெய்ஞ்ஞானநிட்டை பொருந்தியிருந்து திருமந்திரமெனப் பெயரிய தென்மொழிச் சிவாகமந் திருவாய்மலர்ந்தருளப்பெற்ற திவ்விய ஞானபீடமாய், இன்னோரன்ன சிறப்புக்களால், எவற்றினும்

மேலாக விளங்குவது திருவாவடுதுறை எனப்படும் இத்திவ்விய ஸ்தலமே; தமது சந்தானோபதேச பரம்பரை யென்றுந்தழைத்தோங்குதற்குத் தகுதியாகிய ஸ்தானமெனத் திருவுளங்கொண்டு, தேசிகோத்தமராகிய மெய்கண்டார் பொல்லாப்பிள்ளையாரை வழிபட்டுச் சித்தாந்த ஞானோபதேசமரபை விளக்கி வந்தவரென்பதனைத் தமதிருதயத்திற்கொண்டுந் தமது திருமடத்திற்கு என்றும் ஆக்கந்தழையுமாறு சிந்தனைசெய்தும் அம்மடத்தின் வடக்குப்பிரதான வாசலின் மேற்றிசைத் தெற்றியில் ஓர் சிறுகோயில் கட்டுவித்து அதில்விநாயகரைப் பிரதிஷ்டைசெய்து பூசித்து, தந்திருநாமத்தையே அவ்விநாயகர்க்குத் திருநாமமாகச் சாத்தி இன்றும் அப்பெயர் வழங்குமாறு செய்தருளினர்.

பின்பு சிலகாலஞ்சென்று ஞானதேசிகர், தமது வாசஸ்தானங்களாகிய வேதாரணியம் திருவாவடுதுறை என்னும் இரண்டனுள்ஒன்றாகிய இத்திருவாவடுதுறையிலேதமதுஞானோபதேசமரபு என்றுந் தழைத்தோங்கும் வண்ணம் திருவுளங்கொண்டு தமது நன்மாணாக்கர் பலருள்ளுஞ் சிறந்த நமச்சிவாயருக்கு ஞானபிடேகஞ்செய்து தமக்குத்துவிதீய ஆசிரியராகவைத்துப்பின் ஓர்நாளில் வைகறைப்போதில் தாம் எழுந்தருளியிருந்த தானத்தைச் சூழவரைகீறித் திருவறையமைத்து, அங்குநின்று தமது சீடர்களைநோக்கி, நாம் இப்போது திருமறைக்காட்டிற்குச்செல்கின்றோம்; இன்றுமுதலாக அழகிய திருச்சிற்றம்பலவர் பூசையையும் அம்பலவாணர் பூசையையும் ஏற்றுக்கொண்டு இங்குவரைகீறியமைக்கப்பட்ட அறையினுள் அமர்ந்து, நமது சைவசித்தாந்த மரபுதழைக்க ஞானோபதேசஞ்செய்துவருமாறு ஆணைதந்தோம் என்று நமது நமச்சிவாயனுக்கு உரைப்பீராக எனத் திருவாய்மலர்ந்து, திருமாளிகைத் தேவரை தரிசித்து விடைபெற்று உடனே அங்குநின்றும் புறப்பட்டு மடத்து வடக்கு வாசலிற்குவந்து அவ்வாசலிற்குமேல்பால் தாம் பூசித்துவரும் விநாயகரைத் தரிசித்து விடைபெற்றுத் திருக்கோயிலை அடைந்து மாசிலாமணியீசுவரரையும் ஒப்பிலாமுலையம்மையையும் திருமூலதேவரையுந் தரிசித்து விடைபெற்றுக்கொண்டு,

அங்குநின்றும் அரிதினீங்கித் தம்மைப் பின்றொடருஞ் சீடர்களுக்குத் திருக்கரமமைத்து நிறுத்திவிட்டுத் தாம் வேதாரணியத்திற்கெழுந்தருளி, அங்கு ஓர் தபோவனத்தில் ஞானதேசிகர் அருட்பெருஞ் சித்தராய் அமர்ந்தருளினர். இது இவ்வாறாக.

வைகறைப்போதில் வழக்கப்படி காவேரிநதிக்குச் சென்றிருந்த நமச்சிவாயதேசிகர், அங்கு விதிப்படி தீர்த்தமாடிச் சந்திமுதலானவை முடித்துக்கொண்டு மீண்டு திருமடத்தையடைதலும், அங்குச்சீடர்களிற் சிலர் விரைந்துவந்து திருமுன்பு நமஸ்கரித்துநின்று, முற்பொழுதிலே ஞானதேசிகர் வேதாரணியத்திற்கு எழுந்தருளியதையும் அத்தருணத்தில் அத்தேசிகோத்தமர் அளித்த திருவருளாணையையும், அவர்க்கு விண்ணப்பித்தனர். அவற்றைக் கேட்டமாத்திரத்திலே நமச்சிவாயதேசிகர் திருவுளத்திற் பதைபதைப்புற்றுத் *என்னிலும் இனியனாகிய சற்குருநாதனைத் தணந்து தனியேயிருத்தற்குளவ்வாற்றானும் ஆற்றாது பின்றொடர்ந்து செல்வதற்குப் பேராசைகொண்டும், ஞானதேசிகர் கட்டளையிட்டருளிய ஆணையைக் கடத்தற்கஞ்சி நின்று, அழலிடைப்பட்ட வெண்ணெய்போல மெய்யன்பினால் உள்ளம் நெகிழ்ந்துருக; ஞானதேசிகர் நடந்தருளிய திக்கைநோக்கி நிலமிசை வீழ்ந்து, பலமுறை பணிந்தெழுந்து, பரவிக்கொண்டு அடியவர்களோடு திருமடத்துள் எழுந்தருளினர்.

சித்தர்சிவப்பிரகாசதேசிகர் சரித்திரம்.

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

---

* அது,

என்னி லாரு மெனக்கினி யாரில்லை
என்னி லும்மினி யானொரு வன்னுளன்
என்னு ளேயுயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்
கென்னு ளேநிற்கு மின்னம்ப ரீசனே.

என்வரும் திருவின்னம்பர் திருக்குறுந்தொகை முதல்செய்யுளில் "என்னிலுமினியான்" என்னுந் திருவாக்குப் பற்றியும் அறிக.

பதினொன்றாவது,

நமச்சிவாயதேசிகர் சரித்திரம்.

திருச்சிற்றம்பலம்.

கயிலாய பரம்பரையிற் சிவஞான போதநெறி காட்டும் வெண்ணெய், பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர் மெய்ஞ்ஞான பாநு வாகிக், குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ் குருநமச்சி வாய தேவன், சயிலாதி மரபுடையோன் றிருமரபு நீடூழி தழைக மாதோ.

இருதய நாப்ப ணஞ்செழுத் துருவி னிறைவனை யுயிர்க்கொலை செயாமை, அருள்பொறி யடக்கல் பொறைதவம் வாய்மை யன்பறி வென்னுமென் மலர்கொண், டொருமையொ டருச்சித் திடுகவென் றடியார்க் கொள்ளிய தீக்கைசெய் துணர்த்தத், திருவமர் துறைசை யுறையருட் குருவாந் திருநமச் சிவாயர்தாள் போற்றி.

திருக்கயிலாயமலையில் எழுந்தருளியிருக்கும் சீகண்டபரமசிவன்பால் திருவருளுபதேசம்பெற்ற திருநந்திதேவர் அருளுபதேசமரபில் பத்தாவது பிற்றோன்றலாய் விளங்கி வீற்றிருக்கும் சித்தர்சிவப்பிரகாசதேசிகர் திருவருளுபதேசம்பெற்ற நமசிவாயதேசிகர், திருவாவடுதுறையில் எழுந்தருளியிருந்துகொண்டு, தமது ஆசிரிய சுவாமிகள் திருவருளாணைமேற்கொண்டு அழகிய திருச்சிற்றம்பலவுடையவரையும் அம்பலவாணரையும், தமது ஆன்மார்த்த வைத்தியநாதத்தம்பிரானையும், நாடோறுஞ் சிவாகமவிதி தவறாமல் பூசனைபுரிந்துகொண்டு, தமது ஆசிரியசுவாமிகள் வகுத்த திருவறையில் அமர்ந்து, சிவாகமாந்தமானசித்தாந்த ஞானோபதேசஞ்செய்து வருவாராயினர்.

அக்காலத்தில் ஓர்நாள் ஸ்ரீகந்தமரபில் வாமமுனி சந்ததியில் வந்தருளிய ஆசிரியர் சிவாக்கிரயோகிகள், வேதாரணியத்

தில் எழுந்தருளியிருக்கும் சித்தர்சிவப்பிரகாசதேசிகர் திருவரு ளுபதேசம்பெற்ற துறைசை நமச்சிவாயதேசிகரது மகிமையைக் கேள்வியுற்றுச் சூரியனார்கோயிலினின்றும் புறப்பட்டுத் திருவா வடுதுறைக்கெழுந்தருளிவந்தனர். அப்போது அங்குத்திருவீதி யில் பிக்ஷைகொள்ளுதற்குச் சென்றிருந்த அடியவர்கள் அவ்வா சிரிய சுவாமிகளைக் கண்ணுற்ற மாத்திரத்தில், தாம் கொண்டு வந்திருந்த பிக்ஷாபாத்திரங்களைப் புறத்திண்ணை யொன்றினில் வைத்து விட்டு, வேகமாக அவ்வாசிரிய சுவாமிகள் திருமுன் சென்று பூமியில் வீழ்ந்து நமஸ்கரித்து நிற்ப, அக்குருபரர் புன் னகைகொண்டு அவர்கட்கு தண்ணருள்பாலித்துச்சென்று திருக் கோயிலுக்கெழுந்தருளி, மாசிலாமணியீசுரரையும், ஒப்பிலாமுலை யம்மையையும், செம்பொற்றியாகரையும், திருமூலதேவரையும், தெரிசனஞ்செய்து சித்தர்திருமடத்தின் வடக்குவாசலிற்சென்று அவ்வாசலின் மேல்பால் கோயில்கொண்டெழுந்தருளியிருக்குஞ் சிவப்பிரகாசவிநாயகரைத் தரிசித்து, மடத்தினுட்சென்று, திரு மாளிகைத்தேவர் குருமூர்த்தம்தரிசித்து வருஞ்சமயத்தில் ஞான தேசிகராகிய நமச்சிவாயதேசிகர், ஆசிரியர் சிவாக்கிரயோகிகளை ஆவலோடெதிர்கொண்டழைத்து *ஒடுக்கத்திற்சென்று இருவ ரும் ஆசனத்தமர்ந்து அளவளாவியிருந்தனர்.

அப்பொழுது ஆசிரியர் சிவாக்கிரயோகிகள், ஞானதேசிக ராகிய நமசிவாயமூர்த்தியை நோக்கி, இவ்விடத்துப்பணிசெய்து வரும் அடியவர்கட்கு இன்னும் ஆசாராநுட்டானங்கள் முற்றக் கைவரப்பெற்றிலர் போலும் எனக் கூறினர். அதனைக் கேட்ட ஞானதேசிகர் அது எதனாலென வினவ; அதற்கு அவ்வாசிரிய சுவாமிகள் வீதியில் அடியவர்கள் பால் நிகழ்ந்தசெயலைத் திரு வாய்மலர்ந்தருளினர். அப்போழ்தில் தம்அடியவர்மாட்டுத் திரு வுளமிரங்கி, இவர்கள் அவ்விடத்தில் தங்கையிலுள்ளவை இன் னவையெனக் கருத்திற்றோன்றப்பெறாதவராய்க் கடிதின் முன் வந்து சுவாமிகள் சரண்பணிந்திலரே! அங்ஙனம் பணியாமை

---

* ஒடுக்கமாவது யோகத்திற் காணுதிகளொடுங்கப்பெற்றிருக்கு மிடம்.

யாற்றம்மை மறந்து பரவசமாகுமன்பின் மேலீடிலராயினரே! எனஞானதேசிகர் கூறிவருந்த; அதனையுணர்ந்தஆசிரியர் சிவாக்கிரயோகிகள் ஞானதேசிகர்பாற்றிகழ்ந்தோங்குஞ் சிவகாருண்ணியப் பொலிவையும், பத்திஞானங்களின் வலிமையையுங்கண்டு அதிசயந்துத் தாம் அத்தேசிகோத்தமரைப் பிரிந்து செல்லுதற்கேலாப் பேரன்புடையராய்ச் சிலபகல் அங்குத்தங்கி, அன்பென்னும் ஆராவமுதம் அயின்று களித்து வீற்றிருந்தருளினர். பின்னர் ஓர்போது அவ்வாசிரியசுவாமிகள் தம்மை ஞானதேசிகர் வழிவிட்டனுப்ப ஒருவாறு பிரிந்து அங்குநின்றும் புறப்பட்டுத் தமது மடாலயத்திற்கெழுந்தருளினர்.

பின் ஓர்காலத்தில் அடியவர்களில் ஒருவர், குருபூசை மாகேசுரபூசைகளில் குறைநேராது இலைபறித்துக்கொள்ளுதற் பொருட்டுத் திருமடத்தைச் சூழ்ந்த ஓர்மறைவிடத்தில் சில வாழைகள்வைத்து வளர்த்துவந்தனர். அதனைத்திருவுளத்துணர்ந்த ஞானதேசிகர் "இயல்பாகுநோன்பிற் கொன்றின்மையுடைமை, மயலாகுமற்றும் பெயர்த்து" "தலைப்பட்டார் தீரத்துறந்தார் மயங்கி, வலைப்பட்டார் மற்றை யவர்" என்பன ஆதியாய மெய்ம்மொழிப்பயன் றெருட்டுவாராய், அவ்வடியவரை நோக்கி நீ இந்நாளில் ஒருவகைப் பந்தமுற்றனை, அதனை யாத்திரைசென்று ஒழித்து மீளுவாயாகஎன ஆணையளித்தருளினர். உடனே அவ்வடியவர் மனம்பதைபதைத்து வருந்தி அவ்வருளாணையைக்கடத்தற்கஞ்சி, ஞானதேசிகர்திருவடிகளில்நமஸ்கரித்து, விடைபெற்றுக்கொண்டு, யாத்திரைசெய்வாராயினர். பின்சிலகாலங்கழித்து அவர் தாம், அகப்பற்றறத்துறந்து தூயசிந்தையராய் மீண்டு ஞானதேசிகர் திருவடிகளை யடைந்து, தொண்டரொடு மருவிச் சுகமுற்றிருந்தனர். இதுநிற்க.

குடந்தை நகரில் சைவவேளாளர் குலத்தில் அவதரித்து, இளமைப்பருவத்தே எக்கலையும் பயின்று சிவபத்தி அடியார் பத்தியிற் சிறந்து விளங்கும் தீவிரதரபக்குவமுடைய ஒருவர் சற்குருவை நேடி ஞானோபதேசம்பெற அவாவுற்றுக் காவிரிநதியினிருமருங்குமுள்ள பற்பல சிவஸ்தலங்களைத் தரிசித்து வருங்

காலத்துத் திருவாவடுதுறையை யடைந்து, திருக்கோயிலிற் சென்று, சுவாமிதரிசனஞ்செய்து, அதன்பாங்கருள்ள சித்தர் மடத்திற்குச் சென்று ஞானதேசிகரைத் தரிசித்தனர். ஞானதேசிகர் அவரது பரிபாகநிலையைத் திருவுளத்தோர்ந்து மகிழ்வுற்று அவருக்குத் தீக்கைபுரிந்து தமது ஞானசிரியர் திருநாமத்தினையே தீக்ஷாநாமமாகச்சாத்திச் சிவஞானபோதமுதலிய நூல்களை உபதேசித்தருளினர். அவர் ஞானநூல்களைச் சிந்தித்துக் கொண்டு, அவ்வாசிரியசுவாமிகள் திருவணுக்கத் தொண்டராயமர்ந்து பணிபுரிந்து வருவாராயினர்.

அக்காலத்தில் ஞானதேசிகர், அடியவர்களுட்டலைமையெய்திய அவருக்கு ஞானபிடேகஞ்செய்து தமக்குத்துவிதீய ஆசிரியராக வைத்தருளினர். அக்காலத்தில் வேலூரில் அரசுபுரிந்திருக்கும் விருபாக்ஷிராயர் ஆணையினால் நடுநாட்டையாண்டுகொண்டிருக்கும் ஓர்வடுகன் ஓர்நாள் சிதம்பரத்தில்வந்து சபாநாயகருக்கு நடக்கும் நித்திய நைமித்திகச் சிறப்புகளைக்கண்டு பொறாமையுற்று, சபாநாயகர் சந்நிதியிலிருந்த துஜத்தம்பத்தைக் கோவிந்தப்பெருமாள் முன்புநிறுத்தி, சபாநாயகருக்குரிய வருமானங்கள் முழுவதையும் அப்பெருமாளுக்காக்கிச், சபாநாயகருக்கு நித்தியபூசையும் நிகழவொட்டாமற் கொடுமைபுரிய, அதனையாற்றுத் தில்லைவாழந்தணர்கள் செய்வதொன்றுந் தோன்றப்பெறுராய்ச் சிந்தை கலங்கியிருந்து, இறுதியில் நடராஜப்பெருமானுக்கு மெய்யன்பரான நம்உமாபதியார் திருமரபில்வந்து, இந்நாளிலே திருவாவடுதுறையில் வாழும் நமச்சிவாயதேசிகோத்தமர்பால் இதனைத்தெரிவிப்போமெனச் சிந்தையிற்கொண்டு, அவ்வாறே அங்குநின்றும் புறப்பட்டுத் திருவாவடுதுறையை யடைந்து ஞானதேசிகர்பாலுரைத்தனர். அதனைக்கேட்ட மாத்திரத்தே ஞானதேசிகர், திருவுளம்பதைபதைத்து, இங்ஙனம் அதிபாதகம்புரிந்த அவ்வதிகாரிமாட்டு ஒருவாற்றுற் கருணைபெருகத் திருவருளைச் சிந்தித்துப்பின் தமது துவிதீயகுரவாகிய சிவப்பிரகாசரை அவ்வந்தணாளர் குழாத்துடன்சென்று, நடராஜப்பெருமானுக்குப் பூசைமுதலானவை முன்போல நடக்கும் வண்ணமியற்றிவருமாறு ஆணைசெய்தருளினர்.

அன்னமே; சிவப்பிரகாசதேசிகர் ஞானதேசிகரிடத்து விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டுத் தில்லைவாழந்தணரோடு அவ்வதிகாரியினிடத்துச் சென்று, அவருக்கு அரசநீதிகளும் சமயவிதி விலக்குகளும் பிறவும் வேண்டும் விதங்களால் வியப்புற எடுத்துரைத்தும், முடிவில் அவ்வதிபாதகச் சித்தமுடையோனாகிய அவ்வடுகன் ஒருசிறிதும் சமாதானம்பெற்றிலனாக, இனியாம் யாதுபுரிவேம் எனத் திருவுளத்தாராய்ந்து, தேசிகசுவாமிகள் வேலூருக்குச்சென்று அரசர்க்குணர்த்துமாறு நினைந்துபுறப்பட, அப்பொழுது தில்லைவாழந்தணர்கள் திருநடராஜப்பெருமானது திருவருளாணையால் அத்தேசிக சுவாமிகட்குச் சிவிகைமுதலான சிறப்புகளீந்து வழிவிட்டனுப்ப அவ்வாறே வேலூரையடைதலும், அந்நகரிலுள்ளார் தெரிந்து ஒருங்குகூடி வந்து எதிர்கொண்டு வழிபட்டுபசாரங்கள் பலபுரிந்து தேசிகசுவாமிகள் எழுந்தருளிய காரணமுமுணர்ந்து திருமுன்பு நமஸ்கரித்துநின்று, சுவாமிகளே! நமது அரசர் மாத்துவராதலால் சைவசீலராகிய முதன்மந்திரியாரைத் துணைக்கொண்டு அரசரிடத்துச்சென்று சுவாமிகள் திருவுளத்திற்கொண்டதை முடிக்கவேண்டுமெனவும், மேலும் முதன்மந்திரியார் சிவலிங்கதாரணமில்லாதாரைச் சிறிதும் மதியாத உத்தம வீரசைவராவாரெனவும் விண்ணப்பஞ்செய்தனர். அவற்றைக்கேட்ட தேசிக சுவாமிகள் சிறிதுபோழ்து திருவருளைச் சிந்தித்திருந்து, பின்னர் இவ்விடத்துச் செய்யத்தகுவது இதுவேபோலும் எனத் திருவுளத்திற்கொண்டு தமது ஆன்மார்த்த சிவலிங்கப்பெருமானை அகமொப்பப்புறத்தும் நெஞ்சகத்திலெழுந்தருளச்செய்து புறப்பட்டு முதன்மந்திரியாராகிய இலிங்கணபத்தர் அரண்மனையையடைந்தனர். அதனையுணர்ந்த அம்மந்திரியார் தேசிக சுவாமிகளை எதிர்கொண்டு உள்ளே அழைத்துச்சென்று ஆசனத்திலெழுந்தருளச்செய்து மெய்யன்போடு வழிபட்டு உபசாரங்கள் பலபுரிந்து களித்தனர்.

பின்பு தேசிகசுவாமிகள் தாம் அங்கெழுந்தருளிய காரணமுரைத்தருளுதலும், மந்திரியார் மனம் பதைபதைத்துக் கொடி

போனுகிய அவ்வடுகனிடத்துக் கோபம் பெரிதும் உடையராய் உடனே தேசிகசுவாமிகளை அழைத்துக்கொண்டு அரசர்பால் அடைந்து அவ்வதிகாரியிழைத்த அதிபாதகச் செயல்களையும் அநீதிகளையும் முற்றவெடுத்துரைத்துக் குறையிரந்தனர். அவற்றையெல்லாம் உள்ளத்து ஆராய்ந்து தெளிந்துகொண்ட அரசர், அவ்வதிகாரிபால் வெகுண்டு, மந்திரியாராகிய இலிங்கணபத்ரர்க்கு ஆணையளித்தலும் அவர்தாம் அவ்வடுகனை அவ்வதிகாரத்தினின்றும் ஒழித்து மற்றோர் அதிகாரியால் சபாநாயகருக்கு முன்போல யாவும் அமைத்து நித்திய நைமித்திகங்களெல்லாம் சிறப்புற நடத்துமாறு ஆணைசெலுத்திவிட்டு அரசர்பால் விடைபெற்றுத் தேசிகசுவாமிகளோடு தம்மரண்மனையை யடைந்தனர்.

பின்பு தேசிகசுவாமிகள், மந்திரியார் வேண்டுகோளுக்கிணைந்து சிலநாள் அங்குத்தங்கியிருந்து அவருக்கு வீரசைவத்தின் உண்மையெல்லாம் மந்திரியார்க்கு உள்ளங்கை நெல்லிக்கனி போல் இனிது புலப்படுமாறுணர்த்திப் பேரற்புதம் விளைவித்தனர். இங்ஙனமாகப் பேரற்புதமெய்திய மந்திரியார் தமக்குத் தேசிகசுவாமிகள்பாலுளதாகிய பேரன்பினல் பிரிவாற்றுமை கொண்டு, சமீபத்திலுள்ள மகாக்ஷேத்திரமாகிய திருவண்ணுமலையில் தாம் அமைத்துக்கொடுக்குந் திருமடத்தில் எழுந்தருளியிருக்குமாறு வேண்டினர். அத்தருணத்தில் தேசிகசுவாமிகள், அதனை மறுத்தற்குமுடியாமல் அவரைநோக்கி நமது அன்ப! எமக்கு ஞானதேசிகர் பணித்தருளிய திருத்தொண்டு நும்வாயிலாக முற்றுப்பெற்றமையை ஞானதேசிகர்பாற்சென்று விண்ணப்பஞ்செய்து விடைபெற்றுக்கொண்டு விரைவில் நும்மாட்டுமீளுவம் என்று இன்னோரன்ன உறுதிமொழிபலகூற; அன்பராகிய மந்திரியார் ஒருவாறுடன்பட்டு வேண்டுஞ் சிறப்புமிகவியற்றி வழிபட்டு விடைபெற்றுக்கொள்ள, தேசிகசுவாமிகள், அங்கு நின்றும் புறப்பட்டு வழியிடையினுள்ள பற்பல சிவக்ஷேத்திரங்களைத் தரிசித்துச் சிதம்பரத்தையடைந்தனர். அங்குத் தில்லைவாழந்தணர்களும் பிறர்களும் எதிர்கொண்டழைக்கச் சென்று சபாநாயகரைத் தரிசித்து அப்பெருமானுர்க்கு முன்போல

யாவும் முட்டின்றி நடப்பதை யுணர்ந்து களிப்புற்று, உடனே அங்குநின்றும் புறப்பட்டுச்சீகாழிமுதலிய பலஸ்தலங்களையுந் தரிசித்துத் திருமூவலூரை யடைந்து திருக்கோயிலிற் சென்று *வழித்துணைமருந்தை வணங்கி வழிபட்டு, வீதிப்பிரதக்ஷணஞ் செய்துவருங்காலையில், தமது ஞானாசிரியசுவாமிகள் திருவவதாரஞ்செய்தருளிய திவ்விய கிருகமாகிய திருமடாலயத்தினைச் சார்ந்து அஷ்டாங்க பஞ்சாங்க நமஸ்காரஞ்செய்து, அன்பர்கள் போற்ற அத்தலத்தில் சிலநாள் வசித்திருந்து, அங்குநின்றும் புறப்பட்டுத் திருவாவடுதுறையை அடைந்தருளினர்.

பின்பு சிவப்பிரகாசதேசிகர் அங்குத் திருக்கோயிலுட் சென்று வழிபட்டு மெய்யன்பினால் விழுங்கப்பட்ட மேலான உள்ளத்தோடும் வெளிவந்து, சித்தர்மடம் எனப்பெயர் வழங்குந் தமது திருமடத்திற்கெழுந்தருளுவார், அம்மடத்தின் வடக்குவாசலுக்குச்சென்று அதன்மேல்பால் கோயில்கொண்டெழுந்தருளியிருக்குஞ் சிவப்பிரகாசவிநாயகரை வணங்கி வழிபட்டுத் திருமடத்தினுட் சென்று திருமாளிகைத்தேவர் குருமூர்த்தந் தரிசித்து, ஒடுக்கத்துக்கெழுந்தருளி ஞானகுருவாகிய நமச்சிவாயமூர்த்தியைத் தரிசித்து, ஞானதேசிகர்பால் விடைபெற்றுச் சென்றது முதல் நிகழ்ந்த யாவும் விண்ணப்பஞ் செய்தனர். அப்பொழுது ஞானதேசிகர், அவையாவும் திருவுளத்திலோர்ந்து தமது ஞானோபதேசமரபிற்குக் களைகணாகிய சிவப்பிரகாச தேசிகர் வினைவயத்தாற் சித்தாந்த சைவநெறிகடந்து புறநெறியில் வீழ்ந்த புதுமையை நினைந்து திருவருட்சம்மதம் இதுபோலும் எனத் திருவுளத்திலாறுதல்கொண்டு, முன் அவர் உறுதிமொழியுரைத்துவந்தவாறே மீண்டு வடதிசைக்கேகி அங்கு இலிங்கணபத்தர் முதலானோர்க்கு ஞானாசாரியராகஅமரும்வண்ணம் ஆணையளித்தருளினர். அதையுணர்ந்த சிவப்பிரகாசதேசிகர், சிந்தைகலங்கி நெக்குநெக்குருகத் திருவடியில்வீழ்ந்து அரற்றிக்கிடந்து, பின் ஒருவாறு எழுந்து தம்வினைப்பயனை நினைந்து நினைந்து வருந்திக்கொண்டு திருவருளாணையைக்கடத்தற்கஞ்சி நின்றனர்.

---

*வழித்துணை மருந்து என்பது அத்தலநாயகர் பெயர்.

பின்பு ஞானதேசிகர் பரிவுகூர்ந்து விடையளித்தலும், அவர் மீண்டும் திருவடிகளில் வீழ்ந்து வழிபட்டுக்கொண்டு வழியிடையிலுள்ள பற்பல ஸ்தலங்களையுந்தரிசித்து வேலூருக்குச்சென்று அங்குமந்திரியார் அரண்மனையடைதலும், மந்திரியாராகிய இலிங்கணபத்தர் எதிர்கொண்டு வணங்கி அழைத்து அங்குவதிதாச் செய்தனர். பின்பு இலிங்கணபத்தர் தமக்குத்தேசிகசுவாமிகள் முன்உறுதிமொழியுரைத்துச் சென்றவாறே மீண்டுவந்த மெய்மையை நினைந்து, முன்னையிலும் மிக்க அன்புடையராகி, முன்னர் தாம் விரும்பிய வண்ணமே திருவண்ணாமலையில் தம்மாலியற்றிய அத்திருமடத்தில் எழுந்தருளச்செய்து வழிபட்டுவருவாராயினர். இஃதிங்ஙனமாக.

ஞானதேசிகர், திருவாவடுதுறையிலே சைவவேளாளர் குலத்தில் அவதரித்து அருந்தவப்பயன் வந்தணுகுதலால் இளமைப் பருவத்திற்றானே நாலாஞ் சத்திநிபாதமெய்த, முன்னரே தம்பாலடைந்து மூவகைத்தீக்கையும் முறையாகப்பெற்று ஞானநூற் பொருள்கள் முற்றக்கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து நிட்டையிற்றலைப்பட்டு நின்ற மறைஞானசுவாமிகளுக்கு ஞானபிடேகஞ் செய்தருளினர். அங்ஙனம் அபிடேகம்பெற்ற அருந்தவச்செல்வராகிய மறைஞானதேசிகர் சிலபகல்கழிதலும் ஓர் தனியிடஞ் சார்ந்து தைலதாரைபோல் இடையறாது நிட்டையில் வீற்றிருந்தருளினர்.

பின்பு ஞானதேசிகர், தம்பால் ஞானபிடேகம் பெற்ற இருவரும் இருவகையாகும் இயல்பினராக ஈசசங்கற்பத்தால் நிகழ்ந்தமையைத் திருவுளத்திலாராய்ந்து, தமது ஞானாசிரிய சுவாமிகள் திருவுளப்பாங்கின்படி திருவாவடுதுறை என்னும் இத்தலத்தில் என்றுந்தமது குருசந்தானம் வளர்பிறைமதிபோல் வளர்ந்தோங்கி வருமாறு, குருவருளைச்சிந்தித்து அக்குருபரன் தமது இருதயத்தினின்றுணர்த்தாநிற்பபரிபக்குவநன்காராய்ந்து தமது திருக்கூட்டத்துஅடியவர்களுள் அம்பலவாணர், தக்ஷிணாமூர்த்தி என்னுந் தம்பிரான்சுவாமிகள் இருவருக்கும் ஆசாரியாபிடேகஞ் செய்தருளினர்.

அவ்விருவருள் ஒருவராகிய தக்ஷிணாமூர்த்திதேசிகர், மெய்கண்ட சாத்திரத்தின் கருத்தை உள்ளடக்கிய தசகாரியம், உபதேசப்பஃறொடை என்னும் இரண்டு ஞானநூல்களைச் செய்தருளினர். பின்பு சிலகாலஞ்சென்று அத்தேசிகசுவாமிகள் அத்திருப்பதியிலே ஓர் மாசிமாதத்துச் சித்திரை நக்ஷத்திரத்திலே சிவபரிபூரணமுற்றருளினர்.

பின்பு ஞானதேசிகர், திருவருளைச்சிந்தித்துத்துவிதீயஆசிரியராகிய அம்பலவாணதேசிகருடன் நெடுங்காலம் சீடர்களுக்குச் சித்தாந்த சாத்திரோபதேசஞ்செய்து வீற்றிருந்து முடிவில், தாம் நிஷ்டை கூடுந்தருணத்து, தமது ஆன்மார்த்த வைத்தியநாதத் தம்பிரானை அழகிய திருச்சிற்றம்பலவுடையவர் அம்பலவாணர் ஆகிய உபயமூர்த்திகளோடெழுந்தருளப்பண்ணிப் பூசித்துக் கொண்டு தமது அருளுபதேசமரபினைப் புரந்துவருமாறு துவிதீய ஆசாரியராகிய அம்பலவாணதேசிகருக்கு அருளாணை யளித்துவிட்டுத் தாம் அத்திருப்பதியிலே ஓர் தைமாதத்து அசுவதி நக்ஷத்திரத்திலே சிவபிரானோடு இரண்டறக்கலத்தலாகிய சுத்தாத்துவித பரிபூரணநிலையை யடைந்தருளினர்.

அக்காலத்தில் அம்பலவாணதேசிகர், தாம் அடியவர்குழாத்தோடு மறைஞானதேசிகர் எழுந்தருளியிருக்கும் அத்தபோவனத்தினைச்சார்ந்து, அத்தேசிகசுவாமிகள்பால் ஞானதேசிகர் சிவபரிபூரணமுற்ற திருவருட்செய்தியைக் காலம்பார்த்து விண்ணப்பஞ்செய்தனர். அதனையுணர்ந்து அத்தேசிகசுவாமிகள் அவர்பாற்றிருவருள் பெருகநோக்கி என்றும் பரிபூரணந்தான் எனத் திருவாய் மலர்ந்து முன்போல நிட்டையில் வீற்றிருந்தருளினர்.

இந்த ஞானதேசிகர்பால் ஆசாரியாபிடேகம் பெற்றநால்வருள் ஒருவர் திருத்துறையூர் விரசைவாதீனம் என்றுபெயர் வழங்குந்திருவண்ணாமலைவீரசைவாதீனம்பரமமுதற்குரவராகிய சிவப்பிரகாசதேசிகர்என்பதூஉம், மற்றொருவர் துவிதீயஆசிரியராகிய தக்ஷிணாமூர்த்திதேசிகர்என்பதூஉம், இந்தஞானாசிரியர்இருவரும் அருளிச்செய்த ஞானசாத்திரங்களிற்கூறிய குருதோத்திரங்களால் இனிது புலப்படும்.

சிவபிரகாசதேசிக சுவாமிகள் அருளிச்செய்த அத்துவித வெண்பாவிற்கு அவ்வாசிரிய சுவாமிகளுக்கு ஆறுவது பட்டத்தில் எழுந்தருளியிருந்த நன்னூற் சிவப்பிரகாசசுவாமிகள் இயற்றிய உரைப்பாயிரக் குருதோத்திரங்கள்.

திங்களணி சிவனருள்செய் வாதுளா கமமதனிற் றிகழ்சாரத்தை, எங்கள்பவப் பிணிதீர்க்கத் திரட்டியத்து விதவெண்பா வெனநன் கீந்தான், துங்கமுறு மெய்கண்டான் சந்ததிக்கோர் தீபமெனத் துதிபெற் றோங்கித், தங்கருணைத் திருத்துறையூர்ச் சிவப்பிரகா சப்பெரும்பேர் தரித்துள் ளானே.

செய்யதிரு வாவடுதண் டுறைநமச்சி வாயகுரு தேசி கோத்மன், துய்யகர சாதனனு யபிடேகந் திருநாமஞ் சூடப் பெற்றோன், ஐயதில்லை யம்பலவன் பொருட்டாயத் துவிதசைவ வங்கலிங்கந், தையல் பங்கன் சொற்படியே தரித்தசிவப் பிரகாசத் தவத்தான் மாதோ.

தக்ஷிணாமூர்த்திதேசிகர் அருளிச்செய்த

தசகாரியம்.

கு ரு தோ த் தி ர ம்.

திருந்துவட கயிலைதனிற் பரமசிவ னளித்த
சிவஞான போதமுணர் நந்திமுதற் சிறந்தே
வருங்குரவர் வெண்ணெய்நல்லூர் மெய்கண்ட தேவர்
வழங்கருட்சந் ததிநமச் சிவாயதே சிகனு
மிருங்குரவ னளித்தசிவப் பிரகாச தேச
னிலங்குமறை வனத்தருகோர் வனக்குகையு ளுறைநாட்
பொருந்தியவன் றிருவடிக்கீ ழவனருளே வவினுற்
போந்தருளா வடுதுறைவாழ் நமச்சிவா யனைப்புகழ்வாம்.

நமச்சிவாயதேசிகர் சரித்திரம்

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

குருப்ரம்பரை விளக்கம்.

பன்னிரண்டாவது,
மறைஞானதேசிகர் சரித்திரம்.

திருச்சிற்றம்பலம்.

மறைகளெலா முறையுணர்ந்து மறைஞான முறப்பின்னும்
இறைஞானம் பெறும்விருப்போர்க் கெய்தருமந் நிட்டைநிலைத்
துறைகாட்டித் தன்பெயரி னியல்காட்டுந் துறைசையினின்
மறைஞான தேசிகன்றன் மலர்க்கழல்க டலைக்கணிவாம்.

ஞானக்கோமுத்திமாநகரில் ஞானபாநுவாகிமிளிரும் நமச்சிவாயதேசிகோத்தமருக்கு மாணுக்கராவார் பலருள்ளும் சிறந்த மாதவப்பெருந்தகையாராகிய மறைஞானதேசிகர், முன்போல நிட்டையிலமர்ந்தருளுதலும்; அம்பலவாணதேசிகர் அங்குநின்றும் விடைபெற்று, அரிதினீங்கித் தமது திருமடத்திற்கெழுந்தருளித் தேசிகோத்தமராகிய நமசிவாயமூர்த்திகள் அளித்தருளிய அழகிய திருச்சிற்றம்பலவுடையவரையும் அம்பலவாணரையும் ஞானசிரியசுவாமிகள் ஆன்மார்த்த வைத்தியநாதத்தம்பிரானையும் தமது ஆன்மார்த்த சிவலிங்கப்பெருமானோடு எழுந்தருளப்பண்ணிப் பூசித்துக்கொண்டும், நமசிவாயதேசிகோத்தமர் ஞானசமாதிகொண்டருளிய திருவாவடுதுறையினகத்துச் சினகரம் அமைத்துத் திருவுருசமைத்துப் பிரதிஷ்டைசெய்து பூசித்துக்கொண்டும், திருக்கோயிலுக்கும் காவிரிநதிக்கும் மத்தியிலுள்ள தபோவனத்தில் நிஷ்டையில் வீற்றிருந்தருளும் ஞானதேசிகரை நாடோறுஞ் சென்று தரிசித்துக்கொண்டும், மெய்யன்பர்களாகிய அடியவர் குழாத்தினுக்கு அருளுபதேசஞ்செய்துகொண்டும்வருவாராயினர். இங்ஙனம் நிகழுநாளில் நிரதிசயானந்த நிஷ்டையில் வீற்றிருந்தருளுந் திருவருட்செல்வராகிய மறைஞானதேசிகர் அத்திருப்பதியிலே ஓர்தைமாதத்துச் சுவாதிநட்சத்திரத்திலே சிவபரிபூரணம் உற்றருளினர்.

மறைஞானதேசிகர் சரித்திரம்.

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

பதின்மூன்ருவது,

அம்பலவாணதேசிகர் சரித்திரம்.

திருச்சிற்றம்பலம்.

கண்ணுதலுஞ் செஞ்சடையுங் கறைமிடறுந் தனைக் கரந்து கயிலை நீங்கி, யெண்ணரிய குருநமச்சி வாயனெனுந் திருநாம மெங்கு மோங்க, மண்ணுலகி லடியார்க ளீடேற மகிழ்சைவம் வளர்க்க வந்த, அண்ணலா வடுதுறைவா ழம்பலவா ணன்றிருத்தா ளகத்துள் வைப்பாம்.

சித்தாந்தஞானபாநுவாகிய நமச்சிவாயதேசிகோத்தமரைத் தமக்கு ஞானுசிரியராகவும், அவ்வாசிரியசுவாமிகள் அருளுபதேசம்பெற்ற மறைஞானதேசிகரைத் தம்முன்னோராகவுங்கொண்டு, தமது ஞானுசிரியர் ஆஞ்ஞையின்படி திவ்வியஸ்தலமாகிய திருவாவடுதுறை என்று பெயர் வழங்கும் அநாதிமுத்திக்ஷேத்திரத்திற் றமது குருசந்தான ஞானேபதேசமரபு தழைத்தோங்கச் சித்தாந்த ஞானேபதேசஞ்செய்தமர்ந்தருளும் அம்பலவாண தேசிகர், தம்முன்னோராகிய மறைஞானதேசிகர் ஞானசமாதியில் திருக்கோயிலமைத்துச் சிவலிங்கப்பிரதிட்டைசெய்து கும்பாபிடேகமியற்றிப் பூசைபுரிந்துகொண்டு, தமிழ்ச்சிவஞானபோதம் ஆகிய முதனூலும் அதன்வழிநூல் சார்புநூலென வழங்கும் சிவஞானசித்தி, இருபாவிருபது, சிவப்பிரகாசம் முதலிய சித்தாந்த சாத்திரங்களும், சிவாகமங்களும் தமிழ்வேதமும் ஆரியவேதமும் உபநிடதமும் நன்காராய்ந்து, ஆங்காங்கு இலைமறைகாய்போல் மறைந்துகிடந்த அரும்பொருள்களும் அவற்றின் சாரங்களும் விளங்கத்தோற்றுவாராய்த் தசகாரியம், சன்மார்க்கசித்தி, சிவாச்சிரமத்தெளிவு, சித்தாந்தப்பஃறொடை, சித்தாந்தசிகாமணி, உபாய நிட்டை வெண்பா, உபதேசவெண்பா, நிட்டைவிளக்கம், அதிசயமாலை, நமச்சிவாயமாலை எனப்பத்து ஞானநூல்கள் இயற்றியருளினர்.

பின்பு ஞானதேசிகர் தமது உண்மையன்பர் திருக்கூட்டத்துட் சிறந்த ஒருபெருந்தவத்தராகிய உருத்திரகோடியார்க்கு, ஓர் சுபதினத்தில் ஆசாரியாபிடேகஞ்செய்து தமக்குத் துவிதிய ஆசிரியராக வைத்தருளினர்.

பின்பு ஞானதேசிகர் தம்பால் வந்தடைந்த வைணவப் பிராமணரும், கல்வியறிவொழுக்கங்களிற் சிறந்த பரிபக்குவருமாகிய உலகுடையநாயனருக்குச் சைவசந்நியாசங்கொடுத்து நைட்டிக நிருவாணதீக்ஷைசெய்து, மெய்கண்டசாஸ்திரத்தினையும் தாமியற்றியனவும் தமது ஞானாசிரியராகிய நமச்சிவாயதேசிகோத்தமருக்குத் துவிதீய ஆசிரியராக வீற்றிருந்த தக்ஷிணாமூர்த்திதேசிகர் இயற்றியனவுமாகிய ஞானசாத்திரங்களையும் உபதேசித்தருளினர். அங்ஙனம் ஞானதேசிகர்பால் அருளுபதேசம்பெற்றுக் கொண்ட உலகுடையநாயனர், ஞானநூல்களைச் சிந்தித்துத்தெளிந்து நிட்டைகூடிச் சிவாநுபூதி சிறக்கப்பெற்று வீற்றிருக்குநாட்களில் சித்தாந்தநுண்பொருள் செறிந்துவிளங்க, "மலமெனுந் தடத்தில் கருமசேதகத்தின்" என்றெடுத்து ஞானதேசிகர்மீது தோத்திரரூபமாகப் பத்துத்திருவிருத்தங்கள் பாடியருளினர்.

கழிநெடிலாசிரிய விருத்தம்.

மலமெனுந் தடத்திற் கருமசே தகத்தின் மாயையாங் கிழங்கிலங்
குரித்துமன் னுமூ வெட்டாந் தத்துவ நாள
மலரிதழ் வித்தையேழ் வித்தை
நலமிகு மீசன் சதாசிவ மிரண்டு நண்ணுகே சரங்களாஞ்
சத்திநற் பொகுட் டாகு நாதமே விந்து
நயந்தகன் ணமென விரவி
இலகுமென் னுடலப் பதுமபீடிகைநீ யிருந்தருளாசன
மெனமல்லனதுபுக் கிலதா யெண்ணினேன்
றெளிய வியலருட் பார்வைதந் தனையே
அலகிலா வுயிர்கள் மலநடைக் கிலையா யருணடைக்
குண்மையாய் நின்றஆவடுதுறைசை யம்பல
வாண வடியவர்க் கருளுமா நிதியே. (க)

புசிப்பினால் வினையாற் சகலனா மென்பாற் புசிப்பொடு
    வினையுமாய்ப் புகுந்து புல்லிய வரவின் வாய்மணி
    கொள்வார் போன்மலத் தெனைவெளிப் படுத்தி
நசிப்பிலாக் கருணை யுருவமாய்வந்து ஞானபா தத்தையீ
    ரைந்தா நன்னுகா ரியத்தா லெனக்குப தேச
    நல்குநின் பெருமைநா னறியேன்
வசிக்குமைந் தொழிலின் மலநடை நான்காய் மற்றொரு
    தொழிலரு ளடையாய் மன்னுயிர்க் கிரங்கி
    நடத் தொழில் புரியும் வள்ளலே மருவசித் திடத்தும்
அசித்தினு நீங்கா தகண்டமாய் நிறைந்த வருட்பரி
    பூரணக் கடலே ஆவடு துறைசை யம்பல
    வாணா வடியவர்க் கருளுமா நிதியே. (உ)

*சிவனே வியாபி யவத்தையி லிழிந்து திரும்புதல் குற்றமாங்
    கருவி சேருதல் பிரித லில்லையா முறையிற்
    செயற்படுங் கருவியே தெரியுந்
தாவிலா வறிவு தங்கின விடமே தகுமுயிர்க் கிருப்பிட
    மென்று சாற்றியென் னுளத்தி லையமுந் திரிவுந்
    தவிர்த்தெனை யாண்டுகொண்டனையே
பாவனை கடந்த வுனைவச மாக்கப் பாசமும் பசுவுமா
    ஞானம் பற்றிநாட் டத்தை முகிழ்த்துவாய்
    நீரைப் பசையறப் பருகுவார் தாங்கள்
ஆவல்சேர் நிட்டை யபாயமாய்க் கருதி யதற்கியல்
    பினையளித் தவனே ஆவடு துறைசை யம்பல
    வாணா வடியவர்க் கருளுமா நிதியே. (ங)

நாலுனக தனிலே நாலுகை யமைப்பு நற்றுடி முளரியை
    நயந்து நளினபாதத்தி னென்றெடுத் தொன்றை
    ஞானவான் பொதுவிலே நாட்டிக்

---

*"சிவனே வியாபி— தகுமுயிர்க் கிருப்பிடம்" என்பதனைச் சிவ ஞானபோதத்திற்குச் செய்தருளிய சிற்றுரையில் நான்காஞ்சூத்திரம் மூன்றாமதிகாரணம் எதுப்பொருளுக்கு உதாரணமாகச் சிவஞானயோகிகள் கூறியருளினர்.

கோலமார் கூத்துவிடாதநீ *யுன்றன் குலமிரண் டென்குல
 மிரண்டுங்குறுகிடா வன்னை மின்பமா யென்பாற்
 கூத்தையுங் கொண்டதெப் படிதான்
எழுமா மலர்க்காய் நாசிகைவேழ மெறிந்தநீ சினகரந் தகர்க்க
 எப்படி பொறுத்தா யிதற்குமேல் வினையு
 மில்லையென் றுரைத்தது மிலையோ
ஆலநீ முலிலே யயன்றரு புதல்வர்க் காகம முரைத்தபூ
 ரணனே ஆவடு துறைசை யம்பல வாண
 வடியவர்க கருளுமா நிதியே. (ச)

முந்தநான் செய்த விதத்தினுக் கிதமே முடித்தவா பிறப்பினை
 முடிப்பாய் மூளுமிக் காலத்திவ்வுடல் வினையை
 முற்றுநின் றொழிலெனக் கொள்வாய்
நந்திடா வென்னை யுனக்குடலாக்கி நண்ணிமென் னுயிருமாய்
 நயப்பாய் நாடிநுன் கருணைக் கேற்றகைம் மாறு
 நான்செய முடியுமோ நவில்வாய்
சிந்தைமெய் வாக்கு மூன்றினு முயிர்கள் செய்வினை கொடுத்திட
 வதற்காத் தேகமே கொடுத்து மலபரி பாகஞ்
 செய்தறி வினிற்பவ முடித்த
அந்தமார் குரவர் சிகாமணிநீயே யன்னலே யென்னுயிர்க்
 கமுதே ஆவடுதுறைசை யம்பல வாண
 வடியவர்க் கருளுமா நிதியே. (ரு)

காந்தமுன் கரும்பொன் கதிரின்முன் படிகங் ககனநேத்
 திரவொளி தாரை கலைமதி பொருந்துந் தன்மையா
 யுனது கருணையி னுள்ளுறக் கலந்து
மாந்திய கனியு மதுரமும் பண்ணு மருவுறு மேசையு
 முடலும் மன்னிய வுயிரும் போலமுன் றில்லா
 வகையிரண் டல்லது மானேன்

---

*"உன்றன் குலவிரண்டென்—கொண்ட தெப்படி தான்" என்பதனைச் சிவஞானசித்தியாருக்குச் செய்தருளியபொழிப்புரையில், ஒன்பதாஞ்சூத்திரம் ஏழாஞ்செய்யுளில், உதாரணமாகச் சிவஞானயோகிகள் கூறியருளினர்.

ஏய்ந்தமுன் றவத்தை யுயிரினுக்காதி யிருக்கினும் வினை
முதிர்ச்சியினல் இரண்டுமுன் னடாத்தி மலபரி பாக
மியற்றிமற் றென்றையீ ரைந்தாய்
ஆய்ந்தகா ரியமா வவத்தையோ ரைந்தி னடக்கினா னறிந்திடச்
செய்த ஆவடு துறைசை யம்பல வாண
வடியவர்க் கருளுமா நிதியே. (சு)

என்னையு முனையுந் தன்னையுங் காட்டா திந்திய விடயமே
காட்டி இபல்வினை மாயை யிரண்டையு மெனையு
மிணக்கிய வாணவ மலத்தின்
தன்னுற வழிநின் சத்தியை நடாத்தித் தருமதன் சத்திக
ளெல்லாந் தயங்குநின் னுருவமூன்றினுன் மாற்றித்
தாணிழ றந்துகாத் தனையே
*கன்னலங் கழனிக் காழிமா நகரிற் கவுணிய னிரண்டு
ஞானமுமே கற்றிடா துணர வீர்க்கிடை போகாக்
கதிர்முலைப் பால்கறந் தளித்த
அன்னைதன் பசுவாக தன்மையை யகற்றி யாதரித்
தருள்கொடுத் தவனே ஆவடு துறைசை யம்பல வாண
வடியவர்க் கருளுமா நிதியே. (எ)

தணவிலா மலத்தின் குருடனேற் குடலந் தாளெரு கோலெனக்
கொடுத்துச் சத்தமேயாதி விடயமோ ரைந்தின்
றன்வழி புசித்திடத் தந்து

---

*"கன்னலங் கழனிக்காழிமாநகரிற் கவுணியனிரண்டு ஞானமுமே கற்றிடாதுணர" என்றருளிச்செய்திருப்பதால், திருஞானசம்பந்தமூர்த்திநாயனர் புராணத்திலே, "சிவனடியேசிந்திக்கும் திருப்பெருகுசிவ ஞானம், பவமதனையறமாற்றும் பாங்கினிலோங்கியஞானம், உவமையிலாக் கலைஞானமுணர்வரிய மெய்ஞ்ஞானம், தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தாரந்நிலையில்," என்றசெய்யுளிலே கூறியருளிய ஞானம் இரண்டேயெனக் கொண்டு திருத்தணிகைப் புராண நூலுடையார் "மேவருஞானமிரண்டவற்றென்றுவிமலனர் பாததாமரையே, ஓவறு மன்பினுணர் திருவளிக்கு மொப்பிலாவுயர்கலைஞானம், தாவரும்பவத்தை வேரொடுங்களையுந் தக்கமெய்ஞ்ஞானமொன்று"என அந்துவயஞ் செய்து கூறியருளினர்.

குவைழி நடவார் குணவழி நடந்து குணத்தினைத் திருப்புவார்
போலக் கொடுவினை யொப்புச் சத்திநி பாதங்
கூர்மல பாகமுங் குறித்தே
இணையிலா வின்பவடிவ மாமுன்னே டென்னையு மிரண்டா
வைத்தாய் ஏழையே னுன்ற னடியருக்
கடியானென்னவும் பற்றிலே னரவின்
அணைதுயி லெழுந்தே யருவிகண் பொழியு மரியரிக்
குரைத்தகூத் துடையாய் ஆவடு துறைசை யம்பல
வாணு வடியவர்க் கருளுமா நிதியே. (அ)

இருங்கடன் மணலை யெண்ணினு மூவர்நீ ரிவ்வள வெனவளந்
திடினும் இருவினைக் கிடா வெடுத்த வென்னுடல
மெண்ணிறந் தனவிவை யொழிய
வருஞ்சிவ தருமந் தன்னினுன் திருமுன் வந்தனை செய்துனக்
களிக்க வாய்த்தவிவ் வுடலே யெனக்குப கார
மாகவே வந்திடு முடல்காண்
பெருஞ்சிவ னடியார் வேடமுற் றிடாநான் பிறனெனத்
திருவுளத்துமற் பேதையேன் றன்பானேக்கொடு
பரிசம் பிறங்குபா வனைத்தொழில் பெருக்கி
அருந்திறன் மலந்தீர்த் தறிவினைத் திருப்பியான் டருள்
கருணையங்கடலே ஆவடுதுறைசை யம்பல வாணு
வடியவர்க் கருளுமா நிதியே. (கூ)

முந்துமா கமத்தை யருட்டுறை யண்ணன்* மொழிபெயர்த்
துரைத்தநூன் முதலாமுதல்வழி சார்பா மூன்றுநூற்
கருத்துமுறை தெரியாமலே கருதி
நந்தவே யெழுதுமுரைதனைக் குருவாய்நாடிய குரவரை நம்பி
நற்கதியடையா வுயிர்களுக் கிரங்கி
நற்கதி கொடுத்திட வேண்டிச்
சிந்தனையாக்கிப் பதிபசுபாசந் தெரிந்திட லளிமா வுரைத்துன்
திருவடிநீழன் மருவிட வைத்த
தேசிக சிகாமணி நீகாண்

---

* அருட்டுறையண்ணல் என்றது, மெய்கண்டசிவாசாரியர் என்க.

ஐந்தலை யரவினடித்தமா லீரைந்தர் தியபிறவிநோய் தவிர்த்த
ஆவடு துறைசை யம்பலவாண
வடியவர்க் கருளுமா நிதியே. (கo)

கழிநெடில் முற்றிற்று.

அக்காலத்திலேயே காவிரிநதியின் தென்கரைஞாங்கருள்ள சிவபுரம் என்னுந் திவ்விய திருநகரின்கண் சைவவேளாளர் குலத்தில் அவதரித்துக் கல்வியறிவொழுக்கங்களானும் குரு லிங்க சங்கமபத்தியானுஞ் சிறப்புற்று, செல்வம் அதிகாரமுதலிய நலங்களிற் குறைவின்றி விளக்கமுறும் பெரியபிள்ளை என்பவர், பரிபக்குவ வயத்தானே ஞானதேசிகரது மகிமையைக் கேள்வி யுற்றுத் திருவாவடுதுறைக்குவந்து ஞானதேசிகரைத் தரிசித்த னர். ஞானதேசிகர் அவருக்கு மூவகைத்தீக்கையும், முறையாக வியற்றிச் சித்தாந்த சாத்திரோபதேசஞ் செய்தருளக், கேட்ட துணையானே சிந்தித்துத் தெளிந்து சுவாநுபவப்பேறுடைய ராய், விளங்கித் தமது ஞானாசாரிய சுவாமிகள்மீது "அந்த மலத்தத்துவிதம்" என்னுஞ் செய்யுளாதியாய பத்துத்திருவெண் பாக்கள் இயற்றி, ஞானதேசிகரைத் துதித்திறைஞ்சினர்.

அவை வருமாறு:—

வெண்பா.

அந்தமலத் தத்துவித மர்னபணி யாலகற்றி
வந்த மலத் தத்துவிதம் வைத்தாயே—எந்தாய்
திருவா வடுதுறைவாழ் தேசிகா பொய்யில்
மருவாத வம்பல வாண. (க)

உன்போகந் தந்தா யுனக்குவினை யேனருந்தும்
என்போகந் தந்தேனென் னீசனே—இன்புருவா
கைம்மாறுண் டாமோ கவினு வடுதுறையின்
அம்மானே யம்பல வாண. (உ)

ஆதி வருணத்தா லரியா ஞனையிழந்த
பாதகருக் கேதிரைபம் பாலிப்பாய்—நீதியுடன்
தானந்த மானவரைத் தற்பரமாய் விட்டகலா
ஆனந்த வம்பல வாணு. (ங)

இருளிரவு தீப மிவைமூன் றடங்க
வருகதிர்போ லேமூன்று மாயத்—தருஞான
பானுவாய் வந்தவனே பன்பா ,வடுதுறைவாழ்
வானவனே யம்பல வாணு. (ச)

முத்தியி லுன் செய்கையைப்போன் மூன்றுமல முந்தவிராப்
பெத்தமு முன் செய்கையெனப் பேசுவார்—சத்தியமே
காணுகமூடர் கண்டாய் காவா வடுதுறையில்
வாணுநம் மம்பல வாணு. (ரு)

அஞ்சா மவத்தைதனி லாணவம்போ மென்றுரைப்பார்
எஞ்சாச் சரியாதி யெண்ணியான்—வஞ்சமலம்
முன்னகற்று மாறறியார் மூடர்கண்டாய் தென்றுறைசை
மன்னவனே யம்பல வாணு. (சு)

ஆதியே தென்றுறைசை யம்பலவா ணுவெனீ
பேதமறக் கூடிநின்ற பெற்றிதனை—ஓதிலது
சாக்கிரா தீதந் தருமான்ம லாப வின்பம்
ஆக்குசிவ போகமென லாம். (எ)

அத்தனே தென்றுறைசை யம்பலவா ணுவமைந்த
சித்தமுரு விரண்டுந் தீபமென்றாய்—சுத்தத்தில்
ஒன்று பதார்த்தமா மொன்றுநின் றேயொன்றும்
ஒன்றுமன வாதே யுரை. (அ)

மருளிற் பிறந்து மயங்குமெனை யுன்றன்
அருளிற் பிறப்பித்தா யையா—பொருளான
நானுக்கென் செய்வே னவிலா வடுதுறைவாழ்
வானவனே யம்பல வாணு. (கூ)

அந்தந் தெரியா வசிந்திதமீ சிந்திதனு
வந்துன்னே டென்னை வசமாக்கிப்—பந்தமுறுஞ்
சித்த முதற் கரண மெல்லாந் திருவருளாய்
வைத்தனையே யம்பல வாணு. (௧0)

வெண்பா முற்றிற்று.

பின்பு ஓர் காலத்தில், ஞானதேசிகர் தமக்கு நெடுங்காலம் பணிபுரிந்து வந்தவரும் பரிபக்குவமடைந்திருந்த பூப்பிள்ளை யென்பவர் கல்வியறிவு சிறிதுமாத்திர முடையராயிருத்தலை நோக்கி, அவர்மாட்டுக் கருணைபுரிந்து, கத்தியரூபமாக ஞான நூல் ஒன்றியற்றி அதற்கு *உயிரட்டவணை எனப்பெயர் தந்து அவருக்கு உபதேசித்தருளினர்.

இங்ஙனம் ஞானசாரியராகிய அம்பலவாணதேசிகர், தம் அருட்பெருங்குரவராகிய நமச்சிவாயமூர்த்திகள் திருவுளக்குறிப்பு இதுவாகுமெனத் திருவருளுபதேசஞ்செய்தும், சித்தாந்த ஞானநூல்கள் பலசெய்தும், தமக்குப் பிற்றோன்றலாக உருத்திர கோடிதேசிகரை உதவியும் எழுந்தருளியிருந்து, பின்னர் அத் திருப்பதியிலே ஓர் சித்திரைமாதத்து அவிட்டநக்ஷத்திரத்திலே சின்மயநமச்சிவாயர் திருவடிநீழல்மருவிப் பேரின்பவாழ்வெய்தினர்.

இந்த ஞானதேசிகர் மெய்கண்டசந்ததிக்கோர் ஞானபாநுவாகித் திருவாவடுதுறை என்னும் திவ்வியஸ்தலத்திற் றிகழ்ந்து வீற்றிருந்தருளும் நமச்சிவாயதேசிகர்பால் அருளுபதேசம்பெற்றனர் என்பதூஉம், அத்தேசிகோத்தமர்பால் ஞானபிடேகம் பெற்ற மறைஞானதேசிகர்க்குத் தாம் ஆசிரியாபிடேக முறையால் துவிதீயாசாரியர் என்பதூஉம், தாமியற்றிய தசகாரிய முதலிய ஞானநூல்கள் முதனூல் வழிநூல் சார்புநூல் எனவழங்குந் தமிழ்ச்சிவஞானபோதம், சிவஞானசித்தி, சிவப்பிரகாச முதலிய ஞானசாத்திரங்களின் சாரம் என்பதூஉம் அவர் தாமியற்றிய தசகாரிய முதலிய நூல்களால் இனிது புலப்படும்.

---

* உயிரட்டவணையை பூப்பிள்ளை அட்டவணை எனவும் பெயர்வழங்குவர்.

அவை வருமாறு:—

தசகாரியம்.

சதுராறி யாமை நீரத் தரித்தரு ளுருவு கொண்டு
அதிதரு வெண்ணெய் மெய்யன் றுலங்குசந் ததிக்கோர் ஞானக்
கதிரெனத் தோன்றித் தென்னு வடுதுறைக் கண்ணி ருந்து
மதிதரு நமச்சி வாயன் வளர்கம லங்கள் போற்றி. (க)

அரனரு ளுருவா யாவிக் களித்திட வுளத்தை மாயா
வுரமது பிளந்து குற்ற மொழித்துமின் மலமதாக்கி
வரமது தனைய ளித்து மருவுமா வடுது றைக்கோர்
பரன் மறை ஞான தேசன் பதாம்புயம் பற்றி வாழ்வாம். (உ)

முன்னவன் வடநூ னோக்கி மொழிந்தனன் போத மற்றோன்
பின்னவ னந்நூ னோக்கிப் பெயர்த்தனன் சித்தி யாக
அன்னவை யிரண்டு நோக்கி யறைந்தனன் புடைநூல் மற்றோன்
சொன்னவைமூன்றுநோக்கித்தொகுத்தனனவத்தைபத்தாய். (ந)

சித்தாந்தப்பஃறொடை.

செய்யாப் பணிபலவுஞ் செய்வேன் றிருவுளத்துச்
செய்யும் பணிசிறிதுஞ் செய்தறியேன்—உய்யுநெறி
பெத்தால் வருமடியேற் கின்பா வடுதுறைக்குள்
அத்தா நமச்சிவா யா.

இருவினை யுற்றுக்கீழ்மே லிசையுமெவ் வுயிர்க்கு மூன்று
யுருவினை யுற்றுக் கீழ்மே லுறும்வினை தன்பா லன்பாய்
வருவினை யாக்கித் தென்னு வடுதுறைக் கண் மகிழ்ந்த
திருவினை நமச்சி வாயன் திருவடிக் கமலம் போற்றி.

சஉ கண்டக் கறையுமருட் கண்ணுதலு மாற்றி நெறித்
தொண்டர்குழா மென்னத் துலங்கியே—யண்டர்தொழும்
சந வேதா ரணியத்தின் *மெய்கண்ட சந்ததிக்கோர்
ஞாதா வெனப்பேரு நண்ணியே—யோதா

---

*வேதாரணியத்துள் எனவும் பாடம் ஈண்டு வேதாரணியத்தின் மெய்கண்ட சந்ததிக்கு என்பது அச்சந்ததியில் அருளுபதேசம்பெற்ற சித்தர்சிவப்பிரகாசதேசிகர் திருமாபு என்பது பொருள்.

சச துணர்ந்தார்க் குலவாக் கிழிவழங்கி யொப்பில்
மணந்தாள் பசுக்குலத்தை மாற்றிப்—புணர்ந்த
சரு திருவா வடுதுறைவாழ் தேசிகனு மென்றே
பொருவாத் தொழிற்பேரு முற்றே—திருவார்
சசு அமரர்க்கு மெட்டா வரியதிரு நாமப்
பிரம வுபதேசப் பெற்றி—வரமாகும்
சஎ முப்பொருளின் றன்மை முடிவாக யாவர்க்கும்
எப்பொழுது முள்ள தெனவாக—விப்பொழுது
சஅ தானே யுபதேசந் தங்கு மென்ப தாய்மொழிவார்
ஊனே யறுக்கு முறுமுராணுய்—வானேயும்
சகூ ஆவி யுளத்திருட்கோ ராதவனுய் மெய்த்தவர்கள்
மேவி யருந்தும் விழுப்பொருளாய்த்—தாவிமிக
ரு0 யுச்சரிக்குங் கேண்மை யுடைத்தா யுயர்சிவத்தை
வைச்சிருக்கு ஞான வழக்காய்—நிச்சயித்து
ருக செல்லா தவர்செவியுஞ் செல்லுவதாய்ச் சீரருளாச்
சொல்லாத வாயுஞ் சொலுமெனலால்—எல்லாரு
ருஉ நண்போ டுரைத்திடவே நன்னமச்சி வாயனெனப்
பண்போ டுயர் நாமம் பற்றியே—கண்போது.

அம்பலவாணதேசிகர் சரித்திரம்.

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

பதிநான்காவது,
உருத்திரகோடிதேசிகர் சரித்திரம்.

திருச்சிற்றம்பலம்.

பெருகாநின் றிடுபெருவம் பெயராத காவிரிசூழ்
ஒருமாவாழ் துறைசையுறைந் துருத்திரகோ டிகளாகப்
பரயோக மெய்ஞ்ஞானம் பரிபாகர்க் கருளுமுருத்
திரகோடி தேசிகன்றாள் சென்னியினின் மன்னுவிப்பாம்.

உலகம் பரவும் உருத்திரகோடிதேசிகர் தமது ஆசிரியர் திருவருளாணை சிரமேற்கொண்டு, தமது அடியவர்கள் வழக்கப் படி நாடோறுஞ்சென்று வாங்கிவரப்பெறுங் கணப்பிக்ஷை மாது கரிபிக்ஷையைக்கொண்டு சிவபூசை குருபூசை மாகேசுரபூசை யைச் சிறப்புறவியற்றித், தம்பால் வந்து சரண்புகும் மெய்யடிய வர்களுக்கு ஞானோபதேசஞ்செய்துவருவாராயினர். இங்ஙனம் சித்தாந்தஞானோபதேசஞ் சிறந்து விளங்கும்வண்ணம் திருவரு ளாட்சிபுரிந்து வருவாராகிய ஞானதேசிகர், தம் அடியவர்களிற் சிறந்த வேலப்பதம்பிரானுக்கு ஆசிரியாபிடேகஞ்செய்து தமக் குத் துவிதிய ஆசிரியராக வைத்தருளினர்.

அக்காலத்தில், தமது அடியவர்களால் தினந்தோறும் அயா சிதம், மாதுகரி, கணம், சாந்தானிகம் என்னும் *நான்குவகைப் பிக்ஷையுள் கணப்பிக்ஷை மாதுகரிபிக்ஷை என்னும் இரண்டா னும் வரப்பெறும் அரிசியையுந் திருவமுதையுங்கொண்டு சிவ பூசை, குருபூசை, மகேசுரபூசையை நடத்திவரும் அருட்பணி விடையை ஞானதேசிகர் அளித்தருளப்பெற்று, அப்பணியை

---

*அந்நால்வகைப் பிக்ஷையுள் அயாசிதபிக்ஷையாவது விரத்தியின் முதிர்ச்சியினாலே 'நமக்குள்ள பிராரத்தத்தை நாம் எங்கே இருப்பினும் கடவுள் புசிப்பிப்பர்' என்று துணிந்து, இருந்தவிடத்திலேதானே ஒருவன் தானாகக்கொண்டுவந்து தந்ததை வாங்கிப்புசிப்பதாம்.

மாதுகரி பிக்ஷையாவது வண்டானது ஒருபூவிலிருந்து அதனை வாதியாமல் பலபூக்களினுஞ்சென்று சிறுகச்சிறுகத் தேனைக்கிரகித்தல் போல, விரத்தனானவன் ஒருவரை வாதியாமல் பலரிடத்துஞ்சென்று சிறுகச்சிறுக அன்னம் வாங்குவதாம்.

கணப்பிக்ஷையாவது இல்வாழ்வாருடைய தெருவிலே புறப்பட்டு வீடுதோறும் அரிசிவாங்குவதாம். கணம்=தானியாம்சம். அதாவது அரிசிமுதலியவைகள்.

சாந்தானிகபிக்ஷையாவது ஆசாரியர் முதலாயினோர், பத்தர்களா யினும், சேடர்களாயினும் அன்பினோடு தாமே தரும் மடம் விளைநிலமுத லியவைகளைச் சந்தானபரம்பரையாக அநுபவிக்கும்படி வாங்குவதாம்.

அன்போடியற்றிவரும் நமது அடியவர்களில் ஒருவராகிய ஈசானத்தம்பிரான்சுவாமிகள், வழக்கப்படி ஓர்நாள் நித்தியகன்மமியற்றுதற்பொருட்டுக் காவிரிநதித்துறையையடைவார், அங்குமருதமரநீழலில் ஒருவர் நடையினுலும் பசியினுலும் வருந்தி மிகவுந் தளர்வெய்தி இருப்பதைக் கண்ணுற்று, அவர்மீது பரிவுடையராகி அவரை நோக்கி நீர் இவ்விடத்திலே இருப்பீராக; நாம் எமக்குரிய நித்தியகன்மமியற்றி விரைவில் மீண்டு வருகின்றேம். எனக்கூறிவிட்டு, அவ்வாறேசென்று காவிரிநீர்த்துறையில் நித்தியகன்மமியற்றிக்கொண்டு மீண்டு அவரிடத்து வந்து தாம் ஆன்மார்த்த சிவலிங்கப்பெருமானுக்கு நிவேதித்த மாங்கனியை உள்ளன்போடு அவரையுண்ணுவித்தனர். பின்பு அவர் தம்முடன் வருதற்கு இயலாதவராய் இருத்தலையுணர்ந்து அவருக்கு ஆறுதல்கூறிவிட்டு அங்குநின்றுவிரைவிற்போந்து மடாலயத்தையடைந்து, மாகேசுரபூசை முடிந்தவுடன் தாமே அன்னமெடுத்துக்கொண்டு அவர்பாற்சென்று அதனைப் பரிவோடளிக்க, அத்தவச்செல்வர் மகிழ்வோடுண்டு சிறிதுநேரத்துள் தளர்வுநீங்கப்பெறுதலும், மெய்யன்பினுல் வணங்கிச் சுவாமிகளது கருணைப்பெருநலத்தைப் பலவாறெடுத்துரைத்துத் துதித்துக்கொண்டு, பின்னர் சுவாமிகளை நோக்கிக்கூறுவார். அடியேன் இந்நாளில் மதுரைமாநகரின்கண் அரசுபுரிந்துவரும் முத்துவீரப்பநாயக்கனது சிறியதந்தையார்க்கு அருமைப்புதல்வனுவேன். எனக்குச் செவந்தியப்பன் எனப்பெயர் வழங்குவர். எனது தம்பியாகிய முத்துவீரப்பநாயக்கன் தன் மனேவிச்சையின் வழிச்செல்லுதற்கண் யான் தடைசெய்துவந்ததனுல் அவன் என்னைக்கொலைசெய்தற்கு எண்ணங்கொண்டனன்; அதனையுணர்ந்த அவன் மனைவி என்னிடத்து மிகப்பரிவெய்தி அக்கொடுமையை எனக்குத் தெரிவித்து வேறிடத்துவைகுமாறு வேண்டிக்கொண்டனள். அப்பொழுதே யான் அங்குநின்றுந் தனியே புறப்பட்டு விரைவாய் நடந்து பலதலங்களைத் தரிசித்துக்கொண்டு இன்று என் நல்வினைப்பயனுல் இத்திவ்வியதலத்தையடைந்து சுவாமிகள் பெருங்கருணைக்கு ஆளாயினேன் என்று இங்ஙனமாகத் தம் வரலாறெல்லாம் எடுத்துரைக்கச் சுவாமிகள் அவர்பாற் பெரிதும் அன்பு

பாராட்டி அளவளாவிக்கொண்டிருந்து, பின்புசுவாமிகள் ஆவலோடு செவந்தியப்பநாயக்கரை உடனேஅழைத்துப்போய் நதிக்கரையடைந்து அந்நதிக்கடன்களாற்றிக்கொண்டு மீண்டுவந்து திருக்கோயிலில் சுவாமிதெரிசனஞ் செய்வித்து, பின் திருமடத்திற்போந்து ஞானதேசிகரைத் தரிசிப்பித்து அவர் வரலாறெல்லாம் எடுத்து விண்ணப்பிக்க, ஞானதேசிகர் திருவுளமகிழ்ந்து நாயகரிடத்து மிகவும் அன்புபாராட்டி இனிய வசனங்களால் அவர் மனக்கவலையை ஒருவாறுமாற்றித் தமது திருமடத்தில் வசித்துவருமாறு திருவாய்மலர்ந்தருள; ஈசானசுவாமிகள் செவந்தியப்பநாயக்கரைத் தம்முடன் அழைத்து, வடக்குவீதியில் தமது ஆசிரியசுவாமிகளுக்குத் துவிதீயாசாரியராகிய வேலப்ப தேசிகசுவாமிகளும் அடியார்குழாங்களும், வளர்பிறைமதிபோல் மல்கிவிளங்குந் திருமடஞ்சென்று, அடியார் குழாங்களையும் துவிதீயாசாரியசுவாமிகளையுந் தெரிசனஞ் செய்வித்து, நாயக்கரைச் சிந்தைகளித்தமருமாறு செய்தனர். அங்ஙனம் குருலிங்கசங்கமசேவைசெய்து அமர்வாராகிய செவந்தியப்ப நாயக்கர், தாம் சுகவாழ்வு பெற்றிருப்பதை உற்றவர்வாயிலாக ராசபத்தினிக்கு உணர்த்திவைத்தனர்.

பின்பு ஓர்காலத்தில் அரசராகிய முத்துவீரப்பநாயக்கர், தமக்குப் பகைவர் சிலரால் இடர்ப்பாடுற்றவிடத்து எமக்கு எக்காலத்தும்உறுதுணையாகப்பொருந்தியிருந்தஎமதுமுற்றோன்றலையிழந்துவிட்டமையாலன்றோ இங்ஙனம்நேர்ந்ததெனக் கவலையுறுகின்றமையை இராசபத்தினி யுணர்ந்து இதுவே தருணமெனச் சிந்தித்து அவர்க்கு இன்மொழிகளாற் பலநீதிகளை எடுத்துரைத்துத் தம்வயமாக்கிக்கொண்டு, பின்பு செவந்தியப்பநாயக்கர் உயிர்பிழைத்திருக்குமாறு தாமியற்றிய உபாயத்தினையும் அவர் தங்கி வசிக்குந் தலத்தினையுமுரைத்தனர். இவற்றினைச் செவிமடுத்த அரசர், வியப்பும் மகிழ்வும் மிகவெய்தி உடனே தமது தமயனரை அழைத்துவருமாறு மந்திரி முதலானோரை ஏவ; அவர்கள் அங்ஙனமேபுறப்பட்டு விரைவில் திருவாவடுதுறையை

யடைந்து செவந்தியப்பநாயக்கரைக்கண்டு வணக்கத்தோடு தாம் வந்த செய்தியைத் தெரிவிக்க, அவர் அவர்களைநோக்கி இத்திவ்வியதலத்தில் எழுந்தருளியிருக்கும் ஆசாரிய சுவாமிகளையும், தம்பிரான் சுவாமிகளையும், ஏனைய திருக்கூட்டத்தவர்களையும் விட்டுவருவதற்கு நமதுமனம் ஒருசிறிதும் விரும்பவில்லையெனவும், ஒருக்கால் நமது தம்பியார்க்கு உற்றவிடத்து உதவுதற்பொருட்டாக அங்குவருவதுண்டாயின் இதுவரையும் எம்மைப் பாதுகாத்துவந்த பெரியார்க்கு ஒருதிருமடமும், சாந்தானிக பிக்ஷையின்பொருட்டு வேண்டும் விளைநிலமுதலியனவுங் கொடுத்து உதவுதல்வேண்டும் எனவுங் கூறினர். அவைகளைக்கேட்ட மந்திரிமுதலானோர் உடனே சிலரை அனுப்பி அவையாவும் அரசர்க்குணர்த்த, அரசர் மிகவும் மகிழ்வுற்று உடனே ஒருமடத்திற்கு எட்டுமடங் கட்டிக்கொடுத்து அவைகளுக்கு வேண்டும் விளைநிலமுதலானவைகளும் விடுவோம்; இதன்பால் ஒருசிறிதும் ஐயுறவேண்டுவதில்லையென ஓர் நிருபம் வரைந்து விடுத்தனர். அதனை மந்திரி முதலானோர் செவந்தியப்பநாயக்கருக்குக்காட்ட அவர் மனமகிழ்வுற்று ஒருவாறு புறப்படத் துணிந்தனர்.

பின்பு செவந்தியப்பநாயக்கர்; ஞானதேசிகரிடத்தும், துவிதீயதேசிக சுவாமிகளிடத்தும், அடியவர்களிடத்தும் பிரியாவிடைபெற்றுக்கொண்டு தமக்கு உற்றவிடத்துதவி புரிந்து உள்ளன்புமிக்குடையராயொழுகும் ஈசானத்தம்பிரான் சுவாமிகளைப் பிரிந்துசெல்ல மனமில்லாமையால் உடனழைத்துக்கொண்டு மந்திரி முதலானோர் புடைசூழ்ந்துவரப் புறப்பட்டுச்சென்று மதுரைமாநகரை யடைந்தனர். அதனையுணர்ந்த தம்பியாராகிய முத்துவீரப்பநாயக்கர், எதிர்கொண்டு வழிபட்டுபசரித்து அழைத்துச்செல்ல செவந்தியப்பநாயக்கர் அரண்மனைக்குட் சென்று தம்பியாரோடு அளவளாவிக்கொண்டிருக்கும் அமையத்தில் தம்முடன் எழுந்தருளிவந்த ஈசானதம்பிரான் சுவாமிகளது குணமகிமைகளையும் ஞானதேசிகரது திருவருள் மகிமைகளையும் பிறவும் எடுத்தியம்ப, அரசர் அதிசயமும் ஆனந்தமும் எய்தப்பெற்று சுவாமிகளிடத்துத் தமக்குப் பெரிதும் அன்புண்டாகத்

தமயனுரைநோக்கி, நமது சுவாமிகள் விரும்பிய இடங்களில் எட்டுமடாலயங்களமைத்து அவ்வவற்றிற்கு வேண்டும் விளைநில முதலாயினவும் தக்கனவாகத் தெரிந்து விடுகஎன வேண்டிக் கொண்டனர்.

பின்பு செவந்தியப்பநாயக்கர், தமது தம்பியார்க்கு உறுதி யாயிருந்து அவர்க்கு அக்காலத்தில் பகைவர்களால் நேர்ந்திருந்த இடர்ப்பாடு முழுதுநீக்கி மகிழ்ச்சிபெருக வைத்துத்தாம் ஈசான சுவாமிகளை அழைத்துக்கொண்டு புறப்பட்டுத், தென்னாட்டுத் தலங்களைத் தரிசிக்குமாறு யாத்திரை செய்வாராயினர். அக் காலத்தில் நாயக்கர் தாம் சுவாமிகள் திருவுளப்படியே பாவ நாசம், திருப்புடைமருதூர், செவ்வல், திருநெல்வேலி, முரப்ப நாடு, வள்ளியூர், கன்னியாகுமரி, சுசீந்திரம் என்னும் எட்டுத் தலங்களினும் மடாலயம் அமைத்தற்குரிய இடங்களும், அம் மடாலயத்தின் பொருட்டு ஆங்காங்கு அமைவுற்ற பல கிராமங் களும் ஆய்ந்துவைத்து மீண்டு மதுரைமாநகரை யடைந்தனர். பின்பு நாயக்கர் அவ்வத்தலங்களில் மடாலயப்பணி முற்றுவித்து அம்மடாலயங்களை ஈசானத்தம்பிரான்சுவாமிகள் திருநாமத்தால் வழங்கச்செய்து முன்னரே தாம் தெரிந்துவிட்ட பலகிராமங்களை யும் அவற்றினுக்குச் சேர்த்து சாலிவாகன சகாப்தம் ஆயிரத்து ஐந்நூற்றுமுப்பத்தேழினும், ஆயிரத்து ஐந்நூற்றுமுப்பத்தொன் பதிலும், ஆயிரத்து ஐந்நூற்று நாற்பத்துமூன்றினும் தாமிர சாசனங்கள் முடித்துக்கொண்டனர்.

பின்னர் ஈசானத்தம்பிரான்சுவாமிகள் தமது ஞானதேசிக ரையுந், துவிதீய தேசிகசுவாமிகளையும், அடியார் திருக்கூட்டத் தையும் பிரிந்து நெடுங்காலமாயினமையைத் திருவுளத்தோர்ந்து திருவாவடுதுறையை யடைந்து ஞானதேசிகரையுந், துவிதீய தேசிகசுவாமிகளையும் தெரிசித்தற்கண்ணும் அடியவர்களோடு அளவளாவியிருத்தற்கண்ணும் பேரவாவுற்று, அதனைத் தமது அன்பராகிய செவந்தியப்பநாயக்கருக்குணர்த்த அவர் சுவாமிக ளைப்பிரிந்திருக்க ஒருசிறிதும் மனமில்லாதவராயிருந்தும் சுவாமி களது திருவுளத்தெழுந்த அவாவினைத் தடுத்தற்கஞ்சி ஒருவாறு

இசைந்து வேண்டுஞ் சிறப்புக்களுடன் வழிவிட்டனுப்ப சுவாமிகள் மதுரையினின்றும் புறப்பட்டு வழியிடையே அனேக தலங்களைத்தரிசித்துக்கொண்டு, விரைவில் திருவாவடுதுறையையடைந்து, திருக்கோயிலிற்சென்று கோமுத்தீசுரரையும், அதுல்யகுஜ நாயகியாரையும், திரவியத்தியாகரையும், படாரசினையும் பணிந்து தரிசித்து அதன் தென்பாங்கரிலுள்ளதாகிய சித்தர்மடமென்று திருப்பெயர் வழங்குந் தமது திருமடத்திற்குச்சென்று அத்திரு மடத்தின் வாசலின் மேல்பால் பூர்வாபிமுகமாக வீற்றிருந்தருளும் சிவப்பிரகாச விநாயகரை வணங்கித் திருவருள்பெற்று, உள்ளே சென்று ஞானகுருவாகிய நமசிவாயமூர்த்தியின் திருக்கோயிலுக்கு ஈசானதிசையிற்றிருக்கோயில்கொண்டெழுந்தருளியிருக்குந் திருமாளிகைத்தேவரைத் தரிசனஞ்செய்து அத்திருக்கோயிலுக்கு அணித்தாகத் தென்மேல்பாங்கர் சினகரங்கொண்டு எழுந்தருளியிருக்கும், நமசிவாயதேசிகோத்தமரைத் தரிசித்து வழிபாடியற்றி ஒடுக்கத்திற்சென்று ஞானதேசிகரைத் தரிசித்துத் தமது வரலாறெல்லாம் எடுத்து விண்ணப்பஞ்செய்தனர். அவைகளைத் திருவுளத்திற்கொண்டருளிய ஞானதேசிகர் திருவருள்பாலித்தருள, அச்சுவாமிகள் அங்குநின்றும் அரிதினீங்கி வடக்கு மடத்திற்குச்சென்று, துவிதீய ஆசிரியராகிய வேலப்ப தேசிகசுவாமிகளையும், தம்பிரான்சுவாமிகள் திருக்கூட்டத்தையுந் தரிசித்து அளவிலாத ஆசைப்பெருக்கத்தோடு அங்கு வசித்தனர்,

பின்பு சிலநாட்கழித்து ஈசானதம்பிரான்சுவாமிகள் முன்னர் தமது அன்பராகிய செவந்தியப்பநாயக்கர் தம்மிடத்து வேண்டிக்கொண்டதை செய்துமுடித்தற்குப் பேராசைகொண்டு ஓர்நாளிற் ஞானதேசிகர்பாற் சென்று வழிபட்டுநின்று ஏழையேமை உய்யக்கொண்ட அருட்பேராசே! தேவரீர் இத்தலத்தினை நீங்கிப் பாண்டிநாட்டிற்சென்று அவ்விடத்தில் எமக்கு அரசரால் அமைக்கப்பட்ட திருமடங்களில் எழுந்தருளியிருந்து ஆங்காங்குள்ள பக்குவர்பலரையும் அடிமைகொண்டு அவர்களுக்

செல்லாக் குருதரிசனக்காட்சிகொடுத்து மகிழ்வித்துப் பின் இங் கெழுந்தருளவேண்டும் எனப் பிரார்த்திக்க, ஞானதேசிகரும் அதற்குத் திருவுளமிசைந்தருளினர்.

பின் அவ்வாறே; ஞானதேசிகர், ஓர்சுபதினத்தில் திருக் கோயிலிற்சென்று கோமுத்தீசுரரையும், அதுல்யகுஜநாயகியா ரையும், விநாயகர் முதலாகிய பரிவாரதேவதைகளையும், திரு மாளிகைத்தேவரையும் விசேட பூசையியற்றி வழிபட்டுவந்து, நமசிவாயமூர்த்தியின் திருமுன்பெய்தி விடைபெற்றுக்கொண்டு அத்தேசிகோத்தம சின்மயானந்தமூர்த்தியின் சினகரத்திற்கு உத்தர பூர்வதிசையிலே திவ்விய தேஜோமயமாய் விளங்கும் தமது ஆன்மார்த்த ஞானநடராஜப்பெருமான் எழுந்தருளியிருக் கும் பூஜாமண்டபத்திற்குச்சென்று சிற்சபேசனை அருச்சனை ஆராதனைசெய்து நமஸ்கரித்து இருவகைதீக்கையும், மந்திர காவியும், நிருவாணதீக்கையும்பெற்ற தப்பிரான்சுவாமிகள் சிர சாசனத்திலெழுந்தருளப்பண்ணி, தாம் தமது ஞானசாரியசுவா மிகள் திருவடியை அருச்சித்து ஆராதனைசெய்து தமதுசிரமேற் கொண்டு, வடக்கு வாசலிற்சென்று சிவப்பிரகாசவிநாயகரைத் தரிசித்து விடைபெற்றுத் தமது ஆசிரியசுவாமிகள் திருவடியைச் சிவிகையிலெழுந்தருளப்பண்ணித் தாம் சிவிகைமீது ஆரோகணி த்துத் தமது துவிதீய ஆசிரியசுவாமிகளும் அடியார் குழாங்க ளும் உடன்வர வழியிடையே பலதலங்களையுந் தரிசித்துச் சென்று பாண்டிநாட்டையடைந்து அங்குப் பற்பல காடுமுதலி யவை கடந்து மதுரைமாநகருக்குச் சமீபித்தருளினர். அதனை யுணர்ந்த செவந்திபப்பநாயக்கர் அரசராகிய முத்துவீரப்பநாயக் கருடன் புறப்பட்டுவந்து ஞானதேசிகரை எதிர்கொண்டு வழி பட்டு அழைத்துவர; ஞானதேசிகர், அத்திருப்பதியுட்சென்று சிவிகையினின் றிழிந்து திருக்கோபுரத்தை நமஸ்கரித்துக்கொ ண்டு ஆலயத்துட்சென்று அங்கயற்கண்ணம்மையையும், சோம சுந்தரப்பெருமானையுந் தரிசித்துத் துதித்துவலம்வந்து திருக் கோயிலினின்றும் அரிதினீங்கி புறத்தேவந்து ஒருதிருமடத்தில் எழுந்தருளியிருந்தனர். அங்ஙனம் எழுந்தருளுதலும் செவந்தி

யப்பநாயக்கரும், அரசரும், பிறரும் அங்கு ஞானதேசிகருக்கும் துவிதீய ஆசிரியசுவாமிகளுக்கும் அடியவர்களுக்கும் குருபூசை மாகேசுரபூசைகளியற்றிப் பின்பு ஞானதேசிகரையுந் துவிதீய ஆசிரியசுவாமிகளையும் பலவகைச் சிறப்புக்களோடு பவனிவருவித்து வழிபட, ஞானதேசிகர், அவர்களுக்கெல்லாங் குருதரிசனக் காட்சி கொடுத்துத் திருவருட் பிரசாதமும் நல்கி மகிழ்வித்தருளினர்.

பின்பு செவந்தியப்பநாயக்கரும், அரசரும், மெய்யன்போடு தம்மை வேண்டாநிற்ப, ஞானதேசிகர் அதற்கிசைந்து சிலநாள் அவ்விடத்திலெழுந்தருளியிருந்து அருளுபதேசஞ்செய்து பக்குவரானோர் பற்பலரை அடிமைகொண்டருளினர். அங்ஙனம் எழுந்தருளியிருக்குநாட்களில், ஞானதேசிகர், அந்நாட்டின்கணுள்ள ஏனையசிவஸ்தலங்களையுந் தரிசிக்கத் திருவுளங்கொண்டு அதனைச் செவந்தியப்பநாயக்கருக்குத் திருவாய் மலர்ந்தருள; நாயக்கர், சற்குருபரன் திருவருளாணையை, அந்நாட்டைஅரசுபுரிந்துவரும் தமது தம்பியாராகிய முத்துவீரப்பநாயக்கருக்குத் தெரிவிக்க; அதனையுணர்ந்தஅரசரும் ஏனைய அன்பர்களும்செவந்தியப்பநாயக்கருடன் ஒருங்குசேர்ந்துவந்து ஞானதேசிகர் திருமுன்பெய்திப் பலவாறுதுதித்துக்கொண்டு, பின்பு ஞானதேசிகரையுந் துவிதீய ஆசிரியராகிய வேலப்பதேசிகரையும், திருக்கூட்டத்துட் சிறந்த ஈசானதம்பிரான்சுவாமிகள் முதலாகிய பெரியாரையுந், தம்மாற் புதிதாகச்செய்து அமைக்கப்பட்ட சிவிகை முதலான சிறந்த வாகனங்களில் எழுந்தருளச்செய்து, காவளாலர் முதற்பலவகையரான பரிசனங்கள் பலவகைச்சிறப்புக்களுடனும்முன்னும் பின்னும் இருமருங்குஞ்சூழ்ந்துசெல்லுமாறு ஆணையளித்துத்,தாமும் பின்றொடர்ந்து வழிவிட்டுவணங்கி விடைபெற்றுத் திரும்பினர்.

பின்பு ஞானதேசிகர், வழியிடையிலுள்ள, சிவஸ்தலங்கள் பலவுந்தரிசித்துப்பாவநாசத்தையடைந்து அங்குத்தீர்த்தமாடிமுக்களாலிங்க முழுமுதற்கடவுளையும், உலகம்மையையுந் தரிசித்துத் தமது ஈசானமடத்தில் எழுந்தருளினர். அங்ஙனம் எழுந்தரு

ருதலும் அங்குள்ள சைவசீலரும் பிறரும்வந்து வழிபட; ஞான தேசிகர் அவர்தம்முள் பக்குவமெய்திய மெய்யன்பர்களை அடிமை கொண்டு அங்கு நின்றும் புறப்பட்டுத் திருப்புடைமருதூர், செவ்வல், திருநெல்வேலி, முரப்பநாடு, வள்ளியூர், என்னும்தலங் களிற் சென்று ஆங்காங்குப் புண்ணிய தீர்த்தமாடி, பொருப்பு விற்கைப் புனிதன் ஆலயங்கள் முதலானவை போதமெய்ஞ்ஞான த்தாற் பணிந்து தம் ஈசானமடங்களில் எழுந்தருளியிருந்து, ஆங்காங்குத் தம்மைவந்தடைந்த அதிதீவிர பக்குவரானார்க்கெல் லாம் அருளுபதேசஞ்செய்து வீற்றிருந்து, கன்னியாகுமரி என் னுந் திவ்வியஸ்தலத்திற்குச்சென்று தீர்த்தமாடிப் பகவதியம்மை யைத்தரிசித்துத் தமது ஈசானமடத்திற் சிலநாள் வசித்திருந்து, அங்குநின்றும்புறப்பட்டுச் சுசீந்திரத்தையடைந்து அத்திவ்விய தலத்துத் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் தாணு மாலயனெனும் சம்புவைத்தரிசித்து வணங்கிக்கொண்டு,நாயக்கர் மடம் என்று பெயர் வழங்குந் தமது ஈசானமடத்திற் கெழுந் தருளி அங்குப் பரிபக்குவ முடையார் பலருக்கும் தீக்ஷை முத லாயின செய்துகொண்டு சிலநாள் அங்கு வீற்றிருந்தருளினர்.

அக்காலத்தில் ஞானதேசிகர் தென்னாட்டின் கண்ணும் தமது சற்குரு பரம்பரைதழைத்தோங்கு மாறியற்றத் திருவுளங் கொண்டு, ஓர்சுபதினத்தில் ஆதீனபிரதமாசாரியராகிய நமசிவாய மூர்த்திகள் திருவுருப்பிரதிட்டையியற்றிக்கும்பாபிடேகஞ்செய்து நித்தியநைமித்திக பூசை என்றும் சிறப்புறநடத்துமாறு செய்து வைத்துத், துவிதிய ஆசிரியராகிய வேலப்பதேசிகரை அத்திரு மடத்தில் வசித்திருந்து பக்குவர்களுக்குச் சிவதீக்கையுஞ் சித்தா ந்த ஞானோபதேசமுஞ்செய்து சிவஞானப்பேரொளி எங்கணுஞ் சிறந்து விளங்கத் திருவருளாணை செலுத்தி வருமாறு செய்து, சீடர்களுக்கு அனுப்புந் திருமுகங்களில் ஆதீன முதற்குரவராக அமர்பவர்; நமசிவாயம் எனவும் துவிதீய ஆசிரியராக அமர்பவர் அம்பலவாணன் எனவுங் *கையொப்பமிட்டுவரும் சாம்பிரதாய

* அங்ஙனம் கையொப்பமிட்டுவரச்செய்தற்குக் காரணம் மாசிலா மணிதேசிகர் சரித்திரமுடிவில்கூறும் நிருபணச்செய்யுட்களிற் காண்க.

த்தையும் என்றும் நிலவுமாறு நிருமித்து, ஈசானதம்பிரான் சுவாமிகளுக்குத் தென்னாட்டின் கண்ணுள்ள குருக்ஷேத்திர பரிபாலனஞ்செய்துவருமாறு திருவருளாணைதந்து, தாம் சுசீந்திரத்தினின்றும் புறப்பட்டு வழியிடையில் பலதலங்களையுந்தரிசித்துக் கொண்டு திருவாவடுதுறையை :யடைந்தருளினர். இஃதிங்ஙனமாக.

தென்னாடு சிறந்துவிளங்கும் வண்ணம் சுசீந்திரமெனப்படுந் திவ்வியக்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கும் துவிதீய ஆசிரியராகிய வேலப்பதேசிகர் தமது ஞானதேசிகர் திருவுளப்பாங்கின் படி, சித்தாந்த ஞானோபதேசஞ்செய்து வருவாராயினர். அங்ஙனஞ்சிலகாலஞ்செல்ல தேசிகசுவாமிகள் தம்து ஞானதேசிகரைத் தெரிசித்தற்கு வேணவாவுற்று அடியவர்களோடு சுசீந்திரநகரை நீங்கி வழியிடையில் பலஅன்பர்கள் எதிர்கொண்டு வந்தனுபசாரஞ் செய்தனுப்பச் சென்று விரைவில் திருவாவடுதுறையையடைந்து ஞானதேசிகரைத் தம் கண்ணிணை களிப்பத்தரிசித்து வீற்றிருந்தருளினர்.

பின் சிலநாட்கழித்து ஞானதேசிகர், தம்மடியவர்களோடு புறப்பட்டுச் சிவஸ்தலயாத்திரை செய்யவும் ஆங்காங்கு அடிமை புகுவார்க்கு அருளுபதேசஞ்செய்யவும் திருவுளங்கொண்டு, ஓர் சுபதினத்தில் ஆதினபிரதமாசாரியசுவாமிகளாகியநமச்சிவாயமூர்த்திகள்பால் விடைபெற்று அரிதினீங்கித் திருவாயிலையடைந்து சிவப்பிரகாச விநாயகரைப் பலவாறுதுதித்து வேண்டிக்கொண்டு புறப்பட்டுச்செல்லுவார். துவிதீய ஆசிரியராகிய வேலப்பதேசிகரும் தொண்டர்குழாமும் உடன்வரத் திருவாவடுதுறையையகன்று வழியிடையில் அனேக திவ்விய ஸ்தலங்களைத் தெரிசித்துப் போய்ப் பழம்பதியென்று தமிழ்மறை போற்றும் பாண்டிய நாட்டையடைந்து அங்குச்சில திவ்வியஸ்தலங்களைத் தெரிசித்து கொண்டு, சீவன்முத்திபுரமாகிய திருவாலவாயின் எல்லையைச் சேர்ந்தருளினர். இங்ஙனம் ஞானதேசிகர் எழுந்தருளுதலை, கேள்வியுற்று அன்பராகிய செவந்தியப்ப நாயக்கரும் அரசரும்

பலவகைச் சிறப்புகளோடு வழிபட்டு அழைத்துச்செல்ல, ஞானதேசிகர் திருக்கோயிலிற்சென்று சுவாமிதெரிசனஞ்செய்து அரிதிற்புறம் போந்து சிரிதாகிய ஓர்திருமடத்தில் எழுந்தருளினர்.

பின்பு செவந்தியப்பநாயக்கரும் அரசரும் பணிந்துவேண்ட ஞானதேசிகர் திருவுளமிசைந்து அங்கு வசிக்குநாட்களில் ஓர் கார்த்திகை மாதத்து அனுஷநக்ஷத்திரத்திலே அம்பலவாணர் அருட்பத நீழலடைந்தனர். பின்பு செவந்தியப்ப நாயக்கரும், அரசராகிய முத்துவீரப்பநாயக்கரும் அன்று முதலாகப் பத்து நாள்வரையும், ஞானதேசிகர் குருபூசை சிறப்புறச் செவித்து, துவிதீய ஆசிரியராகிய வேலப்பதேசிகரை அவ்வரசமா நகரின் கண் பவனிவருவித்துக் கொலுவீற்றிருந்தருளச் செய்வித்து குருதரிசனக்காட்சி பெற்றுக் களிப்பெய்தினர்.

உருத்திரகோடிதேசிகர் சரித்திரம்.

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

ப தி னை ந் தா வ து,

வேலப்பதேசிகர் சரித்திரம்.

திருச்சிற்றம்பலம்.

நறுமலர்மஞ் சனமமுது முதலியன மனமதனு ளுடிக்கொண்டு
மறுவில்சிந்தை தனிற்புரியந் தரியாக மாபூசை மன்னுயிர்க்குப்
பெறுபுனித மாகுமென வடியவர்க்கு விளக்கியருள் பிறங்குந் [தூய்மை
யுறுதுறைசை வேலப்ப தேசிகன்றன் விரைமலர்த்தா ளுன்னி [வாழ்வாம்.

திருவருட் செல்வராகிய வேலப்பதேசிகர், திருவாலவாய் என்னுந் திவ்வியநகரில் ஞானாசாரியராகிய உருத்திரகோடிதேசிகர் குருமூர்த்தம் பூசித்துச் சிலநாள் வீற்றிருந்து, பின்செவந்திபப்பநாயக்கரும், அரசர் முதலானோரும் தம்மை வந்தித்து வழிவிட்டனுப்ப, அங்குநின்றும் புறப்பட்டு விரைவிற் சுசீந்திரத்தையடைந்து திருக்கோயிலிற்சென்று சிவபிரானைத்தரிசித்துத் தமதுதிருமடத்திற்சென்று, தமது ஆதீனமுதற்குரவராகிய நமச்சிவாய தேசிகோத்தமர் எழுந்தருளியிருக்கும் பிரதிட்டாலயத்தினையடைந்து வழிபாடியற்றித்தரிசித்து அங்குவசித்திருந்தனர்.

அங்ஙனம் வசிக்கு நாட்களில் ஞானதேசிகர் மூவகைத்தீக்கையும்பெற்றுத் தம்மடியவர்களுட் சிறந்து விளங்குங் குமாரசுவாமித்தம்பிரானுக்கு ஓர் சுபதினத்தில் ஆசாரியாபிடேகஞ் செய்து தமக்குத் துவிதீய குரவராக நியமனஞ்செய்து அங்குச் சிலகாலம் வசித்திருந்தனர். அக்காலத்தில், ஞானதேசிகர் திருவருளாணைபெற்றுக்கொண்டு பலகாலங் குருக்ஷேத்திர பரிபாலனஞ் செய்துகொண்டிருந்த ஈசானதம்பிரான்சுவாமிகள் * தமக்காகச் செவந்தியப்பநாயக்கர் கட்டுவித்தமடாலயங்கள் எட்டனுள் ஒன்றாகிய திருநெல்வேலி ஈசானமடாலயத்தில் வசித்திருக்குந் தருணத்து அத்திருப்பதியிலே ஓர்பங்குனிமாதத்துத் திருவாதிரை நக்ஷத்திரத்திலே அம்பலக்கூத்தன் அடிமலரடைந்தனர். பின்பு ஞானதேசிகர், தாம்தமது பிற்றோன்றலாகிய குமாரசுவாமிதேசிகரை அவ்விடத்தமர்ந்து சித்தாந்த உபதேசஞ்செய்து வருமாறு கட்டளையிட்டு அங்குநின்றும் புறப்பட்டுத் திருநெல்வேலிக்கெழுந்தருளி ஈசானமடத்தை யடைந்து அத்தலத்தில் சிலநாள் வசித்திருந்து குருக்ஷேத்திர பரிபாலனத்திற்கு ஒருதம்பிரானை நியமனஞ்செய்துபின் அங்குநின்றும்புறப்பட்டுப்போந்து மதுரை

---

*ஈசானசுவாமிகளுக்கு வருஷக்குருபூஜை செய்துவருவது அன்றியும் மாதக்குருபூஜையும் இன்றுகாறும் அத்திருவாதிரைநக்ஷத்திரத்தில் நடைபெற்றுவருகின்றது; இச்சுவாமிகள் ஞானசமாதித் திருக்கோயிலும் திருநெல்வேலி ஈசானமடாலயத்தில் அரசராகிய செவந்தியப்பநாயக்கரால் செய்யப்பட்டுள்ளது; யாவர் அறிந்ததொன்றாகும்.

நகரையடைந்து அங்குத் தமது சற்குருநாதர்குருமூர்த்தந் தரிசித்து வழிபட்டுக்கொண்டு அங்கு அங்கயற்கண்ணி மணவாளனை அநுதினமுந் திருக்கோயிலிற்சென்று தரிசித்து சின்னாள் எழுந்தருளியிருந்துபின் அங்குநின்றும்புறப்பட்டு வழியிடையில்அனேக சிவஸ்தலங்களைத் தரிசித்துக் கொண்டு திருவாவடுதுறையைச் சேர்ந்தருளினர்.

பின்பு ஞானதேசிகர், அங்குத் திருக்கோயிலிற் சென்று மாசிலாமணியீசுரரையும், ஒப்பிலாமுலையம்மையையும், செம்பொற்றியாகரையும், திருமூலதேவரையுந் தரிசித்துமீண்டுதமது திருமடத்தினுட்புகுவார். அங்குவடக்குமுகப்புத் திருவாயிலிற் சிவப்பிரகாச விநாயகரை வழிபட்டுக்கொண்டு உள்ளே சென்று திருமாளிகைத் தேவரைத் தரிசித்துப் பின் தேசிகோத்தமராகிய நமசிவாயமூர்த்திகள் சந்நிதியை யடைந்து தம் உள்ளத்துப் பேராசை பெருகப்பூசித்து வழிபட்டுக்கொண்டு அங்கமர்ந்தருளினர். இஃதிங்ஙனமாக.

சுசீந்திரத்திலெழுந்தருளியிருக்கும் துவிதீய ஆசிரியராகிய குமாரசுவாமிதேசிகர் பாண்டிநாட்டின்கண்ணும் சேரநாட்டின்கண்ணும் ஆங்காங்குத் தம்மைவழிபடும் பக்குவர்பலர்க்கும் தீக்கையாதிகள்செய்து சித்தாந்தஞானபரம்பரை சிறந்துவிளங்கும் வண்ணம் ஞானதேசிகர் திருவருளாணைவழிநிற்குநாளில்; ஓர்காலத்துத் தாம் ஞானதேசிகரைத் தெரிசித்தற்கு வேணவாவுற்று, அங்குநின்றும் புறப்பட்டு அடியவர்களோடு ஆங்காங்கு பலதலங்களையுந் தரிசித்துக்கொண்டு திருவாவடுதுறையை அடைந்து, தமது திருமடத்திற்சென்று ஞானமூர்த்தியாகிய நமச்சிவாய தேசிகோத்தமரையுந் தமதுஞானசிரியசுவாமிகளையுந் தரிசித்து அங்கு வசித்திருந்தனர்.

பின்பு, ஞானதேசிகர் சிலகாலங்கழித்துச் சுசீந்திரத்திற் கெழுந்தருளத் திருவுளங்கொண்டு துவிதீய ஆசிரியராகிய குமாரசுவாமிதேசிகரும், திருக்கூட்டமும், பரிசனங்களும் உடன்வரத் திருவாவடுதுறையினின்றும் புறப்பட்டு வழியிடையிற் பல

தலங்களைத் தரிசித்துச் சுசீந்திரத்தை யடைந்து அங்குச்சில காலம் வசித்திருந்து, பின்திருவாவடுதுறைக்கெழுந்தருளத் திருவுளங்கொண்டு துவிதிய ஆசிரியசுவாமிகளை அங்குள்ளார்க்கு ஞானோபதேசஞ்செய்து வருமாறு பணித்துத் தாம் அங்குநின்றும் அரிதினீங்கிச் சோநாடகன்று பாண்டிநாட்டிற் செல்வார்; அங்குப்பலவிடங்களினும் தம்மை வழிபடும் மெய்யன்பர்களுக்குத் தீக்கையாதிகள் செய்து முப்பொருளுண்மை முனிவற மொழிந்து, திருவாலவாயினையடைந்து திருக்கோயிலிற்சென்று சுவாமிதரிசனஞ்செய்து தமது ஞானாசிரியசுவாமிகள் குருமூர்த்தந்தெரிசித்து அங்குச் சிலகாலம் வசித்திருந்து அங்குநின்றும் அரிதினீங்கித் திருப்பூவணமென்னுந் திவ்விய ஸ்தலத்தையடைந்து, பூவணநாதரைப்புரிவுடன் வணங்கி அங்கு அமருநாட்களில் ஓர் கார்த்திகை மாதத்திலே உத்தராட நக்ஷத்திரத்திலே உலகெலா முணர்ந்தோதற்கரிய ஒருவன்றிருத்தாளில் இரண்டறக்கலந்தனர்.

வேலப்பதேசிகர் சரித்திரம்

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

பதினொருவது
குமாரசுவாமிதேசிகர் சரித்திரம்.

திருச்சிற்றம்பலம்.

புத்தியே யபுத்தி பூருவ மிரண்டும் பொருந்துறு முபாயமூன் மையினில், வைத்திடுஞ் சரியை கிரியைநல் யோக ஞானமா வகுத்திடு மெட்டும், ஒத்திடிற் பத்தாம் புண்ணிய மென்ன வுணர்த்துவான் கோமுத்திவாழுஞ், சுத்தன்முற் குமாரசாமிதே சிகன்றன் றுணையடி தொழுதுவாழ்ந் திடுவாம்.

மேதினிபுகழும் வேலப்பதேசிகர் தமக்குப் பிற்றோன்றலாயமர்ந்தருளுங் குமாரசுவாமிதேசிகர், திருப்பூவணம் என்னும்

அப்பெரும்பதிக்கண் தமது ஞானசிரியசுவாமிகள் சிவ பரிபூரண முற்றருளியதைத் தமது சீடர்வந்து அறிவிக்க; விரைவில் சுசீந் திரத்தினின்றும் புறப்பட்டுத் திருப்பூவணமடைந்து ஞானசிரிய சுவாமிகள் குருமூர்த்தந்தரிசித்து அங்குச் சிலநாள் வீற்றிருந்து அரிதினீங்கித் திருவாவடுதுறையையடைந்து, திருக்கோயிலிற் சென்று சுவாமிதரிசனஞ்செய்து, தமது திருமடத்திற்குவந்து வடக்குவாசலின் மேல்பாற் கோயில்கொண்டெழுந்தருளியிருக் குஞ் சிவப்பிரகாசவிநாயகரைத் தரிசித்து உள்ளேசென்று திரு மாளிகைத்தேவரையும், ஞானமூர்த்தியாகிய நமசிவாயதேசிகோ த்தமரையும், தரிசனஞ்செய்து பின் ஒடுக்கத்திற்சென்று தமது ஞானசிரிய சுவாமிகள் திருவடிகளைப் பீடத்திலெழுந்தருளப் பண்ணிப் பூசனையாற்றித் தாம் ஆசனத்தமர்ந்து, அடியவர்கள் அருச்சித்து கற்பூர ஆலத்திசெய்து வழிபாடுசெய்ய; அவர்க்கெ ல்லாம் விபூதிநல்கித் திருவருள்பாலித்து அங்கமர்வாராயினர்.

அக்காலத்தில் ஞானதேசிகர் தமதுஞானோபதேசபரம்பரை அங்குரித்தற்கோர்களைக்கணாகிய துவிதீய ஆசிரியர் நியமனஞ் செய்யத் திருவுளங்கொண்டு, மூவகைத்தீக்கையும் முறையாகப் பெற்று விளங்கும் முனிவர்களுட் சிறந்த குமாரசாமித்தம்பிரா னுக்கு ஓர் சுபதினத்தில் ஆசிரிய அபிடேகஞ் செய்தருளினர். பின்னர் சிலபகல் கழிந்து ஞானதேசிகர் அங்குநின்றும் புறப்ப ட்டு வழியிடையிற் பலதலங்களையுந் தரிசித்துச் சுசீந்திரத்திற் சென்று அங்குத் தமது துவிதீய ஆசிரியராகிய குமாரசுவாமித் தேசிகரும் அடியவர்களுஞ்சூழ அங்குப்பலகாலம் பற்பல சீடர் களுக்குத் தீக்கையாதிகள் சிறப்புறச்செய்து வசித்திருந்தனர். அக்காலத்தில் ஞானதேசிகர் ஓர் கார்த்திகைமாதத்திலே உத்த ராடநக்ஷத்திரத்திலே அத்திருப்பதியிலே சிற்சபேசன்றிருவடிக் கலப்பாகிய சிவானந்தவாழ்வுற்றனர்.

குமாரசுவாமிதேசிகர் சரித்திரம்

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

பதினேழாவது,

பிற்குமாரசுவாமிதேசிகர் சரித்திரம்.

திருச்சிற்றம்பலம்.

சொற்குவைமா ருக்கழனி புறஞ்சூழ்ந்த துறைசைதனிற் ருெல்லுயிர்க்கு, நற்பருவ வரசவிளங் குமரரெனத் தம்முயர்வு நயப்பக் கூறிக், குற்றமலப் புலவேடக் குறும்பகற்றிப் பதியாக் குங் குமார சாமி, சற்குரவன் செங்கமல மலர்போலுந் தாளிணைகள் சார்ந்து வாழ்வாம்.

முற்குமாரசுவாமிதேசிகர் தம்பால் அபிடேகம் பெற்றுத் துவிதீய ஆசாரியராக வீற்றிருக்கும் குமாரசுவாமி தேசிகர் தமது ஞானசிரியசுவாமிகள் குருபூசை சிறப்புறவியற்றி அங்குச் சீடர்களுக்கு ஞானேபதேசஞ்செய்து வருவாராயினர். அக்காலத்தில் தம் அடியவர்களுட் சிறந்து விளங்கும் முத்தம்பலவாணத் தம்பிரானுக்கு ஆசிரியாபிடேகஞ் செய்துவைத்துத் தாம் அங்கு நின்றும் புறப்பட்டுச்சென்று சின்னாட்களுள் திருவாவடுதுறையைச்சேர்ந்து குரவர் பெருமானுகிய நமசிவாயதேசிகோத்தமரைத் தரிசித்து அங்கு வீற்றிருந்து அருளுபதேசஞ்செய்துவருவாராயினர். இஃதிங்ஙனமாக.

சுசீந்திரத்தின்கண் ஞாநசிரியசுவாமிகள் திருவருளாணை மேற்கொண்டு சீடர்களுக்கு ஞானேபதேசஞ் செய்துவரும் முத்தம்பலவாணதேசிகர், சிலகாலஞ்சென்று தமதுஞானதேசிகரைத் தெரிசிக்கவேணவாவுற்றுச் சுசீந்திரத்தினின்றும் நீங்கிப்போந்து விரைவிற்றூனே திருவாவடுதுறையை யடைந்து, தமது மடாலயத்திற்சென்று ஆதீனபரமமுதற்குரவராகிய பஞ்சாக்கரமூர்த்திகளையுந் தமது ஞானதேசிகரையுந் தரிசித்துக் களிப்பெய்தி அங்குவசித்திருந்தனர்.

பின்னர், சிலகாலஞ்சென்று ஞானதேசிகர், சோழநாட்டின்கண்ணும், பாண்டியநாட்டின்கண்ணும், சேரநாட்டின்கண்ணும் உள்ள தமதுசீடர்களுக்குத் தீக்கையாதிகள் செய்யத் திருவுளங்கொண்டு நமசிவாயமூர்த்திபால் விடைபெற்று அரிதினீங்கித் துவிதீய ஆசிரியராகிய முத்தம்பலவாணதேசிகரும் அடியார்களும் உடன்வர, வழியிடையில் அனேக ஸ்தலங்களைத் தரிசித்துப் புனல்நாடகன்று பாண்டியநாட்டிற் சென்று அங்குப் பல தலங்களைத் தரிசனஞ்செய்துகொண்டு திருக்குற்றாலத்திற்கெழுந்தருளிச் சுவாமிதரிசனஞ்செய்து அங்குவீற்றிருக்குநாட்களில் துவிதீயஆசிரியராகிய முத்தம்பலவாணதேசிகர் அத்திருப்பதியிலே ஓர்மாசிமாதத்துச் சித்திரைநக்ஷத்திரத்திலே சிவபரிபூரண தசையடைந்தருளினர்.

அக்காலத்தில் ஞானதேசிகர், அவ்விடத்தே அத்தேசிக சுவாமிகளுக்கு குருபூசை சிறப்புற நடத்திக்கொண்டு, அங்கு நின்றும் புறப்பட்டுப்போய்ச் சுசீந்திரத்தையடைந்து அங்குத் தமது அடியவர்களும் பிறரும் வழிபட்டுப் பரவத் தமது திருமடத்தில் வீற்றிருந்தருளுவாராயினர். அங்ஙனம் வீற்றிருக்கு நாட்களில், ஞானதேசிகர் தம் அடியவர்களுட் சிறந்த மாசிலாமணித்தம்பிரானுக்கு ஓர்சுபதினத்தில் ஆசிரியாபிடேகஞ்செய்து தமக்கு துவிதீய ஆசிரியராகவைத்தருளினர்.

பின்புசிலகாலங்கழித்து ஞானதேசிகர், திருவாவடுதுறைக்கெழுந்தருளத் திருவுளங்கொண்டு துவிதீய ஆசிரியராகிய மாசிலாமணி தேசிகரை அங்கு அமர்ந்தருளுமாறு பணித்துவிட்டுத், தாம் அடியவர்கள் குழாமும் பரிசனங்களும் அடுத்துவரப் புறப்பட்டு வழியிடையே திருக்கோயில்கள் பலவற்றையுந் தரிசித்துக்கொண்டு, திருவாவடுதுறையைச்சேர்ந்து, அங்கு சிவாநுபூதிப் பெருவள்ளலாகிய நமசிவாயதேசிகோத்தமர் திருவடிகளை ஆராமைமீதூர அருச்சித்து வழிபட்டுக்கொண்டு தமதுதிருமடத்தில் வீற்றிருந்தருளுவாராயினர். இஃதிங்ஙனமாக.

சுசீந்திரத்தின்கண் துவிதீய ஆசிரியராக வெழுந்தருளியிருக்கும் மாசிலாமணிதேசிகர், தாம் மாணக்கர் பற்பலர்க்கு அரு

ருபதேசஞ்செய்துவருநாட்களில்; பாண்டிவளநாட்டிலே பரம்ப ரைச்சைவவேளாளர்குலத்தில் அவதரித்து இளமைப்பருவத்தே தம்மைவந்தடைந்த உத்தமபக்குவராகிய சுவாமிநாதர் என்பவர் க்குச்சமயவிசேடங்களாகிய இருவகைத்தீக்கையுஞ்செய்து சைவ சந்நியாசம் அளித்தருள; அவ்வன்பர் தாம் அடைந்துகொண்ட துறவறத்திற்கு விதித்த நூல்களை ஐயந்திரிபின்றி ஓதியுணர்ந்து அவ்வாறொழுகித் தவத்தான் மனந்தூயராகி ஞானசிரியரது அருட்பணிவிடையை அன்போடு செய்துகொண்டு அணுக்கத் தொண்டராய் அமர்ந்திருந்தனர்.

அக்காலத்தில் மேற்கூறிய பாண்டிவளநாட்டிலே திருநெல் வேலியென்னுஞ் சிவநகரத்திலே தாண்டவமூர்த்திப்பிள்ளைசெய்த தவப்பயனால் உதித்த மயிலேறும்பிள்ளையென்பவர், கல்வியறி வொழுக்கங்களானும், குருலிங்க சங்கமபத்தியானும் மிகச்சிறப் புற்றுச், செல்வம் அதிகாரமுதலிய நலங்களிற் குறைவின்றி விளங்கியிருந்தனர். அவர் ஞாலத்துமிக்குயர்ந்த ஞானஆதீன மென்று யாவரானும் புகழப்படுவதாகிய நம் துறைசையாதீன சிஷியவர்க்கங்களிற் சிறந்தவராயும், ஆதீனத்திலே மிகுந்த அன் புடையவராயுமிருந்தமையால் தமக்கு ஒருவாறு அணித்தாக வுள்ள சுசீந்திரநகர்க்கு அடிக்கடிவந்து துவிதீய ஆசிரியராகிய மாசிலாமணிதேசிகரைத் தரிசித்துக்கொண்டு போவார்; வழக் கப்படியே ஒருநாள்வந்து தேசிகசுவாமிகளைத் தரிசித்துக் கல ந்து பேசிக்கொண்டிருக்கும்பொழுது சுவாமிநாததம்பிரான் என் பவர் ஆண்டிலிளையராயினும் அறிவின் முதியவராய் ஒழுக்கம், அன்பு, அருள், வாய்மை அடக்கமுதலிய நற்குணங்களின் மிகச் சிறந்தவராயிருத்தலைக்கண்டு இளமைப் பருவத்தே இக்குணங்க ளெல்லாம் ஒருங்கே அமைந்திருப்பது அருமை! அருமை! என்று வியப்புற்று, நாங்கற்றகல்விப் பொருளை இச்சிவனடியார் க்குக் கற்பிப்பேமாயின், உலகிற்கு மிகவும் பயன்படுவதன்றியும் நமக்கு இம்மையிற் புகழும், மறுமையில் நற்கதியுங் கிடைக்கு மென்று நினைந்து தங்கருத்தை தேசிகசுவாமிகள்பால்விண்ணப் பஞ்செய்து அத்தேசிகசுவாமிகள் ஆஞ்ஞைபெற்று சுவாமிநாத

தம்பிரானை அழைத்துத் தமது திருநகர்க்குச் சென்று தமது வீட்டில் அத்தம்பிரான்சுவாமிகளை வசிக்கும்படிசெய்து யாதொரு குறைவுமின்றி ஊணுடையாதிகள் உழுவலன்போடுவப்ப நல்கித் தமிழ் இலக்கண இலக்கியம் அனைத்தும் முறையே கற்பித்து வந்தனர். அன்றியும் வடமொழியிலும் வல்லுநராகச்செய்யக் கருதி, திருநெல்வேலிக்குச் சமீபத்திலுள்ள செப்பறைப் பதியில் மகாபண்டிதராயிருந்த கனகசபாபதி சிவாசாரியரைக்கொண்டு வடமொழி வியாகரணமுதலியவற்றைக் கற்பித்துவந்தனர். அத்தம்பிரான்சுவாமிகள் பன்னிரண்டுவருஷம் வரையுந் தம்முடைய இயற்றமிழாசிரியரைவிட்டு நீங்காது உடனிருந்து இருவகை மொழிகளையும் உளங்கொளப் பயின்றனர்.

பின்பு மயிலேறும்பெருமாள்பிள்ளை, அத்தம்பிரான்சுவாமிகளை அழைத்துக்கொண்டு சுசீந்திரத்திற்குவந்து மாசிலாமணி தேசிகரைத் தரிசித்து அத்தேசிகசுவாமிகள் திருமுன்னிலையிலே அவரது கல்வித் திறமையைப் பரீக்ஷைசெய்து காட்டி யாவர்க்கும் பேரதிசயத்தை விளைவித்தனர். பின்பு மயிலேறும்பெருமாள்பிள்ளை, அவரை அங்கு அமர்ந்து ஞானநூல் ஓதிவருமாறு வைத்துத் தாம் தேசிகசுவாமிகள்பால் வணங்கி விடைபெற்றுக் கொண்டு தமதிடத்திற்கு மீண்டனர்.

பின்பு மாசிலாமணிதேசிகர், தாம்கல்விச்செல்வராகிய சுவாமிநாததம்பிரான்சுவாமிகளுக்கு நிருவாணதீக்ஷைசெய்து வீடுபேற்றிற்குக் காரணமாகிய சிவஞானபோதமுதலாகிய சித்தாந்த சாத்திரங்களையுபதேசித்தருளினர். அச்சுவாமிகள் அவற்றைச் சிந்தித்துத்தெளிந்து ஞானாசாரியரது அருட்பணிவிடையை அன்போடு செய்துகொண்டு, அணுக்கத்தொண்டராய் அமர்ந்திருந்திருந்தனர். அக்காலத்தில் அச்சுவாமிகள் தாங்கற்ற இலக்கணவிலக்கியங்களில் இலை மறை காய்போல் மறைந்து கிடந்த அரிய விதிகளையெல்லாந் தமது நன்னறிவினால்விளங்க எடுத்துத்திரட்டி

* இலக்கணக்கொத்து என ஒருநூலியற்றி அதனை அங்குத் தேசிகசுவாமிகள் முன்னிலையில் அரங்கேற்றினர்.

பின்னர் தேசிகசுவாமிகள் தமது ஞானசாரியசுவாமிகளைத் தரிசித்து நெடுங்காலமானதைத் திருவுளத்திற் சிந்தனைசெய்து, அங்குநின்றும்புறப்பட்டு வழியிடையிற் பலதிவ்வியஸ்தலங்களிற் சிவபிரானைத் தரிசித்து விரைவிற்சென்று, திருவாவடுதுறையை யடைந்து ஞானதேசிகரைத் தரிசித்துக்கொண்டு அங்குச் சில காலம் அமர்ந்திருந்தனர்.

அக்காலத்தில் ஞானதேசிகர், சிவஸ்தலயாத்திரை செய்ய வும், சீடர்களுக்குத்தீக்கைசெய்யவுந் திருவுளங்கொண்டு அங்கு நின்றும் அரிதினீங்கிச் சோழநாட்டின்கண்ணும் பாண்டியநாட் டின்கண்ணும் பற்பலஸ்தலங்களைத் தரிசித்துச் சீடர்களுக்குத் தீக்கையாதிகளுஞ் சித்தாந்தசாத்திரோபதேசமுஞ்செய்து சேர நாட்டை யடைந்து அங்கு வழியிடையிற் பலதலங்களையுந் தரிசி த்துச் சுசீந்திரத்திற்சென்று, துவிதீய ஆசிரியசுவாமிகளும் தம் பிரான்சுவாமிகளும் ஏனைய அடியவர்களும் உடன்வரத் திருக் கோயிலில் சுவாமிதரிசனஞ்செய்து தமது திருமடத்திற்கெழுந் தருளி, ஞானமூர்த்தியாகிய நமசிவாயதேசிகோத்தமர் பிரதிட் டாலயத்தில் அக்குருபரனைத் தரிசித்து அங்குவசித்திருந்தனர்.

---

* "திருநெல்வேலி யெனுஞ்சிவ புரத்தன் ருண்டவமூர்த்தி தந்த செந் தமிழ்க்கடல் வாழ்மயிலேறும் பெருமாண் மகிபதி யிருபத கமல மென்றலை மேற்கொண்டிலக்கணக் கொத்தெனு நூலியம் புவனே" எனவிதந்தோதுதலின் இந்நூலாசிரியர்க்கு தமிழ்வித்தியாகுரு மயிலே றும்பிள்ளை என்பது விளங்கும். இந்நூலாசிரியர்க்கு சம்ஸ்கிருத வித் தியாகுரு செப்பறை கனகசபாபதிசிவாசாரியர் என்பது, "செப்பறைப் பதியின்வாழ்சிவத்துவிசன், கனகசபாபதிகருதுவடநூற்கடல், தபோ தனர்புகழுஞ்சைவாதிராசன், உபயபதங்களையுண்மையொடுபணிவாம்" என அந்நூற்பாயிரத்திற் கூறினமையாற் புலப்படும்.

அங்ஙனம் வசிக்கும் நாட்களில் அத்திருப்பதியிலே ஓர் ஆவணி மாதத்து உத்தரட்டாதி நக்ஷத்திரத்திலே உலகுயிர் யாவும் உற்றொடுங்கும் ஒள்ளொளியாகிய ஒருபரன் கழற்கீழெய்தினர்.

பிற்குமாரசுவாமிதேசிகர் சரித்திரம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

பதினெட்டாவது

மாசிலாமணிதேசிகர் சரித்திரம்.

திருச்சிற்றம்பலம்.

திருவெண்கா டுறைமறையோ ருச்சிட்டஞ் சேர்கூவற் செறிபி டங்கள், பெருகுமுவர் நீர்கண்டதஞ்சையிறை மகிழவன்பிற் பிறங்குமாகே, சாருண்ட பரிகலத்தா னுவர்க்கூப நறுநீராய்ச் சுரக்க மேலாம், அருளுந்து கோமுத்திக் குருமாசி லாமணியா ரடிகள் போற்றி.

மாயிருஞாலத்து மன்பதையுய்ய அருட்பெருஞ்செல்வராய் அமர்ந்திருந்த பிற்குமாரசுவாமிதேசிகர் அருளுபதேசம்பெற்ற மாசிலாமணிதேசிகர் சுசீந்திரத்தின்கண் தமது ஞானாசிரியசுவாமிகள் குருபூசை சிறப்புறவியற்றி, அங்குச் சீடர்களுக்கு ஞானோபதேசஞ்செய்து வருவாராயினர். அங்ஙனம் அடியவர்களுக்கு அருளுபதேசஞ்செய்து அமர்ந்தருளும் ஞானதேசிகர், தாம் அங்குநின்றும் புறப்பட்டு ஆங்காங்கு யாவருந் தம்மை வழிபட்டுபசரிக்க அவர்க்கெல்லாம் திருவருள் வழங்கி, வழியிடையிற் பற்பல திருக்கோயில்களிற் சிவபிரானை வணங்கி வழிபட்டுக்கொண்டு, திருவாவடுதுறையை அடைந்து தேசிகபெருமானாகிய நமச்சிவாயமூர்த்திகள் திருவடிகளை யருச்சித்துக்கொண்டு அங்குச்சீடர்களுக்கு அருளுபதேசஞ்செய்து வருவாராயினர்.

அக்காலத்தில், தமது அடியவர் பல்லோருள்ளுஞ் சிறந்த சிவக்கொழுந்து தம்பிரானுக்கு ஆசாரியாபிடேகஞ்செய்து தமக்குத் துவிதீய ஆசிரியராக வைத்து, மெய்கண்டசாத்திரம் பண்டாரசாத்திரங்களின் நுண்மைப்பொருள்கள் விளங்க உபதேசித்தருளினர். அங்ஙனம் அருளுபதேசப்பெற்ற துவிதீய ஆசிரியராகிய சிவக்கொழுந்து தேசிகசுவாமிகள், ஞானதேசிகருடன் ஒருங்கிருந்து அத்தேசிகர் திருவருளாணைமேற்கொண்டு பற்பல மாணவர்களுக்கு வேதாந்த சித்தாந்த சமரசநுண்பொருள்களைத் தெளிவுற உபதேசித்து வருவாராயினர்.

அக்காலத்தில் பாண்டியவளநாட்டில் தேவாரத்திருப்பதிகம் பெற்ற ஸ்தலங்களுள் ஒன்றாகிய திருப்புனவாயிலுக்கு மேற்கில் மூன்றுகடிகைதூரத்திலுள்ள சிறுகம்பையூரினில் உதித்தவரும், குன்றக்குடி என்று பெயர் வழங்கும் மயூரகிரியிலெழுந்தருளியிருக்கும் முருகப்பெருமான்மீது கோவையென்னும் பிரபந்தமியற்றிய சாந்துப்புலவர்க்கு மூன்றாவது பிதாமகரும் ஆகிய சர்க்கரைப் புலவர், சிறிய பிராயத்திலே திருவாவடுதுறையையடைந்து, ஞானதேசிகரையுந் துவிதீய ஆசிரியராகிய சிவக்கொழுந்துதேசிகரையுந் தரிசித்து, அங்கு உபயதேசிகசுவாமிகள் திருவருள்பெற்றுத் துவிதீயஆசிரியசுவாமிகள்பால் கல்விபயின்று மகாவித்துவசிரோமணியாகி விளங்கியிருந்தனர். இவரது கல்வியறிவின் திறமையைக் கேள்வியினால் நன்கறிந்த இராமநாதபுரம் இரகுநாதசேதுபதி என்பவர் ஞானதேசிகரிடத்துத் தெரிவித்து வரவழைத்து அவரைத் தமது சமஸ்தான வித்துவானாக வைத்துக்கொண்டனர்.

பின்பு ஞானதேசிகர் பாண்டிநாட்டின்கண்ணும் சோநாட்டின்கண்ணுமுள்ள தமதுசீடர்களுக்குத் தீக்ஷையாதிகள்செய்யத் திருவுளங்கொண்டு துவிதீயஆசிரியராகிய சிவக்கொழுந்துதேசிகசுவாமிகளும், ஏனைய அடியவர்களும், உடன்வர அங்குநின்றும் புறப்பட்டு, வழியிடையிற் பலதலங்களையுந் தரிசித்து, ஆங்காங்குத் தம்மைச்சரண்புகும் பக்குவச் சீடர்களுக்கு ஞானோபதேசஞ்செய்து, சுசீந்திரத்தையடைந்து, திருக்கோயிலிற் சென்று

சிவபிரானைத் தரிசித்துத், தமது மடாலயத்தையடைந்து, ஆதீன முதற்குரவராகிய பஞ்சாக்கரமூர்த்தியின் பிரதிட்டாலயத்தைச் சார்ந்து வழிபாடியற்றி, இருகுமாரசுவாமிதேசிகர் குருமூர்த்தங்களைப் பணிந்து அங்குச் சிலநாள் வசித்திருந்து, துவிதிய ஆசிரியரை அவ்விடத்தமர்ந்து சீடர்களுக்குத் தீக்கையாதிகள் செய்து வருமாறு ஆணையளித்துத் தாம் அங்குநின்றும் புறப்பட்டுத் திருவாவடுதுறையையடைந்து, திருக்கோயிலிற்சென்று சுவாமிதரிசனஞ் செய்து, தமது திருமடத்திற்கெழுந்தருளிச் சிவப்பிரகாச விநாயகரையுந், திருமாளிகைத் தேவரையும், ஆதீனபரம முதற்குரவராகிய நமசிவாயதேசிகோத்தமரையுந் தரிசித்து வழிபாடியற்றி, ஒடுக்கத்திற் சென்று யாவருக்குங் குருதரிசனக்காட்சி யளித்து அங்கு அமர்ந்தருளுவாராயினர். இஃதிங்ஙனமாக.

ஞானதேசிகர் திருவருளாணை சிரமேற்கொண்டு சீடர்களுக்குந் தீக்கையாதிகள்செய்து சுசீந்திரத்தில்வீற்றிருக்குஞ் சிவக்கொழுந்துதேசிகர், சிலகாலஞ்சென்று ஞானாசாரியரைத் தரிசித்தற்குப் பெரிதும் ஆசைகொண்டு அங்குநின்றும் புறப்பட்டு, விரைவில் திருவாவடுதுறையைச்சேர்ந்து திருக்கோயிலை யடைந்து சுவாமிதரிசனஞ்செய்து, தமது திருமடத்திற்சென்று சிவப்பிரகாசவிநாயகரையுந், திருமாளிகைத்தேவரையும், ஞானநடராசப்பெருமானையும், நமசிவாயமூர்த்தியையுந் தரிசித்து ஒடுக்கத்திற்சென்று, தமது ஞானதேசிகசுவாமிகளைக்கண்டு வணங்கி, மகிழ்வோடு அங்குவசித்திருந்தனர். அங்ஙனம் வசிக்கும் நாட்களில் அத்திருப்பதியிலே ஓர் மார்கழிமாதத்து மூலநக்ஷத்திரத்திலே அத்தேசிகசுவாமிகள் சிவபரிபூரணமுற்றனர்.

பின்பு ஓர் சுபதினத்தில் ஞானதேசிகர், திருமழபாடியிலே ஆளுடையபண்டாரம் என்பவருக்கு இரண்டாவது புத்திரராக அவதரித்து இளமைப்பருவத்தே தம்மைவந்தடைந்து அருளுபதேசம்பெற்று அடியவர் பல்லோருள்ளும் சிறந்து விளங்கும் இராமலிங்கதம்பிரானுக்கு, ஆசாரியபிடேகஞ்செய்துவைத்தனர்.

பின்பு ஞானதேசிகர், சிவஸ்தலயாத்திரைசெய்யவும் சீடர்களுக்குத் தீக்கைபாதிகள் செய்யவுந் திருவுளங்கொண்டு, அங்கு நின்றும் அரிதினீங்கி, சோழநாட்டின்கண்ணும்பாண்டியநாட்டின்கண்ணும் பற்பல ஸ்தலங்களைத் தரிசித்துச் சீடர்களுக்குத் தீக்கைபாதிகளும், சித்தாந்தசாத்திரோபதேசமுஞ்செய்துகொண்டு சேரநாட்டையடைந்து, அங்கு சில திவ்விய ஸ்தலங்களைத் தரிசித்துக்கொண்டு, சுசீந்திரத்தைச் சேர்ந்து, சிலநாள் அங்குவீற்றிருந்து, தமக்குப் பிற்றோன்றலாகிய இராமலிங்கதேசிகசுவாமிகளை அவ்விடத்து சீடர்களுக்குத் தீக்கையாதிகள் செய்துகொண்டுவசிக்குமாறு பணித்து, தாம் அங்குநின்றும் புறப்பட்டு வழியிடையே சிலதிவ்வியஸ்தலங்களைத் தரிசித்துக்கொண்டு திருநெல்வேலியையடைதலும், அங்கு மயிலேறும்பெருமாள்பிள்ளை முதலிய அன்பர்களும், ஏனையோரும் வணங்கி எதிர்கொண்டு அழைத்துவரத், தாம் திருக்கோயிலிற்சென்று சிவபெருமானைத் தரிசித்து தமது ஈசானமடாலயத்தை யடைந்து அங்கு யாவருக்கும் திருவருட் பிரசாதம் நல்கி எழுந்தருளியிருந்தனர்.

அங்ஙனம் ஞானதேசிகர் அங்கெழுந்தருளியிருக்கும் நாட்களில், மயிலேறும்பெருமாள்பிள்ளை முன் தம்மிடத்தே தமிழ் இலக்கணமுதலிய கருவிநூல்களனைத்துங் கசடறக் கற்றுவந்தவராகிய சுவாமிநாததம்பிரான்சுவாமிகள் ஞானதேசிகர்பால் சித்தாந்த ஞானநூல்களனைத்துமோதி முற்றத்தெளிந்த முனிவராய் அமர்ந்திருப்பதைத்தேர்ந்து பெரிதும் மகிழ்வுற்று, ஞானதேசிகரிடத்துத்தாம் அச்சுவாமிகளைக் குறித்துப் பலவாறு விதந்துகொண்டு, இந்தமகாத்துமாவை ஞானசிரியமூர்த்தியாய் எழுந்தருளியிருக்கக்கண்டு தரிசிக்கவேண்டுமென்று மிகுந்த காதலோடு விண்ணப்பஞ்செய்தனர்.

பின்பு ஞானதேசிகர், மயிலேறும்பெருமாள்பிள்ளை விண்ணப்பஞ் செய்துகொண்டபடியே சுவாமிநாததம்பிரான் சுவாமிகளுக்கு ஆசாரியாபிடேகஞ் செய்யத் திருவுளத்திற்கொண்டும், சின்னப்பட்டத்திற்கு ஆசாரியாபிடேகம்பெற்ற பண்டாரச்சன்னிதியிருந்தமையால், அச்சுவாமிகளுக்குச்சங்காபிடேகஞ்செய்து

ஈசானதேசிகர் என்று அபிடேகச் சிறப்புப்பெயருங் கட்டளையிட்டு, அத்திருப்பதியிலே சீடர்களுக்குத்தீக்கையாதிகள்செய்து கருவிநூல்களும், வீட்டுநெறி நூல்களும் கற்பித்து வசித்திருக்குமாறுசெய்து,தாம்அங்குநின்றும்புறப்பட்டுப்போந்து, வழியிடைப்பட்ட பற்பல திருத்தளியின்கண்ணும் சிவபிரானை வழிபட்டுக்கொண்டு திருவாவடுதுறையைச்சேர்ந்தருளினர். அங்கு ஞானதேசிகர் நாடோறும் கோமுத்தீசுரரையும், சிவப்பிரகாசவிநாயகரையுந், திருமாளிகைத்தேவரையும் மெய்யன்பினுல் வழிபட்டு சிவபூசை, குருபூசை, மாகேசுரபூசையுஞ் சிறப்புறச்செய்துகொண்டும், சீடர்களுக்குத் தீக்கையாதிகள் செய்து சித்தாந்தசாத்திரோபதேசஞ் செய்துகொண்டும் வருவாராயினர். இதுநிற்க.

திருநெல்வேலியில் ஈசானமடாலயத்தில் எழுந்தருளியிருக்கும் ஈசானதேசிகர் என்று சிறப்புத் திருநாமம்பெற்ற சுவாமிநாதேசிகர், பெருமையிற் சிறந்த மயிலேறும்பெருமாள்பிள்ளை முதலானேர்க்கு மனத்துவகை பெறுகுமாறும், மன்பதையுய்யுமாறும், தீக்கையாதிகள் சிறப்புறச்செய்து சங்கரநமச்சிவாயர் முதலான நன்மாணுக்கர் பலர்க்கு இயற்றமிழ்நூல்களும், வீட்டுநெறிநூல்களும் கசடறக்கற்பித்து வருவாராயினர். அன்றியும் திருச்செந்திற்கலம்பகம் முதலிய பிரபந்தங்களியற்றியருளினர்.

பின்பு ஈசானதேசிகர், சிலகாலஞ்சென்று ஞானதேசிகரைத் தரிசிக்க வேணவாவுற்று அங்குநின்றும் புறப்பட்டு வழியிடையில் பற்பலஸ்தலங்களைத் தரிசித்துத் திருவாவடுதுறையை யடைந்து திருக்கோயிலிற்சென்று சிவபிரானைத் தரிசித்து, அதன் தென்பாங்கர் விளங்குஞ் சித்தர் திருமடம் என்று பெயர் வழங்குந் தமது திருமடத்திற்குவந்து அம்மடத்தின் வடக்குவாசலின் மேல்பாற் கோயில்கொண்டெழுந்தருளியிருக்குஞ் சிவப்பிரகாசவிநாயகரைத் தரிசித்து, உள்ளேசென்று திருமாளிகைத்தேவரையும், *ஞானநடராஜப்பெருமானையும், ஞானமூர்த்தியாகிய நமச்சிவாயதேசிகோத்தமரையுந்தரிசித்து ஒடுக்கத்திற்சென்று ஞான

*ஞானநடராசப்பெருமான் என்பது திருமாளிகைத்தேவர் திருக்கோயிலுக்கு ஈசானதிசையின்கண்ணுள்ள பூஜாமண்டபத்தில் ஞானதேசிகர் பூஜிக்கும் ஞானநடராஜப்பெருமானை என அறிக.

தேசிகரைத் தரிசித்து அங்குச் சிலகாலம் வசித்திருந்து, பின் சிதம்பரமுதலாகிய ஸ்தலங்களைத் தரிசிக்க அவாவுற்று, ஞான தேசிகரிடத்து தெரிவித்துவிடைபெற்றுத், திருவாவடுதுறையினின்றும் அரிதினீங்கி வழியிடையிற் பலஸ்தலங்களைத்தரிசித்து, சிதம்பரஞ்சென்று ஞானநடராஜப்பெருமானைத் தரிசித்து அங்கு சிலநாள் வசித்திருந்து, பின் திருக்களாஞ்சேரியிலும் கொற்றவன்குடியிலுஞ்சென்று மறைஞானசம்பந்தசிவாசாரியசுவாமிகள் உமாபதிசிவாசாரியசுவாமிகள் அருணமச்சிவாயதேசிகசுவாமிகள் குருமூர்த்தங்கள் தரிசித்து, அரிதினீங்கி வழியிடையிற் பலஸ்தலங்களைத் தரிசித்து திருத்துறையூரையடைந்து திருக்கோயிலிற் சென்று சிவபிரானைத்தரிசித்து, அருணந்திசிவாசாரியசுவாமிகள் குருமூர்த்தந் தரிசித்து அங்குச்சிலநாள் வசித்திருந்து, பின் அத்தலத்தினின்றும் அரிதினீங்கி திருவதிகைமுதலிய ஸ்தலங்களைத் தரிசித்துத் திருவெண்ணெய்நல்லூரையடைந்து, திருக்கோயிலிற் சென்று சுவாமிதரிசனஞ்செய்து, திருநந்திதேவர்க்கு ஐந்தாவது பிற்றோன்றலாகியும் தமது ஞானதேசிகர்க்குப் பதினொன்காவது முற்றோன்றலாயுமுள்ள மெய்கண்டசிவாசாரியசுவாமிகள் திருக்கோயில்கொண்டெழுந்தருளியிருக்குந் தமது திருபடத்திற்கெழுந்தருளி, மெய்கண்டசிவாசாரியசுவாமிகள் குருமூர்த்தந்தரிசித்து வழிபாடியற்றி அங்குச் சிலகாலம் வசித்திருந்து அரிதினீங்கி, பின் திருக்கோவலூர் முதலியஸ்தலங்களைத் தரிசித்து, திருவண்ணாமலையையடைந்து திருக்கோயிலிற்சென்று, அருணாசலேச்சுரரையும் உண்ணாமுலையம்மையையுந் தரிசனஞ்செய்து; அத்தலத்து அன்பர்கள் விரும்பியவாறு அவர்களால் அமைக்கப்பட்ட திருமடத்திற்கெழுந்தருளி அங்கமர்ந்து தினந்தோறுந் திருக்கோயிலுக்குச் சென்று சுவாமிதெரிசனஞ் செய்துகொண்டும், சீடர்களுக்கு தீக்கையாதிகள்செய்துகொண்டும் அங்கமர்வாராயினர். அங்ஙனம் எழுந்தருளியிருக்கும் தேசிகசுவாமிகள், தசகாரியம் எனப் பெயர்தந்து ஞானநூலொன்றியற்றியருளினர். பின்னர் சிலகாலஞ்சென்று அத்திருப்பதியிலே ஓர்கார்த்திகை மாதத்து உத்தரநக்ஷத்திரத்திலே அண்ணாமலையாரடியிணைமலர் அடைந்தனர்.

பின்பு அடியவர்கள் அத்திவ்விய ஸ்தலத்திலே அத்தேசிக சுவாமிகளுக்கு சமாதிக்கிரியைதசதினத்திலுஞ் சிறப்புறச்செய்து முற்றியபின் அவ்வடியவர்களிலொருவர் அத்தேசிகசுவாமிகள் குருமூர்த்தத்தின் பூசையின்பொருட்டு அங்கமர்ந்திருப்ப ஏனைய அடியவர்கள் அத்தேசிகசுவாமிகளது ஆன்மார்த்த பூசையையெழுந்தருளப்பண்ணி திருவாவடுதுறைக்கு வந்து ஞானாசிரியராகிய மாசிலாமணிதேசிகரைத் தரிசித்து; ஈசானதேசிகசுவாமிகள் பரிபூரணமுற்றமையை விண்ணப்பித்தனர். பின்பு ஞானதேசிகர் அத்தேசிகசுவாமிகளது ஆன்மார்த்தபூசையை * திருநெல்வேலியில் ஈசானமடத்திலே எழுந்தருளப்பண்ணி மூவகைத்தீக்கையும் முறையாகப்பெற்ற முனிவர் சிரேஷ்டராய் விளங்கும் தம்பிரான்சுவாமிகளாகிய முதியோரொருவரை பூசைசெய்துவருமாறு கட்டளையிட்டருளினர். இது நிற்க.

பின்பு ஞானதேசிகர், முன்போலச் சீடர்களுக்குச் சித்தாந்தோபதேசஞ்செய்து வருநாட்களில், ஓர்நாள் இரவிலே பேயுமுறங்கும் அத்தயாமத்திலே தஞ்சை நகரத்து மன்னவர் பஞ்சமவேடம்பூண்டு திருவாவடுதுறைக்குச் சென்று ஞானதேசிகர் மடாலயத்தின் புறத்தேநின்று, ஓ சுவாமி! அடியேனைப் பசிவருத்துகின்றதேயென்று பேரொலியிட்டழைத்தனர். அப்பொழுது ஒடுக்கத்திலே சிவத்தியானத்தோடு அறிதுயிலமர்ந்த ஞானதேசிகர், இலமிட்டழைப்பவன் நீசன்என்றும், பசியினால் வருந்தியழைக்கின்றான் என்றும் உணர்ந்து, தாமே மடைப்பள்ளியிற் புகுந்து ஒருபாத்திரத்தில் அன்னமுங் கறிமுதலியவுமெடுத்து வைத்துத் தலைவாயிற் கதவைத்திறந்து புறத்தே வந்து தூரத்தே அப்பாத்

---

*ஞானதேசிகர் கட்டளையிட்டருளியபடியே, அன்றுதொடங்கி, இன்றுகாறும் திரிதிய ஆசிரியராகிய சுவாமிநாததேசிகர் எனப்பெயர் வழங்கும் ஈசானதேசிகசுவாமிகளது ஆன்மார்த்த சிவலிங்கப்பெருமான் முதலிய சிவமூர்த்தங்களை திருநெல்வேலி ஈசானமடாலயத்தில் நிருவாணதீக்ஷைபெற்ற தம்பிரான்சுவாமிகளில் ஒருவர் நித்திய நைமித்திக பூசைகள் மிகவிபவமாக செய்துவரும்பான்மை யாவருக்குந் தெரிந்த தொன்றாகும்.

திரத்தைவைத்துப் பசிநீங்கப் புசிக்கும்படியருமையாகச்சொல்லி விட்டுத் தாம் மடாலயத்தில் எழுந்தருளினர். பின்பு காலையில் ஞானதேசிகர் தமது திருவனுக்கத்தொண்டர்களில் ஒருவரை அழைத்து இரவு பஞ்சமனுக்கன்னமிட்டெஞ்சிய பதார்த்தங்கள் யாவையும் அப்புறப்படுத்தி, புண்ணியாகவாசனஞ் செய்து பாகஞ்செய்கவென ஆஞ்ஞாபித்தனர். இஃதிவ்வாறாக.

அரசர் அப்பாத்திரத்தைச் சேமித்துவைத்து, தருமபுரஞ் சேர்ந்து பேரொலியிட்டுபிக்ஷைகேட்டனர். அப்பொழுது பண்டாரக்கட்டிலே திருவடிச்சிந்தனையோடு சயனித்திருந்த பண்டாரச்சன்னிதிகள், பிக்ஷைகேட்பவன் பஞ்சமன்போலும் என்று திருவுளங்கொண்டு, மடாலயத்திலே நீசனுக்குப் பிக்ஷையிட மாட்டார்களென்றுசொல்லிப் போக்கிவிட்டார்கள். இங்ஙனம் இரவில் நிகழ்ந்த செய்திகளை அரசர், தஞ்சைநகரம் சேர்ந்து *அத்தாணிமண்டபத்தில் வீற்றிருந்து சமஸ்தரும் அறியச்செய்தனர். இஃதிவ்வாறாக.

சுசீந்திரத்தின்கண் சின்னப்பட்டத்தில் எழுந்தருளியிருக்கும் துவிதீயஆசிரியராகிய இராமலிங்கதேசிகர் சிலகாலஞ்சென்று தமது ஞானதேசிகரைத் தரிசிக்கப்போவாவுற்று அங்குநின்றும் புறப்பட்டு வழியிடையிற் பலஸ்தலங்களைத் தரிசித்துத் திருவாவடுதுறையை யடைந்து, திருக்கோயிலிற்சென்று சுவாமிதரிசனஞ்செய்து தமது திருமடத்திற்குவந்து, சிவப்பிரகாசவிநாயகரையுந் திருமாளிகைத்தேவரையுந் ஞானநடராஜப்பெருமானையும் ஞானமூர்த்தியாகிய நமசிவாயதேசிகோத்தமரையுந் தரிசித்து, ஒடுக்கத்திற்சென்று தமது ஞானாசிரியசுவாமிகளைக்கண்டு வணங்கி வழிபட்டு அங்கு வசித்திருந்தனர்.

பின்பு சிலகாலஞ்சென்று ஞானதேசிகர், சந்தானமுதற்குரவராகிய திருநந்திதேவர்க்கு ஐந்தாவது பிற்றோன்றலாகிய மெய்கண்டசிவாசாரியசுவாமிகள் குருமூர்த்தஞ் தரிசனஞ் செய்யத் திருவுளங்கொண்டு, ஆதீனமுதற்குரவராகிய நமச்சிவாயதேசிகோத்தமரை வணங்கி விடைபெற்று, துவிதிய ஆசிரியராகிய

* அத்தாணிமண்டபம், அரசிருக்கைமண்டபம்.

இராமலிங்கதேசிகரும், தம்பிரான்சுவாமிகளும், ஏனைய அடியவர்களும், உடன்வரத் திருத்துருத்தி முதலிய ஸ்தலங்களைத் தரித்துத் திருமுவலூரையடைந்து, திருக்கோயிலிற்சென்று சிவபிரானையும், உமாதேவியாரையுந் தரிசனஞ்செய்து நமச்சிவாய சற்குரவர் திருவவதாரஞ் செய்தருளிய கிருகமாகிய தமது திருமடத்தின்பாங்கரணைந்து, மடத்தின் திருவாயிலிற் பணிந்துபரவி உள்ளேசென்று, அங்கு அன்பர்கள்போற்ற சிலநாள் வசித்திருந்து அரிதினீங்கி வழியிடையிற்பலதலங்களையும் பணிந்துபரவிச் சிதம்பரஞ்சென்று, சிற்சபேசனைத் தரிசனஞ்செய்து சந்தானகுரவரெண்மருளொருவராகிய உமாபதிசிவாசாரியசுவாமிகள் திருவவதாரஞ்செய்தருளிய கிருகமாகிய தமது திருமடத்தின் பாங்கரணைந்து திருவாயிலிற் பணிந்துபரவி உள்ளேசென்று, †மெய்கண்டசிவாசாரியசுவாமிகள் பிரதிட்டாலயத்தைச் சார்ந்து, வணங்கி வழிபாடியற்றி அங்குச்சிலநாள் வசித்திருந்து, அங்குநின்றும் அரிதினீங்கித் திருக்களாஞ்சேரியினும் கொற்றவன்குடியினும் நிஷ்டையில் வீற்றிருந்தருளும் மறைஞானசம்பந்தசிவாசாரியசுவாமிகள், உமாபதிசிவாசாரியசுவாமிகள், அருணமச்சிவாயதேசிகசுவாமிகள் குருமூர்த்தந் தரிசித்து, திருமுனைப்பாடிநாட்டையடைந்து, திருப்பெண்ணாடகம் முதலிய ஸ்தலங்களைத் தரிசித்துத் திருவண்ணாமலையை யடைந்து, வலம்வந்து திருக்கோயிலிற்சென்று அருணாசலேஸ்வரரையும், உண்ணாமுலையம்மையையுந் தரிசித்துக்கொண்டு தமதுஈசானமடத்தையடைந்து, திரிதீய ஆசிரியராகிய சுவாமிநாததேசிகசுவாமிகள் குருமூர்த்தந் தரிசித்து அங்குச் சிலநாள் வசித்திருந்து, திருக்கோவலூர் முதலிய ஸ்தலங்களைத் தரிசித்து, திருவெண்ணெய்நல்லூரைச் சார்ந்து திருக்கோயிலிற் சென்று, சிவபிரானையும், உமாதேவியாரையும், பொல்லாவிநாயகரையும் *புரிவுடன் வணங்கித்தமது திருமடத்திற்குச் சென்று மெய்கண்டசிவாசாரியசுவாமிகள் குருமூர்த்தம் வணங்கிவழிபாடியற்றிஅங்குசிலகாலம்சீடர்களுக்குத் தீக்கையாதிகளும்சித்தாந்தசாத்திரோபதேசஞ்செய்துவீற்றிருந்தருளினர்.

---

†மெய்கண்ட சிவாசாரியர் பிரதிட்டாலயஞ் செய்தோர் சரிதம் புலப்படவில்லை. * புரிவு—விருப்பம்.

பின்னர் ஞானதேசிகர், அங்குநின்றும் அரிதினீங்கி வழியிடையிற் பலஸ்தலங்களைத்தரிசித்துத் திருத்துறையூரையடைந்து திருக்கோயிலிற் சென்று சிவபெருமானையும், உமாதேவியாரையும் பணிந்துபரவி, சந்தானகுரவரெண்மரிலொருவராகிய அருணந்திசிவாசாரியசுவாமிகள் குருமூர்த்தந் தரிசித்துத் தமது திருமடத்திற்கெழுந்தருளி, அங்குச் சீடர்களுக்குத் தீக்கையாதிகளும் சித்தாந்தசாத்திரோபதேசமுஞ் செய்துகொண்டு சிலநாள் வசித்திருந்து, அங்குநின்றும் அரிதினீங்கி, வழியிடையிற் பலதலங்களைத் தரிசித்து சிதம்பரத்தையடைந்து, சிற்சபேசனைத் தரிசனஞ்செய்து சிலநாள் அங்குவசித்திருந்து, அங்குநின்றும் புறப்பட்டு சீகாழி முதலிய பலதலங்களையுந் தரிசித்து, திருவெண்காடு என்னும் திவ்விய ஸ்தலத்தையடைந்து, திருக்கோயிலிற்சென்று சிவபிரானையும் உமாதேவியாரையும் பணிந்துபரவிச் சந்தான குரவரெண்மரி லொருவராகிய மெய்கண்டசிவாசாரிய சுவாமிகள் திருவவதாரஞ் செய்தருளிய திருநகராகிய தமது *திருமடத்தின் பாங்கரணைந்து, திருவாயிலைப் பணிந்துபரவி, உள்ளேசென்று, தமக்குரிய நித்தியபூசை முதலியவை செய்துகொண்டு அங்கு சிலகாலம் வசித்திருந்தனர்.

அப்பொழுது தஞ்சைநகர்வேந்தர், ஒருபுண்ணியகாலத்தை முன்னிட்டு, காவேரிசங்கம ஸ்நானஞ்செய்தற்கு அங்குவந்தனர். ஞானதேசிகர் திருவருட்செயலினை முன்னரேயுணர்ந்த அவ்வரசர்அவ்வாசிரியசுவாமிகள் அங்குஎழுந்தருளியிருத்தலைக்கேள்வியுற்று, அத்திருமடத்திற்குச்சென்று ஞானதேசிகரைக் கண்டு அளவளாவிக்கொண்டு, பின்சகலவிருதுவாத்தியங்களுடன்ஞானதேசிகரையும், துவிதீய ஆசிரியராகிய இராமலிங்கதேசிகசுவாமிகளையும் தனித்தனிச்சிவிகையில் ஆரோகணித்துவரச்செய்வித்துத் தாம் ரதகஜதுரகபதாதிகளுடன் இரதமூர்ந்து காவிரிப்பூம்பட்டினஞ்சென்று, ஞானதேசிகருடன் தீர்த்தமாடி, திருக்கோயிலிற்சென்று சிவபெருமானையும் உமாதேவியாரையுந் தரிசித்துத் திருவெண்காடுசேர்ந்தனர்.

---

*இத்திருமடம், திருவெண்காடு என்னுந் திருநகரின் மேலரத வீதியில் வாயுதிசையின்கண் ணுள்ளது.

பின்னர்ஞானதேசிகரும், அரசரும்தினந்தோறும்சோமசூரியாக்கினியென்னும் முக்குளதீர்த்தமாடி, திருக்கோயிலிற்சிவபிரானையும் உமாதேவியாரையும்தெரிசனஞ் செய்துகொண்டும், ஞானசாஸ்திரஆராய்ச்சிசெய்துகொண்டும் அங்குவசித்திருந்தனர். அக்காலத்தில், ஓர்நாள்அரசர் ஞானதேசிகரைநோக்கி, உலகில்மிகுதியாக பிராமணசமாராதனையாகிய தர்மமேநிலவுகின்றது. மாகேசுரர்பூசை என்னுஞ் சிவனடியார் சமாராதனை அங்ஙனமின்றி உபாயமாகநிலவுகின்றது. இவற்றின்மகிமைகளை எவ்வாறுணரலாமென்று விண்ணப்பஞ்செய்ய, ஞானதேசிகர் புன்முறுவல்கொண்டு அரசரைநோக்கி அவற்றின் மகிமைகளை முதலில் காட்சிப்பிரமாணம் ஒன்றினின்வைத்து நமது மனங்கொள்ளத் தெருட்டுவோம். அரசரே! ஒரு மண்டலங்காறும் பிராமணர்க்கும், மாகேசுரர் எனப்படும் சிவனடியார்க்கும், அன்னமிடுதலாகிய சமாராதனையைச் செய்வித்து, அவ்விருவகையோரும் உண்ட உச்சிட்ட இலைகளை உவர்க்கூபம் இரண்டினிற்றனித்தனிபோடச் செய்து, உவர்நீங்கி நறுநீர் சுரந்திருப்பதைத் தேர்ந்து அவற்றின்விசிட்டத்தினை அறிந்துகொள்வீராகவெனத் திருவாய்மலர்ந்தருளினர். அரசர் அவ்வாறு செய்து, இறுதியிலே அவ்விரண்டு கூபங்களையும் தூர்வையெடுத்து ஆராய்ந்தனர். அப்போது பிராமணர்கள் போஜனஞ் செய்த பரிகலமாகிய உச்சிட்ட இலைபோட்ட அக்கிணறு புழுக்கள் மலிந்து உவர்நீராகவே இருந்தது; மாகேசுரர் எனப்படுஞ் சிவனடியார்கள் போஜனஞ் செய்த பரிகலமாகிய உச்சிட்ட இலைபோட்ட அக்கிணறு உவர்நீங்கிக் கங்காஜலம்போல நறுநீர் சுரந்துபெருகியது. அரசர் வியப்புற்று, அக்கிணற்றுக்குப் பரிகலக்கிணறு என்று நாமமிட்டு மகிழ்வு கூர்ந்தனர்.

பின்பு, அவ்வரசர் ஞானதேசிகர்பாற்சென்று தரிசித்து, அன்புகூர்ந்து மாகேசுரர்பூசை விதியினையும் அதன்மகிமையையும் விதந்து விளம்பியருளவேண்டுமெனப் பிரார்த்தித்து விண்ணப்பஞ்செய்தனர். ஞானதேசிகர் திருவருள்கூர்ந்து அதன்விதியினையும், அதன்மகிமையையும் திருவாய்மலர்ந்தருள்வாராயினர்.

மாகேசுரபூசை.

புண்ணியங்களுள்ளே சிவபுண்ணியஞ் சிறந்தது. சிவபுண்ணியங்களுள்ளே சிவபூசை சிறந்தது. சிவபூசையினுஞ்சிறந்தது மாகேசுரபூசை. மாகேசுரராகிய சிவனை வழிபடும் அடியார் மாகேசுரர் எனப்படுவார்கள். மாகேசுரபூசையாவது, மாகேசுரர்களை விதிப்படிபூசித்து அவர்களுக்கு அன்னம் ஊட்டுதலாம். மாகேசுரபூசைசெய்யும் முறைமை கூறுதும். அரசனே! கேட்பாயாக. சிவனடியார்களைத் தூரத்தே கண்டவுடனே அவர்களுடைய சாதியையும் குணத்தையும் ஆராயாமல் விபூதி ருத்திராக்ஷ முதலிய சிவவேடமே பொருளெனக்கொண்டு, அவர்களை மனிதர் எனக்கருதாது சிவன் எனவே புத்திபண்ணி, இருக்கைவிட்டு எழுந்து, அகமகிழ்ச்சியோடும், முகமலர்ச்சியோடும் குவித்த கைகளையுடையவராய் விரைந்து எதிர்கொண்டு, அவர்களுடைய திருவடிகளிலே விழுந்து நமஸ்கரித்து இன்சொற்களைச்சொல்லி வீட்டுக்கு அழைத்துக்கொண்டுவந்து கரகநீர்கொண்டு அவர்களது திருவடிகளை விளக்கி அத்தீர்த்தத்தைச் சிரமேற்றெளித்து உள்ளும்பருகி, அத்திருவடிகளை மெல்லிய வஸ்திரத்தினாலொற்றி, அவர்களை ஆசனத்திலே இருத்தி, பத்திரபுஷ்பங்களாலே பூசித்து, தூபதீபங்காட்டி, பூமியில் விழுந்து நமஸ்கரித்து கைப்பு, புளிப்பு, தித்திப்பு, துவர்ப்பு, கார்ப்பு, உவர்ப்பு என அறுவகைச் சுவையுடையனவாய் உண்ணப்படுவது தின்னப்படுவது நக்கப்படுவது பருகப்படுவது எனநால்வகைப்படும் உணவுகளை, அவரவர் பிரீதிப்படி அமுதுசெய்வித்து, சரீரம் எடுத்ததினாலே பெறும்பயனை இன்றன்றோ பெற்றேனென்று சற்கார வசனஞ் சொல்லி, அவர்கள் போம்பொழுது அவர்களுக்குப்பின் பதினன்கு அடிபோய் வழிவிடுக. சிவனடியார்களைச் சாதிகுணம் குறியாது சிவனெனவே புத்திபண்ணல்வேண்டும் என்பதற்குப் பிரமாணம் சிவதருமோத்தரம்: "புலையரேயெனினுமீசன்பொலன்கழலடியிற்புந்தி, நிலையரேலவர்க்குப்பூசைநிகழ்த்துதல்நெறியேயென்றும், தலையரேயெனினுமீசன்றாமரைத்தாளினேசு, மிலரெனினியற்றுமப்பூசைப்பலந்தருவாரேயாரே" எனவும், பிரமோத்தரகாண்டம்: "எள்ளற்படுகீழ்மக்களெனுமிழிந்தகுலத்

தோரானும், வள்ளற்பாமன்றிருநீறுமணியுமணிந்தமாண்பினை
யை, யுள்ளத்துள்ளே யிருபோது முணர்ந்தெருண்டு சிவனென
வே, கொள்ளத்தகையவுமிலையேபிறவிக்கடலிற்குளியாதார் ''
எனவும், சைவசமயநெறி: "தேசிகர்தம்மைச்சிவனேசார்தம்
மையு, மீசனெனவேயுள்ளத்திலென்'' எனவும் வரும்.

இம்மாகேசுரபூசையிற் சிறந்த புண்ணியம் பிறிதொன்று
மில்லை. அது "அதிகநல்லறநிற்பதென்றறந்தனைபறுத்து, ளதிக
மாஞ்சிவபுண்ணியஞ்சிவார்ச்சனையவற்று, ளதிகமாஞ்சிவபூசையு
ளடியவர்பூசை, யதிகமென்றறிந்தன்பரையருச்சனைசெய்வாய் ''
என்னுந் திருவிளையாடற் புராணத்தினானும், 'படமாடக்கோயிற்
பகவற்கொன்றீயின், நடமாடக்கோயினம்பர்க்கங்காகா, நடமாட
க்கோயினம்பர்க்கொன்றீயின், படமாடக்கோயிற்பகவற்கதாமே'
எனவும், "தண்டறுசிந்தைத்தபோதனர்தாமகிழ்ந், துண்டது
மூன்றுபுவனமுமுண்டது, கொண்டதுமூன்றுபுவனமுங்கொண்ட
தென், றெண்டிசைநந்திபெடுத்திசைத்தானே'' எனவும், "அக
ரமாயிரமந்தணர்க்கியிலென், சிகரமாயிரஞ் செய்துமுடிக்கிலென்,
பகருஞானி பகலூண்பலத்துக்கு, நிகரில்லையென்பது நிச்சயந்
தானே'' எனவும், "ஆறிடுவேள்வியருமறைநூலவர், கூறிடுமந்த
ணர்கோடிபேருண்பதின், நீறிடுந்தொண்டர்நினைவின்பயனிலே,
பேறெனிலோர்பிடிபேறதுவாகுமே''எனவும், "மாத்திரையொன்
றினின்மன்னியமர்ந்துறை, யாத்தனுக்கீந்தவரும்பொருளானவை
மூர்த்திகள்மூவர்க்குமூவேழ்குரவர்க்கும், தீர்த்தமதாமதுதேர்
ந்துகொள்ளீரே'' எனவும், "சித்தகமாகியவேடத்தருண்டவூண்,
அத்தனயன்மாலருந்தியவண்ணமாஞ், சித்தந்தெளிந்தவர்சேடம்
பருகிடின், முத்தியாமென்றுநம்மூலன்மொழிந்ததே'' எனவும்
கூறுந் திருமந்திரத்தினாலும், "மட்டிட்டபுன்னையங்கானன்மடம
யிலைக், கட்டிட்டங்கொண்டான்கபாலீச்சரமமர்ந்தா, னொட்டி
ட்டபண்பினுருத்திரபல்கணத்தார்க், கட்டிடல்காணாதேபோதி
யோ பூம்பாவாய் '' என்னும் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்
தேவாரத்தாலும், சோணாசலத்தில் உயர்ந்தக்ஷேத்திரம் இல்லை.
பஞ்சாக்ஷரத்தில் உயர்ந்த மந்திரமில்லை. மாகேசுரதருமத்தில்

உயர்ந்த தருமம்இல்லை. சிவாகமத்தில் உயர்ந்த சாஸ்திரம்இல்லை என்னும் அருணாசலமான்மியத்தினாலும் அறிக. இல்வாழ்க்கையின் பயன் இம்மாகேசுரபூசையேயாம். அது "மறமலியுலக வாழ்க்கையேவேண்டும்வந்துநின்னன்பர்தம்பணியா, மறமதுகிடைக்கின்" என்னும் தாயுமானசுவாமி திருவாக்கால் அறிக. அரசனே! இம்மாகேசுரபூசையின் மகிமை முற்றும் விதந்தோதின் மிகவும் விரியும். ஆகலின் விரிவஞ்சி ஒருசிறிது சுருக்கிக் கூறினும் எனத்திருவாய்மலர்ந்தருள, அரசன்கேட்டு மிகமகிழ்ந்து மாகேசுரபூசையின்பொருட்டு அம்மடாலயத்திற்கு சர்வமானியநிலமும் சாசனஞ்செய்துகொடுத்தனர். பின்பு அவ்வரசர், ஞானதேசிகருடன் அளவளாவி சிலகாலஞ் சித்தாந்தசாஸ்திர விசாரணைசெய்துகொண்டிருந்து விடைபெற்றுத் தமது நகரஞ் சென்று வாழ்ந்திருந்தனர்.

பின்பு ஞானதேசிகர், தமிழுலகின்கண் சன்மார்க்கவொழுக்கந் தலையெடுத்தோங்கும்வண்ணம் தவமுதல்வராகிய மெய்கண்டாரைத் தந்தருளிய கருணாநிதியாகிய சுவேதவனப்பெருமானையும் பிரமவித்தியா நாயகியையும் பிரிந்து செல்லுதற்குச் சிறிதுந் திருவுளமிசையாமையின்; அத்தலத்திலே எழுந்தருளியிருந்துகொண்டு காலந்தோறுந் துவிதீய ஆசிரியராகிய இராமலிங்க தேசிகசுவாமிகளும், தம்பிரான் சுவாமிகளும் ஏனைய அடியார்களும் உடன்வரத்திருக்கோயிலிற்சென்று சுவாமிதரிசனஞ் செய்துகொண்டும், தம்பால்வரும் பரிபாகசீலர்களுக்கு ஞானோபதேசஞ்செய்துகொண்டும் வருவாராயினர். இவ்வாறு ஞானதேசிகர் திருவெண்காடு எனப்படுந் திவ்விய தலத்திலே எழுந்தருளியிருக்கு நாட்களில்; ஓர்சித்திரைமாதத்து உரோகணி நக்ஷத்திரத்திலே தில்லைமன்றுளார் திருவடிநீழலெய்தினர்.

இந்த ஞானதேசிகர்க்கு துவிதீய ஆசிரியராகியிருந்தவர் சிவக்கொழுந்துதேசிகர் என்பதூஉம், இந்த ஞானாதீனத்திற் பிரதமாசாரியராய் வரும் ஞானதேசிகர் ஆதீன பரம்முதற்குரவராகிய நமசிவாயமூர்த்தியாகப் போற்றப்படுவார் என்பதூஉம், இவ்வாசிரியசுவாமிகள்பால் சங்காபிடேகமும், ஈசானதேசிகர்

என்னுஞ் சிறப்புத் திருநாமமும் பெற்றுத் திரிதீய ஆசிரியராக வீற்றிருந்தவர் இலக்கணக்கொத்து முதலிய நூல்களியற்றிய சுவாமிநாததேசிகர் என்பதூஉம், இலக்கணக்கொத்து நூலாசிரியர் அந்நூலியற்றிய காலம் இந்தஞானதேசிகர் துவிதீய ஆசிரியராக இருந்தகாலமென்பதூஉம், இவ்வாதீனத்திற்றுவிதீயஆசிரியராகவரும் தேசிகசுவாமிகள் ஆதீனம் அங்குரித்தற்கு அருகாய் நமசிவாய சற்குருமூர்த்தியின் காலத்தில் அமர்ந்தருளிய அம்பலவாண தேசிகராகப் போற்றப்படுவர் என்பதூஉம், இச்சுவாமிநாத தேசிகசுவாமிகள்பால் கல்விபயின்ற மாணவர்களிலொருவர் நன்னூல்விருத்தியுரைசெய்த சங்கரநமச்சிவாயப் புலவர் என்பதூஉம் பின்வரும் செய்யுட்களால் இனிது புலப்படும்.

அவைவருமாறு:—

வேதாந்தசூளாமணி உரைச்சிறப்புப்பாயிரம்.

"உரைதருவே தாந்தசூ ளாமணியுட் பொருளை யுலகிலுள்ளோ
ருணரவுரை செய்கவெனக் கடல்சூழ்
தரையரசன் சேதுபதி யமாத்தியனூர் தாமோதரன் கங்கா குல
திலகன் றகுதிபெறச் சாற்ற
வரையறுத்துச் சித்தாந்தப் பொருட்டிறனுந் தோன்ற வகுத்
தனனற் றுறைசைநமச் சிவாயதேசிகன்றாள்
பாவு*சிவக் கொழுந்துநிதி யருள்கல்விக் கடலைப் பருகுமு
கில் †சர்க்கரைநற் பாவலவர் கோனே."

---

*இச்சிவக்கொழுந்துதேசிகர்க்கு ஞானாசிரியர் மாசிலாமணிதேசிகராக இருக்கவும், ஈண்டு நமச்சிவாயதேசிகர்தாள் பாவும் எனக்கூறியது மாறுகோளாம். பிறவெனின், அற்றன்று; ஆதீனபரம முதற்குரவராகிய நமச்சிவாயமூர்த்தியாக அவ்வாதீன பிரதமாசிரியாக வருங் குரவர்களைப் பாவித்துப்பரவுதல் மரபாகலின் அங்ஙனங் கூறியதாம் என்க.

†இச்சர்க்கரைப்புலவர், மயூரகிரிக்கோவைசெய்த சாந்துபுலவர்க்கு மூன்றும்பாட்டனார் என்க. இவற்றுண்மை மயூரகிரிக்கோவை நூலாசிரியர் வரலாறு உக, உச-வது பக்கத்திற்காண்க.

இலக்கணக்கொத்துச் சிறப்புப்பாயிரம்.

மதிவெயில் விரிக்குங் கதிரெதிர் வழங்கா
துயர்வரை புடவியி னயர்வுற வடக்கித்
தென்புவி வடபுவி யின்சம மாக்கிக்
குடங்கையி னெடுங்கட லடங்கலும் வாங்கி
யாசமித் துயர்பொதி நேசமுற் றிருந்த
மகத்துவ முடைய வகத்திய மாமுனி
தன்பா லருந்தமி ழின்பா லுணர்ந்த
வாறிரு புலவரின் வீறுறு தலைமை
யொல்காப் பெருந்தவத் தொல்காப் பியமுனி
தன்பெய ராலுல கின்புறத் தருநூ
லுளங்கூ ருரையா மிளம்பூ ரணமு
மானு வியல்பிற் சேனு வரையமு
முச்சிமேற் புலவர்கொ ணச்சினார்க் கினியமு
மற்றமற் றிடப்பொருண் முற்று முணர்ந்து
நன்னூன் முதலிய சின்னூ றெரிந்துந்
தொல்காப் பியங்கள் பல்காற் பயின்று
மவைகளி னருகிய நவையறு விதிகளும்
வடமொழி யிலக்கணக் கடன்முடி புடையவுங்
கற்பவர்க் கெளிதி னிற்புலப் படவே
மதியினின் மதித்துமுன் றதிகார மாக்கிப்
புலக்கணத் தெனவுல கிலக்கண கொத்தென்
றொருபெய ரிட்டுத் திருவுளம் பற்றினன்
வளமையின் வளர்புக ழளவிய புனனாட்
டேவடு விழியுமை யாவடுதுறையி
லாசிலா வுயிர்க்கருண் மாசிலா மணிப்பெய
ரம்பல வாணனென் றும்பரும் பரவ
வருஞான தேசிகனிருதாள் புனையு
மமிழ்தினு மினிய தமிழ்வளர் நெல்லை
யுவாமுதிர் மதிக்கலைச் சுவாமி நாதன்
றேசார் ஞானச் செல்வ
னீசான தேவ னெனுந்தே சிகனே.

இலக்கணக்கொத்துப் பாயிரம்.

குருவணக்கம்.

ஊரும் பேரு முருவு மில்லா
ஞானியுந் திருவா வடுதுறை யூரனைத்
தம்பல வாண னெனும் பெயராதரித்
தறிவே யுருவா யமர்ந்தகுரு ராயனைப்
பொறையுடல் போகப் புகழ்ந்தடி போற்றுவாம்.

நன்னூல் உரைச்சிறப்புப்பாயிரம்.

மலர் தலை யுலகிற் பலநூ லாய்ந்து
செய்வதுந் தவிர்வதும் பெறுவது முறுவதும்
உய்வது மறியே னொருபொரு ளாக
நன்னெறி பிறழா நற்றவத்தோர் பெறுந்
தன்னடித் தாமரை தந்தெனை யாண்ட
திருவாவடுதுறைத் தேசிக னாகிய
கருணையங் கடலையென் கண்ணைவிட் டகலாச்
சுவாமி நாத குரவனை யனுதினம்
மனமொழி மெய்களிற் றொழுதவ னருளாற்
பொன்மலை யெனவிப் புவிபுகழ் பெருமை
மன்னிய வூற்று மலைமரு தப்பன்
முத்தமிழ்ப் புலமையு முறையா சுரிமையும்
இத்தலத் தெய்திய விறைமக னாதலின்
நன்னூற் குரைகீ நவையறச் செய்து
பன்னூற் புலவர்முன் பகர்கவென் றியம்பலின்
நன்று வலர்முக நகைநா ளுமே
என்று வியன் றவை யியற்றுமிந் நூலுள்.

மாசிலாமணிதேசிகர் சரித்திரம்.

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

பத்தொன்பதாவது

இராமலிங்கதேசிகர் சரித்திரம்.

திருச்சிற்றம்பலம்.

படைத்தல்காத்த றுடைத்தலெனப் பகருமும்மைத்தொழி லுடற்கே, கிடைக்குமெனவு மறைப்பருளல்கெழும வுயிருக் காமெனவுந், தொடர்ச்சி யகன்ற தூயவர்க்குத் துறைசை யுறை ந்து சொலிநாளும், நடத்துமிராம லிங்ககுரு நற்றாள் பற்றி யுய் ந்திடுவாம்.

சித்தாந்தஞானபாநுவாகிய மாசிலாமணிதேசிகர் அருளுப தேசம்பெற்று துவிதீய ஆசிரியராக விளங்கி வீற்றிருக்கும் இரா மலிங்கதேசிகர், திருவெண்காடென்னும் அத்திவ்வியஸ்தலத்தில் தமது ஞானதேசிகருக்குத்தசதினத்திலும் குருபூசை சிறப்புறச் செய்து, சுவேதவனப்பெருமானையும், பெரியநாயகியையும் தரிசி த்து வழிபாடியற்றி விடைபெற்று, அங்குநின்றும் அரிதினீங்கி வழியிடையிற் பலதலங்களையுந் தரிசித்துத், திருவாவடுதுறையை யடைந்து திருக்கோயிலிற் சென்று, சுவாமி தரிசனஞ்செய்து, தமது திருமடத்திற்கெழுந்தருளி, சிவப்பிரகாசவிநாயகரையுந் திருமாளிகைத்தேவரையும் ஆதீன பரமமுதற்குரவராகிய நமசி வாயமூர்த்திகளையுந் தரிசித்துச் சீடர்களுக்குத் தீக்கையாதிக ளும் சித்தாந்த ஞானோபதேசமுஞ்செய்துகொண்டு அங்கமர்ந் தருளுவாராயினர்.

அக்காலத்தில், தமது மாணவர்கள் பல்லோருள்ளுஞ் சிற ந்த வேலப்பதம்பிரானுக்கு ஆசாரியாபிடேகஞ்செய்து சிலநாள் சென்று ஞானதேசிகர், செழியநாட்டின்கண்ணும் சோநாட்டின்

கண்ணுமுள்ள தமது சீடர்களுக்குத் தீக்கையாதிகள் செய்யத் திருவுளங்கொண்டு, துவிதீய ஆசிரியராகிய வேலப்பதேசிகசுவாமிகளும், தம்பிரான்சுவாமிகளும், ஏனைய அடியவர்களும் உடன் வரத் திருவாவடுதுறையென்னும் அத்திவ்விய ஸ்தலத்தினின்றும் அரிதினீங்கி வழியிடையிற் பற்பலஸ்தலங்களைத் தரிசித்துக் கொண்டும், ஆங்காங்கு பலரும் வழிபட்டேத்த, அவர்களுக்கு அருளுபதேசஞ் செய்துகொண்டும், பாண்டிநாடு கடந்து சேர நாட்டின்கண்ணதாகிய சுசிந்திரத்தைச் சேர்ந்து, அங்கு திருக்கோயிலிற்சென்று தாணுமாலயேசுரர் தரிசனஞ்செய்து தமது ஈசானமடத்திற்கெழுந்தருளி, ஞானமூர்த்தியாகிய நமசிவாய தேசிகோத்தமர் பிரதிட்டாலயத்தினையணைந்து தரிசித்து வழிபாடியற்றி இருகுமாரசுவாமிதேசிகர் குருமூர்த்தங்கள் தரிசனம்பண்ணி அங்குச் சிலகாலம் அன்பர்களுக்குத் தீக்கையாதிகள் செய்து வீற்றிருந்தருளினர்.

பின்புஞானதேசிகர், துவிதீயஆசிரியராகிய வேலப்பதேசிக சுவாமிகளை அங்கு சீடர்களுக்கு ஞானோபதேசஞ் செய்துகொண்டிருக்குமாறு கட்டளையிட்டுத் தாம் அங்குநின்றும் அரிதினீங்கி வழியிடையிற் பலஸ்தலங்களையுந் தரிசித்துக்கொண்டு திருவாவடுதுறைக்கெழுந்தருளி அங்கு மாணவர் பலர்க்கும் அருளுபதேசஞ்செய்துகொண்டமர்ந்தருளினர்.

இங்ஙனம் நெடுங்காலம் அருளுபதேசஞ்செய்து அமர்ந்த குருவராகிய ஞானதேசிகர், அத்திருப்பதியிலே ஓர்கார்த்திகை மாதத்து அநுஷநக்ஷத்திரத்திலே அம்பலக்கூத்தனார் அருட்பாதநீழலடைந்தனர்.

இராமலிங்கதேசிகர் சரித்திரம்

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

இருபதாவது,
வேலப்பதேசிகர் சரித்திரம்

திருச்சிற்றம்பலம்.

நிறைமதியா திக்கருப ராகந்தி ராகுவொடு நிழலாங்கேது மறைவின்றி விளங்குதல்போ லிறைவனைத்தம் மனமலரின் வருனா மைந்தின், முறைமையினிற் காண்டலுறிற் றோன்றிடுமெம் முதல்வனென முதிர்பா கர்க்குத், துறைசைதனி லறிவுறுத்து குருமுதல்வே லப்பன் மலர்த் துணைத்தாள் போற்றி.

ஞானதேசிகராகிய இராமலிங்கதேசிகோத்தமர், திருவருளாணை சிரமேற்கொண்டு துவிதீய ஆசிரியராய் சுசீந்திரத்தில் வீற்றிருந்து சேரநாட்டின்கண்ணும், பாண்டியநாட்டின்கண்ணுமுள்ள சீடர்களுக்குத் தீக்கையாதிகளுஞ் சித்தாந்தசாத்திரோபதேசமுஞ்செய்து வருந் தேசிகசுவாமிகளாகிய வேலப்பதேசிகர் தமது ஞானசாரியசுவாமிகள் சிவபரிபூரணதசை யடைந்தருளியதை உணர்ந்து, உடனே சுசீந்திரத்தினின்றும் நீங்கி, விரைவிற்றனே திருவாவடுதுறையை வந்தடைந்து தபோவனத்திடைச்சார்ந்து, தமது ஞானசாரியசுவாமிகள் குருமூர்த்தம் பூசித்து வழிபாடியற்றி, மறைஞானதேசிகர், அம்பலவாணதேசிகர் குருமூர்த்தந் தரிசித்துத் திருக்கோயிலிற்சென்று சுவாமிதரிசனஞ் செய்து, திருமடாலயத்தினையடைந்து சிவப்பிரகாசவிநாயகரையுந் திருமாளிகைத்தேவரையும் ஆதீனமுதற்குரவராகிய நமச்சிவாயமூர்த்திகளையும் தரிசித்து வழிபட்டுக்கொண்டு, ஒடுக்கத்தி லெழுந்தருளி தமது ஞானதேசிகர் திருவடியருச்சனை புரிந்து, திருவருளைச் சிந்தித்து ஆசனத்தமர்ந்து யாவர்க்குங் குருதரிசனக் காட்சியளித்துச் சீடர்களுக்குத் தீக்கையாதிகளும் சித்தாந்தசாத்திரோபதேசமுஞ்செய்துகொண்டு அங்கமர்ந்தருளுவாராயினர்.

அக்காலத்தில் ஞானதேசிகர் தமது அடியவருட் சிறந்த வேலப்பதம்பிரானுக்கு ஆசாரியாபிடேகஞ்செய்து தமக்கு துவி

திய ஆசிரியராகவைத்தருளினர். பின்னர் சிலநாள் சென்று, ஞானதேசிகர், அங்குநின்றும் அரிதினிங்கி வழியிடையிற் பல ஸ்தலங்களையுந் தரிசித்துக்கொண்டும், சிடர்களுக்குத் தீக்கையாதிகள் செய்துகொண்டும், பாண்டியநாடகன்று சேரநாட்டிற்கெழுந்தருளி கன்னியாகுமரியடைந்து, கடலாடி பகவதியம்மையைத் தரிசித்து தமது ஈசானமடாலயத்திற் சென்று அங்குச்சிலநாள் அமர்ந்திருந்து அத்தலத்தினின்றும்புறப்பட்டுச் சுசீந்திரஞ்சார்ந்து திருக்கோயிலிற்சென்று சுவாமிதரிசனஞ்செய்து, தமது ஈசானமடத்திற்கெழுந்தருளி ஆதினபரமமுதற்குரவராகிய பஞ்சாக்கரதேசிகர் பிரதிட்டாலயத்தினையும் இருகுமாரசுவாமித்தேசிகர் குருமூர்த்தங்களையுந் தரிசித்து, அங்குச்சிலகாலம் எழுந்தருளியிருந்து, பின்பு துவிதிய ஆசிரியராகிய வேலப்பதேசிக சுவாமிகளை அங்குச்சிடர்களுக்குத் தீக்கையாதிகள் செய்துகொண்டு அமருமாறு பணித்துத் தாம் அங்குநின்றும் புறப்பட்டுத் திருவாவடுதுறையடைந்து அங்குச் சித்தாந்தஞானதேசிகராகிய நமசிவாயமூர்த்திகளின் துணைமலர்த்தாள்களை அருச்சித்து வழிபட்டுக்கொண்டு வீற்றிருந்து திருவருளுபதேசஞ்செய்துவருவாராயினர். இஃதிங்ஙனமாக.

சுசீந்திரத்தில் வீற்றிருக்கும் துவிதியஆசிரியராகிய வேலப்பதேசிகசுவாமிகள், தாம் அங்குதம்பாற் சாண்புகும் பற்பல சிடர்களுக்குத் தீக்கையாதிகள் செய்துகொண்டுவருவாராயினர். அப்பொழுது தாம் பஞ்சாக்கரபஃறொடை எனும் ஓர்ஞானநூலியற்றியருளினர்.

அக்காலத்தில்பாண்டிவளநாட்டிலே பொதியமலைச்சாரலிலே பாவநாசமென்னுந் திருப்பதியைச் சார்ந்த விக்கிரமசிங்கபுரத்திலே, அகத்தியமகா முனிவரிடத்தே எழுதலைமுறையளவும் அருட்புலமை நிரம்பும்வண்ணம் வரம்பெற்ற பாம்பரைச் சைவ வேளாளர் குலத்திலே, சிவபத்தி அடியார்பத்திகளிற் சிறந்தவரும், கல்விச்செல்வம்போலப் பொருட்செல்வமும் ஒருங்குடையவரும் ஆகிய ஆனந்தக்கூத்தர் என்பவர் ஒருவர் இருந்தார். அவர் மனைவியார் தமக்கு உயர்வொப்பிலாத மயிலம்மையார்

என்று எவராலுஞ் சிறப்பித்துச் சொல்லப்படுபவர். அவரது திருவயிற்றிலே ஏழாவது நல்முறையாகத் தமிழ்நாடு செய்ததவத்தானே ஒரு சற்புத்திரர் திருவவதாரஞ்செய்தனர். அவர் முக்களாலிங்கர் என்னும் பிள்ளைத்திருநாமம் பெற்றோராற்சாத்தப்பெற்று ஒழுக்கம் அன்பு அருள் முதலிய நற்குணங்களோடு வளருவாராயினர். இங்ஙனம் வளரும்நாளில் அவர்க்கு ஐந்தாவது பிராயம்வர அவர் பெற்றோரால் வித்தியாரம்பஞ் செய்விக்கப்பெற்று பாடசாலையிற் சென்று கல்விபயின்று வருவாராயினர். இவ்வாறு கல்வி பயின்று வருநாளில் ஒருநாள் முக்களாலிங்கர் பாடசாலையினின்றும் வரும்வழியிலே, திருவாவடுதுறைஆதீனத்தினின்றுஞ்சிவஸ்தல யாத்திரையாகப்போந்து விக்கிரமசிங்கபுரத்து வீதியில்வந்த சில தம்பிரான்சுவாமிகளைக்கண்டனர். கண்டலும் விரைந்துசென்று அத்தம்பிரான் சுவாமிகளை வணங்கிச், "சுவாமிகள்! அடியேன் வீட்டிற்கெழுந்தருளித் திருவமுது கொண்டருள வேண்டும்" என்று பிரார்த்திக்க, அத்தம்பிரான் சுவாமிகள் ஆண்டின் இளைஞரும் அறிவின் முதியருமாகிய முக்களாலிங்கர் பிரார்த்தனைக்கு இரங்கி விருப்பத்தோடுஉடன்படலும் அப்புத்திரர் அவர்களை வீட்டிற்கு அழைத்துச்சென்று ஆசனத்திருத்தித் தாயாரிடஞ் சென்று அம்மையே நம்வீட்டிற்குச் சிவனடியார் சிலர் எழுந்தருளினர், அவர்களுக்கு அமுதளித்தல் வேண்டும் என வேண்டினர். அது கேட்ட அம்மையார் தம் அருமைப்புதல்வரது அரும்பெருஞ் செய்கையைக்கண்டு மனம் மிகமகிழ்ந்து அத்தம்பிரான்சுவாமிகளை வணங்கித் திருவமுதளித்தனர். அப்போது, அத்தம்பிரான் சுவாமிகள் திருவமுது கொண்டருளி அவ்வம்மையாரது கற்பின் திறத்தையும் அன்பின் திறத்தையும் நோக்கி.

அருந்ததியென் னம்மை யடியவர்கட் கென்றுந்
திருந்த வமுதளிக் குஞ்செல்வி—பொருந்தவே
யானந்தக் கூத்த ரகமகிழத் தொண்டுசெயு
மானனந் தவாத மயில்,

என்னும் செய்யுளைப்பாடி பல ஆசிமொழிகூறிபுறத்தே சென்று ஆங்குள்ள ஒரு திருமடத்திலுற்றுவைகினர். தமது அருந்தவப்

புதல்வரது அன்பின்வாய்மையைப் புகழ்ந்து அவ்வம்மையார் அவரைப் பெற்ற ஞான்றினும் பெரிதுமகிழ்ந்திருந்தனர்.

அப்பொழுது புறப்பே சென்றிருந்து தம் வீடு புக்க ஆனந்தக்கூத்தர் அங்கு நிகழ்ந்தவற்றை அறிந்து அடங்காத பேருவகையுற்றுத் தம்புதல்வரை மார்புறத்தழுவி, "நங்குலஞ்செய்த நற்றவக்கொழுந்தே! திருவமுதுகொண்டருளிய தம்பிரான்சுவாமிகள் எங்குச் சென்றனர்?" என்று வினவித் தம்புதல்வரோடு அச்சுவாமிகள் இருந்துழிச்சென்று அவர்களை வணங்கி நின்றனர்.

அவ்வேளையில் முக்களாலிங்கர் "பிறவியால் வருவனகேடுள வாதலாற் பெரியவின்பத் துறவியார்க் கல்லாது துன்பநீங்கா தெனத்" திருவருளால் தம்முளத்துட்கொண்டு, "இத்தம்பிரான் சுவாமிகளோடு சென்று ஞானகுருவைச்சரணடைந்து "பிறப்பறுப்பேன்" எனத்துணிந்து, அக்கருத்தைத் தந்தையார்க்குணர்த்தினர். தந்தையார் தமது அருந்தவப் புதல்வரைப் பிரிதற்கு ஆற்றுதவராய் உளந்தளர்ந்து, பின் ஒருவாறுதேறி, மகனாரை சுவாமிகள்பால் விடுத்துத் தம்மில்லத்திற் கேகினர்.

தந்தையார் நீங்கியபின்பு முக்களாலிங்கர், ஆதினத்துத்தம்பிரான்சுவாமிகளோடு வழிக்கொண்டுசோநாட்டின்கண் ணுள்ள சுசிந்திரத்தையடைந்து ஈசான மடாலயத்திற்சென்று, ஆதீன பரமமுதற் குரவராகிய நமச்சிவாயமூர்த்திகளைத்தரிசித்துத் திருவருணோக்கம் பெற்றுக்கொண்டு ஒடுக்கத்திலேபோய் துவிதீய ஆசிரியராகிய வேலப்பதேசிகசுவாமிகளைத் தரிசித்துப் பேரன்போடு வணங்கினர்.

பின்பு வேலப்பதேசிகசுவாமிகள், தம்மைவந்தடைந்த இளமைப்பருவத்தராகிய முக்களாலிங்கர் மீது பெருங்கருணைபாலித்து, அவருக்குச் சமயவிசேட மெனப்படும் இருவகைத்தீக்கையுமியற்றிச் சைவசந்நியாசமளித்தருள, அவர்தாம் அவ்வாசிரமத்திற்கு விதித்த சிறுநூல்களை ஐந்திரியின்றியோதியுண

ர்ந்து, அவ்வாறொழுகித்தவத்தான் மனந்தூயராகி அங்கு அமரு நாளில், செந்தமிழும் ஆரியமுமாகிய தேவபாடைகள் இரண்டினையும் ஒருங்கே உளங்கொளப் பயிலுவாராயினர்.

பின்பு. அத்தேசிகசுவாமிகள், முக்களாலிங்கர் என்னும் மூதறிஞராகிய அத்தவச்சிரேட்டருக்கு நிருவாணதீக்ஷைசெய்து சிவஞானத்தம்பிரான் எனத் தீக்ஷாநாமஞ்சாத்தி மெய்கண்டசாத்திர * பண்டாரசாத்திரங்களை உபதேசித்தருளினர். அங்ஙனம் உபதேசங்கேட்ட துணையானே அவர்தாம் சிந்தித்துத் தெளிந்து மெய்யுணர்வின் முற்றுப்பெயருடையவராய் அமர்ந்தருளினர்.

இங்ஙனம் நெடுங்காலமாக சுசீந்திரத்தில் சீடர்களுக்குத் தீக்கையாதிகள் செய்துகொண்டு, அமர்ந்தருளிய துவிதீயஆசிரியராகிய வேலப்பதேசிகசுவாமிகள், தமது ஞானதேசிகரைத் தரிசிக்கவிரும்பி அங்கு நின்றும் புறப்பட்டு பாண்டிநாட்டிற் சென்று அங்கு பலதலங்களையுந் தரிசித்துக்கொண்டு, இராசவல்லிய புரமெனப் பெயர் விளங்கும் செப்பறையென்னுந் திவ்விய ஸ்தலத்திற் கெழுந்தருளி சிற்சபேசரைத் தரிசித்துப்பின் ஸ்ரீ மூலலிங்கமாகிய அக்கினீசுரரையும் அகிலாண்டேசுவரியையும் தெரிசனம்பண்ணி அங்கு சிலநாள் வசித்திருந்தனர். அக்காலத்

---

* பண்டாரசாத்திரம் பதினான்காவன, அம்பலவாணதேசிகர் அருளிச்செய்த தசகாரியம், சன்மார்க்கசித்தி, சிவாச்சிரமத்தெளிவு, சித்தாந்தப்பஃறொடை, சித்தாந்தசிகாமணி, உபாயநிட்டைவெண்பா, உபதேசவெண்பா, நிட்டைவிளக்கம், அதிசயமாலை. நமச்சிவாயமாலை, என்னும் பத்தும், தக்ஷிணாமூர்த்திதேசிகர் அருளிச்செய்த தசகாரியம், உபதேசப்பஃறொடை என்னும் இரண்டும் திருவண்ணாமலை அய்யர் எனவும் ஈசானதேசிகர் எனவும் பெயர் விளங்கும் சுவாமிநாததேசிகர் அருளிச்செய்த தசகாரியம்ஒன்றும் துவிதீயவேலப்பதேசிகர்அருளிச்செய்த பஞ்சாக்கரப்பஃறொடை ஒன்றும் ஆகப்பதினான்கு ஞானநூல்களுமாம். இவை பண்டாரம் எனப் படுங்குருமூர்த்திகளாற் செய்தருளப்பட்டமையானும் அரிய பெரிய சித்தாந்த நற்பொருள்களெல்லாம் ஒருங்கடங்கியுள்ளமூலபண்டாரம எனப்படும் ஆகையானும் பண்டாரசாத்திரமென அடிப்பட்ட சான்றோர்களால் வழங்கப்பட்டு வருகின்றன.

தில் தேசிகசுவாமிகள் தமது அடியவர் கூட்டத்துட்சிறந்த மாதவச்சிவஞானசுவாமிகளால் அகிலாண்டேசுவரிமீது ஓர் பதிகம் செய்விக்கத் திருவுளங்கொண்டு குறிப்பித்தருள அவ் ஆஞ்ஞை மேற்கொண்டு அச்சுவாமிகள் ஓர்பதிகமியற்றி தேசிகசுவாமிகள் திருமுன்பு அரங்கேற்றி அத்தேசிகசுவாமிகளுடன் திருக்கோயிலிற்சென்று சுவாமிதரிசனஞ்செய்து அகிலாண்டேசுவரியைத் தரிசித்துத் தமது சற்குரவர் ஆஞ்ஞாபித்தவாறு தாமியற்றிய பதிகத்தை தோத்திரஞ்செய்து நின்றனர். பின்பு தேசிகசுவாமிகள் அத்தலத்தினின்றும்மாதவச்சிவஞானசுவாமிகள் முதலாகிய மாணவர்களோடு புறப்பட்டு பாண்டிநாட்டைக்கடந்து கொங்குநாட்டிற்சென்று அங்கும் சில திவ்யஸ்தலங்களைத் தரிசித்துக் கொண்டு ஆதி சிதம்பரமெனப்படும் திருப்பேரூரையடைந்து அங்கு திருக்கோயிலிற்சென்று சுவாமிதரிசனஞ்செய்து அங்கு சிலநாள் வசித்திருந்தனர். அந்நாட்களில் ஓர் ஆனிமாதத்திலே பரணி நக்ஷத்திரத்திலே தேசிக சுவாமிகள் சிவபரிபூரணமுற்றனர்.

பின்பு அடியவர்கள், அத்திவ்விய ஸ்தலத்திலே அத்தேசிக சுவாமிகளுக்குக் குருபூசை தசதினத்திலுஞ் சிறப்புறச்செய்து, பின் அவ்வாசிரியசுவாமிகள் குருமூர்த்தத்தின் பூசையின் பொருட்டு அவ்வடியவர்களிலொருவர் அங்கமர்ந்திருப்ப ஏனைய அடியவர்கள் அவ்விடத்தினின்றும் அரிதி நீங்கித் திருவாவடுதுறையையடைந்து ஞானதேசிகரைத் தரிசித்துத் துவிதியதேசிக சுவாமிகள் சிவபரிபூரண முற்றருளியதை விண்ணப்பித்தனர்.

பின்பு ஓர் சுபதினத்தில் ஞானதேசிகராகிய வேலப்பதேசிக சுவாமிகள், தமது தம்பிரான்சுவாமிகள் பல்லோருள்ளுஞ்சிறந்த வேலப்பத் தம்பிரானுக்கு ஆசிரியாபிடேகஞ் செய்தருளினர். பின்புசிலநாள்கழித்து ஞானதேசிகர் பாண்டிநாட்டின்கண்ணும் சோணாட்டின்கண்ணும் உள்ள தமது சிடர்களுக்கு ஞானோபதேசஞ் செய்பத் திருவுளங்கொண்டு துவிதீய ஆசிரியராகிய வேலப்பதேசிகசுவாமிகளும் தம்பிரான்சுவாமிகளும் ஏனைய அடியவர்களும் உடன்வர அங்குநின்றும் அரிதிநீங்கி ஆங்காங்

குள்ள தமது சீடர்களுக்குத் தீக்ஷையாதிகள்செய்துகொண்டுசுசீந் திரத்தையடைந்து திருக்கோயிலிற்சென்று சுவாமிதரிசனஞ் செய்து தமது திருமடத்திற் கெழுந்தருளி திருவருளுபதேசஞ் செய்துகொண்டு சிலகாலம் அங்குவீற்றிருந்தருளுவாராயினர்.

பின்பு ஞானதேசிகர், தமதுதுவிதீயஆசிரியராகிய வேலப்ப தேசிகசுவாமிகளை அவ்விடத்தமர்ந்து அருளுபதேசஞ்செய்து வருமாறு கட்டளையிட்டுத் தாம் அங்கு நின்றும் புறப்பட்டு வழி யிடையிலுள்ள ஸ்தலங்களைத்தரிசித்துக்கொண்டு சங்கரநாராய ணர்கோயிலுக்கு எழுந்தருளி அப்பதியில் சிலகாலம் வசித்திருந் தருளினர். அங்ஙனம் வசிக்கு நாட்களில் அநேகருக்கு உற்ற குட்டமுதலிய நோய்களை நீக்கியருளியதுமன்றி தமதுபெருமை யைக்கேள்வியுற்று தம்மிடத்து வந்து பணிந்து குறையிரந்த நெற்கட்டுஞ் செவ்வற்குறுநிலமன்னராகிய சிவஞானபூலித்தேவர் என்பவருக்குற்ற குன்மநோயினையும் நீக்கியருளினர்.

பின்பு குறுநிலமன்னராகிய சிவஞானபூலித்தேவர், ஞான தேசிகருக்கு விளைநிலம் முதலானவை சிவபூசை, குருபூசை, மாகேசுரபூசையின்பொருட்டு சாசனஞ்செய்துகொடுத்து சிலகா லம் ஞானதேசிகர்தரிசனஞ்செய்துகொண்டிருந்து ஞானதேசிகர் பால் விடைபெற்றுத் தமது ஊருக்குச்சென்றனர். பின்பு ஞான தேசிகர், அத்திருப்பதியிலே சிலகாலம்வசித்திருந்துஓர் புரட்டாசி மாதத்து மூலநக்ஷத்திரத்திலே சிவபிரான் திருவடியிணைமலர் சேர்ந்தின்பம் எய்தினர்

வேலப்பதேசிகர் சரித்திரம்

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

இருபத்தொன்ருவது,
பின்வேலப்பதேசிகர் சரித்திரம்
திருச்சிற்றம்பலம்.

நந்தியெனு நம்முதலா ரியனைமுனம் வழிபட்டு நயந்து பின்னர், அந்திமதி புனைசடிலத் திறையைவழி படுதன்முறை யதுமாரு, வந்திவண்யா முறைவாமென் னுறைதல்போற் பெருந்துறையை மருவிமாக, சிந்தி யமர் துறைசைப்பின் வேலப்ப தேசிகன்ருள் சென்னிசேர்ப்பாம்.

சுசீந்திரத்தில்வீற்றிருந்துசீடர்களுக்குச்சித்தாந்தஞானுேபதேசஞ்செய்தருளும் துவிதீய ஆசிரியராகிய வேலப்பதேசிகர், தமது ஞானுசிரியசுவாமிகள் சிவபரிபூரணமடைந்தமை சீடர்கள் வந்துதெரிவிக்க உணர்ந்து விரைவாகச் சுசீந்திரத்தினின்றும் புறப்பட்டுச் சங்கரநாராயணர் கோயிலையடைந்து, ஞானுசாரிய சுவாமிகள் குருமூர்த்தந்தரிசித்துக் குருபூசை, மாகேசுரபூசை சிறப்புறவியற்றிச் சிலநாள் அங்கு வீற்றிருந்தருளினர்.

பின்பு ஞானதேசிகர், அங்கு நின்றும் அரிதினீங்கி வழியிடையிற் பற்பலஸ்தலங்களைத் தரிசித்துக்கொண்டு திருவாவடுதுறையைச்சேர்ந்து, அவ்விடத்தே சித்தாந்தஞானச்செழுஞ்சுடராய் அமர்ந்தருளியிருக்கும் ஞானமூர்த்தியாகிய நமச்சிவாய தேசிகோத்தமரைத் தரிசித்து பூசனையாற்றி வழிபட்டுக்கொண்டு ஒடுக்கத்திலெழுந்தருளிஞானதேசிகத்திருக்காட்சியுந் திருவருட்பிரசாதமும் நல்கி யாவரையும் மகிழ்வித்தருளினர். பின்பு சின்னுட்களுள் ஞானதேசிகர், தம்அடியவர் பல்லோருள்ளுஞ் சிறந்த திருச்சிற்றம்பலத் தம்பிரான்சுவாமிகளுக்கு ஆசிரியாபிடேகமியற்றி தமக்குத்துவிதிய ஆசிரியராக நியமனஞ் செய்தருளினர். அன்றியும் ஞானதேசிகர், தமது துவிதிய தேசிகசுவாமிகளுக்கு மெய்கண்ட சாத்திரமும், பண்டார சாத்திரமும், உபதேசித்து, வடமொழியில் சிவாகமங்களும் பயிற்சி செய்வித்தருளினர். அத்

தேசிகசுவாமிகள் ஞானதேசிகர் அருளிருந்து சித்தாந்த ஞான சாத்திரங்களையும் சிவாகமங்களில் இரண்டு லக்ஷஞ் சுலோகமும் தெளிவுறப்பயின்று தென்மொழி, வடமொழி என்னும் தேவ பாஷையிரண்டினும் மிக வல்லுநராயினர். அக்காலத்தில் குரு லிங்க சங்கமசேவை செய்துகொண்டு திருவாவடுதுறையில் அருங்கலை வல்லுநராய் எழுந்தருளியிருக்கும் பரமசிவஞான சுவாமிகள் ஆதீனபிரதமாசாரியராகிய பஞ்சாக்கர மூர்த்தியின் மீது தோத்திரமாக ஓர் பதிகம் இயற்றியருளினர்

அவை வருமாறு:—

பஞ்சாக்கரதேசிகர் மாலை.

திருச்சிற்றம்பலம்.

கட்டளைக்கலித்துறை.

அறிவே வருட்செல்வ மேநிறை வேயர சேயடியா
ருறவேயென் னுருயி ரேமணி யேயுரு காதநெஞ்சிற்
பிறிவே துரியங் கடந்த சிவானந்தப் பேரமுதச்
செறிவே கருணைப் பிழம்பேபஞ் சாக்கர தேசிகனே. (க)

பொய்யுங் கவடுங் கொடுமையும் வஞ்சமும் பூண்டபொல்லாக்
கையன் கலதி முழுமுட னேனுநின் கண்ணருளா
லுய்யும் படியென்று கூடுமெந் தாயுண்மை யாளரன்பு
செய்யுந் துறைசையுட் டேவேபஞ் சாக்கர தேசிகனே. (உ)

பரிசறி யேனருட் பண்பறி யேனெனைப் பற்றும் வினைக்
கரிசறி யேனது மாற்றறி யேன்கல ரோடிணங்கித்
துரிசுக ளேசெயும் பொல்லா வுலகத் தொழும்பனுக்குன்
றெரிசனங் கிட்டுவ தென்றோபஞ் சாக்கர தேசிகனே. (ங)

மருவே னுனதடி யார்திருக் கூட்ட மருவிவஞ்ச
மொருவேன் மகளிர் விழிக்கடை நோக்குக் குளம்பதைத்து
வெருவே னடிமையு மெங்ஙா ளுனதருண் மேவுவனோ
திருவா வடுதுறைத் தேவேபஞ் சாக்கர தேசிகனே. (ச)

ஆனந்த வாழ்வி லடியரிரெல் லாரு மகங்களிப்ப
நானிந்த மாயத் தொடக்கிறில் வீழ்ந்து நலிதனன்றே
வானந்த நீண்ட மதிலா வடுதுறை வாழ்முதலே
தேனுந்து பங்கயத் தாளாய்பஞ் சாக்கர தேசிகனே. (ரு)

வற்றாக் கருணைத் திருநோக்கு நின்முக மண்டலமுஞ்
சற்றே முகிழ்த்த குறுமுறு வலுந்தட மார்பழகும்
பொற்றாளுஞ் சென்முத் திரையுநெஞ் சூடு பொறித் துவைப்பாய்
செற்றார் புரஞ்செற்ற தேவே பஞ்சாக்கர தேசிகனே. (சா)

தேறாத நெஞ்சுந் தெளியாத சிந்தையுந் தேங்கியின்ப
மூறாத கண்ணு மொழியாக் கவலையு முன்புகழே
கூறாத நாவு மெனக்கே தருமென்று கூட்டினையே
சீறாத ருள்செயுந் தேவேபஞ் சாக்கர தேசிகனே. (எ)

நின்னரு ளேனுக்கினுக் கெவ்வள வேனு நெகிழ்ந்துருகா
தென்னுடை வன்மன மின்னார் விழிக்கடைக் கென்னிலந்தோ
வன்வினை யினேர்மெழு காயுரு காநிற்கு மாயமென்னே
செந்நெறி யாய்நின்ற தேவேபஞ் சாக்கர தேசிகனே. (அ)

பிறவித் துயரினி யாற்றே னடைக்கலம் பேயுலகின்
மறுகித் திரிந்தலைந் தெய்த்தே னடைக்கல மங்கைநல்லா
ருறவைத் தவிர்த்துய்யக் கொள்வா யடைக்கல முண்மையன்பர்
செறிவுக்குள் வாழுமெய்த் தேவேபஞ் சாக்கர தேசிகனே. (கூ)

இருவினை தாமிவை மும்மல மீங்கிவை யிதுசிவங்
கருவுறு மாருயி ருண்மை யிதுவென்று காட்டவல்ல
குருபர னீயன்றி வேறுறி பேனிக் குவலயத்திற்
றிருவெண்ணெய் மெய்கண்ட தேவேபஞ் சாக்கர தேசிகனே. ()

திருச்சிற்றம்பலம்.

பஞ்சாக்கரதேசிகர் மாலை

முற்றிற்று.

பின்பு ஞானதேசிகர், பாண்டியதேசத்தின்கண்ணும் சேரதேசத்தின்கண்ணும் உள்ள தமதுசிடர்களுக்குத்திக்கையாதிகள் செய்யத் திருவுளங்கொண்டு, துவிதீய ஆசிரியராகிய திருச்சிற்றம்பலதேசிகசுவாமிகளும், வடமொழி, தென்மொழிக்கடலைநிலை கண்டுணர்ந்த மாதவச்சிவஞானசுவாமிகள் முதலிய தம்பிரான் சுவாமிகளும், ஏனைய அடியவர்களும், பரிசனங்களும் உடன்வர அங்கு நின்றும் அரிதினீங்கி வழியிடையிற் பலஸ்தலங்களை யுந்தரிசித்துக்கொண்டும், ஆங்காங்குதமதுசிடர்களுக்குத்திக்கையாதிகள் செய்துகொண்டும், சுசீந்திரத்தை யடைந்து திருக்கோயிலுக்கெழுந்தருளி சுவாமிதரிசனஞ்செய்து தமது திருமடத்திற்கு வந்து ஆதீனபிரதமாசாரியராகிய நமசிவாயமூர்த்திகள் பிரதிட்டாலயத்திற்சென்று தரிசித்து இரு குமாரசுவாமிதேசிகர் குருமூர்த்தங்கள் பணிந்து வழிபாடியற்றி அங்கமர்ந்தருளினர்.

பின்பு சிலநாட்கள் கழிந்தவுடன் ஞானதேசிகர் தமது பிற்றோன்றலாகிய திருச்சிற்றம்பலதேசிகரை அவ்விடத்தில்அமர்ந்து அருளுபதேசஞ்செய்து வருமாறுபணித்துவிட்டு, தாம் அங்கு நின்றும் புறப்பட்டு ஆங்காங்குள்ள திவ்வியஸ்தலங்களைத்தரிசித்துக்கொண்டு திருக்குற்றாலத்திற் கெழுந்தருளி சித்திராநதிதீர்த்தமாடி சுவாமிதரிசனஞ்செய்து தமது திருமடத்திற்குச்சென்று துவிதீய முத்தம்பலவாணதேசிகசுவாமிகள் குருமூர்த்தந்தரிசித்து அங்கு சிலநாள் வசித்திருந்து, அங்கு நின்றும் அரிதினீங்கிச்சங்கரநாராயணர்கோயிலைச்சார்ந்து திருக்கோயிலிற் சென்று சுவாமிதரிசனஞ்செய்து தமதுதிருமடத்திற்சென்று தமதுஞானசாரியாசுவாமிகள் குருமூர்த்தந்தரிசித்து பூசனைபுரிந்து வழிபாடியற்றி அங்கு சிலநாள்வசித்திருந்து அரிதினீங்கி வழியிடையிற் பலஸ்தலங்கள் தரிசித்து மதுரை, திருப்பூவணம், என்னும் இரண்டு திவ்யஸ்தலங்களையுந்தரிசனஞ்செய்து அங்கு ஞானநிட்டைகூடியருளிய உருத்திரகோடிதேசிகர், வேலப்பதேசிகர் குருமூர்த்தங்கள்தரிசனஞ்செய்து வழிபாடியற்றி அங்குநின்றும் அரிதினீங்கி வழியிடையிற் பலஸ்தலங்களைத்தரிசித்துத். திருவாவடுதுறையை யடைந்து திருக்கோயிலிற்சென்று சுவாமிதரிசனஞ்

செய்து தமது திருமடத்திற்குவந்து சிவப்பிரகாசவிநாயகரையும், திருமாளிகைத்தேவரையும், சித்தாந்தஞான நினைவாகிய நிருதமச்சிவாயதேசிகோத்தமரையும் தெரிசனஞ்செய்து அருச்சித்துவழிபட்டுக்கொண்டு, அங்கு அடியவருக்கருளுபதேசஞ்செய்தமர்ந்த குருவராயினர்.

அக்காலத்தில் ஞானதேசிகர் திருக்கூட்டத்து அடியவர்களிற் சிறந்த மாதவச் சிவஞானதம்பிரான்சுவாமிகள், குருலிங்க சங்கம சேவைசெய்து அங்கு வசிக்கும் நாட்களில் அச்சுவாமிகள் சிலர்நுவேண்டுகோளுக்கிசைந்து சிற்றிலக்கணங்கள் பலவற்றினுள்ளுஞ் சிறந்த நன்னூலுக்குச் சங்கரநமச்சிவாயப் புலவர் செய்த புத்துரையாகிய விருத்தியுரையைத் திருத்தஞ்செய்தும், திருவாரூர் * வைத்திய நாவலர் இயற்றிய இலக்கண விளக்கத்தில் எழுத்ததிகாரம் சொல்லதிகாரமுதலியவற்றினுள்ள வழுக்கள் பலவும் வெளிப்படுமாறு இலக்கண விளக்கச்சூறாவளி என ஒன்று செய்தும், மரபட்டவணையென வழங்கும் சித்தாந்தமரபு என்பதோர் சிறுநூலைத் திருவாவடுதுறை ஆதீனசாம்பிரதாயக் கட்டளை எனக்கொண்டு தருமபுர ஆதீனத்தருள் ஒருவர் மறுத்தெழுதிய சித்தாந்த மரபுகண்டனத்திற்குமறுப்பாக சித்தாந்த கண்டன கண்டனம் என ஒன்றியற்றியருளியும், சிவஞானபோதத்திற்குச் சிற்றுரையும், சிவஞானசித்திசுபக்கத்திற்குப்பொழிப்புரையும் அருளிச்செய்தனர்.

---

* இவ் வயித்தியநாதநாவலர் இலக்கணகொத்துநூலாசிரியராகிய ஈசானதேசிகர் என்னும்சிறப்புபெயருடைய சுவாமிநாததேசிகர்காலத்திலுள்ளவர். அவரைப்பற்றி இலக்கணகொத்துநூல் உரைச்சூத்திரத்துள் அந்நூலாசிரியர் "நூல் செய் தவனந் நூற்குரை யெழுதன்—முறையே யெனிலே யறையக் கேளீ—முன்பின் பலரே யென்கண் காணத்—திருவா ரூரிற் திருக்கூட்டத்திற்—றமிழ்க்கிலக் காகிய வயித்திய நாத—விலக்கண விளக்கம் வகுத்துரை யெழுதின—னன்றியுந் தென்றிசை யாழ்வார் திருநக—ரப்பதி வாழுஞ் சுப்பிர மணிய—வேதியன் றமிழ்ப்பிர யோக விவேக—முரைத்துரை யெழுதின னென்றே பலவே" எனவிதந்தெடுத்தோதுதலின் அவ்வயித்திய நாதநாவலரும் அந்நூலாசிரியர் காலத்திலுள்ளாரென்பது தெரிய வரும்.

பின்பு ஞானதேசிகரிடத்து விடைபெற்றுக்கொண்டு தம்மி டத்துக்கல்விபயிலும் மாணுக்கர் சிலரோடு மாதவச்சிவஞான சுவாமிகள், சிவஸ்தலயாத்திரையின்பொருட்டுத்திருவாவடுதுறை யினின்றும் அரிதினீங்கித்திருத்துருத்தி, மாயூரம்முதலியஸ்தலங் களைத்தரிசித்துச்சிதம்பரஞ்சென்றுசிற்சபேசனைத்தரிசித்துகொற் றவன்குடியினும் திருக்களாஞ்சேரி என்றுபெயர் வழங்குஞ் சிவ நகரின்கண்ணுள்ள சிருங்காரவனத்திலுஞ்சென்று பிரமபுரியீசு வரரையும், சாந்தானகுரவர்களெண்மருள் ஒருவராகிய மறை ஞானசம்பந்தசிவாசாரியரையும், உமாபதிசிவாசாரியரையும்,அரு ளமச்சிவாயதேசிகரையுந் தரிசித்து, அங்கு நின்றும் அரிதினீ ங்கி வழியிடையிற் பலஸ்தலங்களையுந்தரிசித்து வழிபட்டுதிருநா வுக்கரசுநாயனர் கடலினின்றுங்கரையேறிய திருப்பாதிரிப்புலி யூருக்குச்சென்று சுவாமிதரிசனஞ்செய்துகொண்டு அங்கு சில நாள் வீற்றிருந்தருளினர்.

அக்காலத்தில் அச்சிவாலயத்தின்கண்ணே சிலவித்துவான் களும் பிரபுக்களுங்கூடிய சபையில் ஒரு பிரபு நூறுபொன்னைக் கிழியாக்கக்கட்டிவைத்து "கரையேறவிட்ட முதல்வா வுனை யன்றியுமோர்' கதியுண்டாமோ'' என்று ஈற்றடி'யெடுத்துக்கொ டுத்துச் செய்யுளைப் பூர்த்திசெய்பவர் இப்பொற்கிழியை எடுத் துக்கொள்ளலாம் என்று சொன்னர். அக்காலத்து அந்நெகிழ்ச் சியைச் சுவாமி தரிசனத்தின்பொருட்டு அத்தலத்தில் வீற்றிருக் கும் நமது சுவாமிகள் அறிந்து ஒரு ஏழைப்பிராமணனை நோக்கி அப்பொற்கிழியை எடுத்துக்கொள்ளும்படி கட்டளையிட்டு

"வரையேறவிட்டமுதஞ்சேர்ந்தனிடவருந்தினை வல்லினமென்றூனு
முரையேறவிட்டமுதலாகுமோவெனைச்சித்தென்றுரைக்கிலென்
னரையேறவிட்டமுதனுளவனுக்கொண்டுநறும்புலிசைமேவுங் [னு
கரையேறவிட்டமுதல்வாவுன்னையன்றியு மோர்கதியுண்டாமோ.

என்று செய்யுளைப் பூர்த்திசெய்தருளினர்''.

பின்புஅச்சுவாமிகள், திருப்பாதிரிப்புலியூரையகன்றுபோய் காஞ்சிபுரத்திற்கெழுந்தருளி திருக்கோயிலிற்சென்று, ஏகாம்பர நாதசுவாமிதரிசனஞ்செய்து திருக்காமகோட்டத்திற்கு வந்து

காமாக்ஷியம்மையைத்தரிசித்து அப்பதியில் சிலகாலம் அமர்ந்தருளினர். அக்காலத்தில் தினந்தோறும் தம்மைவந்து தரிசித்து வரும் அன்பினர் பலருள்ளே அந்நகர வைணவர்கள் சிலர் கம்பராமாயணகாவியம் ஒன்றுமே தமிழிற் சிறந்திருப்பதெனச் செருக்கோடு கூற, அதனைச்செவியுறுத்தருளியசுவாமிகள் அவர்கள் தருக்கொழித்தர திருவுளங்கொண்டு அக்கம்பராமாயண த்துநாந்திச்செய்யுளாகிய "நாடியபொருள்கைகூடும்" என்னுஞ் செய்யுள் முற்றுங்குற்றமே எனச்சங்கை செய்தருளினர். அத்தருணத்தில் அவ்வைணவர்கள் அச்சங்கைக்கு உத்தரஞ்சொல்ல இயலாமல்வருந்தித்தெரியாது பிதற்றினேமெனச்சொல்லிவணக்கித்துதிக்க, மாதவச்சிவஞானசுவாமிகள் தண்ணளிகூர்ந்து அவ்வைணவர்கள் உவப்புற, * அச்சங்கைக்குத்தாமே உத்தரம்வித்தமுறக்கூறியருளினர்.

அன்றியும் அப்பதியில் யாத்திரைபாகவந்தருளிய திருவண்ணாமலை ஆதினமென்று வழங்கப்பெறுந்தெய்வசிகாமணிதேசிகர் ஆதினத்துப்பண்டாரசந்நிதிகளில் ஒருவர்; சிவஞானசித்தியில், "என்னை யிப்பவத்திற் சேராவகையெடுத்து" என்னுஞ் செய்புளில் "எடுத்து" என்னுஞ்சொல்லுக்கு பொருள் என்னை? என்று தமது ஆதினத்து ஞானப்பிரகாசமுனிவர் இயற்றிய சிவசமவாதவுரையின் உயர்வுதொனிக்கும் வண்ணம், மாதவச்சிவஞானசுவாமிகளிடத்தே வினவுவித்தனர். அக்காலத்தில் அச்சுவாமிகள் (எடுத்து) என்னுஞ்சொல்லுக்குச் சிவசமவாதவுரை மறுப்பு என ஒன்றும், அதன்மேற் பிரதிகண்டனம் உண்டாயவழி மேன்மறுத்த மறுப்புகுதர்க்கவுரையாளராற் போழ்படாதவாறு (எடுத்து) என்னுஞ்சொல்லுக்கிட்ட வயிரக்குபாயம் எனஒன்றும், சிவஞானசித்திக்கு ஞானப்பிரகாச முனிவர் இயற்றிய வுரை முற்றும் போலியுரையென விளக்கச் † சிவசமவாதவுரை மறுப்பு என ஒன்றுஞ்செய்தருளினர்.

---

* அச்சங்கை உத்தரங்களை வரைந்தநூலுக்குக் கம்பராமாயணமுதற்செய்யுட்சங்கோத்தரவிருத்தி என்று பெயர்வழங்குகின்றது.

† சிவசமவாதவுரைமறுப்பு சிவசமவாதகண்டனம் என வழங்கப்படுகின்றது.

அன்றியும், சித்தாந்த சைவபரமாசாரியராகிய, சர்வாத்ம சம்புசிவாசாரியசுவாமிகள் அருளிச்செய்த கத்தியரூபமாகிய வடமொழிச்சித்தாந்தப் பிரகாசிகையை மொழிபெயர்த்து அவ்வாறே, தென்மொழியில் வசனமாக ஒருநூலையியற்றியும், சிவாக்கியசோழமகாராசா காலத்தில் கஞ்சனூரில் அவதரித்தருளிய ஆசாரியசரணராகிய ஸ்ரீஅரந்தசிவாசாரியசுவாமிகள் வைணவமதகண்டனஞ்செய்து சைவமதஸ்தாபனஞ் செய்யும்பொருட்டு நெருப்பிலே பழுக்கக்காச்சிய இருப்புமுக்காலியிலே எழுந்தருளியிருந்து சிவபெருமானே பரம்பொருளென இருபத்திரண்டு ஏதுக்களாலே நாட்டியருளிய சுலோகபஞ்சகத்தின்மொழிபெயர்ப்பும், ஸ்ரீஅப்பய்யதீக்ஷிதர் அருளிச்செய்த சிவதத்துவ மூலமொழிபெயர்ப்பும், ஜமதக்கினிமுனிவருடையபுத்திரரும் இடைச்சங்கப் புலவர் ஐம்பத்தொன்மருள் ஒருவருமாகிய திரணதூமாக்கினி என்னும் தொல்காப்பியமுனிவர் அருளிச்செய்தஇலக்கணநூலாகிய தொல்காப்பியத்திற்கு உரையாசிரியராகிய இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் என்னும் மூவரியற்றிய உரைகளினுள்ள ஆசங்கைகளை நீக்கித்தெளிவிக்கும்பொருட்டு அத்தொல்காப்பியத்தின், பாயிரத்திற்கும், முதற்சூத்திரத்திற்கும், சூத்திரவிருத்தி, எனப்பெயர் தந்து பாஷியமொன்றும் இயற்றியருளினர்.

பின்பு மாதவச்சிவஞானசுவாமிகள், தம்மாணாக்கர் பல்லோருடனும் காஞ்சீபுரத்தினின்றும் புறப்பட்டுவழியிடையிற்பலஸ்தலங்களைத்தரிசித்து திருவொற்றியூரையடைந்து திருக்கோயிலிற்சென்று சுவாமிதரிசனஞ்செய்து மணலி சின்னையாமுதலியார் வேண்டுகோளுக்கிசைந்து அங்குசிலகாலம் வீற்றிருந்தருளுவாராயினர். அக்காலத்தில்சித்தாந்தசூத்திரமாகியசிவஞானபோதப் பன்னிருசூத்திரங்களுக்கும் விருத்தியுரை எனப்படும் மாபாடியம் இயற்றுதற்பொருட்டுவேதநூல் ஆராயத்திருவுளங்கொண்டு, சுவாமிகள், தம்மை ஆதரித்து வரும் மணலி சின்னையாமுதலியாரிடத்து அவ்விருப்பத்தினைத் தெரிவிக்க, அவர் அங்ஙனமே அந்தணர்களை ஒருங்குசேர ஓரிடத்தில் அழைத்து அவர்களுக்குச் சுவாமிகளுடைய பெருமைகளையெல்லாம் எடுத்துச்சொல்

விக்கொண்டு இறுதியில் சுவாமிகள் திருமுன்பு இருந்து வேதங்களை ஒழுங்காக ஓதிவரவேண்டுமென்று கேட்டனர். அப்பொழுது அவ்வந்தணர்கள் சுவாமிகள் வேதம் ஓதுதற்குரிய சாதியார் அல்லராயினும் முற்றத்துறந்த முனிவராக வீற்றிருத்தலினால் மறுத்தற்கு முடியாமல், தியாகராசப்பெருமானுக்குத் திருவுளச்சம்மதமானால் அவ்வாறே தடையில்லாமல் ஓதுவோம் என்றனர். அதைக்கேட்ட முதலியார்சுவாமிகள்பால் விண்ணப்பஞ் செய்ய, சுவாமிகளும் அதற்கு முழுதும் இசைந்தருளினர்.

பின்பு பின்னைபாமுதலியார், ஓர் சுபதினத்தில், சுவாமிகளையும் அந்தணர்களையும் அழைத்துக்கொண்டு திருக்கோயிலிற் சென்று தியாகராசப் பெருமானுக்கு விசேட பூசைசெய்வித்து வழிப்பட்டுக்கொண்டு, அப்பெருமான் சந்நிதியில் சந்தனக்குடம் வைப்பித்து ஓதுக என்றெழுதப்பட்ட சீட்டை எழுதப்படாத மற்றுத் தொன்னூற்றென்பதனோடுஞ் செறித்து அக்குடத்தினுட்பெய்வித்து அவற்றுள்ஒன்றை ஓர்பிராமணக்குழந்தையைக் கொண்டெடுப்பித்துநோக்கின் விடத்து, அது ஓதுகவென்றெழுதப்பட்டதே யாயிருப்பக்கண்டு, அந்தணர்கள் யாவரும் பேரற்புதமெய்தி சுவாமிகளுடையபெருமையைமுற்றத்தேர்ந்து மகிழ்வுற்றனர்.

பின்பு தியாகராசப்பெருமான் சந்நிதியிலே சுவாமிகள்தனிமைக்கண் அமர்ந்து கேட்ப அந்தணர்கள் வேதங்களை முறையானே ஓதிவருவாராயினர். மாதவச்சிவஞானசுவாமிகள் தாம் அகத்தியமுனிவர் வரத்தானே அவதரித்தருளிய அருந்தவச் செல்வராதலின் ஓதக்கேட்ட மாத்திரத்தே அம்மறைப்பொருள்களை முன்னோடு பின்மலைவின்றி முற்றத்தெளிந்துகொண்டனர்.

பின்பு மாதவச்சிவஞானசுவாமிகள், திருக்கோயிலிற்றினந்தோறுஞ்சென்று சிவபிரானையும் உமாதேவியையும் தரிசித்துக்கொண்டு சிலநாள் அங்கு இருந்து பின் மணலிசின்னையாமுதலியார் முதலான அன்பர்கள் தம்மைப்பின்றொடர்ந்து வழிபட்டுப் பிரியாவிடைபெற்றுநிற்ப, தாம்மாணாக்கர்களோடு அத்தலத்தினின்றும் அரிதினிங்கி வழியிடையினுள்ள சிவஸ்தலங்களைத்

தரிசித்துக்கொண்டு திருக்காஞ்சிநகரையடைந்து அங்கு ஏகம்பத்திலும் ஏனையத்திருக்கோயில்களினுஞ் சென்று சிவபிரானை வணங்கிக்கொண்டெழுந்தருளியிருந்து தமிழ்ச் சிவஞானபோத மாபாடியஞ்செய்தருளுவாராயினர். இது நிற்க.

சுசீந்திரத்தில் வீற்றிருந்து சீடர்களுக்குத் தீக்கையாதிகள் செய்துவரும் துவிதிய ஆசிரியராகிய திருச்சிற்றம்பலதேசிக சுவாமிகள், தமது ஞானதேசிகரைத்தரிசித்து நெடுங்காலமான தால் அத்தேசிகசுவாமிகளைத் தரிசிக்க விரும்பி, அவ்விடத்தை விட்டுப்புறப்பட்டு ஆங்காங்கு பலதலங்களையுந் தரிசித்துக்கொண்டு திருவாவடுதுறையை யடைந்து திருக்கோயிலிற்சென்று சுவாமிதரிசனஞ்செய்து தமது திருமடத்துக்கு வந்து சிவப்பிரகாச விநாயகரையுந், திருமாளிகைத்தேவரையும்,ஞானநடராசப் பெருமானையுந்தரிசித்துவணங்கிக்கொண்டு, ஆதீனபிரதமாசாரியராகிய நமச்சிவாயதேசிகோத்தமர் தரிசனஞ்செய்து ஒடுக்கத்திற்சென்று தமது ஞானசாரியசுவாமிகளைத்தரிசித்து, வடக்குமடாலயத்திற்சென்று வீற்றிருந்து தினந்தோறும் திருக்கோயிலிற் சென்று சுவாமிதரிசனஞ் செய்துகொண்டும் ஆதீனமுதற் குரவரையுந் தமது ஞானசாரியசுவாமிகளையுந் தரிசனஞ்செய்து கொண்டும் அங்கெழுந்தருளியிருந்தனர். இஃதிவ்வாறாக.

முன்பு காஞ்சிபுரத்தில் எழுந்தருளி யிருந்து சித்தாந்த சூத்திரமாபாடியஞ் செய்தருளுஞ் சிவஞானசுவாமிகள், அம் பாடியந்தான் குருவருள் நின்று காத்தருள இனிது முற்றுப் பெற்றது. அச்சுவாமிகள் பின் அத்திருப்பதியையகன்று வழியிடையிற்பலஸ்தலங்களையுந்தரிசித்துக்கொண்டு திருவெண்ணெய் நல்லூரையடைந்து திருக்கோயிலிற்சென்று சுவாமிதரிசனஞ் செய்து பொல்லாப்பிள்ளையார் சன்னிதியைச்சார்ந்து சிவஞான போத திராவிடமாபாடிய முறையை விநாயகர் திருமுன்பு வைத்து ஆதிசைவர் ஒருவரைக்கொண்டு அருச்சனை நைவேத்தியம் தீபாராதனைசெய்வித்து திருவருள்பெற்று, திருவருட்டுறை என்னுந் திருமடாலயத்தை யடைந்து மெய்ஞ்ஞானபாநுவாகி விளங்கி வீற்றிருக்கும் மெய்கண்டசிவாசாரியசுவாமிகள் குரு

மூர்த்தந்தரிசனஞ்செய்து அத்தேசிகோத்தமருக்குவிசேடபூசைசசிறப்புறச்செய்து அவ்வாசிரியசுவாமிகள் திருமுன்பு சிவஞானபோத திராவிடமாபாடியத் திருமுறையை வைத்து அருச்சனை நிவேதனம் தீபாராதனை அன்புடனியற்றித் திருவருள் பெற்று, அங்குநின்றும் அரிதினீங்கித் திருத்துறையூருக்கெழுந்தருளி அருணந்திசிவாசாரியசுவாமிகள் குருமூர்த்தந்தரிசித்து விசேடபூசைசிறப்புறச்செய்து, அத்தேசிகோத்தமரது திருமுன்புஅப்பாடியத்திருமுறையை வைத்து பூசனைபுரிந்து திருவருள்பெற்று, அங்குநின்றும் அரிதினீங்கி வழியிடையிற் பலஸ்தலங்களைத்தரிசித்துச் சிருங்காரவனமெனப்பெயர்வழங்குந்திருக்களாஞ்சேரிக்கெழுந்தருளி, பிரமபுரீசுவரர் திருக்கோயிலிற்சென்று சுவாமி தரிசனஞ்செய்து, மறைஞானசம்பந்தசிவாசாரியசுவாமிகள்குருமூர்த்தந்தரிசித்து விசேட பூசைசெய்து அத்தேசிகசுவாமிகள் திருமுன்பு அப்பாடியத்திருமுறையை வைத்து அருச்சனாதிகள் இயற்றி திருவருள்பெற்று, அங்கு நின்றும் அரிதினீங்கிச்சிதம்பரத்தையடைந்து திருக்கோயிலிற்சென்று சிற்சபேசர்தரிசனஞ்செய்து விசேடபூசையியற்றிவித்து சிதம்பரேசுவரர் திருமுன்பு அப்பாடியத்தை வைத்து பூசனைபுரிவித்துத் திருவருள்பெற்று, கொற்றவன்குடிக்குச்சென்று உமாபதிசிவாசாரியசுவாமிகள்குருமூர்த்தந்தரிசித்துவிசேடபூசையியற்றி அப்பாடியத்தை அத்தேசிகோத்தமர் திருமுன்புவைத்து அருச்சனாதிகள் புரிந்து திருவருள்பெற்று, அருணமச்சிவாயர் குருமூர்த்தந்தரிசித்து வழிபாடியற்றி அக்குருபரர் திருமுன்பு அப்பாடியத்தைவைத்து பூசைசெய்து திருவருள்பெற்று, அங்கு நின்றும் அரிதினீங்கி வழியிடையிற் பலஸ்தலங்களையுந் தரிசித்துத் திருவாவடுதுறையையடைந்து திருக்கோயிலிற் சென்று சுவாமிதரிசனஞ் செய்து தமது ஆதீனத்திருமடத்துக்குவந்து சிவப்பிரகாசவிநாயகரையுந், திருமாளிகைத்தேவரையும், நமசிவாயதேசிகோத்தமரையுந் தரிசித்து அம்மாபாடியத்திருமுறையை அவ்வச்சந்நிதிகளில்முன்பு வைத்து அருச்சனாதிகள் இயற்றித்திருவருள்பெற்று, ஒடுக்கத்திற் சென்று * தமது ஞானாசாரியசுவாமிகள் திருநாமம்பெற்ற

* தமது ஞானாசாரியர் என்றது பஞ்சாக்கரப் பஃறொடை இயற்றிய நூலாசிரியர் என அறிக.

ஸ்ரீபஞ்சாக்கரதேசிகர் ஆதீனகர்த்தராகிய ஞானுசாரியசுவாமிகளைத்தரிசித்து மாபாடியத்திருமுறையைத்திருமுன்னர்வைத்து வழிபட்டு அர்ப்பணஞ்செய்தநிற்ப; ஞானதேசிகர் திருவுளமகிழ்ந்து அவர் தமக்குத் திருவருட்பிரசாதமளித்துப்பின் தம் அருகிருக்கப்பணித்து நல்வரவுவினவி திருவுளத்துக்களிப்புமீதூர வீற்றிருந்தருளினர், பின்பு சிவஞானசுவாமிகள், அங்கு நின்றும் அரிதினீங்கி வடக்குமடத்திற் சென்று துவிதீய ஆசிரியராகிய திருச்சிற்றம்பலதேசிகரைத் தரிசித்து அடியார்களோடு கலந்து அன்புகொண்டாடி வீற்றிருந்தனர்.

பின்பு ஓர்சுபதினத்தில்ஞானதேசிகர்முன்புதிருச்சிற்றம்பலதேசிகரும் அடியார்களும் சைவநூல்வல்லாரும் வேதசிவாகமபண்டிதர்களும் குழுமிய திருச்சபையில் சிவஞானசுவாமிகள் தாமியற்றிய சிவஞானபோதத்திராவிடமாபாடியத்தை வாசித்துப் பொருள்விரிக்கத் தொடங்கிச் சிலநாட்களுக்குள் அதனை முற்றுவித்தலும், ஞானதேசிகர்திருவுளமகிழ்ந்து இம்மாபாடியந்தான், நம்திருச்சிற்றம்பலவர்க்கேமுற்றினும்உரிமையாகற்பாலது என்று வினயமொழியாகத் திருவாய்மலர்ந்தருள, அதனைக்கேட்ட யாவரும் பெருமகிழ்ச்சியெய்தினர்.

பின்பு சிவஞானசுவாமிகள் ஞானதேசிகரிடத்துவிடைபெற்றுக்கொண்டு அரிதினீங்கிக் காஞ்சிபுரத்திற்கு எழுந்தருளி அங்கு நன்மாணுக்கர் பலருக்கு ஞானநூல்களும் பிறவும் கற்பித்துவருவாராயினர். இது நிற்க,

துவிதீய ஆசிரியராகிய திருச்சிற்றம்பலதேசிகருக்கும்தம்பிரான்சுவாமிகளுக்கும் ஏனைய அடியவர்களுக்கும் சித்தாந்தப்பொருள்தெளிவுறவிளக்கி வீற்றிருக்கும்ஞானதேசிகர், திருப்பறியலூர்ப்புராணம் மொழிபெயர்த்தருளினர். பின்பு ஞானதேசிகர் பாண்டிய நாட்டின்கண்ணும் சேரநாட்டின்கண்ணுமுள்ள தமது சீடர்களுக்குத் தீக்கையாதிகள் செய்யத்திருவுளங்கொண்டு திருக்கோயிற்பூசை சிறப்புறச்செய்வித்து வழிபாடியற்றி பின்புதிருமடத்தில் சிவப்பிரகாசவிநாயகருக்கு தாம் விசேஷ பூசைசெய்து

திருமாளிகைத் தேவருக்கும் அவ்வாறு செய்வித்துக்கொண்டு அங்கு சித்தாந்தஞானவீர சிங்காதனத்திடை வீற்றிருந்தருளும் நமச்சிவாயதேசிகோத்தமருக்கு தம்முள்ளத்து நிறைந்த காதலோடு சிறப்புறப்பூசனைபுரிந்துவணங்கிவிடைபெற்று, அங்குநின்றும் அரிதினீங்கி, தமதுபிற்ளேன்றலாகிய திருச்சிற்றம்பலதேசிகரும், தம்பிரான்சுவாமிகளும், ஏனைய அடியவர்களும், உடன்வர வழியிடையில் பலஸ்தலங்களையுந் தரிசித்துக்கொண்டு திருப்பெருந்துறையைச்சேர்ந்து அங்கு காலந்தோறும் திருக்கோயிலிற்சென்று ஆன்மநாதரையும் யோகாம்பிகையையும் மாணிக்கவாசகசுவாமிகளையும் நிறைந்தகாதலினால் இறைஞ்சி ஏத்திக்கொண்டு தமது திருமடத்தில் வீற்றிருந்தருளுவாராயினர்.

அக்காலத்தில் ஞானதேசிகர் தாம் அங்கு மலப்பிணியால் வருந்தித் தம்மையடைந்த பரிபக்குவர் பலர்களுக்குத் திருவருளுபதேசஞ்செய்து பேரானந்தப் பெருவாழ்வளித்ததுமன்றி உடற்பிணியால் மிகவருந்தித் தம்மைச்சரணடைந்த பலர்க்கும் அது நீக்கி உயிர்வாழ்வைத்தலுஞ் செய்தருளினர்.

பின்பு குறுநிலமன்னராகி இராமநாதபுரத்தில்அரசுபுரிந்துவரும் சேதுபதிகளில் ஒருவர் ஞானதேசிகர் மகிமையினைக்கேள்வியுற்று அங்குவந்து ஞானசாரியசுவாமிகளைத்தரிசித்து, விண்ணப்பஞ்செய்து தமக்கு நேர்ந்த உடற்பிணியை நிவிர்த்திக்கப்பெற்று மகிழ்வுற்று, அவ்வரசர் ஞானசிரியர்பூசை மாகேசுவர பூசையின்பொருட்டுப்பூதானமீந்து தாம்பிராசனஞ்செய்துகொடுத்தனர். இங்ஙனம் சிலகாலம் ஞானதேசிகர் அங்கு வீற்றிருந்து பின் அத்திருப்பதியிலே ஓர் வைகாசி மாதத்துப்பூரட்டாதிநட்சத்திரத்திலே பொன்னம்பலவர் பூங்கழலெய்தினர்.

இவ்வேலப்பதேசிகர் திருநந்திதேவர் அருளுபதேசமரபில் இருபதாவது பிற்ளேன்றலாக வெழுந்தருளியிருந்த வேலப்பதேசிகர்பால் அருளுபதேசம் பெற்றனர் என்பது இவர் தாம் இயற்றிய திருப்பரியலூர்ப்புராணப் பாயிரத்துட் கூறிய குருதோத்திரப்பாக்களால் இனிது புலப்படும்.

அவைவருமாறு:—

சிவன் மலைக் காவல் பூண்ட திருநந்தி சனற் குமாரன்
பவ மகல் சத்ய ஞானி பரஞ்சோதி மெய்கண்டான் மேற்
றவ வருணந்தி தேவன் றரு மறைஞான சம்பந்தன்
நவை யறு கலை கடேரு முமாபதி நமச்சி வாயன். (க)

துகளறு சிவப்பிரகாசன் றுறைசைவாழ் நமச்சிவாயன்
திகழ்மறை ஞானதேவன் சிறந்த வம்பல வாணன்மேற்
பகரு ருத்திரகோடிப்பேர் பண்பின்னருள் வேலப்பன்
இகலறு குமாரசுவாமிப் பெயரி னரிருவர் மேலோர். (உ)

தேவரும் பரசுமாசிலாமணி யிராமலிங்கர்
யாவருங் காண விந்நாளென்னையு மடியனுக்கி
மேவருஞ் சிறப்பு மீந்த வேலப்ப தேவனிந்தத் [ம்
தாவில் சீர்க்குரவர் செய்ய தாண் முறை பணிந்து வாழ்வா

பின் வேலப்பதேசிகர் சரித்திரம்

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

இருபத்திரண்டாவது,
திருச்சிற்றம்பலதேசிகர் சரித்திரம்.

திருச்சிற்றம்பலம்.

புராதனமாய்ப் பூரணமாய்ப் புண்ணியமாய்ப் பொலிவா யொன்றய், நிராமயமாய் நிட்களமாய் நித்தியமாய் நிரஞ்சனமாய் நிமல மாகிப், பராபரமாய் நிறைந்தருளும் பெருங்கருணைப் பிழம்புமொரு படிவ மாகித், தராதலத்தி லவதரித்த திருச்சிற்றம் பலகுருவின் றுள்கள் போற்றி.

குருபரம்பரை விளக்கம்.

திருமுகவைக் கிறைவேண்ட வவ்வனமே யுலகின்வெம்மை சிறையத்துன்னி, வருதுழனி முகில்சுரந்து நீர்பொழிந்து வளம் பெருக வாய் மலர்ந்த, பெரும்விரையாக் கலியுடையான் சிவாகமத்தினீரிலக்கம் பெரிது மோர்ந்தோன், குருதிருச்சிற்றம்பல வன்றுறைசை யமர்கோமான் றன்குலத்தாள் போற்றி.

சிவாகமத்தில் இரண்டு லக்ஷ சுலோகமும் பெய்கண்ட சாத்திரமெனப்பெயர்பெறுஞ் சித்தாந்தசாத்திரமாகிய, சிவஞானபோதம், சிவஞானசித்தி, சிவப்பிரகாசமுதலிய பதினான்குஞானசாத்திரங்களையும் பண்டாரசாத்திரமெனப்பெயர்பெறும் சித்தாந்தசிகாமணி, சித்தாந்தப்பஃறொடை, உபதேசப்பஃறொடை முதலிய பதினான்கு ஞானநூல்களையும் நன்குணர்ந்த சித்தாந்தஞானபாநுவாகிய திருச்சிற்றம்பலதேசிகர் தாம் திருப்பெருந்துறை என்னுந்திவ்யஸ்தலத்தில் தமது ஞானாசிரியசுவாமிகள்பரிபூரணமுற்றருளிய ஞானசமாதியில் திவ்விய ஆலயமெடுத்து சிவலிங்கபிரதிட்டைசெய்து நித்தியநைமித்திய பூசைகள் சிறப்புறவியற்றிக்கொண்டு சிலநாள் அங்குவசித்திருந்து அங்குநின்றும் அரிதினீங்கித் திருவாவடுதுறையை வந்தடைந்து ஞானநாயகராகிய நமசிவாயதேசிகோத்தமர் திருவருண்மகிமை சிறந்து விளங்க அங்கு வீற்றிருந்து சீடர்களுக்குத் தீக்கையாதிகளுஞ்சித்தாந்த உபதேசமும் செய்து வருவாராயினர்.

அக்காலத்தில், ஞானதேசிகர் பாண்டிவளநாட்டின் கண்ணுள்ள கடையநல்லூரென்னுந் திருநகரிலே அவதரித்தவரும் தம் அடியார் பல்லோருள்ளுஞ் சிறந்தவரும் ஆகிய அம்பலவாணத்தம்பிரானுக்கு ஆசாரியாபிடேகஞ் செய்தருளத் திருவுளங்கொண்டு, ஆங்காங்கு தமது சீடர்களுக்கும் பிறருக்கும் ஆசாரியாபிடேகச்சுபதினம் குறிப்பித்ததிருமுகம் அனுப்பியருளினர். அங்ஙனம் ஞானதேசிகர் அனுப்பியருளிய திருமுகங்களுள் ஒன்று காஞ்சிபுரத்திலெழுந்தருளியிருக்கும் சித்தாந்த சூத்திர திராவிட மாபாடிய கர்த்தராகிய மாதவச்சிவஞானசுவாமிகளிடத்துச்செல்ல அச்சுவாமிகள் அதனைக்கண்ணுற்றமாத்திரத்தே அகமிகமகிழ்ந்து அங்குநின்றும் புறப்பட்டுத் தம் மாணாக்கர்

பலரோடும் திருவாவடுதுறையை வந்தடைந்து நமசிவாயமூர்த்திகளையும், ஞானதேசிகரையுந் தரிசித்து அங்கு எழுந்தருளியிருந்தனர்.

பின்பு ஞானதேசிகர், குறித்த சுபதினத்தில் அம்பலவாணத் தம்பிரானுக்கு ஆசாரியாபிடேகம் இயற்றித் தமக்குத் துவிதீய ஆசிரியராக வைத்தருளினர். அக்காலத்தில் மாதவச்சிவஞான சுவாமிகள் தம்பாற் கல்விபயிலும் மாணவர்களுள் இலக்கண நூற் பயிற்சியில் வல்லுநராய் தீவிரதரபக்குவராய் இருக்கும் சிதம்பரநாதர் என்பவரை ஞானதேசிகர்பால் சைவசந்நியாசமும் மூவகைத்தீக்கையையும் பெறுவித்துப்பின்புதாம் ஞானதேசிகர் பால் விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டுப்போய் காஞ்சிபதியைச் சேர்ந்து அங்கு சிதம்பரநாத தம்பிரான்சுவாமிகள் முதலிய மாணவர்களோடு வசித்திருந்தனர். இது நிற்க.

திருத்தணிகைப் பதியிலே சைவாசாரிய குலத்திலவதரித்துக் கச்சியப்பர் எனப்பெயர்கொண்ட ஒருவரும், சிதம்பரத்தைச்சார்ந்த காட்டுமன்னார்கோயில் என்னும் ஊரிலே கார்காத்தவேளாளர் குலத்திலே பூகோடையார் கோத்திரத்திலே அவதரித்து சுப்பிரமணியர் என்ற இயற்பெயர்கொண்ட ஒருவரும் பரிபக்குவ வயத்தானே திருவாவடுதுறையைவந்தடைந்து ஞானதேசிகரைத் தரிசித்தனர். அக்காலத்தில் ஞானதேசிகர், தாம் அவர்கள்பாற்றிருவுளமிரங்கி அவ்விருவர்களுக்கும் தம்பிரான் சுவாமிகளால் யாத்திரை காஷாயம் கொடுப்பித்தனர். பின்பு தமது துவிதீய ஆசிரியராகிய அம்பலவாணதேசிகருக்குஆஞ்ஞை செய்தருள, அத்தேசிகசுவாமிகள் அவ்விருவர்களுக்கும் சமய தீக்ஷையும், விசேட தீக்ஷையுஞ்செய்து மந்திரகாஷாயமுங் கொடுத்தருளினர்.

பின்பு சிலகாலஞ்சென்று ஞானதேசிகர், பாண்டிநாட்டின் கண்ணும் சேரநாட்டின்கண்ணுமுள்ள தமது சீடர்களுக்குத் தீக்கையாதிகள் செய்யத்திருவுளங்கொண்டு, ஓர் சுபதினத்தில் அங்கு நின்றும் அரிதினீங்கித், துவிதீய ஆசிரியராகிய அம்பல

வாணதேசிகசுவாமிகளும், தம்பிரான்சுவாமிகளும், ஏனைய அடியார் குழாங்களும் பின்றொடர்ந்துவரத், திருப்பெருந்துறையையடைந்து அங்குதிருக்கோயிலிற்சென்று சுவாமிதரிசனஞ்செய்து கொண்டு தமது திருமடத்திற் கெழுந்தருளி தமது ஞானாசிரியசுவாமிகள் குருமூர்த்தந்தரிசித்து அருச்சனை புரிந்து வழிபட்டுக்கொண்டு சிலநாள் அங்கு வீற்றிருந்தருளினர்.

பின்பு ஞானதேசிகர், அங்கு நின்றும் புறப்பட்டு திருவிராமேச்சுரத்திற் சென்று, அங்கு தீர்த்தஸ்நானஞ்செய்து திருக்கோயிலிற்சென்று சிவபிரானைத் தரிசித்து அங்கு சிலநாள் வசித்திருந்து, பின் அங்கு நின்றும் அரிதினீங்கித் திருவாலவாயினை நோக்கிச்செல்லுவார், வழியிடையிலுள்ள இராமநாதபுரத்தையடைதலும், அந்நகரத்திலுள்ள அமைச்சர் முதலான தம் சிஷ்யவர்க்கத்தினரும் ஏனையோரும் எதிர்கொண்டுவழிபட, தாம் அவருக்கெல்லாந் தண்ணருள் பாலித்துச்சென்று ஆங்கு ஓர் திருமடத்தில் எழுந்தருளியிருந்தனர். அங்ஙனம் ஞானதேசிகர் எழுந்தருளியதை அமைச்சர் முதலாயினோர் சேதுபதி என்னும் தம் மன்னவருக்குத் தெரிவிக்க, அம்மன்னவர் அப்போது தமது நாட்டில் மழையில்லாமையால் குடிகள் மிகவும் வருந்துவதைக் குறித்துத் தம்முள்ளமானது கவலைக்கடலுள்மூழ்கிக் கிடந்தமையால், அமைச்சர்முதலானோரை நோக்கி நமது குருமூர்த்திகள் இப்போது மழைபெய்யும்படி செய்வார்களா என்று வினவ, அவர்கள் அங்ஙனம் அனுக்கிரகஞ் செய்வார்களென்று தெரிவித்து, அவ்வரசரை அழைத்துக்கொண்டுபோய் ஞானதேசிகர் திருவடிகளில் வணங்கச்செய்து, தாங்களும் சற்குருபாஞ்சரணிணைபணிந்து அரசர் கருத்தையும் விண்ணப்பஞ்செய்தனர். அதற்குஅவ்வண்ணமே திருநடராசர் திருவருள்செய்வாரென்று ஞானதேசிகர் நவின்றருளினர்.

பின்பு ஞானதேசிகர் சிற்சபேசர்பூசை சிறப்புறச்செய்து திராவிடவேதத்திலே மேகராகக்குறிஞ்சி யென்னும் பண்ணமைந்த பதிகங்களை அப்பண்முறையோடு தமதுசீடர்கள்பாடத்,தாம்

திருவடித் தியானத்தோடு ஸ்ரீ பஞ்சாக்ஷரத்தைச் செபித்துக் கொண்டிருந்தனர். உடனேமேகங்கள்மழைபொழிந்து நாடுகளை வளப்படுத்தின. அதனையுணர்ந்தசேதுபதிபெரிதும்அற்புதமெய்தி அன்பின்வயத்தராய்ச்சென்று, ஞானதேசிகரைத்தரிசித்து அத்தேசிகசுவாமிகளுக்கு பூசைமாகேசுரபூசை சிறப்புறவியற்றி வைத்துத் தம் அரசமாநகரில் பவனிவரவழைத்து குருதரிசனக் காக்ஷியை யாவரும் பெற்றுய்யுமாறுசெய்வித்து, அவ்வரசர் தாம் எடுத்தபிறவியினாலெய்திடும் பேற்றினைப்பெற்று பேரின்பமெய்தி ஞானதேசிகருக்கு சபாபதிபூசையின் பொருட்டும் குருபூசை மாகேசுவரபூசையின்பொருட்டும்சர்வமானியகிராமங்கள்தானஞ் செய்து தாமிரசாசனமும் வரைந்துகொடுத்தனர்.

பின்பு ஞானதேசிகர், அந்நகரத்தில் சிலநாள் வீற்றிருந்து அரசர்முதலானோர் பின்றொடர்ந்து பிரியாவிடைபெற்றுநிற்ப, தாம் துவிதீய ஆசிரியராகிய அம்பலவாணதேசிகசுவாமிகளும், தம்பிரான்சுவாமிகளும், ஏனைய அடியவர்களும், பரிசனங்களும் உடன்வர அங்குநின்றும் புறப்பட்டு திருப்பூவணத்தைச்சார்ந்து திருக்கோயிலிற்சென்று ஆதீனப்பிரதமாசாரியராகிய நமசிவாய தேசிகோத்தமருக்கு ஐந்தாவது பிற்றோன்றலாகிய வேலப்ப தேசிகர் குருமூர்த்தந் தரிசனஞ்செய்து, அங்குதமது திருமடத்தில் சிலநாள் வசித்திருந்து அங்குநின்றும் அரிதினீங்கி மதுரைமாநகரையடைந்து திருக்கோயிலிற்சென்றுசொக்கலிங்க மூர்த்தியையும் மீனாக்ஷிசுந்தரேசுவரியையும் தரிசித்து வழிபாடியற்றி, தமதுஆதீனமுதற்குரவருக்கு நான்காவது பிற்றோன்றலாகிய உருத்திரகோடிதேசிகர் குருமூர்த்தந் தரிசித்து அங்கு தமது திருமடத்தில் சிலநாள் வசித்திருந்து அரிதினீங்கி வழியிடையிற் பலஸ்தலங்களை தரிசனஞ்செய்துகொண்டு சுசீந்திரத்தை யடைந்து திருக்கோயிலிற்சென்றுசுவாமிதரிசனஞ்செய்து தமதுதிருமடத்திற்கெழுந்தருளி ஆதீனமுதற்குரவர் பிரதிட்டாலயத்தையடைந்து ஞானதேசிகராகிய நமசிவாயதேசிகோத்தமரை யிறைஞ்சிவழிபாடியற்றி, இருகுமாரசுவாமிகள்குருமூர்த்தங்கள் இரண்டையுந்தரிசித்துச் சீடர்களுக்குத்தீக்கையாதிகள் செய்துகொண்டு சிலகாலம் அங்கெழுந்தருளியிருந்தனர்.

பின்பு ஞானதேசிகர், திருவாவடுதுறைக்கெழுந்தருளத் திருவுளங்கொண்டு துவிதீய ஆசிரியராகிய அம்பலவாணதேசிகசுவாமிகளை அங்குசிடர்களுக்குத் தீக்கையாதிகளுஞ் சித்தாந்தசாத்திரோபதேசமுஞ்செய்துவருமாறு கட்டளையிட்டுத், தாம் அங்குநின்றும் புறப்பட்டு வழியிடையில் ஆங்காங்கு வழிபட்டேத்தும் அடியவர்களுக்குத் தண்ணருள் வழங்கிச்சென்று, திருவாவடுதுறையைச்சேர்ந்து ஞானாநந்தசொரூபியாகிய நமச்சிவாயதேசிகோத்தமரைத்தரிசித்து அங்கு எழுந்தருளியிருந்து நித்தியநைமித்தியபூசைகள் சிறப்புறவியற்றிக்கொண்டு திருவருளுபதேசஞ்செய்து வருவாராயினர்.

அக்காலத்தில், திருநந்திதேவர் அருளுபதேசமரபில் பத்தாவது பிற்றோன்றலாகிய சித்தர்சிவப்பிரகாசதேசிகர் திருவருளாணைமேற்கொண்டு அவ்வாசிரியசுவாமிகள் திருவுளப்பாங்கின்படி அவர்வகுத்ததிருவறையில்வீற்றிருந்துசிடர்களுக்கு ஞானோபதேசஞ்செய்து கொண்டு திருவாவடுதுறை ஆதீனபிரதமாசாரியாக எழுந்தருளியிருந்து தவ அரசாட்சிபுரிந்துவரும் நமச்சிவாயதேசிகோத்தமருக்கு பத்தாவது பிற்றோன்றலாகிய வேலப்பதேசிகசுவாமிகளிடத்தே சைவசந்நியாசமும், மூவகைத்தீக்கையும் சித்தாந்தசாத்திரோபதேசமும்பெற்றுத்தென்மொழி, வடமொழி என்னும் தேவபாஷைகள் இரண்டினும் தேர்ச்சியுற்றுத் திருவாவடுதுறையில் எழுந்தருளியிருந்த சாமிநாதத்தம்பிரான்சுவாமிகள், வடமொழியினின்றும் மொழிபெயர்த்துத் திருவாவடுதுறைத்தலபுராணம்பாடி அதனைத் திருச்சிற்றம்பலதேசிகரென்னும் இந்த ஞானதேசிகர் திருமுன்பு அரங்கேற்றினர். இது நிற்க.

முன்பு காஞ்சிபுரத்திற்கெழுந்தருளி வடமொழி, தென்மொழி வல்லுநர்வணங்க வீற்றிருந்தருளும் சித்தாந்தசூத்திரதிராவிடமாபாடிய கர்த்தராகிய மாதவச்சிவஞானசுவாமிகள், மார்கழிமாதத்திருவாதிரை உற்சவத்திலே தேவாரம் முதலிய அருட்பாக்கள் ஐந்தும் திருக்காப்பிட்டுத் தமிழ்வேதமாகிய,

பன்னிருதிருமுறைகளில்; ஒன்முகிய திருவாசகம் என்னும் எட்டாந்திருமுறையின் கண்ணுள்ள திருவெம்பாவை யென்னும் திருப்பதிகம் ஒன்றுமே ஆன்மார்த்தபரார்த்த சிவபூஜாகாலங்களிலேஓதப்பெற்றுவரும்சாம்பிரதாயத்தால் நித்தியநியமமந்திரமாகத் திருத்தொண்டர் திருநாமத்தை ஓதி உய்யவேண்டுவோர் கருத்துத் தடையுறுவண்ணம்; திருத்தொண்டர் திருநாமக்கோவைஎனப்பெயர்தந்துதிருப்பாசுரம்ஒன்றுஇயற்றியருளினர்.

பின்பு அச்சுவாமிகள் அந்நாட்டின்கண்ணுள்ள சிவஸ்தலங்கள்யாவும் தரிசிக்க அவாவுற்று அங்குநின்றும் அரிதினீங்கி இலக்கணம் சிதம்பரநாதகம்பிரான்சுவாமிகள் முதலிய தமது மாணவர்களுடன் அங்கு பலஸ்தலங்களையுந்தரிசித்து வருவாராயினர். அக்காலத்தில் * வடதிருமுல்லைமாசிலாமணியீசுவரர்மீது திருவந்தாதியும், குளத்தூர்சோமேசர்மீதுபதிற்றுப்பத்தந்தாதியும்உண்மைநாயன்மார் சரிதமுதலியவற்றைப்பெரும்பாலுந்தழுவிப்பூர்வார்த்தமும் அதற்குளடுத்துக்காட்டாக திருவள்ளுவநாயனார் திருக்குறள் உத்தரார்த்தமுமாகமுதுமொழிவெண்பாவும் குளத்தூர் அமுதாம்பிகைமீது பிள்ளைத்தமிழும் இளங்காட்டு அகத்தீசுவரர்மீது இளசைப்பதிற்றுப்பத்தந்தாதி யெனப்பெயர்பெறும் ஓர் பிரபந்தமும் இயற்றியருளினர். பின்னர் திருப்போரூர் முதலியஸ்தலங்களைத் தரிசித்துக்கொண்டு காஞ்சீபுரத்துக்கெழுந்தருளி காமாக்ஷியம்மையையும் ஏகாம்பரநாதரையுந்தரிசித்து மாணவர்களுக்குக் கல்விபயில்வித்துக்கொண்டு அங்கு வீற்றிருந்தருளினர். அக்காலத்தில் ஏகாம்பரநாதர்மீது யமகவந்தாதியும் ஆனந்தக்களிப்புஞ்செய்தருளினர். அன்றியும் கச்சி ஆனந்தருத்திரேசர்மீது ஓர் பதிகமும் இயற்றியருளினர்.

---

* அத்தலநாயகர் திருநாமம் மாசிலாமணியீசுவரர் என்பது.

திப்பிய மாவடு தண்டுறைக் கண்ணுந் திருந்துநிலை
தப்பிய மாவடு தீர்முல்லை யூரினுஞ் சந்தமுலை
யப்பிய மாவடு வார்கண்ணி பாகனமர்ந்து புகழ்
பப்பிய மாவடு நாமமொன்றாக் கொண்டு பாரிப்பதே. என்னும்

திருமுல்லைவாயில் திரிபந்தாதி கூச-வது செய்யுளில் காண்க.

அக்காலத்தில்; சுசீந்திரத்தில்ஸ்ரீபஞ்சாக்கரதேசிகராதீனத் திருமடத்தில் தனித்த ஆசிரியராக எழுந்தருளி யிருக்கும் அம் பலவாணதேசிகசுவாமிகள்பால் இலக்கண இலக்கியங்கள் யாவும் கசடறக்கற்று அவ்வாசிரியர்பால் நிருவாணதீக்ஷையும் சித்தாந்த சாஸ்திரோபதேசமுஞ் செய்யப்பெற்றுதிருவனுக்கத் தொண்ட ர்களாக விளக்கமுற்றிருக்கும் கச்சியப்பத்தம்பிரான்சுவாமிகள், சுப்பிரமணியத்தம்பிரான்சுவாமிகள், ஆகிய இருவர்களும், மாத வச்சிவஞானசுவாமிகள் பெருமையைப் பலராலுங் கேள்வி யுற்று,அச்சுவாமிகளைத்தரிசிக்கவிரும்பி,தமதுஞானசிரியசுவாமி கள்பாற்றெரிவித்துவுத்தரவுபெற்று,அங்குநின்றும்அரிதினீங்கித் திருவாவடுதுறைக்குவந்து, ஞானமூர்த்தியாகிய நமசிவாயதேசி கோத்தமரையும், ஞானதேசிகராகிய திருச்சிற்றம்பலதேசிகரை யுந் தரிசித்து அங்குசிலநாள் வசித்திருந்தனர். பின்பு அத்தம்பி ரான்சுவாமிகள் இருவர்களுந் தங்கள் கருத்தை ஞானதேசிகர் பாற்றெரிவித்து விடைபெற்று, விரைவிற் காஞ்சிநகரையடைந்து சித்தாந்தருத்திர திராவிடமாபாடிய கர்த்தராகிய மாதவச்சிவ ஞானசுவாமிகளைத் தரிசித்தனர். அப்போது, அச்சுவாமிகள், அவ்விருவர்களும் மேன்மேலுங்கல்விபயிலுதற்கண் ஊக்கமுடை யராய், இருத்தலைநோக்கித் திருவுளமகிழ்ந்து அவர்களுக்குத் தமிழிற்பேரிலக்கணமாகிய தொல்காப்பியத்திலும், சிவஞான போதமுதலிய சித்தாந்தசாத்திரங்களிலுமுள்ள நுண்பொருள் கள் யாவும் ஐயந்திரிபற விளக்கிச் சிவஞானபோத திராவிடமா பாடியமும் பாடஞ்சொல்லியருளினர்.

பின்பு அன்பர்கள்வேண்டுகோளுக்கு அச்சுவாமிகள் இசை ந்து திருத்தொட்டிகலமாநகருக்கு எழுந்தருளியிருந்தனர். அக் காலத்து அந்நகரிற் சைவப்பிரபுக்களிற் சிறப்புற்றோங்கிய வீர ப்பமுதலியார் குமாரர் கேசவமுதலியார் பிரார்த்தனைக்கிரங்கி

அத்தலநாயகராகிய சிதம்பரேசுவரர்மீது பதிற்றுப்பத்தந்தாதியும்,*செங்கழுநீர்விநாயகர்மீது பிள்ளைத்தமிழுஞ்செய்தருளினர்.

இங்ஙனம் உலகோபகாரமாகப்பலநூல்களையும்பலவுரைகளையும் பலகண்டனங்களையுஞ்செய்து, பலநன்மாணாக்கர்களுக்கு இயற்றமிழ்நூலும், வீட்டுநெறிநூலும் போதித்து வடமொழியினும் தென்மொழி சிறந்ததென்னும்படி அபிவிருத்திசெய்து தவமேதிருவுருக்கொண்டாற்போலும் விளங்கிச்சிவப்பேற்றிற்கு காரணமாகிய நிஷ்டை வீற்றிருந்தருளும் திராவிடமாபாடியகர்த்தராகியமாதவச்சிவஞானசுவாமிகள், தாம்பரிபூரணதசையடை

---

* செங்கழுநீர் விநாயகர்மீது பிள்ளைத்தமிழ் இயற்றிய காலம் முதலியவை வருமாறு.

இலகுசக † னீரெட்டு நூற்றுநாற் பத்தேழி
  னிற் கரங் கும்ப மிருபத்
தேழிரே வதிவெள்ளி பூர்வபக் கத்துதிகை
  யேற்க வுலவஞ் சுப்பிரம்
கலவியுறு சுபதினங் கன்னிலக் கினமதிற்
  கலைசைப் பதிக்குள் வாழ்செங்
கழுநீர் விநாயகர்த மீது பிள்
  ளைத்தமிழ்க் கவிபாடி வானோ ருணா
அலைமலைக டற்கடைந் தமிழ்தூட்டு மாலென்ன
  வவனியிற் புலவர் செவியால்
ஆர்ந்திடத் துறைசைவாழ் சிவஞான
  தேசிக னரங்கேற்றி னானு தலால்
நலசுகுண மணிகுவளை யணிபுயன் வீரப்பன்
  நல்குமக ராச யோகன்
நங்கள்கே சவபூப னநுசர் சேய்
  சுற்றமு நன் மைதரு
    வாழ்வு றுகவே.

† ஈரெட்டு நூறு—ஈர்நாற்பத்தேழ்—என அன்வயஞ்செய்க.
நூல் செய்தகாலம் கசளாகசஎ-வது சகாப்தம் என்க.

யுங்காலம் அனித்தாதலைத்திருவுளத்திற்கொண்டு, தமது மாணவர்களுடன் கலைசையினின்றும் புறப்பட்டுத், திருவாவடுதுறைக் கெழுந்தருளி, திருக்கோயிலிற்சென்று சுவாமிதரிசனஞ்செய்து தமது மடத்திற்கெழுந்தருளி சிவப்பிரகாசவிநாயகரையுந், திருமாளிகைத்தேவரையும், ஆதீனபிரதமாசாரியராகிய நமசிவாய தேசிகோத்தமரையும், தரிசித்து, ஒடுக்கத்திற்சென்று, ஞானதேசிகராகிய திருச்சிற்றம்பலதேசிகரைத் தரிசனஞ்செய்து வடக்குமடத்திற்குவந்து திருக்கூட்டத்து அடியவர்களோடும் தமது மாணவர்களோடும் அங்குவசித்திருந்தனர். அங்ஙனஞ் சிலகாலம் அச்சுவாமிகள்குருலிங்கசங்கமசேவைசெய்துகொண் டிருந்து, அத்திருப்பதியிலே சாலிவாகனசகாப்தம் கஎ0அல் நிகழாநின்ற விசுவாவசுவருஷம் சித்திரைமாதத்து அ-ம்திகதி ஞாயிற்றுக்கிழமையில் ஆயிலியநக்ஷத்திரங்கூடிய சுபதினத்தில் சிவபரிபூரணமுற்றனர்.

சிவபரிபூரணசுபதினச்செய்யுட்கள்.

வெண்பா.

மன்னும் விசுவாவசு வருட மேடமதி
யுன்னிரவி நாட்பகலோ தாயிலியம்—பன்னுந்
திருவாள னெங்கோன் சிவஞானதேவன்
திருமேனி நீங்கு தினம்.

ஆசிரியவிருத்தம்.

ஏர்தருசாலி வாகனசகாப்த மாயிரத் தெழுசதத்தெட்டிற்
சார்தருவிசுவா வசுவருடத்திற்றபங்கு சித்திரை மதியெட்டி
லார்தருமிரவி வாரமாயிலியத் தடைந்தன னரன்றிரு வடியிற்
சீர்தருதுறைசை வாழ்சிவஞான யோகிபாஞ்சிவமுனிவரனே.

அக்காலத்தில் மாதவச்சிவஞானசுவாமிகள் மாணவர்களில் ஒருவராகிய தொட்டிக்கலை சுப்பிரமணியசுவாமிகள்தமதுஆசிரிய சுவாமிகள்மீதுபாடிய,

கீர்த்தனை.

பல்லவி.

நினைத்தாற் சகிக்கப் போமோ—என்சுவாமியை
நினைத்தாற் சகிக்கப் போமோ.

அநுபல்லவி.

எனைத்தனி விட்டகன்ற
எந்தை சிவஞானவாழ்வை. (நினைத்தால்)

சரணங்கள்.

கருணை முகத்தைக் காட்டிக்
கனிந்த மொழியைக் காட்டித்
தருண வடிவைக் காட்டித்
தனித்து விட்டகன் றாரை, (நினைத்தால்)

காவி யுடை யழகுங்
கவினார் வெண்ணீற் றொளியும்
பாவியேன் கண்ணிற் காட்டிப்
பரவீடு சேர்ந்தாரை, (நினைத்தால்)

சிவவேடச் சேவை தந்துந்
திருவடி நீழல் தந்தும்
அவமே கைவிட்டிங் கென்னை
அகன்றாரை நாடி யந்தோ, (நினைத்தால்)

கலைஞானஞ் சிவ ஞானங்
கலந்தளித் தென்னை யாளும்
நிலையாரை யென்னு யிராய்
நிறைந்து நின்றகன் றாரை, (நினைத்தால்)

கருவி லென்னே டிருந்து
கருணையாய்க் கொண்டு வந்து
பெருவாழ்வில் வைத் தகன்ற
பேரருளா ளரை நான், (நினைத்தால்)

கண்ணி னுளக லாரைக்
கருத்தி னுள் விலகாரை
எண்ணி யெண்ணித் தவிக்க
இங்ககன் றுரை யையோ, (நினைத்தால்)

என்னுயிர் கவர்ந் தாரை
எனதெழில் கவர்ந் தாரை
மன்னு துயர்தந் தாரை
மறக்கவுங் கூட வில்லை, (நினைத்தால்)

கண்டார் நெய்பால் கனிதேன்
கடல முதுங் கலந்து
கொண்டார்போல் நான் மகிழக்
கூடிப் பிரிந்த வரை, (நினைத்தால்)

துணை பிரியா வனமே
சுகமே மயில் குயிலே
இணை பிரியா வன்றிலே
எனைப் பிரிந்தாரை நாடி, (நினைத்தால்)

பாம்பின் வாய்த் தேரைபோலப்
பல பல துயருற்றுத்
தேம்பினேன் றன்னை யாளச்
சீக்கிரம் வரு வாரை, (நினைத்தால்)

ஆரேனும் பத்தி யனு
வளவு செய்தானு மவர்
சீரேறு செல்வ முறச்
செய்தாரைப் பிரிந் தத்தை, (நினைத்தால்)

ஆயிலிய நாளாரை
ஆவடுதுறையாரை
நாயேனைப் பிரிசிவ
ஞானபூரணரைநான், (நினைத்தால்)

கீர்த்தனைமுடிந்தது.

சித்தாந்த சூத்திர திராவிடமாபாடிய கர்த்தராகியமாதவச் சிவஞானசுவாமிகள்பாற் கல்விபயின்றமாணவர்கள்; இலக்கணஞ் சிதம்பரநாதத்தம்பிரான்சுவாமிகள், கச்சியப்பத்தம்பிரான்சுவாமிகள், * தொட்டிக்கலை சுப்பிரமணியத் தம்பிரான்சுவாமிகள், காஞ்சீபுரஞ் சரவணப்பத்தர், இராமநாதபுரஞ் சோமசுந்தரம் பிள்ளை முதலாகிய பலருளர். அவருள்ளே கச்சியப்பத்தம்பிரான் சுவாமிகள், ஞானாசிரியர்பால்விடைபெற்றுத், திருவாவடுதுறையினின்றும் அரிதினீங்கிக் காஞ்சிபுரத்திற்கெழுந்தருளி அங்குபல மாணவர்களுக்குக்கல்விபோதித்து வருவாராயினர். இதுநிற்க.

மாதவச்சிவஞானசுவாமிகள் மாணவர்களிலொருவராகிய இலக்கணஞ் சிதம்பரநாதத்தம்பிரான்சுவாமிகள், தமது போதகாசிரியசுவாமிகள் சிவபரிபூரணமுற்றபின் சிலகாலந் திருவாவடுதுறையில் குருலிங்கசங்கமசேவைசெய்துகொண்டு அமர்ந்திருந்தனர். பின்பு அச்சுவாமிகள் சிவஸ்தலயாத்திரை செய்யவேண்டுமென்னுந்தமது கருத்தை ஞானதேசிகராகிய திருச்சிற்றம்பல தேசிகர்பால் தெரிவித்து விடைபெற்று; பலதலங்களையுந்தரிசித்துக்கொண்டுவருங்காலையில் திருப்பாதிரிப்புலியூருக்கெழுந்தருளி திருக்கோயிலிற்சென்று சுவாமிதரிசனஞ்செய்து, அன்பர்கள் வேண்டுகோளுக்கியைந்து நெடுநாள் அங்கு வசித்திருந்தனர். அக்காலத்தில் அத்தலபுராணத்தைவடமொழியினின்றும்மொழிபெயர்த்தருளினர். இதுநிற்க.

மாதவச்சிவஞானசுவாமிகள் மாணவர்களிலொருவராகிய தொட்டிக்கலை சுப்பிரமணியத்தம்பிரான்சுவாமிகள், தினந்தோறுங்குருலிங்கசங்கம சேவைசெய்துகொண்டு, தமதுபோதகாசிரியராகிய சிவஞானபோதத்திராவிடமாபாடிய கர்த்தரவர்கள் ஞானசமாதியில் அச்சுவாமிகள் திருவடியடையாளம்பொறித்த

---

* தொட்டிக்கலைமாநகரில் நெடுங்காலம் வசித்திருந்தமைபற்றி, தொட்டிக்கலை சுப்பிரமணியசுவாமிகள் எனப்பெயர் வழங்கப்பெறுகின்றது.

குருமூர்த்தந்தரிசித்துக்கொண்டும், அங்குவசிக்கு நாட்களில் ஞானதேசிகராகிய திருச்சிற்றம்பலதேசிகர்மீது சிந்தும் சந்த விருத்தமும் பாடியருளினர்.

பின்பு அச்சுவாமிகள் தம்மை அருளுபதேசத்தினால் அடிமை கொண்டருளிய துவிதீய ஆசிரியராகிய அம்பலவாணதேசிகசுவாமி களைத்தரிசிக்கவேணவாவுற்று ஞானதேசிகர்பால் விடைபெற்றுத் திருவாவடுதுறையையகன்று வழியிடையில் பலஸ்தலங்களையுந் தரிசித்துக்கொண்டு, பழனித்திருநகரைச்சார்ந்து, அங்குதண்ட பாணியீசுவரர்தாளிணைபணிந்து அக்கடவுள்மீது பஞ்சரத்தின மாலைபாடியருளினர். பின்பு அங்குநின்றும் அரிதினீங்கி, மதுரை திருப்பரங்குன்றம், முதலிய ஸ்தலங்களைத்தரிசித்து திருச்செந் தூரென்று பெயர்வழங்கும் சீரலைவாயினைச்சேர்ந்து கருணைக்கட லாகிய ஜெயந்திகழ்வைவேற்செம்மலாகியசெந்திலெம்பெருமான் செஞ்சரணாம்புயம் தெரிசனஞ்செய்து அக்கடவுள்மீதுசந்தவிருத் தம்பாடி அங்குசிலநாள்வசித்திருந்து, அங்குநின்றும் அரிதினீங்கி சுசீந்திரஞ்சென்று தமதுஞானாசாரியராகிய அம்பலவாணதேசிக சுவாமிகளைத்தரிசித்து அங்குசிலகாலம் வசித்திருந்தனர். அக் காலத்தில் அச்சுவாமிகள் விரைவிற் பாடுதலைக்கேட்ட தேசிக சுவாமிகள், ஒருசமயத்தில் தமது ஞானாசிரியர்மீது குருதிருச் சிற்றம்பலவெங்கோ என்பதை ஈற்றடியாகவைத்து நிரையசை வெண்பா ஒன்றியற்றுகவென்று கட்டளையிட்டருளினர். தமது ஆசிரியசுவாமிகள் ஆணைசிரமேற்கொண்டு,

வெண்பா.

முனிக்கு முனியானை முனிந்தே பொதியின்
முனிக்குமுனி யாதளித்தே முத்தி—முனிக்கு
பொருகளிறு நீரூட்டும் பொன்னித் துறைசைக்
குருதிருச்சிற் றம்பலவெங் கோ.

என அச்சுவாமிகள், ஏட்டுருப் பண்ணிய பழயபாடம் ஒப் பிப்பதுபோல விரைவிற்பாடியருளினர். அன்றியும் தமது ஞானா சிரியசுவாமிகளாகிய துவிதீய சற்குருவாகும் அவ்வம்பலவாண

தேசிகசுவாமிகள்மீது பஞ்சரத்தினமாலையும் வண்ணமும் இய ற்றினர்.

பின்பு துவிதீய ஆசிரியராகிய அம்பலவாணதேசிகசுவாமி கள், தாம் ஞானதேசிகரைத்தரிசித்து நெடுங்காலமானதால் திரு வாவடுதுறைக்குச்செல்லவிரும்பி அங்குநின்றும்புறப்பட்டு வழி யிடையிற்பலஸ்தலங்களையுந்தரிசித்துக்கொண்டுதிருக்குற்றாலத்தை யடைந்து, சித்திராநதித் தீர்த்தமாடி திருக்கோயிலிற்சென்று சுவாமிதரிசனஞ்செய்துசித்திரசபாநாதரைத்தரிசிக்குங்காலையில், அத்தேசிகசுவாமிகள், தமது அடியவராகிய சுப்பிரமணியசுவா மிகளைநோக்கி, அமிழ்தினுமினியதமிழ்மொழியால் ஓர்பதிகம் சபாநாதர்மீது பாடுமாறு கட்டளையிட்டருள அச்சுவாமிகள், சிறிதுங்காலதாமதமின்றி புத்தமுதருந்திடும் புத்தேளுலகினில் என்றெடுத்து பத்துத்திருவிருத்தங்கள் பாடிமுடித்தனர். பின்பு தேசிகசுவாமிகள் அங்குநின்றும் புறப்பட்டு விரைவில் திருவா வடுதுறைவந்தடைந்து ஆதீனமுதற்குரவராகிய நமசிவாயதேசி கோத்தமரையும் தமதுஞானதேசிகரையுந் தரிசித்துக்கொண்டு அங்கமர்ந்தனர். இஃதிங்ஙனமாக.

பின்புசிலகாலஞ்சென்று மாதவச்சிவஞானசுவாமிகள்மாண வர்களிலொருவராகிய சுப்பிரமணியசுவாமிகள், தாம்நெடுங்கா லம் முன்வசித்திருந்த தொண்டைநாட்டிற்குச் செல்லவிரும்பி, அதனை ஞானதேசிகர்பாலும் தமது சற்குருவாகும் துவிதீய அம்பலவாணதேசிகசுவாமிகளிடத்தும் தமதுகருத்தைவிண்ணப் பித்து விடைபெற்றுத் திருவாவடுதுறையினின்றும் அரிதினீங்கி காஞ்சிபுரமுதலான இடங்களில் சிலகாலந் தங்கியிருந்து பின்பு தொட்டிக்கலைமாநகர்க்குச்சென்று அங்கு அன்பர்கள் பலரும் வேண்ட அதற்கிசைந்து அவ்விடத்தில் எழுந்தருளியிருந்து மாணாக்கர்களுக்கு கல்விகற்பித்து வருவாராயினர். இஃதிங்ஙன மாக.

முன்புகாஞ்சிபுரத்தில் எழுந்தருளியிருந்து மாணாக்கர்களு க்குக்கல்வி கற்பித்துவரும் கச்சியப்பசுவாமிகள், தமதுசென்ன

பூமியாகிய திருத்தணிகைநகரவாசிகள் வேண்டுகோளுக்கிணைந்து அந்நகரத்திற்கு எழுந்தருளி அங்குசிலகாலம் வசித்திருந்தனர். அக்காலத்து புறமதத்தினரால் புனைந்தியற்றப்பட்ட சிவகசிந்தாமணி என்னும் நூலினைத்தமிழ் இலக்கியம் ஆராயும் சைவர் தாமும் விரும்பிப்படித்துவருவதை உற்றுநோக்கித், தாம் அந்நூலினுஞ்சிறந்ததென்னும்படி தணிகாசலமான்மியத்தைமொழிபெயர்த்து அத்தலபுராணம்பாடி யருளினர். அன்றியும் தம் மாணாக்கருட்சிறந்தவராகியகந்தப்பையர் என்பவர்க்குற்றகுன்மநோயை மாற்றுதற்பொருட்டு முருகப்பெருமான்மீது தணிகையாற்றுப்படையென ஒருநூலினை இயற்றி அவருக்கு அந்நோயை நிவிர்த்திசெய்தருளினர். அன்றியும் தணிகாசலப்பெருமான்மீது பதிற்றுப்பத்தந்தாதி ஒன்றும்பாடி யருளினர்.

பின்பு அச்சுவாமிகள், தமதுபெருமையைக்கேள்வியுற்றுத் தம்மைத்தரிசிக்கவந்த சென்னைச் சைவபிரபுக்கள் வேண்டுகோளுக்கிணைந்து, சென்னைமாநகரத்திற் கெழுந்தருளி அங்குமாணவர்களுக்குக் கல்விபோதித்துக்கொண்டு சிலகாலம் வசித்திருந்தனர். அக்காலத்தில் அத்தலத்தன்பர்கள் விரும்பியவாறு அந்நகர் பிரசன்னவிநாயகர்மீதுபிள்ளைத்தமிழும், யமகவந்தாதியும்பாடி யருளினர். அன்றியும் உபபுராணங்கள் பதினெட்டுள்ஒன்றாகிய பார்க்கவபுராணமெனப் பெயர்வழங்கும் விநாயகபுராணத்தை அச்சைவபிரபுக்கள் விருப்பத்தினுக்கிரங்கி மொழிபெயர்த்து அப்புராணத்தை பிரசன்னவிநாயகர் சந்நிதியில் அரங்கேற்றி யருளினர். அப்பொழுது அச்சபையிலுள்ள பிரபுக்கள் ஒன்று கூடி இரண்டாயிரவராகன்சுவாமிகள் திருமுன்புபாதகாணிக்கையாகவைத்து வழிபட்டனர், பின்னுஞ்சிலகாலம் அச்சுவாமிகள் மாணவர்களுக்குக்கல்விபோதித்துக்கொண்டு அங்குவசித்திருந்தனர்.

பின்புஅச்சுவாமிகள், அங்குநின்றும் புறப்பட்டுத் திருத்தணிகைக்குவந்து முருகக்கடவுளைத் தினந்தோறும் தரிசித்துக்கொண்டு தம்மைவழிபடும் நன்மாணாக்கர்களுக்கு இயற்றமிழ்

நூலும் வீட்டுநெறிநூலும் கற்பித்துவருவாராயினர். இங்ஙனம் சிலபகல் சென்றபின்னர் அச்சுவாமிகள், தமது ஞானாசிரிய சுவாமிகளைத்தரிசித்து நெடுங்காலமானமையால் தரிசிக்கமிக்க அவாவுற்று அத்தலத்தினின்றும் அரிதினீங்கி விரைவிற்றிருவா வடுதுறைவந்தடைந்து ஆதீனபிரதமாசாரியராகிய நமசிவாய தேசிகோத்தமரையும், ஞானதேசிகராகிய திருச்சிற்றம்பலதேசிகரையுந் துவிதீய ஆசிரியராகிய அம்பலவாணதேசிகசுவாமிகளையுந்தரிசித்து அங்குவசித்திருந்தனர். அக்காலத்தில்தாம்கொண்டுவந்த இரண்டாயிர விராகனையுங்கொண்டுநமசிவாயமூர்த்தியின் ஞானசமாதியில் கற்பக்கிரகம் அர்த்தமண்டபம் மகாமண்டபம் அணியொட்டிக்கால்மண்டபம் ஆகிய இவைகளை அணிபெறச் செய்வித்தனர், அன்றியும், நமசிவாயமூர்த்தியின்மீது அந்தாதி என்னும் ஓர்பிரபந்தஞ்செய்தருளினர்.

பின்பு ஞானதேசிகர், தமது பிற்றோன்றலாகிய அம்பலவாணதேசிகசுவாமிகளும், கவிச்சக்கிரவர்த்தியாகிய கச்சியப்பசுவாமிகளும்; ஏனையஅடியவர்களும், உடன்வரத் திருவாவடுதுறையினின்றும் புறப்பட்டு வழியிடையில் பலஸ்தலங்களைத் தரிசித்துக்கொண்டும், ஆங்காங்கு தம்மைவழிபடும் சீடர்களுக்குத்தீக்கையாதிகள் செய்துகொண்டும், சுசீந்திரத்தையடைந்து அங்கு சிலகாலம் வசித்திருந்தனர்.

பின்பு ஞானதேசிகர், துவிதீய ஆசிரியராகிய அம்பலவாணதேசிகசுவாமிகளை அங்குள்ள தமதுசீடர்களுக்குத்தீக்கையாதிகள் செய்துவருமாறுபணித்துத்தாம்அங்குநின்றும் புறப்பட்டுவழியிடையிற்பலதலங்களையுந்தரிசித்துக்கொண்டு ஆளுடையார்கோயில் எனபெயர்வழங்கும் திருப்பெருந்துறையைவந்தடைந்து திருக்கோயிலிற்சென்று சுவாமிதரிசனஞ்செய்து தமதுதிருமடத்திற் கெழுந்தருளி தமதுஞானாசிரியசுவாமிகளாகியபின்வேலப்பதேசிகர் குருமூர்த்தந்தரிசித்து அங்குசிலநாள்வசித்திருந்தனர். பின்பு ஞானதேசிகர், அங்குநின்றும் அரிதினீங்கி, திருவாவடுதுறையை வந்தடைந்து திருக்கோயிலிற்சென்று சுவாமிதரிசனஞ்செய்து தமதுதிருமடத்திற் கெழுந்தருளி சிவப்பிரகாசவிநாயகரையுந்,

திருமாளிகைத்தேவரையும், ஆதிசைவபிரதமாசிரியராகிய நமசிவாய தேசிகோத்தமரையுந் தரிசித்து ஒடுக்கத்திற்குச் சென்று குருதரிசனக்காக்ஷி யளித்தருளினர். பின்பு ஞானதேசிகர், சீடர்களுக்குத் தீக்ஷையாதிகளுஞ் சித்தாந்த சாத்திரோபதேசமுஞ் செய்துகொண்டு, தமது குருசந்தானம் வளர்பிறை மதிபோல் வளர்ந்தோங்குமாறு அங்குவீற்றிருந்தருளினர்.

அக்காலத்தில், ஞானநிஷ்டைபுரிந்துவரும் தமது அடியவர்களில் ஒருவர், ஓர்நாள் அருணோதயமான பின்னும் அந்நிலை நீங்காதமர்ந்திருப்ப, அதனைக்கண்ட அடியவருட்சிலர் அவர் தாம் வைகறைப்பொழுதில் தமக்குரிய நித்தியகன்மமுடிக்காதவராக இருக்கின்றனர் என, நினைந்து ஞானதேசிகர்பாற்சென்று விண்ணப்பிக்க, ஞானதேசிகர், அதனைத்தேர்ந்தும் அவ்வடியவர் மனத்தைத்தெருட்டுமாறு கருதித்தாமும் அவ்வுண்மையுணராதார் போலக்கோபக்குறிப்புக்காட்டி, அவரைத்தம்மிடத்துவருவித்து வினவியருளினர். அதற்கு அவ்வடியவர் ஞானதேசிகர் திருவடியைவணங்கி

மாதவா மாயை மடிந்தாள் மடிந்திடத்தே
பேத மிலாப் போதன் பிறந்தனனே—ஆதலினால்
ஆசௌச மாமிரண்டு மாயினேன் பூசைசெயத்
தேசிக சிற் றம்பலவா செப்பு.

என்றுவிடைகூறி மகிழ்வித்தனர்.

பின்புயாவரும் அவ்வடியவரது உண்மைநிலையைத்தேர்ந்து அவரிடத்துப் பெரிதும் அன்பு பாராட்டிக்கொண்டிருந்தனர்.

முன்பு சுசீந்திரத்தின்கண் சீடர்களுக்குத் தீக்ஷையாதிகள் செய்து சித்தாந்தோபதேசஞ்செய்துவரும் துவிதீயஆசிரியராகிய அம்பலவாணதேசிகசுவாமிகள், பாண்டியநாட்டின்கண்ணுள்ள தமது சீடர்களுக்குத் தீக்ஷையாதிகள் செய்யத்திருவுளங்கொண்டு அங்குநின்றும் புறப்பட்டு திருச்செந்தூர்முதலிய ஸ்தலங்களைத்தரிசித்துக்கொண்டும், ஆங்காங்கு தமது சீடர்களுக்

ருந்தீக்கையாதிகள்செய்துகொண்டும், பாவநாசமென்னுந்திருப்பதியை வந்தடைந்து, பொருநைநதி தீர்த்தமாடித் திருக்கோயிலிற்சென்று முக்களாலிங்கமூர்த்தியையும், உலகம்மையையுந் தெரிசித்து அங்குதமது ஈசானமடத்தில் சிலநாள் வசித்திருந்தனர். அங்ஙனம் தேசிகசுவாமிகள் வசித்திருக்கும் நாளில் கல்லிடைக்குறிச்சியிலுள்ள சைவப்பிரபுக்கள், தேசிகசுவாமிகள் பாவநாசமென்னும் பதியில் எழுந்தருளியிருப்பதைக் கேள்வியுற்று, அங்குவந்து தேசிகசுவாமிகளைத் தரிசித்து, கண்ணுவமுனிவர் சிவபிரானைப் பூசித்த திருத்தளிச்சேரிக்கு எழுந்தருளி, அத்தலத்தில்வீற்றிருந்தருளவேண்டுமெனப்பிரார்த்திக்க, தேசிகசுவாமிகள்; அதற்குத் திருவுளம்பற்றி அத்தலத்தினின்றும் அரிதினீங்கி, கல்லிடைக்குறிச்சியின் பாங்கருள்ள திருத்தளிச்சேரிக்கு எழுந்தருளி திருக்கோயிலிற்சென்று சுவாமிதரிசனஞ்செய்து அப்பிரபுக்களால் சற்குருசுவாமிகள் எழுந்தருளியிருத்தற்பொருட்டு முன்னமேசெய்து அமைக்கப்பெற்ற திருமடத்திற்கு எழுந்தருளி அங்கு யாவருக்கும் குருதரிசனக்காக்ஷி அளித்தருளினர்.

பின்பு, அப்பிரபுக்கள் தமது ஞானாசிரியசுவாமிகளுக்குப் பூசை மகேசுவரபூசை சிறப்புறச் செய்வித்தும் அன்றிரவு அவ்வாசிரியசுவாமிகள் பவனிகொண்டருளச்செய்வித்தும் குருதரிசனக்காக்ஷிபெற்று பேசற்கரிய பேரானந்தமுற்று, சுவாமிகள் சுசீந்திரத்திலெழுந்தருளியிருந்துகொண்டு சீடர்களுக்குந்தீக்கையாதிகளுஞ் சித்தாந்தோபதேசமுஞ் செய்துவருவதுபோல, இத்தலத்திலும் எப்பொழுதும் எழுந்தருளியிருந்து இங்குள்ளார்களுக்கு ஞானோபதேசஞ் செய்தருளவேண்டுமென்று பிரார்த்தித்தனர். தேசிகசுவாமிகள் திருவுளமகிழ்ந்து அவ்வாறே நம் மனோர்க்குமேயன்றி, நம்மரபிற்பின்வருமவர்களும் வழிவழித் தீக்கையாதிகளுஞ் சித்தாந்தோபதேசமுஞ் செய்துகொண்டு, இங்கு அமருமாறு செய்வோம்; எனத் திருவாக்களித்தனர். பின்பு, அப்பிரபுக்கள் தங்களாலியன்றளவு ஞானாசிரியசுவாமி

களுக்கு விளைநிலம் முதலியன விடுத்தனர். பின்பு *ஞானாசாரிய சுவாமிகள் அப்பிரபுக்கள் விரும்பியவாறு அத்தலத்திலமர்ந்து சீடர்களுக்குத் தீக்ஷையாதிகளுஞ்சித்தாந்தோபதேசமுஞ்செய்து வருவாராயினர். அங்ஙனம் ஞானோபதேசஞ் செய்து வரும் நாட்களில், தேசிகசுவாமிகள், கண்ணுவமுனிவர்பூசித்த அத்திருக் கோயிலுக்குத் திருப்பணிசெய்து கும்பாபிடேகமுஞ் செய்தருளினர்.

பின்பு துவிதீய ஆசிரியராகிய அவ்வம்பலவாணதேசிகசுவாமிகள், தமது ஞானாசிரியசுவாமிகளைத் தரிசிக்க அவாவுற்று அங்குநின்றும் புறப்பட்டு வழியிடையிலுள்ள பலஸ்தலங்களையுந் தரிசித்துக்கொண்டு திருவாவடுதுறையையடைந்து திருக்கோயிலிற்சென்று சுவாமிதரிசனஞ்செய்து தமது திருமடத்திற்கெழுந்தருளி சிவப்பிரகாசவிநாயகரையுந் திருமாளிகைத்தேவரையும் ஞானமூர்த்தியாகிய நமசிவாயதேசிகோத்தமரையுந் தமது ஞானாசாரியசுவாமிகளையுந் தரிசித்து அங்கு வசித்திருந்தனர்.

அக்காலத்தில் ஞானதேசிகர், தமது திருவருண்மகிமையைக் கேள்வியுற்றுத் தம்பாலடைந்த சிறுகம்பையூர் ஆதிசெட்டிலைச் சர்க்கரைப்புலவர் குமாரர் சீனிப்புலவரது பரிபக்குவ நன்காராய்ந்து அவருக்குமுவகைத்தீக்ஷையுஞ், சித்தாந்தசாத்திரோபதேசமுஞ் செய்தருளினர். அப்புலவர் ஞானசாத்திரங்களைச் சிந்தி

---

* ஞானாசாரியசுவாமிகள், அப்பிரபுக்கள் விரும்பியவாறு கல்லிடைக்குறிச்சியின் பாங்களுள்ள திருத்தளிச்சேரியை துவிதீயாசிரியர் வசிக்குந்தானமாகக்கொண்டு அங்கமர்ந்தருளினர். அதுமுதல் அந்த ஞானதேசிகர்க்கு நான்காவது பிற்றோன்றலாகிய எம்மாசிரியர் சுப்பிரமணியதேசிகசுவாமிகளுக்குத் துவிதீய ஆசிரியராகிய நமசிவாயதேசிக சுவாமிகள் காலம்வரை அத்தலத்தில் ஞானாசிரியர்கள் வழி வழியாக வீற்றிருந்து சீடர்களுக்குத்தீக்ஷையாதிகளுஞ், சித்தாந்தோபதேசமுஞ் செய்துவந்தனர் என்பது ‡யாமும், மற்றையோரும்அறிந்ததொன்றும்.

‡ யாம் என்றது, இந்நூலாசிரியர் என்க.

கோயில் திருப்பணிசெய்த காலம் கொல்லம் ஆண்டு தொளாயிரத் தெழுபத்தாறு,

த்துத்தெளிந்து அங்கமருநாட்களில் ஞானதேசிகர்மீது கலம்பகம் என்னும் ஓர் பிரபந்தம் இயற்றினர். இது நிற்க.

இங்ஙனமாகத் திருவாவடுதுறை என்னுந் திவ்விய சிவநகரிலே நெடுங்காலம் எழுந்தருளியிருந்து தம்பாற் சான்புகும் பக்குவமாணவர்களுக்குத் தீக்ஷையாதிகளும் சித்தாந்த சாத்திரோபதேசமுஞ்செய்து திருநந்திபரம்பரை விளக்கிவரும் ஞானதேசிகராகிய திருச்சிற்றம்பலதேசிகர் தாம் திருவாவடுதுறையென்னும் அத்திருப்பதியிலே ஓர் ஆனிமாதத்து பரணிநக்ஷத்திரத்திலே சிற்சபேசர் திருவடிநீழல் எய்தினர்.

இந்த ஞானதேசிகர், திருநந்திதேவர் அருளுபதேசமரபில் பதினோராவது பிற்றோன்றலாகிய நமசிவாயதேசிகோத்தமருக்குப் பன்னிரண்டாவது பிற்றோன்றல் என்பதூஉம், சாஸ்திரஞ் சுவாமிநாதத் தம்பிரான்சுவாமிகள் திருவாவடுதுறைத் தலபுராணம் தமிழிலியற்றியது இந்த ஞானதேசிகர் காலம் என்பதூஉம், அப்புராணநூலாசிரியர் ஆதீனபிரதமாசாரியராகிய நமசிவாயமூர்த்திக்குப் பத்தாவது பிற்றோன்றலாகிய வேலப்பதேசிகர்பால் ஞானோபதேசம் பெற்றனர் என்பதூஉம், திருப்பாதிரிப்புலியூர்ப் புராணம் தமிழிலியற்றிய இலக்கணம் சிதம்பரநாதசுவாமிகள் இந்த ஞானாசிரியசுவாமிகள்பால் அருளுபதேசம் பெற்றனர் என்பதூஉம், தமிழ்ச்சிவஞானபோதமாபாடிய கர்த்தராகிய மாதவச் சிவஞானசுவாமிகள் இந்த ஞானாசிரியசுவாமிகள் காலத்திலும் இருந்தனர் என்பதூஉம், சிறுகம்பையூர் சர்க்கரைப்புலவர் குமாரர் சீனிப்புலவர் இந்த ஞானதேசிகர்பால் மூவகைத்தீக்ஷையுஞ் சித்தாந்தசாத்திரோபதேசமும் பெற்றனர் என்பதூஉம் அப்புலவர் ஞானதேசிகர்மீது கலம்பகம் என்னும் ஓர் பிரபந்தம் இயற்றினர் என்பதூஉம் பின்வருஞ்செய்யுட்களால் இனிதுபுலப்படும்.

அவை வருமாறு.

திருவாவடுதுறை தலபுராணப் பாயிரம்.

குருதோத்திரம்.

சந்தான குரவர்களிற் சிவஞானபோதம் வடமொழியாற் சாற்றும்
நந்தீசர் சனற்குமார பகவான் சத்தியஞான நலத்தோ னின்பப்

புந்திபெறுபரஞ்சோதிமாமுனிகள் திருவடியைப்புகழ்ந்துபோற்றி
சிந்தைமகிழ்ந் தார்வமுற இசைந்தினமு நினைந்துருகிச்சிந்தைசெய்
[வாம். (க)

தமிழ்நூலா லந்நூன்முன் னூலாக்கு மெய்கண்டான் சர
ணம்போற்றித், திமிரமகற் றிடுகதிர்போல் வழிநூல்செய் யரு
ணந்தி திருத்தாளேத்திச், சுவையுடனே யகற்றுதிரு மறைஞான
சம்பந்தர் துணைத்தாள்வாழ்த்தி. யமுதெனச்சார் பருநூல்சொ
லுமாபதிதே வன்றுணைத்தாளடைந் துய்வாமே. (உ)

மத்தராய் மலத்தால் வாடு மன்னுயி ரருள்பெற் றீசன்
பத்தராய் வாழநோக்கும் பரமகல்யாண தேசன்
முத்தரா நமச்சிவாயன் முண்டக மலர்த்தாள் போற்றி
சித்தராஞ் சிவப்பிர காசன் றிருவடியுளத்துள் வைப்பாம். (௩)

மெய்கண்ட மரபினுண்மை மிகுசம்பிர தாயமோங்கப்
பொய்கண்டு நீங்கி ஞானப் போதிசேர் துறைசை மேவி
யுய்கின்ற வழியிதென்றிங் குயிர்க்கெலா முபதே சங்கள்
செய்கின்ற நமச்சிவாய தேசிகன் றிருத்தாள் சேர்வாம். (௪)

துறைசைவாழ் நமச்சிவாயர் தொடர்பின்மோ னத்தி னின்ற
விறைமறை ஞானதேச னிணையடி வழுத்தியுண்மை
யறிவெலாந் தமிழிற் கோத்த வம்பல வாணர் பாதங்
குறைவறப் பணிந்து ருத்திரகோடி தாள்சேர்வாமன்றே. (௫)

நயமிகு மருள்வேலப்பர் நற்றிருக்குமாரசாமிப்
பெயர்பெறு மிருவர்மாசி லாமணி பெருமை வாய்ந்த
பயனுறு ராம லிங்கர் பதம்பணிந் *தெனையு மாளாத்
தயவொடாண்டருள்வேலப்பதாதைதாடலைமேற்கொள்வாம். (௬)

---

* எனையு மாளாத் தயவொடாண் டருள்வே லப்ப தாதை எனக் கூறினமையால் துறைசைப் புராண நூலாசிரியரது குருவென்பது இனிது விளங்கும்.

முன்னின் றுண்டெவர்க்கு மின்ப முதவுகோ முத்தியீசர்க்
கென்னென்று புகல்வே மென்றிங்கி யாவரும் வியப்பக் கோயில்
பொன்னென்றும் பிரியா வாறு புதிதாகப் பிரித்துண் டாக்கும்
பன்னொன்றுங் குருவே லப்பர் பதமலர் பணிந்து வாழ்வாம். (௭)

பிள்ளைசொன் மழலை கேட்கும் பிதாவெனத் துறைசை வாழும்
வள்ளறன் புராணநாயேன் வகுத்தசொல் விரும்பிக் கேட்குந்
தெள்ளுதே சிகனு மெங்கள் திருச்சிற்றம்பலவர் பாதங்
கள்ளுலா மலர்தூய் வாழ்த்திக் கருத்தினுட் கொண்டு வாழ்வாம்.

புராணச் சிறப்புப் பாயிரம்.

தலமுழுதும்புகழவளராவடுதண்டுறைசையரன்சரிதையோது
மிலகுவடமொழியதனைத்தமிழ்விருத்தப்பாவதனாலிசைத்தல்செய்
[தான்
பலனுதவுதுறைசைவேலப்பகுருவருள்பதிந்தபண்பன்ஞானக்
கலைதெரிந்தசுவாமிநாதம்முனிவனென்னையுமாள்கருணையோனே

திருப்பாதிரிப்புலியூர்ப் புராணப்பாயிரக்
குருதோத்திரம்.

சித்தாந்த சூத்திரபா டியம்புரிந்த *சிவஞானச் செல்வ ராதிப்
பத்தர்கடாம்பணிதிருச்சிற்றம்பலதேசிகர்துறைசைப்பழமைமேய
முத்தரா மம்பலவா ணக்குரவர் பணியுநமச் சிவாய மூர்த்தி
கொத்தார்ந்த மெய்கண்ட பரம்பரைவாழ் தேசிகர்தாள் குறித்து
[வாழ்வாம். (௧)

ஞானதேசிகர் கலம்பகம்.
கட்டளைக் கலித்துறை.

எவன்மறை யந்தத்தில் வாக்கிய ஞானத்தி லெய்துபொரு
ளவனா கியதிருச் சிற்றம் பலவ னருட் டுறைசைத்

---

* சிவஞானச் செல்வர் என்றது திராவிடமாபாடிய கர்த்தராகிய மாதவச்சிவஞானசுவாமிகள் என அறிக.

தவளிடத் தந்தெழுத் தன்மைபெற் றோமினித் தாரணிமேற்
றிவநிலை மாறிமற் றெங்கெழுந் தாலென்ன செங்கதிரே. (கக)

அறுசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

யானென்று மெனதென்று மகப்பற்றும் புறப்பற்று மெய்தா வண்ணந், தானென்று வலிந்தாண்டு காயமொடு பொருளாவி தன்கைக் கொண்டான், தேனென்ற மொழித்துறைசைத் திருச்சிற்றம் பலகுரவன் றிசைசூழ் பாரில், வானென்றும் பெய்வது போ லருள்புரிந்த வதற்கொருகைம் மாறில்லேனே. (கஉ)

சிங்காச னாதிபதி திருத்துறைசை யூராளி செகத்தோ ரெல்லா
மங்காம லுபதேசம் புரிதிருச்சிற் றம்பலவன் வண்மை பாரீர்
சங்காழி மாயவனு மறியாத திருவடியைத் தந்தான் மற்றை
வெங்காலிற் றுரும்பனைய வெனைக்கொண்டா னிதுவுமொரு விளை
[யாட்டாமே. (கங)

ஞானதேசிகர் கலம்பகச் சிறப்புப்பாயிரம்.

கட்டளைக் கலித்துறை.

சிவதீக்கை போதன் றுறைசைச்சிற் றம்பலதேசிகன்மேற்
றவமாட்சி சேதுசபை மெச்சத்தார்புனை சர்க்கரைசேய்
சிவகாட்சிசாது வவை தேர்ச்சி.நிரசி ளிப் புலவன்
கவிருட்ச மோதக் கலம்பகப் பூநெறி கட்டினனே. (கச)

திருச்சிற்றம்பலதேசிகர் சரித்திரம்.

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

இருபத்துமூன்றாவது
அம்பலவாணதேசிகர் சரித்திரம்.

திருச்சிற்றம்பலம்.

ஐந்தொழிலிற் படைப்பாதி நான்கூன நடத்தினு லாருயிர்க்கு
நந்துபரி பாகமுறச் செய்தருள லெனுஞான நடத்தினலே
பந்தமறு முத்திநிலை கைக்கூட்டுவான்றுறைசைப்பதியின்வைகுஞ்
சுந்தரவம் பலவாண குரவனிருதிருத்தாள்கடொழுதுவாழ்வாம்.

சித்தாந்த ஞானதினகராகிய திருச்சிற்றம்பலதேசிகசுவாமிகள்பால் சைவசந்நியாசமும், மூவகைத்தீக்கையும், ஆசாரியாபிடேகமும் முறைபாகப்பெற்று அத்தேசிகசுவாமிகளுக்குத் துவிதீய ஆசிரியராக விளங்கி வீற்றிருக்கும் அம்பலவாணதேசிகர், தமது ஆசிரியசுவாமிகள் ஞானசமாதியில் திவ்விய ஆலயமெடுத்து அவ்வாசிரியசுவாமிகள் திருவடி அடையாளம் ஆண்டு பிரதிட்டைசெய்து, வழிபட்டுக்கொண்டு எழுந்தருளியிருந்து பரிபக்குவர்கட்குச் சித்தாந்தோபதேசஞ் செய்துவருவாராயினர்.

அக்காலத்தில், ஞானதேசிகர், வைத்தீசுரன்கோயில் எனப்பெயர் வழங்கும் புள்ளிருக்குவேளூரிலே சைவவேளாளர் குலத்தில் அவதரித்து இளமைப்பருவத்தே திருவாவடுதுறைக்குவந்து தமதுஞானதேசிகசுவாமிகள்பால் சைவசந்நியாசமும், மூவகைத்தீக்கையும் பெற்று தீவிரபக்குவாயிருந்த சுப்பிரமணியதம்பிரான்சுவாமிகளுக்கு ஓர்சுபதினத்தில் ஆசாரியாபிடேகஞ்செய்து தமக்குத் துவிதீய ஆசிரியராக வைத்தருளினர்.

பின்பு ஞானதேசிகர், செந்தமிழ்நாட்டின்கண்ணுஞ் சோனாட்டின்கண்ணுமுள்ளத் தமது சிடவர்க்கத்தினர்க்குத் தீக்கையாதிகள் செய்யத் திருவுளங்கொண்டு, துவிதீய ஆசிரியராகிய சுப்பிரமணியதேசிகரும், தம்பிரான்சுவாமிகளும், ஏனையஅடியவரும், பரிசனங்களும் உடன்வரத் திருவாவடுதுறையினின்றும்

அரிதினீங்கி, வழியிடையிற்பலஸ்தலங்களையுந் தரிசித்துக்கொண்டும் ஆங்காங்கு தம்மைத் தரிசிக்க வரும் அன்பர்களுக்குத் தீக்கையாதிகள் செய்துகொண்டும் சுசீந்திரத்தையடைந்து. திருக்கோயிலிற்சென்று சுவாமிதரிசனஞ்செய்து தமது திருமடத்தைச் சார்ந்து ஆதீன பரமமுதற்குரவராகிய பஞ்சாக்கரமூர்த்தியின் பிரதிட்டாலயத்திற்சென்று ஞானமூர்த்தியாகிய நமச்சிவாயதேசிகோத்தமரைத் தரிசித்து வழிபாடியற்றி, இருகுமாரசுவாமிதேசிகர் குருமூர்த்தங்கள் தரிசனஞ்செய்து அங்குசிலநாள் வசித்திருந்து, அங்குநின்றும் அரிதினீங்கிப், பழம்பதியாகிய பாண்டியநாட்டின் கண்ணதாய்ப் பலவளங்களும் நிறைந்துள்ள கல்லிடைக்குறிச்சியின் வடபாங்கரிலுள்ள திருத்தளிச்சேரியையடைந்து திருக்கோயிலிற்சென்று சுவாமிதரிசனஞ்செய்து தமது திருமடத்திற்கு எழுந்தருளி, அங்கு சிலகாலம் வசித்திருந்து துவிதீய ஆசிரியராகிய சுப்பிரமணியதேசிகசுவாமிகளை அவ்விடத்திலமர்ந்து சீடர்களுக்குத் தீக்கையாதிகள் செய்துவருமாறு கட்டளையிட்டுத், தாம் அங்குநின்றும் புறப்பட்டு வழியிடையிற் பலஸ்தலங்களையுந் தரிசித்துக்கொண்டு திருவாவடுதுறையை யடைந்து திருக்கோயிலிற்சென்று, துணைவந்த விநாயகரையும், அழகிய விநாயகரையும், மாசிலாமணியீசுரரையும், திரவியத்தியாகரையும், ஒப்பிலாமுலை யம்மையையும், திருமூலதேவரையும், படர்அரசினையும் பணிந்து தமது திருமடத்தினையடைந்து, மடத்து வடக்குவாசலின் மேற்பாலில் கோயில்கொண்டெழுந்தருளியிருக்குஞ்சிவப்பிரகாசவிநாயகரைத் தரிசித்துக்கொண்டு உள்ளே வந்து, திருமாளிகைத்தேவரையும், ஆதீனபரமமுதற்குரவராகிய பஞ்சாக்கரமூர்த்தியையும் பணிந்து வழிபாடியற்றித் தமது ஒடுக்கத்திற்கெழுந்தருளி யாவருக்குங் குருதரிசனக்காட்சியளித்து, அங்குசீடர்களுக்குத் தீக்கையாதிகளுஞ் சித்தாந்த சாத்திரோபதேசமுஞ்செய்து வீற்றிருந்தருளினர்.

அக்காலத்திற்சற்குருநாதனது தம்பிரான்சுவாமிகள் திருக்கூட்டத்தினருடன் அளவளாவி யருங்கலை விநோதராயமர்ந்த கச்சியப்பதம்பிரான்சுவாமிகள், ஞானதேசிகர்பால் விடைபெற்று

ஆவினருங்கன்றுறையும் ஆவடுதண்டுறையினின்றும் அரிதினீங்கிச் சென்னிநன்னாட்டினிற் பற்பல திருத்தலங்களைத் தரிசித்துத் திருவானைக்காவினை யடைந்து, திருக்கோயிலைச்சார்ந்து சிவபிரானையும், உமாதேவியாரையும் பணிந்திறைஞ்சி தமது கல்வியறிவினாற்றலை நன்குணர்ந்த அந்நகரத்திலுள்ள சைவப்பிரபுக்கள் விரும்பிய வண்ணம் அத்தலத்தில் சிலகாலம் வசித்திருந்தனர். அக்காலத்தில் அப்பிரபுக்கள் வேண்டுகோளுக்கியைந்து அத்தலபுராணத்தைத் தமிழில் மொழிபெயர்த்தருளினர். அன்றியும், பூவாளூர்த் தலபுராணத்தை அந்நகரவாசிகள் வேண்டுகோளுக்கியைந்து தமிழில் மொழிபெயர்த்தருளினர்.

பின்புஅச்சுவாமிகள், அங்குநின்றும் அரிதினீங்கி, கொங்குநாட்டினிற்சென்று அங்கு வழியிடையிற் பலதலங்களையுந் தரிசித்துக்கொண்டு, திருப்பேரூர் என்று பெயர் வழங்கும் மேலைச்சிதம்பரத்தையடைந்து, கோயிலிற்சென்று அரசம்பலவாணரையும், பட்டீசுரரையும் பணிந்தேத்தித் தமது ஆதீனமடாலயத்திற் சென்று தமது வித்தியாகுருவாகிய மாதவச்சிவஞானசுவாமிகளுக்கு சைவசந்நியாசமும்; மூவகைத்தீக்கையாதிகளும், சித்தாந்தசாத்திரோபதேசமுஞ் செய்தருளிய ஞானாசாரியசுவாமிகளாகிய துவிதீப வேலப்ப தேசிகோத்தமர் குருமூர்த்தந்தரிசித்து, அங்குள்ள அன்பர்கள் வேண்டுகோளுக்கியைந்து அத்தலத்தில் சிலகாலம் வசித்திருந்தனர். அக்காலத்திற் பலபதிகங்கள் பாடிப் பலருக்குக் குட்டநோய் முதலியவற்றையும் போக்கியருளினர். அன்றியும், மழை வருஷிக்காமல் அங்குள்ளார் யாவரும் வருந்துதலை யறிந்து அரசம்பலவாணர் மீது ஓர்பிரபந்தம்பாடி, மழைபொழியச்செய்தருளினர். பின்புஅந்நகரவன்பர்கள்விரும்பியவாறு அத்தலபுராணத்தைத் தமிழில்மொழிபெயர்த்தருளினர்.

பின்னர் அச்சுவாமிகள், அங்குநின்றும் அரிதினீங்கி வழியிடையிற் பலதலங்களையுந் தரிசித்துக், காஞ்சீபுரத்திற் சென்று, அங்குபல நன்மாணாக்கர்களுக்கு இயற்றமிழ்நூலும் வீட்டுநெறி நூலுங்கற்பித்து வருவாராயினர். அக்காலத்து கச்சியானந்த

ருத்திரேசர்மீது பதிற்றுப்பத்தந்தாதியும், வண்டுவிடுதூதும் செய்தருளினர்.

இங்ஙனம் நெடுங்காலம் அச்சுவாமிகள் மாணவர்களுக்குக் கல்விபோதித்து வருவாராயினர். அங்ஙனம் அத்தலத்தில் வசித்து வருநாட்களில் அத்திருப்பதியிலே சாலிவாகன சகாப்தம் ௲எ௱௰௨-ல் செல்லாநின்ற சாதாரணவருடம் சித்திரைமாதம் பதினோராந்திகதி செவ்வாய்க்கிழமை பூர்வபக்கஞ் சப்தமி புனர்பூசத் திருநாளில் சிவபரிபூரணமுற்றனர். இஃது இங்ஙனமாக.

முன்னரே தொட்டிக்கலைமாநகரில் எழுந்தருளியிருந்து மாணாக்கர்களுக்குக் கல்விபோதித்து வருவாராகிய சுப்பிரமணியத் தம்பிரான்சுவாமிகள், அவ்விடத்தில் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் சிதம்பரேசர்மீது கோவை, சிலேடை வெண்பா சந்நிதி முறை, வண்ணம், பஞ்சரத்தினம், பரணி, கட்டியம் எனப்பலவும், சிவகாமியம்மைமீது பஞ்சரத்தினமும், பாடியருளினர். அன்றியும் அப்பதியிற்றானே எழுந்தருளியிருக்குங் காலத்திலும் இடையிடையே பலவிடங்களினும் யாத்திரையாகச் சென்று, ஆங்காங்கு எழுந்தருளியிருக்குங் காலங்களினும் தம் பாலன்புடைய இருவர்களுக்கு முறையே குட்டரோகத்தினையும், அந்தகத்தன்மையையும் நீக்கியருளும்படி முருகக்கடவுளைப்பிரார்த்தித்து, சுப்பிரமணியர் திருவிருத்தம், திருத்தணிகைத் திருவிருத்தம் எனப்பெயர்வழங்கும் அற்புதப்பதிகமிரண்டும், வடதிருமுல்லைவாயில் கொடியிடையம்மை பிள்ளைத்தமிழ் *ஆயலூர் முருகர்பிள்ளைத்தமிழ், †ஆவினன்குடி கைலாயநாதர்மீது பதிற்றுப்பத்தந்தாதி, முதலாகப் பலவும்பாடியருளினர். மேலுந்தமது வித்தியாகுருவாகிய மாதவச்சிவஞான சுவாமிகளிடத்துத் தமக்குளவாகிய மெய்யன்பின் வசத்தால், அத்திருத்தொட்டிக்கலைமாநகரின்கண் சிதம்பரேசர் திருக்கோயிற் சந்நிதிமண்டபத்தில்

---

*ஆயலூர், தொண்டைநாட்டிலுள்ளதோரூர்.

†ஆவினன்குடி இங்கே பழநியன்று; இவ்வூர் தொண்டைநாட்டிற் பாலாற்றின் வடகரைக்கண்ணதென்று ஷை நூலின் காப்புச்செய்யுள் தெரிவிக்கின்றது. இவ்வூர்ப் பதிற்றுப்பத்தந்தாதிக் கையெழுத்துப் பிரதியில் கீலக௵ தைமீ ௨௰௨ சுக்கிரவாரம் உத்தரநக்ஷத்திரத்தில் இந்நூல் அரங்கேற்றப்பட்டது என்ற வாக்கியம் எழுதப்பட்டுள்ளது.

அப்பெருந்தகையாரது திருவுருவ மமைப்பித்துப் பூசித்துத் திரு விருத்தங்கள்பாடித் தினந்தோறும் வழிபட்டுவந்தனர்.

திருவிருத்தம்.

கருணைபொழி திருமுகத்திற்றிருநீற்று நுதலுங்
கண்டாரைவசப்படுத்தக்கனிந்தவாயழகும்
பெருமைதருதுறவோடுபொறையுளத்திற்பொறுத்தே
பிஞ்ஞகனார்மலர்த்தாள்கள்பிரியாதமனமும்
மருவினர்களகலாதஞானமேவடிவாம்
வளர்துறைசைச்சிவஞானமாமுனிவன்மலர்த்தாள்
ஒருபொழுது நீங்காமலெமதுளத்திற் சிரத்தில்
ஒதிடுவாவினிலென்றுமுன்னிவைத்தேயுரைப்பாம். (க)

திண்ணவின்பச்சேவடியுந்திருவிழியுந்
திருமார்புஞ்செல்வக்கையும்
நண்ணுமன்பர்க்கருள்கருணைத்திருமுகமும்
பசுங்குழவிநடையேயாகிப்
புண்ணியத்தின்பொலிவாகியற்புதக்கோ
லக்கொழுந்தாய்ப்புலைநாயேற்குக்
கண்ணைவிட்டுநீங்காதசிவஞான
சற்குருவேகருணைவாழ்வே. (உ)

ஒதரியவாய்மைச்சிவாகமங்கட்கெலா
முற்றபோதாகமதாய்
ஒங்குதிருவாவடுதுறைப்பதியிலற்புதத்
தொருவடிவுகொண்டருளியே
பேதமுறுசமயவாதிகளுளமயக்கைப்
பெயர்க்குமாசகுளிகையாகிப்
பிரியமுடனேவந்தடுத்தவர்க்கின்பப்
பெருங்கருணைமேருவாகி

ஆதரித்தடியேங்களுண்ணத்தெவிட்டாத
    வமிர்தசாகரமாகியே
அழகுபொலிகலைசைச்சிதம்பரேசுரரடிக்
    கதிமதுரகவிதைமாரி
மாதவர்வழுத்தப்பொழிந்தருளியென் றுமவர்
    மன்னிவளர்சந்நிதியிலோர்
மணிவிளக்கென்னவளர்சிவஞானமாதவன்
    மலர்ப்பதம்வணங்குவாமே. (ஆ)

திருச்சிற்றம்பலம்.

பின்பு அச்சுவாமிகள், தாம் ஆவடுதுறையை யகன்றுபோய் நெடுங்காலமானமையோர்ந்து அங்கெழுந்தருளத் திருவுளங்கொண்டு, அவ்வாறே விரைவில் திருத்தொட்டிக்கலைமாநகரினின்றும் புறப்பட்டுவழியிடையிற் பற்பலஸ்தலங்களைத்தரிசித்துக்கொண்டு திருவாவடுதுறையை யடைந்து, திருக்கோயிலிற்சென்று சுவாமி தரிசனஞ்செய்து தமது திருமடத்திற்குவந்து சிவப்பிரகாசவிநாயகரையும், திருமாளிகைத்தேவரையும், ஆதினபரமமுதற்குரவராகிய திருநமச்சிவாயதேசிகரையும், தமது ஞானாசிரியசுவாமிகளையுந் தரிசித்து, வடக்கு மடத்திற்குவந்து தம்பிரான்சுவாமிகள் திருக்கூட்டத்தைச்சார்ந்து பணிந்து அங்குவசித்திருந்தனர். அங்ஙனம் வசித்திருக்குங்காலையில் அறிவினும், வயதினும் முதியோராகிய தம்பிரான்சுவாமிகளிலொருவர், சுவாமிகளைநோக்கித் தேவரீர் இந்த இடத்தை மறந்தீர்போலும்? என்று சொல்ல அத்தருணத்தில் சுவாமிகள் அத்தபோதனரைப் பணிந்து

விருத்தம்.

தெய்வப்பொன்னித்திருநதிசூழ்சிறப்புமிருநான்கொருகோடி
    சித்தர்வாழுந்திருவரசுமதன்கீழொருமாசிலாமணியு
மைவைத்தனையவிருட்டறையிற்குருட்டாமானுமான்மாக்கள்
    மலகோயகற்றிக்கதிபளிப்பான்வந்தங்கவர்புன்றலைமீது

ளக்கைத்தருளிமுறையேபொற்கழலஞ்சூட்டுங்கோமுத்திக்
கருணைக்கடல்பஞ்சாக்கரதேசிகன்சீரடியார்கலந்திருக்குஞ்
சைவத்திருவோலக்கமுமங்குண்டேற்கலைதலையெரருகாற்
சார்ந்துமீள்வேன்மற்றங்குத்தரியேனங்குத்தரியேனே.

ளத்தலமுமெந்நதியுமெத்தளியுந்திருமூர்த்தமெனைத்தும்போதி
மெய்த்தருவோங்கியதுறைசைத்திருநகருங்காவிரியும்விடையுருச்
வத்திருக்கோயிலுமாசிலாமணியுமதனருகானந்தவைப்பி [சோ
லுத்தமபஞ்சாக்கரசற்குருமணியுமாகியெனையுருக்குமன்றே.

என்றுபாடி யாவரையும் மகிழ்வித்தனர்- அன்றியும், இந்த ஞானதேசிக சுவாமிகளுக்கு ஐந்தாவது முற்றோன்றலாகியும், ஆதீனபிரதமாசாரியராகிய பஞ்சாக்கரதேசிகோத்தமருக்கு ஒன்பதாவது பிற்றோன்றலாகியும் எழுந்தருளியிருந்த, இராமலிங்க தேசிகர் திருவவதாரஞ்செய்தருளிய குலமரபினராகிய வயித்திலிங்கஓதுவாமூர்த்திகளின் புத்திரரும், இவ்வாசிரியசுவாமிகள்பால், மூவகைத்தீக்கையுஞ் சித்தாந்தசாத்திரோபதேசமும் பெற்றவரும், குருசாமியென்னும் பெயரினரும் ஆகிய *ஒருவர் வழக்கப்படி ஓர்நாள் ஞானாசிரியரதுபூஜாகாலத்து அப்பூஜாமண்டபத்தின் பாங்கரிலிருந்து மற்றவர்களோடு சேர்ந்து தேவாரங்களைப் பண்ணுடன் பாடுதல்கேட்டு மற்றையோர் சாரீரங்களினும் இவ்வோதுவாமூர்த்தியின் சாரீரம் கனிசிறந்து விளங்குதலை நன்காராய்ந்து அகமிகமகிழ்ந்து,

கட்டளைக்கலித்துறை.

ஒருசாமி வாழ்ந்திருக் கோமுத்தி யூர்தனி லுற்பவித்து
வருசாமி யெங்கள் வயித்திய லிங்கம் வரம்புரிந்து
தருசாமி முத்தமிழ்ச் சங்கீத சாமிநற் சாந்தகுணக்
குருசாமி நின்குர லெந்நாளுங் கோகிலங் கோகிலமே.

---

*ஒருவர்ஆவார் ஆதீனபிரதமாசாரியராகிய பஞ்சாக்கரமூர்த்திக்கு பதினேழாவது பிற்றோன்றலாகிய அம்பலவாணதேசிகசுவாமிகள்பால் ஞானதீக்ஷை பெற்றவரும், சிதம்பரம் ஸ்ரீமீனாக்ஷி தமிழ்க்கலாசாலைத் தமிழ்ப்பண்டிதரும் ஆகிய பொன்னோதுவாமூர்த்திக்கு பிதாமகரின் தந்தை என்க.

என்னுஞ் செய்யுளை இயற்றித் தமது ஞானதேசிகர் பூஜாமண்டபத்தினின்றும் வெளியே யெழுந்தருளுங்காலத்து அவ்வாசிரியர் பால் விண்ணப்பஞ்செய்து உவப்பித்தனர்.

பின்பு அச்சுவாமிகள், குருலிங்கசங்கமசேவைசெய்துகொண்டு அங்குசிலகாலம் வசித்திருந்தனர். அக்காலத்து மாசிலாமணியீசுரர்மீது கோவையென்னும் பிரபந்தம்பாடி ஞானதேசிகர் திருமுன்பு அதனை அரங்கேற்றி வருவாராயினர். அப்பொழுது நாடோறும் அரங்கேற்று சபையில் வந்துகேட்டுக்கொண்டு இவ்புற்றிருக்கும் அன்பர்களில் ஒருவர், பிறர்க்குளவிதிற் பொருள் புலப்படாதபடி அகப்பொருட்டுறையை அமைத்து அம்பலவாணதேசிகர்மீதுசெய்யுள்செய்து தருக என்றுவேண்ட,

(க) இத்தை யனையவுரு வில்லான் விடுமலரே
வைத்தகரை போதடுக்க மாட்டாதே—நித்தநித்த
மங்கமுகங் காத்துறைசை யம்பலவா ணன்புயத்திற்
செங்கழுநீர்த் தாரனையே தேடு.

[இத்தையல் லையை=இப்பெண் மெலியும்படி. மலரேவை=மலர்ப் பாணத்தை. தகர். ஆடு. அனையே செங்கழுநீர்த்தாரைத்தேடு]

(உ) இந்தவச மந்தவசந் தன்மலைதற் கேதுசெபு
கொந்தவச முற்றுட்கே நோக்குங்காற்—பைந்தொடியா
யாண்டகுருத் தென்றுறசை யம்பலவா ணன்புயத்திற்
பூண்டதிறச் செங்கழுநீர்ப் பூ.

[இந்த அசம=இந்த ஆடு. வசந்தன்=மன்மதன். பைந்தொடி-விளி. செங்கழுநீர்ப்பூவை ஆய்வாயாக; ஆய்தல்=ஈண்டுத்தேடிக்கொணர்தல்.]

என்று இரண்டுவெண்பாக்கள் பாடி, எவர்க்கும் பெருமகிழ்ச்சியைவிளைவித்தனர். பின்பு சிலதினங்களுள் கோவையை அரங்கேற்றிமுடித்தனர். அன்றியும் திருமாளிகைத்தேவர்மீது தனித்தோத்திரச் செய்யுட்களும், தோத்திரபஞ்சகமும் ஞானதேசிகர்மீது ஆனந்தக்களிப்புஞ் செய்தருளினர்.

தனித்தோத்திரச்செய்யுட்கள்.

குடங்கர்விசும் பிடைநிறுவிக் குணபகடர் திடவியக்கிக்
கொடிஞ்சிப் பொற்றேர், வடங்கழற்றி யோட்டிமதி னாற்றிகளி
லுரவழைத்து வரைநற் காட்டி, னுடம்பினொரு புகைமாற்றிக்
கொங்கணர்பாத் திரஞ்சுவற்றி யுணவ தாய்வென், றிடும்பயனு
முனைசெய்தெமக் கருடிருமா ளிகைத்தேவ ரிணைத்தாள் போற்றி

பொருவிலநாம் போகநா தசித்தர்பதம் பூசிக்கும் புனிதர்
நாளு, மருவுபதி யதிசயங்கள் வாக்காலு மனத்தாலு மதிக்கொ
ணாதா, யிருளகன்ற பானுவென வெண்டிசையும் பணிந்துய்ய
வின்ப மோங்கி, யருளுருவாய்த் துறைசைவரு திருமாளிகைத்
தேவை யகத்துள் வைப்பாம். (உ)

புறமைத்த கர்த்தான மதிப்பருமற் புதமாந் தன்மை பல
விளக்கி, நிறைவுற் றிருக்குஞ் சிவானந்த நிலைபெற் றிருக்கு
மெம்பெருமான், குறைவற் றிருக்கு மெய்யடியார் கூட்டங் கல
ந்து வளர்ந்தோங்குந், துறைசைத் திருமாளி கைத்தேவன்
றுணைத்தாட் கமலந் துதிப்பாமால். (ங)

தோத்திர பஞ்சகம்.

கருணைபொழி திருமுகமுஞ் சற்குருபொற் பதமலரே கா
ணுங் கண்ணுந், திருமருவு தடமார்பு மத்துவித முணர்ந்தசின்
முத்திரைச் செங்கையு, மருமலர்ச்சே வடியிணையு மனத்தெழுதி
வைத்திறைஞ்சி வாழுந் தொண்டர்க், கருள்புரிய வருதிருமா
ளிகைத்தேவ சிகாமணியே யன்பர் வாழ்வே. (க)

மருள்பெருக்கு மனக்கயவர் வஞ்சனையைத் துமிந்தெனையே
வைப்பாய்ப் போற்றுந், தெருள்பெருக்கு மனத்தடியார் குறை
தீர்க்குங் குணக்குன்றே சிறந்த வோர்நாற், பொருள்பெருக்குந்
தெய்விக்ப்பூம் பொன்னிபுறஞ் சூழ்துறைசைப் பொலிந்து மேவி,
யருள்பெருக்கு மொருதிருமா ளிகைத்தேவ சிகாமணியே யன்
பர் வாழ்வே, (உ)

ஈன்றுவளர்த் திடுதாயு மிதம்புரிதந் தையுமல்லா திளஞ்சிறா
ர்க்குத், தோன்றுதுணை யாயொருவ ருண்டோவங் கதுபோலுன்
றொழும்பா யுள்ளோம், மான்றுமனந் தளர்ந்திடினீ யன்றியளித்
தருளவல்லார் மற்று முண்டோ, வான்றபுகழ் பெறுதிருமா
ளிகைத்தேவ சிகாமணியே யன்பர் வாழ்வே. (ரு)

பெண்டிருமக் களுமுரிமை பெருக்குகிளை யரும் பொருளும்
பிறவு நீத்துன், றண்டளிர்ப்பொற் றிருவடியே சரணாகச் சார்ந்
திருக்குந் தமியேங் கட்கு, முண்டொர்குறை யெனிலெவர்மாட்
டுரைத்தாற்றிக் கொள்வதுரைத் தருள்வாய் வானத், தண்டர்
கணம் பணிதிருமா ளிகைத்தேவ சிகாமணியே யன்பர் வாழ்வே.

பூவலர்கொன் றைந்தை பெம்மான் பொன்னடிப்பூ சனையிய
ற்றும் புதல்வற் காக, மாவலித்தோண் மறலிபட்ட பாட்டையுன்
னிப் பாராதுன் வழித்தொண் டானே, மேவுமொரு புகலிலர்
போல் வருந்துவதுன் னழகேவெண் டிரைநீர்ப் பொன்னி, யாவடு
தன் றுறைத்திருமா ளிகைத்தேவ சிகாமணியே யன்பர் வாழ்வே.

ஞானதேசிகர் ஆனந்தக்களிப்பு.

ஆனந்தந் தங்கமை பாரீ செங்க
ளம்பல வாண வருட்குரு ராசன்

ஆனந்தந் தந்தமை பாரீர்.

பருவ மளவற்ற கால மென்னைப்
பார்த்திருந் தான்றன்னைப் பார்த்திடுங் காலங்
குருவடி வாயொரு கோல மிங்குக்
கொண்டுவந் தென்னை யாட்கொண்டருள் மூலம் (ஆனந்தந்)

மும்மலக் கோட்டை யிடித்துப் பொய்யின்
மூழ்கிக் கிடந்த வெனைக்கைப் பிடித்துச்
செம்மணி மன்று ளடித்து நிற்குந்
திருவடித் தாமரைத் தேனென்னுள் வடித்து (ஆனந்தந்

எனது மனதினைத் தேற்றிப் பைய
வேறுக்குழிநின்று மௌனமெடுத்தேற்றிச்
செனாவிடாயினை மாற்றி மெள்ளச்
செப்பாத சொல்லொன்றென் செவியுறச்சாற்றி. (ஆனந்தங்)

என்னிரு வல்வினை யோட்டிக் கன
விந்திர சாலமுலகென்று காட்டித்
தன்னிரு தாளிணை சூட்டித் யொன்றித்
தம்மை யறிந்தவர் தம்முடன் கூட்டி (ஆனந்தங்)

அன்றுதொட் டென்னை யடுத்து நா
னுடிந்துறைவெல்லா மோடவிடுத்து
வின்று தனக்குட் படுத்து வெனக்
கெங்கெங்கும் பார்க்கினுங் காட்சிகொடுத்து (ஆனந்தங்)

பாசமை யந்தக்கோர் சிங்கஞ் சுற்றும்
பவக்கடல் வீழ்ந்தோரைக் கரையேற்றும் வங்கங்
கருதின தருமொரு சங்கந் தூக்கிக்
கனலி லுருக்கி யுரையாத தங்கம் (ஆனந்தங்)

தேவர்கள் போற்று முல்லாச னன்பர்
சித்தத்து ளூறித்தித் திக்கும் விலாச
னுவடு தண்டுறை வாச னிந்த
அம்புவிக் கெல்லாம் அருட்குரு ராசன் (ஆனந்தங்)

திக்கெட்டும் போற்றுஞ் சரணன் றன்னைச்
சென்றடைந் தோர்களைத் தாங்குமோரரணன்
அக்குமணியா பரண னன்பர்க்
கமிர்தப் பிரவாகத்தை பளிக்கும் விதாணன் (ஆனந்தங்)

பாசத் தளையை முறித்துக் கோடி
பரிதிப்ர காசமா யுள்ளே யெறித்து
வாசுற்ற வேரைப் பறித்து மெய்ம்மை
யன்பரோ டென்னையு மாளாக்குறித்து (ஆனந்தங்)

நானென்ற தானென்ற தற்றுச் சிவ
ஞானப்ர காசவெளியிடை யுற்று
வானந்த நித்திரை பெற்று நிர்த
மடியாரோ டென்னையும் வரவென் றழைத்து (ஆனந்தந்)

பஞ்சம லக்கொடுந் துயர்த்துக் கொடும்
பாவியேன் செய்பிழை யெல்லாம் பொறுத்து
நெஞ்சி லினைவை நிறுத்து வினை
நேர்வந்த காலந்தன் னருளுள் ளுறுத்து.

ஆனந்தந்தமை பாரீ செங்க
ளம்பல வாண வருட்குரு ராசன்
ஆனந்தந் தந்தமை பாரீர்.

பின்பு அச்சுவாமிகள், தாம் முன்பிருந்த தொண்டைநாட்டின்கணுள்ள தொட்டிக்கலைமா நகர்க்குத் தாம் செல்லத் திருவுளங்கொண்டு, ஞானதேசிகரிடத்து அநுஞ்ஞைபெற்று அங்கு நின்றுமரிதினீங்கி, சான்றோருடைத்தென்று சாற்றுந் தகைமை வாய்ந்த அத்தண்டகநாட்டினைச் சார்ந்து அங்கு பலதலங்களையுந் தரிசித்துக்கொண்டு திருத்தொட்டிக்கலைசைமா நகரையடைந்து, முன்போலப்பலமாணர்களுக்கு இயற்றமிழ்நூலும், வீட்டுநூலுங் கற்பித்துக்கொண்டு அத்தலத்தில் வசித்திருந்தனர்.

பின்பு, ஞானதேசிகர் தம்பாற் சரண்புகுந் பக்குவசீடர்களுக்கு சித்தாந்தச்சாத்திரோபதேசஞ் செய்துகொண்டு திருவாவடுதுறையென்னும் அத்திவ்விய திருப்பதியிலே வசிக்குநாட்களில் ஓர் மார்கழிமாசத்து கேட்டைநக்ஷத்திரத்தில் சிற்றம்பலவர் திருவடி நீழலையடைந்தனர்.

இந்த ஞானதேசிகர், திருநந்திதேவர் திருவருளுபதேசமாபினராகிய பஞ்சாக்கர தேசிகோத்தமருக்குப், பதின்மூன்றுவது பிற்றோன்றல் என்பதூஉம் கவிச்சக்கரவர்த்தியாகிய கச்சியப்ப சுவாமிகள், இந்தஞானதேசிகர்பால் திருவருளுபதேசம்பெற்றவ

ரென்பதூஉம், அச்சுவாமிகள் சிவஞானபோதத்திராவிடமாபாடிய கர்த்தராகிய மாதவச்சிவஞானசுவாமிகள் மாணவர்களில் முதன்மை பெற்றவரென்பதூஉம், அச்சுவாமிகளியற்றிய பேரூர்ஸ்தலபுராணக்கடவுள் வாழ்த்தும், கூறிய குருதோத்திரப்பாவானும் அச்சுவாமிகள் பரிபூரணகாலநிர்ணயந் தெளிவுற விளங்கும்படி சிரியர்கூறிய ஆசிரியதிருவிருத்தச் செய்யுளானும் இனிது புலப்படும்.

அவைவருமாறு:—

பேரூர்த் தலபுராணக் கடவுள் வாழ்த்து.

கு ரு வ ண க் க ம்.

எண்சீர்க்கழி நெடில்ஆசிரிய விருத்தம்.

அங்கணர்தங் கயிலைவரை நந்திநவின் றருளு
மருணூலை மொழிபெயர்த்த வாசிரியன் மரபிற்
றங்குதுறை சையினமச்சி வாயர்மறை ஞானர்
தயங்கியவம் பலவாண குருத்திரகோ டியர்மா
மங்கலவே லப்பரிரு குமாரசா மிகண்மா சிலாமணியா
ரிராமலிங்கர் வயங்கிரு வேலப்ப
ரிங்கனுயர் திருச்சிற்றம் பலவ*ரிரு டமித்திட்
டெனையாளம் பலவாண ரிவர்களை யேத்தெடுப்பாம்.

கச்சியப்பசுவாமிகள் பரிபூரணகால நிர்ணயச்செய்யுள்

பதினான்குசீர்க்கழிநெடில் ஆசிரியவிருத்தம்.

ஏர்தரு சாலிவாகன சகாப்தமாயிரத் தெழுதசத்
தொருபத் திரண்டின்மேற் சாதா ரணவருடத்தி
னியைதரு சித்திரைத்திங்கள்
சார்தரு தெய்தி பத்தினொடொன்று தகு செவ்வாய்
வாரம்பூ ருவத்திற் சத்தமி புனர்பூ சத்திரு
நாளிற் றவலருங் கும்பலக் கினத்திற்

---

* இருடமித்திட்டெனை யாளம்பலவாணர் எனக் கூறினமையால் கச்சியப்பசுவாமிகளுக்கு ஞானாசாரியர் இவ்வம்பலவாணதேசிகரே என்பது நன்கு புலப்படும்.

சீர்தரு துறைசை வாழ்சிவ ஞான தேவன்மா ணாக்கரின்
முதன்மை திகழ்ந்துள கச்சி யப்பமா முனிவன்
திருப்பெருங் காஞ்சியி லெய்தி
சேர்தரு மடியார் தமதகவிருளைத் தினகரன் முன்னிரு
ளென்ன திருந்துதன் னருளாலகற்றி
விடுத்தி சிறந்த பூரணதசை யடைந்தான்.

அம்பலவாணதேசிகர் சரித்திரம்

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

இருபத்துநான்காவது

சுப்பிரமணியதேசிகர் சரித்திரம்.

திருச்சிற்றம்பலம்.

சுந்தர சித்த முற்றுருகித் தொழும்பா யொழுகுங் குழாங்கட்குப்
பெந்த முத்தி யிரண்டினிலும் பிறழா மும்மைப் பொருளியலென்
அந்தியொடுந்தெளித்தருள்பாக் கோசிசா றுறைசைக்கன்வாழும்
அத்தன் குருசுப் பிரமணிய வமலன் கமலவடி போற்றி.

கந்தமலர்ச் சதுர்முகனுந் திருமாலு நேடியின்னுங் காணாத்
தேட்டா, வந்தமுமா தியுங்கடந்த வொருபொருடேன் றுறைசை
நகர்க் கரசாய்த் தொண்டர், பந்தமலக் கட்டறுத்துப் பரபோகங்
காட்டவருட் படிவங்கொண்டு, வந்தருள்சுப் பிரமணிய குருசாமி
திருவடித்தா மரைகள் போற்றி.

ஞானதேசிகராகிய அம்பலவாணதேசிகர் சிவபரிபூரணமுற்ற
திருவருட்செயலினை அடியார்களிற் சிலர் திருத்தளிச்சேரிக்குச்
சென்று தவிதிய ஆசிரியராகிய சுப்பிரமணியதேசிகசுவாமிகள்

பால் விண்ணப்பஞ்செய்ய, அத்தேசிகசுவாமிகள், அதனைக்கேட்ட மாத்திரையில் பிரிவாற்றாது திருவுளம்வருந்திப் பின்பு அங்கு நின்றும் புறப்பட்டு திருவாவடுதுறைக்கு விரைவாகவந்தடைந்து, ஞானதேசிகர் பரிபூரணமுற்றருளிய ஞானசமாதியைத் தரிசித்து அருச்சனையாதிகள் அடைவே அன்போடியற்றி வழிபட்டுக் கொண்டு அங்குநின்றும் அரிதினீங்கித், திருக்கோயிலிற் சென்று சுவாமிதரிசனஞ்செய்து வெளியேவந்து திருமடத்திற் சென்று சிவப்பிரகாச விநாயகரையும் திருமாளிகைத் தேவரையும் ஞான நடராசப்பெருமானையும், ஆதீனபிரதமாசாரியராகிய பஞ்சாக்கர தேசிகரையும் தரிசித்து வழிபாடியற்றி ஒடுக்கத்திற்சென்று, தமது ஞானாசிரியசுவாமிகள் திருவடிக்கு அருச்சனையாதிகள் புரிந்து பணிந்து கொலுவீற்றிருந்து யாவருக்குங் குருதரிசனக் காட்சியளித்து விபூதிப் பிரசாதம் நல்கியருளினர்.

பின்பு ஞானதேசிகர், அங்கு தம்பால்வந்து சரண்புகும் பரிபக்குவர்களுக்குத் திக்கையாதிகளுஞ் சித்தாந்த சாத்திரோப தேசமுஞ்செய்து வருவாராயினர்.

அக்காலத்திலே முன்புதொண்டைநாட்டிலே திருமாகறல் என்னுந் திருப்பதியில் அவதரித்து இளமைப்பருவத்தே துறவு பூணவிரும்பி திருவாவடுதுறையடைந்து தம்பால், சைவசந்நியாச மும் மூவகை திக்கையும் சித்தாந்தசாத்திரோபதேசமும்பெற்றுத் தலைமைசான்று விளங்கிய கனகசபாபதித் தம்பிரானுக்கு ஓர் சுபதினத்தில் ஞானதேசிகர், ஆசாரியாபிடேகமியற்றியருளினர்.

பின்பு, ஞானதேசிகர், துவிதிய ஆசிரியராகிய கனகசபாபதி தேசிகருக்குச் சீடர்களுக்குத் திகைஷசெய்யும் விதிகள் முதலிய வற்றைத் தெளிவுறவிளக்கி வருவாராயினர். இங்ஙனஞ்சிலபகல் சென்றபின்னர் ஞானதேசிகர், வடநாட்டிலுள்ள திவ்யஸ்தலங் களிற் சென்று சிவபெருமானைத் தரிசனஞ்செய்து வருதற்குத் திருவுளங்கொண்டு, திருவாவடுதுறையினின்றும் அரிதினீங்கி வழியிடையிற் பலதலங்களையுந்தரிசித்து சிதம்பரஞ்சென்று சிற்

சபேசனைத் தரிசனஞ்செய்து செப்புதற்கரிய சிவானந்தத்திற் பெரிதுந்திளைத்தின் புற்றுத், தமது திருமடத்திற்குச் சென்று மெய்கண்ட சிவாசாரியசுவாமிகள் பிரதிட்டாலயத்தினையடைந்து வழிபாடியற்றி, அங்குசிலநாள் வசித்திருந்தனர். அப்பொழுது திருக்களாஞ்சேரிக்குங் கொற்றவங்குடிக்குஞ் சென்று மறைஞானசம்பந்த சிவாசாரியர், உமாபதிசிவாசாரியர், அருணமச்சிவாயதேசிகர், குருமூர்த்தங்கள் தரிசித்துப்பின்பு அங்கு நின்றும் அரிதினீங்கி வழியிடையிற் பலதலங்களையுந் தரிசனஞ்செய்து திருவண்ணாமலையையடைந்து திருக்கோயிலிற்சென்று சுவாமிதரிசனஞ்செய்து தமது திருமடஞ்சார்ந்து திரிதிய ஆசிரியராகிய சுவாமிநாதன் என்னும் பிள்ளைத்திருநாமமுடைய ஈசானதேசிக சுவாமிகள் குருமூர்த்தந்தரிசித்து அங்குசிலநாள் வசித்திருந்து அங்கு நின்று மரிதினீங்கித், திருக்கோவலூர் முதலியஸ்தலங்களை வணங்கித்திருவெண்ணெய்நல்லூரடைந்து திருக்கோயிலிற் சென்று சுவாமிதரிசனஞ்செய்து அத்திருக்கோயிலில் மேல்பால் எழுந்தருளியிருக்குமபொல்லாப்பிள்ளையாரென்றுபெயர்வழங்கும் விநாயகப்பெருமானை வணங்கி வழிபாடியற்றி, தமது திருமடத்திற்கெழுந்தருளி, மெய்யன்தம்பிரான் என்று மேதினிபோற்றும் மெய்ஞ்ஞானபானுவாகித் திருக்கோயில் கொண்டருளியமெய்கண்ட சிவாசாரியசுவாமிகள் விரைமலர்த்தாளிணை பணிந்து, விளம்பரும் உழுவலன்புடன் வழிபாடியற்றி அங்கு சிலகாலம் வசித்திருந்தனர். அக்காலத்தில் தேசிகோத்தமராகியமெய்கண்ட சிவாசாரிய சுவாமிமீது [பூவேபொற்பூவின்மணமே] எனத் தொடங்கி பத்துவிருத்தத்தால் ஓர் பாமாலை சாத்தியருளினர்.

அவை வருமாறு:—

மெய்கண்டதேசிகர்மாலை.

திருச்சிற்றம்பலம்.

கட்டளைக்கலித்துறை.

பூவேபொற் பூவின் மணமே மணப்புதுப் பூங்கற்பகக்
காவே யெனதிரு கண்ணேயென் கண்ணுட் கருமணியே

கோவே குனைக்குன்ற மேயென்னை யாண்டசு கோதயமே
தேவே திருவெண்ணெய் மெய்கண்ட நாதமெய்த் தேசிகனே. (௧

மெய்வாய் கண்மூக்குச் செவிவழி யேசெல் விடயமைந்தி
னைவா யகப்படு மீபோன் மயங்கு மருவினையேற்
குய்வாய்மை காட்டி வினைவீட்டி யின்ப முறக்கருணை
செய்வாய் திருவெண்ணெய் மெய்கண்ட நாதமெய்த் தேசிகனே.

ஊனே யவ்வூனி னுயிரே யுயிர்க்கு யிரேயுணர்வே
வானே மறைப்பொரு ளேயரு ளேவடி வாகியவெங்
கோனே யெனதற்றி யானின தாகவுங் கூட்டுவையோ
தேனே திருவெண்ணெய் மெய்கண்ட நாதமெய்த் தேசிகனே.(௩

பார்த்த விடமெங்கு நாயேற்கு வேற்று முகப்படுமற்
றார்த்த வறிவினர் நேயமும் வேம்பெனக் காமருளிற்
கூர்த்தமெய் வேடமு மப்படி யேயென் கொடுமையிதைத்
தீர்த்தென்னை யாண்டருண் மெய்கண்ட நாதமெய்த் தேசிகனே.

முற்பவம் வந்த வரலாறு முற்று முடிந்த தற்பி
னுற்பவம் வந்த வரலாறு மோர்கில னுண்மை யென்னே
யற்புத விக்ரக வானந்த ரூப வருட்செல்வமே
சிற்பர சின்மய மெய்கண்ட நாதமெய்த் தேசிகனே. (௫)

உன்மத்த மாயைக்கு முன்னது கன்ம மெனவுரைப்பார்
கன்மத்தின் முன்னது மாயையென் பார்கலங் காதருளாய்
தன்மத்தை முன்னிட்ட மூன்று முனருந் தபோதனர்க்குச்
சின்முத்தி ரையருண் மெய்கண்ட நாதமெய்த் தேசிகனே. (௬

சுந்தர மான முகதா மரையுஞ் சுரந்தவரு
ளுந்திய பார்வையுஞ் சின்முத்தி ரைக்கையு மோங்கு மின்பந்
தந்தருண் மேனியும் பாதார விந்தமு மாய்த் தமியேன்
சிந்தை குடிகொண்ட மெய்கண்ட நாதமெய்த் தேசிகனே. (எ)

ஆறு கிலேனென் கவலையெ லாகின தஞ்செழுத்தைக்
கூறு கிலேனின் னருட்பெருக் கத்தைக் குறித்துணர்ந்துள்

ஞுறுநிலையின் வருளினைக் காக்குமென் னுண்மையதாத்
தேறுநிலேன் வெண்ணெய் மெய்கண்ட நாதமெய்த் தேசிகனே.

அறிவா லறிதற் கடங்காத பேரொளி யாகி யெங்கு
நிறைவாய்ப் பரம சுகமாகி நேயமி லாருளத்திற்
பிறிவா வடிய ருளத்தமு தாய்ப்பெரி தாகுமின்பச்
செறிவாந் திருவெண்ணெய் மெய்கண்ட நாதமெய்த் தேசிகனே.

கருவினை யெய்தச் செயுமா ணவத்துக்குங் காரணமா
மிருவினை நின்ற நிலைமைமற் றுண்மையெல் லாமொருசொற்
பொருளின தாக வமைத்தருள் ஞானப் பொருட்சுவையாய்த்
திருவெண்ணெய் மேவிய மெய்கண்ட நாதமெய்த் தேசிகனே (௰)

பின்பு ஞானதேசிகர், துவிதீய ஆசிரியராகிய கனகசபாபதி தேசிகசுவாமிகளும், தம்பிரான்சுவாமிகளும், ஏனைய அடியவர்களும் உடன்வர அங்குநின்றும் அரிதினீங்கித் திருத்துறையூருக்குச்சென்று திருக்கோயிலணைந்து, சுந்தரமூர்த்திநாயனார்க்குத் தவநெறி தந்தருளிய தாணுவையும், பூங்கோதைநாயகியையுந் தரிசித்து, அத்தாணுவின் நேரே பூருவமுகமாக ஞானநிஷ்டை கூடியிருக்கும் அருணந்திசிவாசாரிய சுவாமிகள் குருமூர்த்தந் திருக்கோயிலிற்சென்று வணங்கி வழிபாடியற்றி அங்கு தமது திருமடத்தில் சிலநாள்வசித்திருந்து அங்குநின்றும் அரிதினீங்கி வழியிடையிற் பற்பல தலங்களைத் தரிசித்துச் சிதம்பரத்தைச் சேர்ந்து சிற்சபேசர் தரிசனஞ்செய்து அங்குநின்றும் அரிதினீங்கிச் சீகாழி முதலாகிய தலங்களைத் தரிசித்துக்கொண்டு திருமூவலூரை யடைந்து திருக்கோயிலிற்சென்று வழித்துணைநாயகர் மலரடி வணங்கி வழிபாடியற்றி, ஆதீனபிரதமாசாரியசுவாமிகளாகிய நமசிவாயமூர்த்திகள் திருவவதாரஞ்செய்தருளிய கிருகமாகிய தமது திருமடத்தைச் சார்ந்து அம்மடாலயத்தின் வாசலில் வணங்கி உள்ளேசென்று கொலுவீற்றிருந்து சீடர்களுக்கு விபூதிப்பிரசாதம் நல்கி, அங்குநின்றும் புறப்பட்டு "*ஆவினருங் கன்றுறையும் ஆவடுதுறையினையணைந்து" கோமுத்தீசுவரரை

* ஆவினருங்கன்று என்பது அத்தலநாயகர் பெயர்.

யும் அதுல்பகுஜாம்பிகையையும், திரவியத்தியாகரையுந் தரிசனஞ்செய்து திருமூலதேவர் திருத்தாளிறைஞ்சிப் படாரசினைப் பலித்து தமது திருமடத்தினுட் புகுவார்; அம்மடாலயத்தின் வடக்குவாசலின் மேல்பால் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் சிவப்பிரகாசவிநாயகப்பெருமானை வணங்கி உள்ளேசென்று திருமாளிகைத் தேவரையும், திருநமசிவாய தேசிகோத்தமரையுஞ் தரிசனஞ்செய்து வழிபாடியற்றி, தமது ஒடுக்கத்திற்கெழுந்தருளி கொலுவீற்றிருந்து யாவருக்குங் குருதரிசனக் காட்சி கொடுத்து விபூதிப்பிரசாதம் நல்கி வீற்றிருந்தருளினர்.

பின்பு சிலபகல் கழிந்து, ஞானதேசிகர், துவிதீய ஆசிரியராகிய கனகசபாபதிதேசிகசுவாமிகளும், தம்பிரான்சுவாமிகளும், ஏனைய அடியவர்களும், பரிசனங்களும் உடனவரத் திருவாவடுதுறையினின்றும் புறப்பட்டு வழியிடையிற் பற்பல ஸ்தலங்களையுந் தரிசித்துச் சுசீந்திரத்தையடைந்து, திருக்கோயிலிற்சென்று தாணுமாலயேசுரர் தரிசனஞ்செய்து தமதுதிருமடத்திற்சென்று ஆதீன பிரதமாசாரியராகிய நமசிவாயமூர்த்திகள் பிரதிட்டாலயத்தினையடைந்து தரிசித்து, இருகுமாரசுவாமிதேசிகர் குருமூர்த்தங்கள் தரிசனைசெய்து அங்குசிலநாள் வசித்திருந்து, அங்குநின்றும் புறப்பட்டு வழியிடையிற் பலதலங்களைத் தரிசித்துக் கல்லிடைக்குறிச்சியின் பாங்கருள்ள திருத்துளிச்சேரியைச் சேர்ந்து திருக்கோயிலிற்சென்று சுவாமிதரிசனஞ்செய்து, தமது திருமடத்தில் எழுந்தருளியிருந்து பரிபக்குவந்தேர்ந்து சீடர்களுக்குத் தீக்கையாதிகளுஞ் சித்தாந்தசாஸ்திரோபதேசமுஞ் செய்து வருவாராயினர்.

பின்பு சிலநாட்கழித்து, ஞானதேசிகர் துவிதியாசிரியராகிய கனகசபாபதிதேசிகசுவாமிகளை அங்கமர்ந்து சீடர்களுக்குத் தீக்கைபாதிகள் செய்து வருமாறு செய்வித்துத்தாம் அங்குநின்றும் புறப்பட்டு வழியிடையிலுள்ள பலதலங்களைத்தரிசித்துத் திருவாவடுதுறையையடைந்து, திருக்கோயிலிற்சென்று சுவாமிதரிசனஞ்செய்து தமது திருமடத்திற்கு வந்து, சிவப்பிரகாசவிநாயகரை

யும், திருமாளிகைத்தேவரையும், திருநமசிவாயதேசிகோத்தமரையுந் தரிசித்து ஒடுக்கத்திற்சென்று யாவருக்கும் குருதரிசனக் காட்சி கொடுத்து அங்கு முன்போலத் தீக்ஷையாதிகள்செய்து வீற்றிருந்தருள்வாராயினர். இஃது இவ்வாறாக.

முன்புஞானதேசிகரது திருவருளாணையின்வண்ணம் திருத்தளிச்சேரியிலெழுந்தருளியிருக்குங் கனகசபாபதிதேசிகர் அங்கு பற்பல சீடர்களுக்குத் தீக்ஷையாதிகளுஞ் சித்தாந்தசாத்திரோபதேசமுஞ்செய்து வீற்றிருக்கும் நாட்களில் ஓர் தைமாதத்துக் கார்த்திகைநக்ஷத்திரத்திலே சிவபரிபூரணதசையையடைந்தனர்.

அங்ஙனம் தேசிகசுவாமிகள் சிவபரிபூரணமுற்றருளுதலும் அடியார் சிலர் விரைவிலே திருவாவடுதுறையை வந்தடைந்து ஞானதேசிகர் திருவடிகளை வணங்கி அதனை விண்ணப்பஞ்செய்ய அப்பொழுது ஞானதேசிகர் தாம் பெரிதும் திருவுளமிரங்கியருளினர்.

பின்பு ஞானதேசிகர், பாண்டியவளநாட்டின்கண்ணுள்ள இராசவல்லியபுரத்திலே கார்காத்தவேளாளர்வருணத்திலே அவதரித்தவரும் தம்மடியார் பல்லோருள்ளுஞ் சிறந்தவருமாகிய சுப்பிரமணியத்தம்பிரானுக்கு ஓர்சுபதினத்தில் ஆசாரியாபிடேகஞ் செய்தருளினர்.

பின்பு சிலபகல்சென்று, ஞானதேசிகர் துவிதீய ஆசிரியராகிய சுப்பிரமணியதேசிக சுவாமிகளோடு சுசீந்திரத்திற்கெழுந்தருளி ஆங்குசிலநாள் வீற்றிருந்து தம்சீடர்களுக்கும் ஏனையோர்க்கும் திருவருள்பாலித்து பின் அங்குநின்றும் புறப்பட்டு திருத்தளிச்சேரியையடைந்து அவ்விடத்துஞ் சிலநாள் எழுந்தருளியிருந்து, பின்பு துவிதீய ஆசிரியராகிய சுப்பிரமணியதேசிகரை அவ்விடத்திலமர்ந்தருளுமாறு பணித்துத் தாம் அங்குநின்றும் புறப்பட்டு வழியிடையிற் பலதலங்களைத் தரிசித்துக்கொண்டு திருவாவடுதுறையையடைந்து, அங்கு தமது மடாலயத்தில் எழுந்தருளியிருந்து ஞானோபதேசஞ்செய்து வருவாராயினர்.

அக்காலத்தில் ஞானதேசிகர்பால் குருக்ஷேத்திரபரிபாலனத் திருத்தொண்டு புரிந்துவரும் *ஆறுமுகத்தம்பிரான் சுவாமிகள் சோழவளநாட்டின்கண்ணுள்ள மன்னைச்சநல்லூரில் மன்னவ ரொப்ப வாழ்ந்திருந்த சந்திரசேகரம்பிள்ளையென்பவருக்கு இரு கண்மணியனைய இருந்தவப்புதல்வர்களான ஆளுடையபிள்ளை, சொக்கலிங்கம்பிள்ளை என இருவரும் ஏனையோரும் உதவிய பெரும்பொருளைக்கொண்டு, ஞானதேசிகர் எழுந்தருளியிருக்குந் திவ்விய சினகரமாகிய ஒடுக்கத்தினை விசித்திரமான கற்பணியிய ற்றி, அதன் மேல்பாலில் அவ்விருவர் தம்முருவங்களையுஞ் சிலையி லமைத்து நிறுத்தியும், அவ்வொடுக்கத்திற்கணித்தாக ஈசான திக்கின்கண் ஞானதேசிகர் ஞானமாநடராஜப்பெருமான் பூசை புரிதற்கு †நவமாகப்பூஜாமண்டபம் ஒன்றியற்றியும், பாகசாலை யும், போசனசாலையும் அவ்வாறு குயிற்றியும், வேறு கற்றிருப் பணிகள் சிலவற்றை ஆங்காங்கமைத்தும், மடாலயத்தை மிக அணிபெறச்செய்து, ஞானதேசிகர் திருவருளைப் பூரணமாகப் பெற்று நெடுங்காலம் குருவருட்பணிகுயிற்றி வீற்றிருந்து, அத் திருப்பதியிலே பரிதாபிவருடம் சித்திரைமாதத்து கார்த்திகை நக்ஷத்திரத்திலே குருசுப்பிரமணியர் குரைகழற்சரணிணைக்குசே சயகுசுமநீழலிற் குலவிவீற்றிருந்தனர். இஃதிங்ஙனமாக,

---

*இவ்வாறுமுகச்சுவாமிகள் இந்நூலாசிரியர் குலத்தில் முன் அவ தரித்தனர் என்ப.

†நவமாகப்பூஜாமண்டபம் ஒன்று இயற்றியதெனக் கூறினமை யின், புராதனபூஜாமண்டபம் ஒன்றுண்டென்பது பெறப்பட்டது. அப் பூஜாமண்டபம் ஆதீன பிரதமாசாரியர் குருமூர்த்த சினகரத்திற்கு ஈசானதிசையில் இன்றுமுளது. அப்பூஜாமண்டபம் துவிதீய குரவர் பூசைபுரியும் மண்டபமாக இஞ்ஞான்று விளங்குகின்றது. ஆயினும், நமச்சிவாயமூர்த்தியின்குருமூர்த்தசினகரத்திற்கு ஈசானதிசையிலுள்ள பூஜாமண்டபத்தில் பெரியபட்டத்தில்வரும் ஞானதேசிகர் பூர்வசாம்பிர தாயப்படி தமது ஆன்மார்த்த ஞானநடராசப்பெருமானை எழுந்தருளப் பண்ணி பூசைசெய்துவருவது தமது சற்குருசந்தானம் வளர்மதிபோல் வளர்ந்து வருதற்கோர் மார்க்கமாகும் என்க.

முன்பு, ஞானதேசிகர் திருவருளாணைமேற்கொண்டு சீடர்களுக்குத் தீக்கையாதிகளுஞ், சித்தாந்தசாத்திரோபதேசமுஞ் செய்துத் திருத்தளிச்சேரியில் எழுந்தருளியிருக்கும் துவிதீய ஆசிரியராகிய சுப்பிரமணியதேசிகசுவாமிகள், தமது ஞானாசிரிய சுவாமிகளைத் தரிசித்து நெடுங்காலமானமையால் தரிசிக்க அவாவுற்று அங்குநின்றும் புறப்பட்டு விரைவில் திருவாவடுதுறைக்கு வந்து, ஞானதேசிகரைத் தரிசித்துப் பேசுதற்கரிய பெருமகிழ்ச்சியெய்தி தினந்தோறுந் திருக்கோயிலிற்சென்று சுவாமிதரிசனஞ்செய்துகொண்டும், சிவப்பிரகாசவிநாயகர், திருமாளிகைத்தேவர், ஞானமூர்த்தியாகிய நமசிவாயதேசிகோத்தமர், தமது ஞானாசிரியசுவாமிகள் தரிசனஞ்செய்துகொண்டும், சிலகாலம் அங்கு வீற்றிருந்து அத்திருப்பதியிலே ஓர் மாசிமாதத்து அவிட்டநக்ஷத்திரத்திலே சிவபரிபூரணமுற்றனர்.

பின்பு, ஞானதேசிகர் ஓர்சுபதினத்தில் தமது திருக்கூட்டத்து அடியவர்களுள் சிறந்தவரும் தம்மால் மூவகைத்தீக்கையுஞ் சித்தாந்தசாத்திரோபதேசமும் பெற்றவரும் ஆகிய அம்பலவாணத்தம்பிரானுக்கு ஆசாரியாபிடேகஞ்செய்து அவரைத் தமக்கு துவிதீயாசிரியராகக்கொண்டு அத்தேசிகசுவாமிகளுடன் தாம் சிலகாலம் சீடர்களுக்குத் தீக்கையாதிகள் செய்து வீற்றிருந்து பின் அத்திருப்பதியிலே, குரோதிவருடம், கார்த்திகைமாதத்து பதின்மூன்றாந்திகதி கார்த்திகைநக்ஷத்திரத்திலே சிவபரிபூரணமுற்றருளினர்.

முன்பு திருவிடைமருதூரிலே சைவாசாரிய குலத்திலவதரித்து, வாய்மை, ஒழுக்கம், தவம், சீலம், வணக்கம், பொறுமை, அறிவடக்கம், தூய்மையாதிகளிற் சிறந்த துறவினராய் ஞானதேசிகர்பாலடைந்து திருவருளுபதேசம் பெற்றுக்கொண்டு யாத்திரையாகச் சென்னையிற் சென்று, அங்குநெடுங்காலம் அநேகர்களுக்குக் கல்விகற்பித்துக்கொண்டிருந்த போதகாசிரியராகிய ஆதிவித்துவான் தாண்டவராயத்தம்பிரான் சுவாமிகள் ஞானதேசிகர்மீதியற்றிய ஆசிரியவிருத்தம்.

அவை வருமாறு:—

இந்துசேர் சடையு மெழின்மழுப் படையு
 மிலங்குமம் புலியத ளுடையுங்
கந்தரக் குறியுங் கவின்றரு மழியுங் காங்தொரு
 மானிட வடிவாய்
வந்தருண் முதல்வ வடியனே னினதுமலரடி
 கனவிலு மறவேன்
சுந்தர நிறைந்த வாவடு துறைவாழ்
 சுப்பிர மணியசற் குருவே. (க)

ஆதியி னால்வர்க் காலநி ழற்க ணரும்பொரு
 ளுணர்த்திட வமர்ந்தாய்
நீதிசேர் வாத வூரருக் குண்மை நிகழ்த்திடக்
 குருந்தின் கிழிருந்தாய்
ஓதியை யெளியேற் குணர்த்து வானிங்ங
 னுற்றனை யென்றுள மகிழ்ந்தேன்
சோதிசேர் மாட வாவடு துறைவாழ்
 சுப்பிர மணியசற் குருவே. (உ)

பண்டுபாழ் மூல மலங்கரு மத்திற் பாவியேற்
 கிச்சையைக் கொடுக்கக்
கண்டுநீ கருணை யாற்றனு வளித்தக் கருமமும்
 பொசித்திடச் செய்து
விண்டுவும் வியக்கு முத்திதங் தருள விளங்குமிவ்
 வுருக்கொடு வந்தாய்
தொண்டமீ யோங்கு மாவடு துறைவாழ்
 சுப்பிர மணியசற் குருவே. (ந)

இருவினைப் பகுதி யனுதியி னிற்றற் கேதுவு
 மிருண்மல மனுதி
மருவிய செயலு மற்றவை நீங்கும் வகைமையு
 மிஃதென வடியேற்

கருவொடு தோற்றி யாண்டு பேரின்பத் தாழ்த்துவா
ளொத்தநான் ஞான
சொருபனே நிலவு மாவடு துறைவாழ்
சுப்பிர மணியசற் குருவே. (௪)

எத்தனை தேகமெடுத்தனன் மேனா ளிருவினைப்
பாலினுக் கிடாய்
அத்தனே நீயு மறிந்திலை கொல்லோ வாதலா
லினிப்பிறப் பாற்றேன்
வித்தக நினது திருவடிக் கன்பு மேவுறச்
செய்துவீ டளிப்பாய்
சித்தர்கள் போற்று மாவடு துறைவாழ்
சுப்பிர மணியசற் குருவே. (௫)

பவப்பிணி யாள னாகிய வெனக்குப் பரிவுகூர்ந்
துவமனொன் றில்லாத்
தவப்பெரு வடிவந் தரித்திவ ணுற்ற தயாளனாந்
தருமபண் டிதனீ
யுவப்பொடு பஞ்சாக் கரமெனா மருந்தைப் பூட்டியப்
பிணியொழித் தருள்வாய்
சுவைப்பழப் பொழில்சூ ழாவடு துறைவாழ்
சுப்பிர மணியசற் குருவே. (௬)

பேரிலா வடிவ மூரிலா தெங்கும் பிரிவற
வுறைபரம் பொருணீ
சீரிலாச் சிறியே னார்பெய ருருவைச் சிதைத்திட
வவையெலாஞ் செறிந்தே
ஆரியனாய்வந் தருளிய பெருமைக் காற்றுகைம்
மாறுமொன் றுளதோ
தூரிய முழங்கு மாவடு துறைவாழ்
சுப்பிர மணியசற் குருவே. (௭)

எடுத்தவிக் காய மிறப்பதன் முன்ன ரீர்ம்புன
லொடுமகிழ்ந் தென்னைக்

கொடுத்துநின் னோடுங் கூடிப்பே ரின்பங் கூர்ந்திடத்
திருவருள் புரிவாய்
அடுத்தமெய் யடியார்க் கருண்மழை பொழியு மழகிய
கொண்டலே தவசஞ்
தொடுத்தமா ளிகைசூழ் மாவடு துறைவாழ்
சுப்பிர மணியசற் குருவே. (அ)

சமயமோ ராறுட் சைவமே முதன்மை சாற்றிய
கடவுளர் தம்முள்
உமையொரு பாகத் தொருவனே முதன்மை யுற்றிடுங்
குரவர்க டம்முள்
அமைதரு ஞான சாரிய னான வண்ணனீ
முதன்மையென் றறிந்தேன்
சுமதியர் மருவு மாவடு துறைவாழ்
சுப்பிர மணியசற் குருவே. (கூ)

ஒன்றெனு மதமு மிரண்டெனு மதமு மொன்றிரண்
டென்றிடு மதமும்
அன்றென விலக்கி யனலுமெவம் மையும்போ லமையுமத்
துவிதமே மிகவும்
நன்றென வுணர்ந்து நின்னடி நீழ னண்ணுமெய்
யடியரோ டியானுந்
துன்றுற வருள்வா யாவடு துறைவாழ்
சுப்பிர மணியசற் குருவே. (க0)

நலமலி சுருதி நான்குநின் பெருமை நவிலுதற்
கரிதரி தென்றே
பலபல விதமா முறையிடு மென்னிற் பருமணி
கொழிக்குவா ரிதிசூழ்
உலகினின் னடியார் யாரினுங் கடையா யுழல்வுறு
மறிவிலேன் றனக்குச்
சொலவெளி தாமோ வாவடு துறைவாழ்
சுப்பிர மணியசற் குருவே. (கக)

திருக்கயி லாய வருட்பரம் பரையிற் றிகழ்தரு
    மெய்கண்ட தேவன்
வருக்க நற்சந் ததிக்கொரு ஞான மணிவிளக்
    கெனவொளிர் முதலே
உருக்க மினெஞ்ச வுணர்விலேன் றனக்கு முன்னருள்
    கூடுநா ளுளதோ
ருக்கமில் செல்வ வாவடு துறைவாழ்
    சுப்பிர மணியசற் குருவே. (௧௨)

சுப்பிரமணியதேசிகர் சரித்திரம்.

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

இருபத்தைந்தாவது,

அம்பலவாணதேசிகர் சரித்திரம்.

——(0)——

திருச்சிற்றம்பலம்.

ஆசிரிய விருத்தம்.

சரியை முதலாந் தவங்கடமைச் சாதிப்
    பவர்கட் குணவாதி
உரிமை யாக வுதவலின்மே லுயர்ந்த
    வறமின் றென்றுணரா
அரிய வன்ன தானமடி யவர்க்குப்
    பரிந்து புரிதுறைசைப்
*பெரிய குருவம் பலவாண பெருமா
    னடியை முடிவைப்பாம்.

கட்டளைக் கலித்துறை.

யானென தென்னுஞ் செருக்கொழி யானின் னெதிர்ப்படினவ்
வானென தென்னுமோன் கோமுத்தி யம்பல வாணபோதி

---

*பெரிய பெருமையுடைய.

நூனென்ன தென்னும் படியா னெழாதொழித் துன்னடிப்பூந்
தேனென்ன தென்னும்படியே யருளொன்று செய்குவையே.

புள்ளிருக்குவேளூர் என்னும் புண்ணியமாநகரில் அவதரித்துத் திருவாவடுதுறை ஆதீன பரமமுதற்குரவராகிய நமசிவாய தேசிகோத்தமர் திருமரபில் பதினான்காவது பிற்றோன்றலாக எழுந்தருளியிருந்த சுப்பிரமணியதேசிகரால் அருளுபதேசமும் ஆசாரியாபிடேகமும் பெற்றுத் துவிதீயஆசிரியராக எழுந்தருளியிருக்கும் அம்பலவாணதேசிகர், தமது ஞானாசிரிய சுவாமிகள் திருவருளாணைமேற்கொண்டு திருவாவடுதுறையில் சீடர்களுக்குச் சித்தாந்த ஞானோபதேசஞ்செய்து வருவாராயினர்.

அங்ஙனஞ் சீடர்களுக்குத் தீக்கையாதிகள் செய்துவரும் ஞானதேசிகர் பாண்டிய நாட்டின்கண்ணும், சேரநாட்டின்கண்ணுமுள்ள தமதுசீடர்களுக்குத் தீக்கையாதிகள் செய்யத் திருவுளங்கொண்டு, அங்குநின்றும் அரிதினீங்கி வழியிடையிற் பல தலங்களைத் தரிசித்துக்கொண்டும், ஆங்காங்கு தம்மை நாடிவரும் அன்பர்களுக்குத் தீக்கையாதிகள்செய்துகொண்டும், சுசீந்திரம் அடைந்து திருக்கோயிலிற்சென்று †தாணுமாலயேசுவரரை தரிசனஞ்செய்து, தமது ஈசானமடாலயத்திற்சென்று ஆதீன பிரதமாசாரியராகிய பஞ்சாக்கரதேசிகர் பிரதிட்டாலயத்தைச் சார்ந்து தரிசித்து இருகுமாரதேசிகர் குருமூர்த்தங்களை வணங்கி வழிபாடியற்றி, அங்கு சிலபகல் சீடர்களுக்குத் தீக்கையாதிகள் செய்து வீற்றிருந்து, அங்குநின்றும் அரிதினீங்கிப் பொருநை நதியின் தென்கரையின் பாங்கருள்ள திருத்தளிச்சேரியையடைந்து திருக்கோயிலிற்சென்று மானேந்தியப்பரையும், வடிவாம்பிகையையும் தரிசித்துத், தமது திருமடத்திற்கெழுந்தருளி துவிதீய ஆசிரியராகிய கனகசபாபதிதேசிகர் குருமூர்த்தந் தரிசனஞ் செய்து, சீடர்களுக்குத் தீக்கையாதிகள் செய்துகொண்டு சில காலம் அங்குவீற்றிருந்தருளினர்.

---

†தாணுவும், மாலும், அயனுமாகியமூர்த்தி.

அக்காலத்தில் ஞானதேசிகர், தமது திருமடத்திற்கல்வியயினும் மாணவர்களிற்சிறந்தவரும், திருக்குற்றாலத்தலபுராணம் தமிழி லியற்றிய திரிகூடராசப்பகவிராயர்மரபினராகிய சுப்பிரமணியக் கவிராயரென்பவர் புத்திரரும், குற்றாலலிங்கமென்னும் பிள்ளைத் திருநாமமுடையவரும் தீவிரதரபக்குவமுடையவருமாகி விளங் கும் ஒருபுன்னியசீலரது கல்வியறிவினாற்றலையும், குணாதிசயங் களையும், தூயமனத்தினையும், இளமைச்செல்வியையும், ஆசிரிய இலக்கண வுருப்பமைதியையும், பிறவற்றையும் நன்காராய்ந்து அவரைத்தமக்குத் துவிதிய ஆசிரியராக நியமனஞ்செய்யத் திரு வுளங்கொண்டு, அவருக்குச் சைவசந்நியாசங் கொடுத்து மூவ கைத் தீக்கையுஞ்செய்து ஓர்சுபதினத்தில் ஆசாரியாபிடேகமிய ற்றித் தமதுஞானாசிரியசுவாமிகள் திருநாமத்தையே அவருக்குச் சிறப்புபிதானமாகச் சூட்டித் தமக்குத் துவிதியஆசிரியராகவைத் தருளினர்.

பின்பு சிலபகல்சென்று, ஞானதேசிகர் திருவாவடுதுறைக் கெழுந்தருளத் திருவுளங்கொண்டு, துவிதிய ஆசிரியராகிய சுப் பிரமணியதேசிகசுவாமிகளோடு அங்குநின்றும் புறப்பட்டு வழி யிடையிற்பலதலங்களைத்தரிசித்துக்கொண்டு, ஆளுடையார்கோயி லென வழங்கும் திருப்பெருந்துறையைச் சேர்ந்து, கோயிலிற் சென்று ஆன்மநாதரையும், யோகாம்பிகையையும், குருந்தமூல நாதரையும் அன்புருவாகிய மணிவாசகப்பெருமானையுந்தரிசித்து வணங்கிவந்து, தமது மடாலயத்தினையடைந்து, பின்வேலப்ப தேசிகர் குருமூர்த்தஞ் தரிசனஞ்செய்து அத்தலத்திற் சிலநாள் வசித்திருந்து, பின் அங்குநின்றும் அரிதினீங்கி வழியிடையி லுள்ள பலதலங்களைத்தரிசித்துத் திருவாவடுதுறையையடைந்து திருக்கோயிலிற்சென்று மாசிலாமணியீசுவரரையும்,ஒப்பிலாமுலை யம்மையையும், செம்பொற்றியாகரையும், திருமூலதேவரையும், தரிசித்துக்கொண்டு தமதுதிருமடத்திற்கெழுந்தருளி, மடத்தின் வடக்கு வாசலின் மேல்பால் கோயில்கொண்டெழுந்தருளியிருக் கும் சிவப்பிரகாசவிநாயகரைத்தரிசனஞ்செய்து மடாலயத்தினுட் சென்று, திருமாளிகைத்தேவரையும் ஆதினபிரதமாசாரியராகிய

பஞ்சாக்கரமூர்த்தியையும் பணிந்து வழிபாடியற்றி, ஒடுக்கத்திற் கெழுந்தருளி யாவருக்குங் குருதரிசனக்காட்சி யளித்து, மன் பதை யாவும் இன்புற ஞானோபதேசஞ்செய்து அங்கு வீற்றிருந் தருளினர்.

அங்ஙனம் ஞானதேசிகர்வீற்றிருந்தருளுநாளில் சென்னைமாநகரில் கல்விபயில்வித்துப் போதகாசிரியராக விளங்கும் பெருந் தகைமைவாய்ந்த திருவாவடுதுறை ஆதீனவித்துவான் தாண்டவ ராயதம்பிரான்சுவாமிகள், சென்னையினின்றும் புறப்பட்டுத் திரு வாவடுதுறைக்குவந்து ஞானதேசிகரைத் தரிசித்துத் திருவருட் பிரசாதம் பெற்றுவந்து துவிதீய ஆசிரியராகிய சுப்பிரமணிய தேசிகசுவாமிகளைக் கண்டுவணங்கி மகிழ்வுற்று,

குற்றால லிங்கமெனக் கூறுமியற் பேர்கொண்
டுற்றா வடுதுறையு ளோங்கினையே—கற்றார்தஞ்
செல்வமென வாழ்சுப் பிரமணிய தேசிகவென்
வல்வினைதீர்த் தாள்வாய் மகிழ்ந்து.

என, ஒருவெண்பாவினைப் பாடித் துதித்தனர்.

பின்பு ஞானதேசிகர், துவிதீய ஆசிரியராகிய சுப்பிரமணிய தேசிகசுவாமிகளுக்குத் தமது ஆதீன வித்துவான் தாண்டவராய தம்பிரான்சுவாமிகளையும், சமஸ்கிருத வித்துவான்களில் தலைமை சார்ந்த அந்தணர் ஒருவரையுங்கொண்டு தென்மொழி வடமொழி பயில்விக்குமாறு செய்து, தாம்மெய்கண்டசாத்திரமும், பண்டார சாத்திரமும் அடைவே உபதேசித்தருள்வாராயினர்.

இங்ஙனம் சிலவருடங்கழிதலும் ஞானதேசிகர், துவிதீய ஆசிரியராகிய சுப்பிரமணியதேசிகசுவாமிகளைப் பாண்டியநாட்டி லும், சோநாட்டிலுமுள்ள தமது சீடர்களுக்கு ஞானோபதேசஞ் செய்துவருமாறு பணித்தருள, அவ்வாறே துவிதீயஆசிரியசுவாமி கள் தமது ஞானசிரியசுவாமிகள் திருவருளாணை மேற்கொண்டு விடைபெற்று, பாண்டியநாட்டையடைந்துகல்லிடைக்குறிச்சியின்

ஓர் பாங்கருள்ள திருத்தளிச்சேரிக்குச்சென்று திருக்கோயிலை யடைந்து சுவாமிதரிசனஞ்செய்து தமது திருமடத்தினைச்சார்ந்து துவிதிய கனகசபாபதிதேசிகர் குருமூர்த்தந் தரிசனஞ்செய்து அங்கமர்ந்து அந்நாட்டினர்க்குத் தீக்கையாதிகள் புரிந்து சித்தாந்த சாத்திரோபதேசமுஞ் செய்துவருவாராயினர்.

அக்காலத்தில், கச்சியப்பசுவாமிகள் மாணாக்கர்களில் ஒருவராகிய கந்தப்பையர் குமாரர் விசாகப்பெருமாளையர், காஞ்சீபுரம் சபாபதிமுதலியார், அஷ்டாவதானம் வீராசாமிசெட்டியார், திருவண்ணாமலை வீரபத்திரஐயர், ஆயுள்வேதபாஸ்கரராகிய சிதம்பரம் தளவரிசை சுப்பிரமணியபண்டிதர், திருநீர்மலை கோபால கிருஷ்ணகவிராஜசேகரர், யாழ்ப்பாணம் அளவையம்பதி கனகசபாபதிபிள்ளை, ஆதீன சிஷ்டவர்க்கத்தினரிலொருவராகிய சந்திரசேகர கவிராஜபண்டிதர் முதலான சென்னைமாநகரத்துளுறையுஞ் செந்தமிழ்ப்புலவர்கள் தாம் ஆதீனமஹாவித்துவானாகிய தாண்டவராயதம்பிரான் சுவாமிகளுடன் திருத்தளிச்சேரியையடைந்து அங்கு நமசிவாயமூர்த்திகள் மகாத்தலைநாள் குருபூஜை மகோத்சவ சுபதினத்தில் தேசிகசுவாமிகளைத் தரிசித்து களிபெருவகையெய்தி தனித்தனியே கவிபாடித் துதித்தனர். பின்பு சிலநாள் தேசிகசுவாமிகள் அருகிருந்து சித்தாந்தநுண்பொருள் நன்காராய்ந்து மகிழ்வுற்றுத் தேசிகசுவாமிகள்பால் விடை பெற்றுக் கொண்டு அரிதினீங்கிச் சென்னைமாநகர்க்குச் சென்றனர்

இங்ஙனமாகச் சிலவாண்டுகள் சென்றபின்னர் துவிதியஆசிரியராகிய சுப்பிரமணியதேசிகசுவாமிகள் ஞானதேசிகரைத் தரிசிக்க மிகவும் விரும்பித் திருத்தளிச்சேரியையகன்று திருவாவடுதுறைக்கு வருங்காலையில் பொருநைநதியில் ஸ்நானஞ்செய்து நித்திய கன்மானுட்டான முதலியவைமுடித்து திருவுருவமாமலையிற் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் முருகப்பெருமானைத் தரிசனஞ்செய்து வழிபாடியற்றி, அங்குநின்றும் அரிதினீங்கித் திருநெல்வேலியையடைந்து அங்குத் திருக்கோயிலிற்சென்று வேணுவனலிங்கப்பெருமானையும், காந்திமதியம்மையையுந் தரிசித்துத்,

தாம்பிரசபையில் திருநடனம்புரியுஞ் சம்புவைத்தரிசித்து தமது ஈசானமடாலயத்திற் சென்று அங்கு சிலநாள் அமர்ந்திருந்தனர்.

அக்காலத்தில் அத்திருநகரின்கண் அரசசேவையிலமர்ந்திருந்த சிரஸ்தார் வீரபத்திரபிள்ளையென்பவர், தேசிகசுவாமிகளைத் தமது இல்லத்திற்கெழுந்தருளுமாறு இயம்பரும் பேரன்போடு வேண்டுதலும், தேசிகசுவாமிகள், அதற்குத்திருவுளம்பற்றி அங்கெழுந்தருளிக் குருதரிசனக்காட்சி கொடுத்தருளினர். அத்தருணத்தில் அவ் அன்பர் வெள்ளியினலியற்றிய பாதுகைகளிரண்டில் தாம் அரசசேவையிலணிந்துகொள்ளும் விசித்திரகோலம் இடது பாதுகையிலும் மற்றைய காலங்களில் தாம் அணிந்துகொள்ளும் சிவனடியார் திருக்கோலம் வலதுபாதுகையிலும் பொறித்து அப்பாதுகைகளை திருவடிசாத்தியருளும்படி தேசிகசுவாமிகளுக்கு அர்ப்பணஞ்செய்து வழிபட்டனர்.

பின்பு தேசிகசுவாமிகள். திருநெல்வேலியினின்றும் புறப்பட்டு வழியிடையிற் பலதலங்களைத் தரிசித்துக்கொண்டு திருவாவடுதுறையையடைந்து, திருக்கோயிலிற்சென்று சுவாமிதரிசனஞ் செய்து தமது திருமடத்திற்கெழுந்தருளி மடத்து வடக்குவாசலிற் சிவப்பிரகாசவிநாயகரைத் தரிசித்து உள்ளேசென்று திருமாளிகைத்தேவரையும், திருநமச்சிவாய தேசிகோத்தமரையும், ஞானநடராஜப் பெருமானையும் தரிசித்து ஒடுக்கத்திற் சென்று, ஞானதேசிகரைத்தரிசித்து விதிமுறையாகப் பூசனைபுரிந்து வழிபாடியற்றி அங்கமர்ந்தருளுவாராயினர்.

அங்ஙனம் துவிதீய ஆசிரியராகிய சுப்பிரமணியதேசிகசுவாமிகள், தமது ஞானதேசிகருடன் அங்கு அமருநாட்களில், திரிசிரபுரத்தில் அருந்தமிழ்ப்புலவராக விளங்கிய மீனாட்சிசுந்தரம் பிள்ளையென்பவர், திருவாவடுதுறையையடைந்து, ஞானதேசிகரைத் தெரிசித்து, அக்குருபார்மீது தாமியற்றிய கலம்பகம் என்னும் பிரபந்தத்தை அரங்கேற்றினர். ஞானதேசிகர், திருவுளமகிழ்ந்து அவருக்குப்பரிசில் அளித்தருளினர். பின்பு அவர்

ஞானதேசிகர்பால் விடைபெற்றுக்கொண்டு தமது நகர்க்குச்சென்றனர். அங்ஙனஞ்சென்ற கவிவாணராகிய அவர் சிலகாலங்கழித்து ஞானதேசிகர்பால் அருளுபதேசம்பெற்றுக்கொள்ளநினைந்து திருவாவடுதுறையையடைந்து, ஞானதேசிகரைத் தெரிசித்தனர். ஞானதேசிகர், அவருக்கு மூவகைத்தீக்கையுஞ் சித்தாந்தசாத்திரோபதேசமுஞ்செய்து தமது திருமடத்தில் வாசிக்குமாணவர்களுக்குக் கருவிநூலென வழங்கும் தமிழ் இலக்கணமுதலிய நூல்களைக் கற்பித்து வருமாறு ஆணையளித்தருள அவர் அங்ஙனங் கல்விபயில்வித்து அங்கு அமருவாராயினர்.

அங்ஙனம் கல்விபயில்வித்து வருபவராகிய அவர் தமது ஞானதேசிகர்மீது பிள்ளைத்தமிழ் என்னும் பிரபந்தம் ஒன்றியற்றி ஞானதேசிகர் திருமுன்பு துவிதீய ஆசிரியராகிய *சுப்பிரமணிய தேசிகசுவாமிகளும், தம்பிரான்சுவாமிகளும் ஏனைய அடியவர்களுங் குழுமியசபையில் அரங்கேற்றினர். அன்றியும் தமது ஞானதேசிகருக்கு முன்னிருந்த ஞானாசிரியர்கள் ஞானசமாதியுற்ற தலம், மதி, நாள் யாவருக்கும் என்றும் விளங்குமாறு குருபரம்பரையகவல் ஒன்றியற்றினர்.

---

* இந்த ஞானதேசிகர்க்கு துவிதீய ஆசிரியர், சுப்பிரமணியதேசிக என்பது. அவ்வாசிரியர் சுவாமிகள் பிள்ளைத்தமிழில் கூறியவாற்றான் விளங்கும்.

பிள்ளைத்தமிழ் சப்பாணிப்பருவம் கூ-வது செய்யுள்.

போருவாய் தரினு மிலாதவ னேனும் போற்றி வளர்த்தமுனைப்
    பொய்யில் பழக்கம் விடுத்தில னிங்குப் போந்து மெனப்புகல
வருவாய் மையுந லொழுக்க விழுப்பமு மொள்ளறி வுங்குணனு
    முண்மையு மொருபு நந்தி குலத்திற் கொருகதிர் நீயென்று
திருவாய் மலருபு குறாவைக் கொண்டொளி திகழ்சுப் பிரமணிய
    தேவனை முதகுதை வருமலர் புரையுஞ் செங்கையி னுன்மணிசால்
குருவாய் மாடக் கோகழி யூரன் கொட்டுக சப்பாணி
    குரவர் சிகாமணி யம்பலவாணன் கொட்டுக சப்பாணி.

அவை வருமாறு:—

திருவளர் கைலைச் சிலம்பில்வீற் றிருக்கு
மருவளர் கடுக்கை மாலிகைப் பெருமா
னருள்பெறு நந்தி யடிகடம் பான்மெய்ப்
பொருள்பெறு கருணைப் புகழ்ச்சனற் குமாரர்
மற்றவ ரருளுறீஇ வையகத் திலங்கிய
நற்றவர் சத்திய ஞானதரி சனிக
ளவந்தெறு மன்னவ ரருளொருங் குற்றுப்
பவந்தெறு வாய்மைப் பரஞ்சோதி யடிக
ளத்தகு குரவ ரருளடைந் துயர்ந்த
வித்தகர் வெண்ணெய் மெய்கண்ட தேவ
ரிவர்முதற் குரவ ரியைந்ததிரு நாமந்
தவர் புகழ் சமாதித் தலமடை மதிநா
ளிவைமுறை யுரைப்பா மிசைத்தமெய் கண்டர்
சுவைபமை வெண்ணெய் துலாமதி சோதி
தவலருங் கருணை தழைபரு ணந்தியார்
கவலருந் துறையூர் கன்னிமதி பூரம்
படர்மறை ஞானசம் பந்தர்வண் டில்லை
வடகளாச் சேரி மடங்கன்மதி யுத்தரந்
திக்கொத் திறைஞ்சத் திகழுமா பதியார்
மெய்க்கொற் றவன்குடி மேடமதி யத்தம்
வாய்ந்தவரு ணமச்சி வாயதே சிகர்மேல்
வேய்ந்தகொற் றவன்குடி வின்மதி யாதிரை
*தின்னிய சித்தர் சிவப்பிர காசர்
நண்ணிய தலமதி நாளவர்க் கில்லை
யளவா வருளுற் றவிர்நமச் சிவாயர்
வளவா வடுதுறை மகரமதி முதனா

---

* சித்தர் சிவப்பிரகாசதேசிகர் இன்னும் வேதாரணியத்தில் ஓர் தபோவனத்தில் எழுந்தருளியிருக்கின்றனர் என அவர் சரித்திரத்தால் தெரிதலின், நண்ணியதலம் மதி நாளவர்க்கில்லை என்றார்.

ஈண்டு நண்ணியதலம், என்றது, ஞானசமாதித்தலம்.

னலமலி தருமறை ஞானர்மே லுரைத்த
வலமலி துறைசை மகரமதி சோதி
வளம்பயி லம்பல வாணர் மேலெடுத்து
விளம்பிய துறைசை மேடமதி யனிட்ட
மொருவா வருண்மலி யுருத்திர கோடிக
டிருவால வாய்விருச் சிகமதி யனுட
மனவிய வருள்வே லப்பர் திருப்பூ
வணநகர் விருச்சிக மதியுத்த ராடந்
தரமலி குமார சாமிகள் சுசீந்திரம்
வரமலி விருச்சிக மதியுத்த ராடந்
தமைசொல்பிற் குமார சாமிகள் சுசீந்திர
முரைமடங் கன்மதி யுத்தரட் டாதி
மருவுமெய்ஞ் ஞான மாசிலா மணியார்
வெருவில்வெண் காடு மேடமதி யுரோகணி
யிராம லிங்கர்மு னிசைத்தகோ முத்தி
பராவு விருச்சிகம் படர்மதி யனுடத்
தாவில்வே லப்பர் சங்கர நயினர்
கோவில்வான் கன்னி குலாமதி மூலம்
பின்வே லப்பர் பெருந்துறை கோட்டிப்
பொன்வேய் சேமதி பூரட் டாதி
யாய்புகழ்த் திருச்சிற் றம்பல தேசிகர்
வேய்புகழ்த் துறைசை மிதுனமதி பரணி
யம்பல வாண ராவடு துறையே
நம்பலர் கொடுஞ்சிலை நகுமதி கேட்டை
வளமலி சுப்பிர மணிய தேசிக
ரளவரும் புகழ்த்திரு வாவடு துறையே
தெளிதர வொளிர்விருச் சிகமதி கார்த்திகை
வெளிதர வுரைத்தேன் வேணவா வானே.

அக்காலத்தில், சென்னைமாநகருக்குச் செல்லும்பொருட்டு. யாழ்ப்பாணத்திலின்றும் வந்த ஆறுமுகப்பிள்ளை யென்பவர் திருவாவடுதுறையை யடைந்து ஞானதேசிகரைத் தரிசித்தனர்.

அப்பொழுது ஞானதேசிகர், அவரது கல்வியறிவாற்றலையும், பிறநற்குணநற்செய்கைகளையுங்கண்டு பெரிதும் மகிழ்ந்து கட்டளையிட்டருளியவண்ணம் அவர் அங்குசிலநாளமர்ந்திருந்தனர். அந்நாளில் அவர் ஞானதேசிகரிடத்துப் பத்தாந்திருமுறையாகிய திருமந்திரத்துள் ஆங்காங்குப் பல திருப்பாசுரங்களில் தமக்குளவாகிய ஐயப்பாட்டினைத் தெரிவித்து அதனுண்பொருள் ஐயமறத்தெளிந்துகொண்டனர். அன்றியும், சைவசித்தாந்த சாத்திரங்களின் நுண்பொருள்களை நாடோறும் ஞானதேசிகர் அருகிருந்துகேட்டுச் சிந்தித்துந் தெளிந்து வருவாராயினர்.

அக்காலத்து ஞானதேசிகர் திருவருளாணைமேற்கொண்டு அவ் ஆறுமுகம்பிள்ளையென்பவர், ஞானதேசிகர் திருமுன்பு துவிதீய ஆசிரியராகிய சுப்பிரமணியதேசிகசுவாமிகளும், தம்பிரான் சுவாமிகளும் ஏனைய அடியவர்களும், தென்மொழி வடமொழிகளிற்றேர்ந்த புலமைவாய்ந்த பண்டிதர்களும், பிறருங்குழுமிய சபையில் அமர்ந்து பிரசங்கஞ்செய்வாராயினர். அப்பொழுது அவர்செய்த பிரசங்கம் வேதசிவாகமங்களிலே பிரதிபாதிக்கப்படும் பதிபசுபாசமென்னுந் திரிபதார்த்தங்களை ஆராய்தலில் அணுத்துணையேனும் அவாநிகழப்பெறாத உலகர் தாமும் அவற்றினை ஆராய்தற்கண் பேரவாவுற்று முயலுமாறு அத்திரிபதார்த்தங்களின் உண்மையும், அவற்றின் இலக்கணமும், பிறவும் இலகுவில் விளங்க உணர்த்துவதாயும், சுருங்கச்சொல்லல் முதலாகிய பத்தழகென்னுந் திவ்விய இலக்கணஞ்செறிந்த செந்தமிழ்வசனமாயும, இலக்கணவமைதிக்கு ஒருசிறிதும்மாறுபாடில்லாததாயும் தருக்கசம்பிரதாய நிறைந்ததாயும், பிறரொருவரானுஞ் செய்தற்கரியதாயும், கடவுட்பத்தியுடையாரை மாத்திரமன்றி அஃதில்லாரையும் மனமுருகச்செய்து கண்களினின்றும் அருவிபோல ஆநந்தநீர்சொரியப் பண்ணுவதாயும், தேருந்தோறுமினிதாம் தமிழென்றபடி கேட்குந்தோறுந் தெவிட்டாததாயுமிருந்தமையால் ஞானதேசிகர், அவரது வாக்குவல்லபத்தைநோக்கி ஆச்சரியமும் பெருமகிழ்ச்சியுங்கொண்டு, அவர்க்குரிய இயற்பெயருக்குப் பின் நாவலரென்னும் சிறப்புப்பெயரைச் சூட்டியருளினர். அங்ஙனம்

ஞானதேசிகர், திருவாய்மலர்ந்தருளியவாறே அவையகத்துள்ளார் யாவரும் மகிழ்வுமீதூர அக்காரணச்சிறப்புப்பெயரை விதந்தோதினர். பின்பு ஆறுமுகநாவலர், தாம் காலநிகழ்ச்சிக்கேற்ப எவர்க்கும்பயன்படும்வண்ணம் பலஅரியவிஷயங்களை எடுத்துயாவருங்களிப்பெய்துமாறு பிரசங்கஞ்செய்துகொண்டு சிலநாள்அங்கு வசித்திருந்து பின் ஞானதேசிகர்பால் விடைபெற்றுச்சென்றனர்.

பின்பு ஞானதேசிகர், சிதம்பரம் முதலாகிய சிவக்ஷேத்திரங்களைத் தரிசிக்கத் திருவுளங்கொண்டு துவிதீய ஆசிரியராகிய சுப்பிரமணியதேசிகசுவாமிகளோடு திருவாவடுதுறையினின்றும் அரிதினீங்கி வழியிடையிற் சிலதிவ்விய ஸ்தலங்களைத் தரிசித்துக்கொண்டு திருமூவலூரிற்சென்று திருக்கோயிலைச் சார்ந்து தரிசித்துத் தமது ஆதினமுதற்குரவராகிய நமச்சிவாயமூர்த்திகள் திருவவதாரஞ்செய்தருளிய திவ்விய திருதலமாகிய திருமடத்தையடைந்து, திருவாயிலின்முன்பு நமஸ்கரித்து எழுந்து உள்ளேசென்று ஆசனத்தமர்ந்து யாவருக்குங் குருதரிசனக்காட்சி யளித்தருளினர். பின்புஅங்குநின்றும் அரிதினீங்கி வழியிடையிற் பலதலங்களைத் தரிசித்துச்செல்லும்பொழுது, வைத்தீசுவரன்கோயிலென் வழங்கும் புள்ளிருக்குவேளூரிற் கோயிற்கட்டளைப்பணிபுரிந்து வரும் தருமபுரவாதீனத்துச் சோமசுந்தரதம்பிரான்சுவாமிகளும் அந்நகரவாசிகளாகியசிவநேயர்களும் எதிர்கொண்டிறைஞ்சி அழைக்கத் தாம் அப்பதியிற் சென்று திருக்கோயிலுக்கெழுந்தருளி, வைத்தியநாதரையும், தையனுபகியாரையும், முத்துக்குமரசுவாமியையும் தரிசித்துத் தமது மடாலயத்தை யடைந்தனர். அக்கோயிற் கட்டளைச் சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள், மாகேசுர பூசை முதலானவைசிறப்புறச்செய்து அங்குவழிபட, தாம்திருப்பவனிகொண்டு யாவருக்குங் குருதரிசனக்காட்சியளித்தருளினர். பின் அங்குநின்றும் புறப்பட்டு வழியிடையிற் பலதலங்களையுந் தரிசனஞ்செய்துகொண்டு சிதம்பரத்திற்கெழுந்தருளினர்.

அங்கு ஞானதேசிகர், சிற்பரவியோமமாகுந்திருக்கோயிலிற்கெழுந்தருளி ஞானநடராசப்பெருமானைத் தரிசித்து, அங்கு

நின்றும் அரிதினீங்கிச் சந்தானகுரவர்களென்மரில் ஒருவராகிய உமாபதிசிவாசாரியசுவாமிகள் திருவவதாரஞ்செய்தருளிய இருக்கையாகிய * தமது மடாலயத்தினைச் சார்ந்து அங்கு மெய்கண்டசிவாசாரியசுவாமிகள் பிரதிட்டாலயத்தை யணைந்து பணிந்துவழிபட்டுக்கொண்டு தினந்தோறும் திருக்கோயிலிற்சென்று சிற்சபேசனைத் தரிசனஞ்செய்தும், திருக்களாஞ்சேரியிலும், கொற்றவன்குடியிலுஞ் சென்று மறைஞானசம்பந்த சிவாசாரியர், உமாபதிசிவாசாரியர், அருணமச்சிவாயர், குருமூர்த்தங்கள் தரிசித்தும் அங்கு சிலநாள் வசித்திருந்தனர். அக்காலத்து நிகழும் பிரபவ வருடம் ஆனிமாதம் ஆருத்திராதரிசனபுண்ணிய சுபதினத்தில் ஞானநடராசப்பெருமானுக்கு மகரகண்டிகைசாத்துவித்து களிகூர்ந்தின்புற்றனர்.

அன்றியும், அப்பதியின்கண்ணுள்ள சைவப்பிரகாசவித்தியாசாலை ஸ்தாபகராகிய ஆறுமுகநாவலரும், ஏனைய சைவநேயர்களும் மாகேசுரபூசையியற்றி வழிபடத், தாம் பவனிகொண்டு யாவருக்குங் குருதரிசனக்காட்சியளித்தனர்.

பின்பு ஞானதேசிகர், அங்குநின்றும் புறப்பட்டு வழியிடையிற் பலதலங்களைத்தரிசித்துக்கொண்டு திருத்துறையூருக்கெழுந்தருளித் திருக்கோயிலெய்திச் சிவபிரானைத் தரிசித்து வந்து, அருணந்திசிவாசாரியர் குருமூர்த்தந்தரிசித்து, அங்கு சிலநாள் வசித்திருந்து, அரிதினீங்கித் திருவெண்ணெய்நல்லூருக்கெழுந்தருளி அருட்டுறையென்னுஞ் சிவாலயத்தையடைந்து தடுத்தாட்கொண்ட நாதரையும், வேற்கண்ணி யம்மையையும், பொல்லாப்பிள்ளையாரையும் வணங்கி வழிபாடியற்றித் தமது திருமடத்தையடைந்து, சந்தானகுரவர்களென்மரிலொருவராகிய மெய்கண்டசிவாசாரியசுவாமிகள் குருமூர்த்தந்தரிசித்து வழிபட்டு அங்கு சிலநாள்வசித்திருந்து அங்குநின்றுமரிதினீங்கித் திருவண்ணாமலை

* இம்மடாலயம் தெற்குரதவீதிக்கும், செங்கழுநீர்பிள்ளையார்கோவில் தெருவுக்கும் நடுவிலுள்ள மாலைகட்டித்தெருவென்றுபெயர் வழங்கும் ஓர்வீதியின் வடபாரிசத்திலுள்ளது.

க்கு எழுந்தருளும்போது வழியிடையில் வேட்டவலம் என்னும் நகரில் குறுநிலமன்னராக விற்றிருக்குஞ் சர்க்கரைப்பண்டாரி யென்பவர் ஞானதேசிகர் வருகையைக் கேள்வியுற்று எதிர்கொண்டு தமது நகருக்கெழுந்தருளுமாறு வேண்டினர். ஞானதேசிகர், அவர் வேண்டுகோளுக்கிசைந்து அங்கு எழுந்தருளி மாகேசுரபூசைமுதலானவை அப்பண்டாரியார் மிகச்சிறப்போடியற்றத் தாம் அங்குபவனிகொண்டு குருதரிசனக்காட்சி யளித்தருளினர்.

பின்பு ஞானதேசிகர், அங்குநின்றும் புறப்பட்டு வழியிடையிற் சிலதிவ்விய தலங்களைத் தரிசித்துக்கொண்டு திருவண்ணாமலையை யடைந்து, திருக்கோயிலிற்சென்று அருணாசலேஸ்வரரையும், உண்ணாமுலையம்மையையும் உழுவலன்போடிறைஞ்சித், தமது திருமடத்தை யடைந்து இரிநிய ஆசிரியராகிய சுவாமிநாததேசிகரென்று பெயர் வழங்கும் ஈசானதேசிகர் குருமூர்த்தத்தரிசித்து அங்குசிலநாள் வசித்திருந்தனர்.

பின்பு ஞானதேசிகர், திருவண்ணாமலையினின்றும் அரிதினீங்கித், திருவெண்ணெய்நல்லூரை யணைந்து திருக்கோயிலிற் சென்று சுவாமிதரிசனஞ்செய்து தமது திருமடத்தைச் சார்ந்து மெய்கண்டசிவாசாரிய சுவாமிகள் திருக்கோயில் புதுப்பித்துக் கும்பாபிடேகமியற்றி வேண்டுவனபிறவுமமைத்து சிலபகல்அங்கு தங்கியிருந்து, பின் அங்குநின்றும் பிரியாவிடைபெற்று அரிதினீங்கி வழியிடையிற் பலதலங்களைத் தரிசித்துக்கொண்டு கங்கைகொண்டசோழேச்சுரத்தை யடைந்து திருக்கோயிலை யணைந்து, சுவாமிதரிசனஞ்செய்து அப்பதியிலெழுந்தருளியிருந்தனர்.

அதனைக்கேள்வியுற்ற, தருமபுரவாதீனத்துக் காசிமடாலய பதியாகிய †இராமலிங்கசுவாமிகள் அங்குவந்துஞானதேசிகரைக் கண்டு வணங்கித் தமது வாசஸ்தானமாகிய திருப்பனந்தாள்

---

† இவ்விராமலிங்கசுவாமிகள், குமாரகுருபரசுவாமிகள் திருமரபில் பதினான்காவது பிற்றோன்றலாயுள்ளாரென்ப.

என்னுந் திவ்வியஸ்தலத்திற்கெழுந்தருளுமாறு வேண்டிவிண்ணப் பஞ்செய்ய, ஞானதேசிகர், திருவருள்கூர்ந்து அதற்கியைந்தருள அச்சுவாமிகள், பலவகையான அதிசயக்காட்சியுடன் ஞானதேசிகரை அழைத்துவர அத்தேசிகசுவாமிகள் அத்திருநகரையடைந்து திருக்கோயிலிற்சென்று சடையப்பரையும், பெரியநாயகியம்மையையுந் தரிசித்துக், காசிமடத்திற்கெழுந்தருளி அவ்விராமலிங்கசுவாமிகள், மாகேசுரபூசைமுதலானவை சிறப்புறச்செய்ய, ஞானதேசிகர் திருவருள்கூர்ந்து அவருக்கு விபூதிப்பிரசாதநல்கி அங்குநின்றும் புறப்பட்டுத் திருவாவடுதுறையையடைந்து, திருக்கோயிலிற்சென்று சிவபிரானைத் தரிசித்துத் தமது திருமடத்திற்கெழுந்தருளி சிவப்பிரகாசவிநாயகரையுந், திருமாளிகைத்தேவரையும், ஆதீனபிரதமாசாரியராகிய பஞ்சாக்கரமூர்த்தியையுந் தரிசனஞ்செய்து, ஒடுக்கத்திற்சென்று யாவருக்குங் குருதரிசனக்காட்சி நல்கி அங்கமர்ந்தருளினர்.

பின்பு சிலகாலங்கழித்து ஞானதேசிகர், திருவிராமேச்சுரத்திற்கெழுந்தருளத் திருவுளங்கொண்டு, ஓர்சுபதினத்தில் ஆவடுதுறையினின்றும் அரிதினீங்கித், துவிதிய ஆசிரியராகிய சுப்பிரமணியதேசிகசுவாமிகளும், தம்பிரான்சுவாமிகளும், ஏனைய அடியவர்களும் உடன்வரச்சென்று வழியிடையிற் பலதலங்களைத் தரிசித்துக்கொண்டு திருவிராமேச்சுரத்தையடைந்து, அங்கு தமது திருமடத்தில் எழுந்தருளியிருந்துகொண்டு தினந்தோறுந் திருக்கோயிலிற்சென்று இராமநாதரையும், பருவதவர்த்தனியம்மையையும், பணிந்தேத்தி, அத்திவ்வியதலத்திற் சிலநாள் வசித்திருந்து, அங்குநின்றும் புறப்பட்டுத் திருவுத்தரகோசமங்கை, திருவாடானை முதலாகிய தலங்களைத் தரிசித்துச்சென்று திருவாவடுதுறையையடைந்து அடியவர்களுக்கு அருளுபதேசஞ் செய்துகொண்டு அங்கமர்ந்தருளினர்.

அங்ஙனமடியவர்களுக்கு அருளுபதேசஞ் செய்துகொண்டு திருவாவடுதுறையி லெழுந்தருளியிருக்கும் ஞானதேசிகர், சிலகாலஞ்சென்று ஆளுடையார்கோயிலெனப் பெயர்வழங்குந் திருப்

பெருந்துறைக்கெழுந்தருளத் திருவுளங்கொண்டு, துவிதீயஆசிரியராகிய சுப்பிரமணியதேசிகசுவாமிகளும், தம்பிரான்சுவாமிகளும், ஏனைய அடியவர்களும் உடன்வர அங்குநின்றும் அரிதினீங்கி வழியிடையிற் பலதலங்களைத் தரிசித்துக்கொண்டு, திருப்பெருந்துறையைச்சேர்ந்து அங்கு தினந்தோறுந் திருக்கோயிலிற் சென்று ஆத்மநாதரையும், யோகாம்பிகையையும், குருந்தமூலநாதரையும், மணிவாசகப்பெருமானையுந் தரிசித்துக்கொண்டு சிலநாள் தமது திருமடத்தில் வசித்திருந்தனர்.

அப்பொழுது துவிதீய ஆசிரியராகிய சுப்பிரமணியதேசிகசுவாமிகள், தாம் பாண்டிநாட்டின்கண்ணுஞ், சேரநாட்டின்கண்ணுஞ்சென்று, சீடர்களுக்குத் தீக்கையாதிகள்செய்து நெடுங்காலமானதை திருவுளத்தெண்ணி, ஞானதேசிகருக்குத் தமது கருத்தைத்தெரிவிக்க, ஞானதேசிகர், தமதுவழித்தோன்றலாகிய தேசிகசுவாமிகள் அக்காலத்துத் தம்மை பிரிந்து செல்வதற்கண் சிறிதும் திருவுளமிசையாதிருப்பவும், பின் ஒருவாறிசைந்து விடையளிப்ப, தேசிகசுவாமிகள், அத்திருப்பதியினின்றும் அரிதினீங்கித் திருத்துளிச்சேரிக்குச் செல்வாராயினர்.

பின்பு சிலபகல்சென்று ஞானதேசிகர், திருவாவடுதுறைக்கெழுந்தருளத் திருவுளங்கொண்டு, திருக்கோயிலிற் சென்று சுவாமி தரிசனஞ்செய்து தமது திருமடத்தை அடைந்து, பின் வேலப்பதேசிகர் குருமூர்த்தந்தரிசனஞ்செய்து அனுஞைபெற்று அங்குநின்றும் அரிதினீங்கி, வழியிடையிற் பலதலங்களையுந் தரிசித்துக்கொண்டு திருவாவடுதுறையையடைந்து, திருக்கோயிலிற் சென்று மாசிலாமணியீசுரரையும், ஒப்பிலாமுலையம்மையையும், *சொர்ணத்தியாகரையும், திருமூலதேவரையுந்தரிசித்து, படார

---

* சொர்ணத்தியாகரென்றது காரணப்பெயர். அதுவருமாறு:—

துறைசையுண் மேவிய சொர்ணத் தியாகர்முன் ஸ்ரேணிபுரத்
திறையவ ளர்சொன்ன செந்தமிழ்க் காக வினிதளித்த
நிறையுல வாக்கிழிச் செம்பொற் றனமது நேரிழையாய்
குறையிலு முன்பொற் றனமொரு நாளுங் குறைவிலதே.

இச்செய்யுள் துறைசைக்கோவையுள் ௯௰௩ம் பாடல்.
துறைசையென்றது திருவாவடுதுறையை.

சிலைப் பலித்து, தமது திருமடத்தையடைந்து, சிவப்பிரகாச விநாயகரையும் திருமாளிகைத்தேவரையும், ஆதீனபரமமுதற் குரவராகிய பஞ்சாக்கரமூர்த்தியையுந் தரிசித்து வழிபாடியற்றி, அடியவர்களுக்கு அருளுபதேசஞ்செய்துகொண்டு சிலநாள் அங் கமர்ந்தருளினர். அந்நாட்களில் ஞானதேசிகர் தாம் பரிபூரண தசையையடையுங்காலம் அணித்தாதலைத் திருவுளத்திற்றேர்ந்து அதனை துவிதீய ஆசிரியராகிய சுப்பிரமணியதேசிகசுவாமிகளுக்கு உணர்த்துமாறு நினைவுற்று, அப்பொழுதே திருமுகம் அனுப்பிய ருளினர். பின் சின்னாட்களுள் ஞானதேசிகர் திருவாவடுதுறை என்னும் அத்திருப்பதியிலே, சுக்கிலவருடம் ஆனிமாதம் பூரநக்ஷ த்திரத்திலே சிவபரிபூரணமுற்றருளினர்.

முன்பு ஞானதேசிகர் அனுஞைபெற்று திருத்தளிச்சேரிக் கெழுந்தருளும் துவிதீய ஆசிரியராகிய சுப்பிரமணியதேசிக சுவாமிகள், வழியிடையில் ஆங்காங்கு பல அன்பர்கள் வழிபட் டேத்த அவர்க்கெல்லாம் இன்னருள்வழங்கிச்சென்று, மதுரைமா நகரையடைந்து திருக்கோயிலிற்சென்று ஆலவாயடிகளையும் அங் கயற்கண்ணம்மையையுந் தரிசித்து வழிபட்டேத்திவந்தனர். பின்பு தேசிகசுவாமிகள் மாகேசுரபூசைமுதலானவை அன்பர்கள் மிகச் சிறப்புறவியற்றத், தாம் அன்றிரவு பவனிகொண்டு யாவருக்குங் குருதரிசனக்காட்சி கொடுத்து விபூதிப்பிரசாதம் நல்கியிருக்கும் அமையத்தில், ஞானதேசிகர் கட்டளையிட்டருளியத் திருமுகம் பெற்றவுடனே அங்குநின்றும்புறப்பட்டுத்திருவாவடுதுறைக்கெழு ந்தருளிவருவாராயினர். அங்ஙனம் வரும்வழியிடையில் ஞானதேசி கர் சிவபரிபூரணமுற்றருளிய திருவருட்செய்தியை அடியார் சிலர் வந்து தேசிகசுவாமிகளிடத்து வணங்கி விண்ணப்பஞ்செய்தனர். அப்பொழுது தேசிகசுவாமிகள் பெரிதும் திருவுளம் வருந்தி விரைவிலே திருவாவடுதுறைக்கெழுந்தருளி தமது சற்குருபரர் ஞானசமாதியைச்சார்ந்து அழலிடைபட்ட மெழுகென * உழு வலன்பினால் உள்ளம் உருகக்கண்களினின்றும் நீரருவிபாய, படி மிசை வீழ்ந்துபணிந்து வலம்வந்து அங்கு பூசனையியற்றி வழி

* உழுவலன்பு எழுமையுந் தொடர்ந்த அன்பு.

பட்டுக்கொண்டு, திருக்கோயிலை யடைந்து சுவாமிதரிசனஞ் செய்து தமது மடாலயத்தைச்சார்ந்து, மடத்தின் வடக்குவாயி லின்மேல்பால் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் சிவப்பிர காசவிநாயகரைத்தரிசித்து உள்ளேசென்று, திருமாளிகைத்தேவ ரையும், திருநமச்சிவாயதேசிகோத்தமரையும், ஞானநடராசப் பெருமானையும், தரிசித்து, ஞானதேசிகர் தம் ஒடுக்கத்திலெய்தி அங்கு பீடத்தின்கண் எழுந்தருளச்செய்திருந்த ஞானதேசிகர் * திருவடிகளைப்பூசனைபுரிந்துயாவர்க்கும் விபூதிப்பிரசாதம்நல்கி தமது ஒடுக்கத்திற்கெழுந்தருளி அங்கமர்ந்தருளினர்.

பின்பு தேசிகசுவாமிகள், ஞானதேசிகர் பரிபூரணமுற்றரு ளிய நற்றினமுதல் பத்துதினம்வரை குருபூசை மாகேசுரபூசை சிறப்புறவியற்றி பதினோராந்தினத்தில் மாகேசுரபூசையியற்றி அற்றைநாளிரவில் பவனிகொண்டருளி பூர்வாசிரியர்பொற்பீடத் தமர்ந்து யாவருக்குங்குருதரிசனக்காட்சி யளித்தருளினர்.

இந்த ஞானதேசிகர், திருநந்திதேவர் அருளுபதேசமரபில் இருபத்தைந்தாவது பிற்றோன்றல் என்பதூஉம், இத்தேசிகோத் தமர்பால் அடைந்து திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம்பிள்ளை என்ப வர் மூவகைத்திக்ஷையும், சித்தாந்தசாத்திரோபதேசம்பெற்றனர் என்பதூஉம், அப்பிள்ளையவர்கள் தமது ஞானாசாரியசுவாமிகள் மீது இயற்றிய பிரபந்தங்களானும் அவர்களியற்றிய அநேக ஸ்தலபுராணங்களுட்கூறிய பாயிரத்துள் விளங்கும் குருதோத் திரங்களாலும் இனிது புலப்படும், அவை வருமாறு.

பிள்ளைத்தமிழ்

சிறுதேர்ப்பருவம்.

ஒன்பதாவதுசெய்யுள்.

ஒருநாம மும்பெறுவ தில்லைநா மென்றுமு னுரைத்தனை யதற்குமாறு, வுலவாப் பெருங்கருணை வெள்ளமலை யெறிதலா லுணர்விலெளிராபெமு முய்வான், றருநாம நந்தியங் குமரர்சந்

---

* திருவடியென்றது பாதுகையை.

தியஞான தரிசனி பரஞ்சோதியார், தழைதருமெய் கண்டவர்க லருணந்தி மறைஞான சம்பந்தர் கொற்றவனெனும், பெருநாம நல்லூ ருமாபதி சிவன்கருணை பெருகரு ணமச்சிவாயர், பிரகாச மைந்தெழுத் திறைமுனிரு பத்தைந்து பெயர்கொண்ட தன்றி யின்னும், திருநாம மெண்ணில புணர்ந்துவரு சின்மயன் சிறுதே ருருட்டியருளே, செல்வமலி துறைசையம் பலவாண தேசிகன் சிறுதே ருருட்டியருளே.

சப்பாணிப்பருவம்.

இரண்டாவதுசெய்யுள்,

புண்ணிய மலிந்தநின் றிருவார்த்தை யென்னப் பொலிந் தபே ராகமத்திற்—போற்றுபெரு நடவையிற் சமயமும் விசே டமும் பொற்பப் புரிந்துபின்ன, ரண்ணிய சிரத்தின்மேற் றங்கி மனுமுதலாய வத்தவடிவங்களாறு—மமைதரச் சோதனைபுரிந்த பின் விரும்பிநவி லபிடேகமாதிகொண்டு, கண்ணிய நறுந்தா மரைத்திரு வடித்தலங் கருதுமச் சென்னியேறக்—கண்டபின் யாவருங் காணரீ றுதவியெங் கைம்மீதுமேறி மிளிருந், தண்ணிய மலர்க்கைகொடு ஞானவடி வாயினோன் சப்பாணிகொட்டி யருளேதண்டமிழ்த் துறைசையம் பலவாண தேசிகன் சப்பாணி கொட்டியருளே.

பட்டீசுரப்புராணம்,

பாயிரம்.

குருதோத்திரம்.

உங-வது செய்யுள்.

நம்பல மாக வைகு ஞானக்கோ முத்தி மேய
வம்பல வாண தேவ னருளிய பிராசா தத்தால்
வம்பல சாத மெல்லா மாற்றியா னந்த சாத
மும்பல மாகப் பெற்றே முதற்குமேற் பெறுவ தென்னே.

திருப்பெருந்துறைப்புராணம்.

பாயிரம்.

குருஸ்தோத்திரம்.

புண்ணியவா வடுதுறையிற் பொல்லாத பாவியேன்
பொருட்டி யாரு
மெண்ணியவம் பலவாண னெனுந்திருப்பேர் பூண்டுதனுக்
கியையத் தோன்றித்
திண்ணியமா மலமூலத் தொடுசிதைய வடிமுடியிற்
செறித்தாட் கொண்டு
கண்ணியபே ரின்பளித்தா னவற்கினியாற் றுதற்காய
கைமா றென்னே.

துறைசையமகவந்தாதி.

குருவணக்கம்.

பாவன்பு திரோன் தலைமீதும் வைகியின் பஞ்செய்தது
பேவன் புலவைக் கடன்மாற் றருட்சுப் பிரமணிய
தேவன் புடையுற வாழ்வான் துறைசைச் சிவன்முனமா
லாவன் புகழ்க்கொரு வம்பல வாண னடிமலரே.

அம்பலவாணதேசிகர் சரித்திரம்.

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

இருபத்தாறாவது,

சுப்பிரமணியதேசிகர் சரித்திரம்.

திருச்சிற்றம்பலம்.

ஆசிரியவிருத்தம்.

திருமணியை நிறத்தமைத்த நீன்மணிமெய்ம் மால்பிரமன் றேடிக் காணு, வருமணியென் னையும்பொருளா வாண்டசிந்தா மணியன்ப ரகத்தே மேய, வொருமணியம் பலவாண சிரோமணி

க்ன், மணியடிமை யுவர்ந்தார் கண்ணுட், கருமணிவன் டுறை சையிற்சுப் பிரமணிய குருமணியைக் கருத்துள் வைப்பாம்,

துன்னியபஞ் சாக்கரதே சிகர்க்கிரெட் டாகியபிற் றோன்ற லாகித், தன்னிகரி லடியவருக் கமுதாகித் தாயாகித் தந்தை யாகி, மின்னியநன் னிதியாகிப் பதியாகித் துறைசைநகர் விள ங்க வென்றும், மன்னியசுப் பிரமணிய குருமணிதன் மருமலர்த்தா ளிணைகள் போற்றி.

கட்டளைக் கலித்துறை.

* திருவான திக்கையுஞ் செய்து பவத்துயர் நீக்கியெனை
யொருவாச் சிவானந்த வாழ்வினி லுய்த்த வுயர்துறைசைத்
திருவார் குருசுப் பிரமணி யப்பெயர்த் தேசிகன்றன்
மருவார் மலரடி யுள்கி வழுத்தி வணங்குவனே.

ஸ்ரீ சிதம்பரஞானமாநடராச உபாசனமடாலயமாயும், தமிழ்வேதபாராயணஉறையுளாயும், சகலகலாநிலையமாயும், விளங்காநின்ற திருக்கயிலாய பரம்பரைத் திருநந்திதேவ பரமாசாரிய சந்தானகுருபீடமான, திருவாவடுதுறை ஸ்ரீ பஞ்சாக்கரதேசிகராதீனத் திருமடத்தில் அத்தேசிகோத்தமருக்குப் பதினெந்தாவது பிற்றோன்றலாக எழுந்தருளியிருந்த அம்பலவாணதேசிகர்பால் சைவசந்நியாசமும், மூவகைத்திக்கையும், ஆசாரியாபிடேகமும் சுப்பிரமணியன் என்னும் சிறப்பபிதானமும்பெற்றுக், துவிதீய ஆசிரியராக வீற்றிருந்தருளும் ஞானதேசிகர், தமது ஞானாசிரிய சுவாமிகள் திருவடியிணைமலர்களை சிந்தித்துக்கொண்டு திருவாவடுதுறையில் சீடர்களுக்குத் திக்கைபுரிந்து சைவ சித்தாந்த சாத்திரோபதேசமுஞ் செய்து வீற்றிருந்தருளுவாராயினர்,

அக்காலத்தில் ஞானதேசிகர், பாண்டியநாட்டிலே திருநெல்வேலியென்னும் திருநகர்க்கு மேற்றிசையிலுள்ள பேட்டைஎன்

---

* திருவான என்னும் முதற்குறிப்புடைய இச்செய்யுள் இந்நூலாசிரியரால் இயற்றப்பெற்றது.

னும் பெயரிய பதியின்கண் சைவவேளாளர் குலத்தில் அவதரி த்தவரும் நச்சாடலிங்கரென்னுந் திருநாமமுடையவரும், சிறிய பிராயத்திலே தம்பால்வந்து சைவசந்நியாசமும் சமயவிசேட தீக்கைகளும், மந்திரகாஷாயமும் பெற்றவரும், தமது ஞானா சிரியசுவாமிகளால் நிருவாணதீக்ஷையும் ஞானபூசையும் நமசி வாயனென்னும் தீக்ஷாநாமமும் பெற்றவரும், தீவிரதரபக்குவம் முற்றப்பெற்றவரும் ஆகிய ஒரு தம்பிரான்சுவாமிகளுக்கு, பிர மோதூத வருடம் சித்திரைமாதத்தில் ஓர் சுபதினத்திலே ஆசா ரியாபிடேகமுஞ் செய்து தமக்குத் துவிதிய ஆசிரியராகவைத் தருளினர்.

அச்சுபதினத்தில் ஆதீனவித்துவான் திரிசுரபுரம்.

மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள்

ஞானதேசிகர்மீது ஐந்துதிருவிருத்தமியற்றித்துதித்தனர்.

அவைவருமாறு:—

உரவுபொலி மறைமுடியாஞ் சிவக்கொழுந்தைப்பரானந்தத் துவானவை நாளுங், கரவுதவி ரன்பருளத் தகலாம லமுதூற்றுங் கருணை வாழ்வைப், புரவுமலி மெய்ஞ்ஞான வாரிதியைத் துற வரசைப் பொருவி லாத, பரவுபுகழத் துறைசையிற்சுப் பிரம ணிய குருமணியைப் பரவி வாழ்வாம்.

செல்லார்க்கும் பெருமுழக்க மன்முழக்க மென்மேற்போ ய்த் திகழ்மா டத்தாற், சொல்லார்க்குங் கழனிகளாற் றொலை யாத வளங்காட்டுந் துறைசை மேவிக், கல்லார்க்கு மல்லார்க்கும் வல்லார்க்கும் வல்லார்க்குங் கணக்கி லாமற், றெல்லார்க்கு மெய்ப் பில்வைப்பாஞ் சுப்பிரம ணியகுரவ னிருதாள் போற்றி,

ஒப்புயர்வில் லவன்சிவன்மூன் றும்முடைமை யாவிரண்டு மொன்று மேற்றூர், தப்பறத்தாழ்ந் தவரெனறோர்ந் தனந்தி ருவா வடுதுறைநற் றலத்துள் வார்தம், வைப்பனைய சுப்பிரம ணியகுரவன் றன்பெபயரை வகித்து ளாரை, யெப்படியும் விலக் கலின்மற் றிவன்மூன்று மிலனென்றே யியம்பு வோமே.

பாமேவு புகழ்த்திருவா வடுதுறைசுப் பிரமணிய வள்ள லாய, நாமேவு குரவன்பேர் சொற்றவுடனென்பிறப்புத் தொலை ந்ததம்மா, பாமேவு மிதுகண்டும் பிறப்பொழிப்பா னிவனென்று பலருஞ்சொல்வார், தேமேவு நலந்தெரியென் வாயினையே புக ழாத செய்கை யென்னே.

தேடுகயி லாயபரம் பரைத்துறைசை மேயநமச் சிவாயன் றன்னைக், கூடுதன்முன் னுள்ளபதி னுல்வருமுற் றோன்றலெனக் கொண்டா ரவ்வா, றாடுதவிர் தரக்கொண்டும் பிற்றோன்ற லெனவுங்கொண் டுவக்குங் கோமான், நீடுபெரும் புகழுமைசுப் பிரமணிய குருமணியை நினைந்து வாழ்வாம்.

பின்பு ஞானதேசிகர், துவிதிய ஆசிரியராகிய நமசிவாய தேசிகசுவாமிகளுக்கு மூவகைத்தீக்ஷாவிதிகளையும், ஆசாரியாபி டேகவிதிமுதலியவைகளையும் முறையாககற்பித்தருளினர். அன் றியும் மெய்கண்டசாத்திரம் பண்டாரசாத்திரங்களில் இலை மறைகாய்போல் இலங்கும் நுண்பொருள்கள் தெளிதரச்செய் தருளினர்.

பின்பு ஞானதேசிகர், பாண்டிய நாட்டின்கண்ணும் சேர நாட்டின்கண்ணும் உள்ள தமது சீடர்களுக்குத்தீக்கையாதிகள் செய்யத்திருவுளங்கொண்டு, ஓர் சுபதினத்தில் மூலசற்குருவா கிய நமச்சிவாய மூர்த்திகளுக்கு விசேடபூசைசெய்து வழிபட்டு பூர்வசாம்பிரதாயப்படி தமது ஞானசிரியசுவாமிகள் திருவடி யிணைமலர்தோயப்பெற்ற தகமைபொருந்திய அப்பாதுகைகளை தமது சிரசின்மேற்கொண்டு தண்டிகையின்மேல் எழுந்தருளப் பண்ணி, பின்பு தாம் அதிலிவர்ந்து துவிதீய ஆசிரியராகிய நமச் சிவாயதேசிகசுவாமிகளும், தம்பிரான்சுவாமிகளும், ஏனைய அடி யவர்களும், பரிசனங்களும் உடன்வர அங்குநின்றும் அரிதி னீங்கி, வழியிடையிற்பற்பலதலங்களைத்தரிசித்துக்கொண்டு ஆளு டையார்கோயிலென வழங்கும் திருப்பெருந்துறையை யடைந்து ஆன்மநாதரையும், யோகாம்பிகையையும், குருந்தமூலநாதரை யும், மணிவாசகப் பெருமானையும் தரிசித்து வழிபாடியற்றித்

தமது மடாலயத்தையடைந்து பின்வேலப்பதேசிகர்குருமூர்த்தந் தரிசனஞ்செய்து அங்குசிலநாள் வசித்திருந்து, பின் அத்தலத்தி னின்றும் அரிநினீங்கிக் கானப்பேரூர் முதலிய தலங்களைத்தரி சித்துக்கொண்டு திருப்பூவணம் என்னும் திவ்வியதலத்தினை யடைந்து சிவபிரானைத்தரிசனஞ்செய்து ஐந்தெழுத்துங்குரு நாதனுக்கு ஐந்தாவது பிற்றோன்றலாகிய வேலப்பதேசிகர் குரு மூர்த்தந்தரிசனஞ்செய்து, மதுரைப்பதியெனவழங்கும் திருவால வாய் என்னும் திருநகரை நண்ணித் திருக்கோயிலிற்சென்று, மீனாக்ஷிநாயகரையும், ஆலவாயடிகளையும், அங்கயற்கண்ணம்மை யையும் தரிசித்து தமது திருமடத்திற்கெழுந்தருளி உருத்திர கோடிதேசிகர் குருமூர்த்தந் தரிசனம்பண்ணி, அங்கமர்ந்து மாகேசுரபூசை முதலானவை அன்பர்களியற்றத் தாம் பவனி வந்து யாவருக்குங் குருதரிசனக்காட்சி நல்கி, அங்கு சிலநாள் வசித்திருந்து, பின் திருப்பரங்குன்றம் முதலிய தலங்களைத் தரி சித்து சங்கரநாராயணர் கோயிலை யடைந்து, திருத்தளியிற் சென்று சங்கரமகாலிங்கத்தையும், கோமதிநாயகியையும், சங் கரநாராயணரையும் தரிசனஞ்செய்து, பின் தமது மடாலயத் தைச் சேர்ந்து பஞ்சாக்கரசற்குருபார்க்குப் பத்தாவது பிற்றோ ன்றலாகிய வேலப்பதேசிகர் குருமூர்த்தந் தரிசித்து வழிபாடிய ற்றி அத்தலத்திற் சிலநாள் வசித்திருந்து பின் அங்குநின்றும் அரிதினீங்கிக் கடையநல்லூருக்குச்சென்று, பஞ்சாக்கரதேசிகரு க்குப் பதின்மூன்றாவது பிற்றோன்றலாகிய அம்பலவாணதேசிகர் திருவவதாரஞ்செய்தருளிய கிருகமாகிய அத்திவ்விய திருவீட் டினைச் சார்ந்து திருவாசலிற் பணிந்து உள்ளேசென்று ஆசனத் தமர்ந்து, யாவருக்குங் குருதரிசனக்காட்சி யளித்தருளினர். பின்பு அங்குநின்றும் புறப்பட்டுத் திருக்குற்றாலத்திற்கெழுந் தருளி, சித்திராநதி தீரசிவாலயத்திற்சென்று சுவாமிதரிச னஞ்செய்து, பின் தமது மடாலயத்தைச் சார்ந்து துவிதிய ஆசி ரியராகிய முத்தம்பலவாணதேசிகர் குருமூர்த்தந்தரிசித்துஅங்கு சிலநாள் அமர்ந்தருளினர்.

பின்பு, ஞானதேசிகர் அங்குநின்றும் புறப்பட்டு பாவநாசம் என்னும் பதியையடைந்து பொருநைநதிநீராடித் திருக்கோயிலிற்சென்று முக்களாலிங்கரையும், உலகம்மையையும் தரிசித்துத் தமது ஈசானமடாலயத்தில் வசித்திருந்து செவந்திபுரத்திற்கெழுந்தருளி குருக்ஷேத்திரம்காறுபாறு வேணுவனலிங்கத்தம்பிரான் சுவாமிகள், மாகேசுரபூசைசெய்து வழிபட குருதரிசனக்காட்சி நல்கி, அங்குநின்றும்புறப்பட்டு கல்லிடைக்குறிச்சியின் வடபாங்குருள்ள திருத்தளிச்சேரியைச்சேர்ந்து திருக்கோயிலிற்சென்று மானேந்தியப்பரையும், வடிவாம்பிகையையும் தரிசித்து, தமது திருமடத்திற்கெழுந்தருளி துவிதிய ஆசிரியராகிய கனகசபாபதிதேசிகர் குருமூர்த்தந்தரிசித்து யாவருக்குங்குருதரிசனக்காட்சி நல்கி, துவிதிய ஆசிரியராகிய நமசிவாயதேசிகசுவாமிகளுடன் அங்குசிலநாளமர்ந்திருந்து, அங்குநின்றும் புறப்பட்டு திருநெல்வேலிக்கு எழுந்தருளி பொருநைநதி நீராடி நித்தியகன்மானுஷ்டானஞ்செய்து திருவுருவமாமலை என்னுந் திருத்தளியிற்சென்று குகப்பெருமானை தரிசித்து அங்குநின்றும் அரிதினீங்கி வேணுவனநாதரையும், காந்திமதியம்மையையும், தாம்பிரசபாநாயகரையும் திருக்கோயிலிற்சென்று தரிசித்து, தமது ஈசானமடாலயத்தைச் சேர்ந்து, அங்கு அன்பர்கள் மாகேசுரபூசைசெய்து வழிபட தாம் பவனிகொண்டு, குருதரிசனக்காட்சி நல்கி வழியிடையில் தமது மடாலயங்களிற்றங்கியிருந்து திருச்செந்தூர் என்னும் திவ்விய தலத்தையடைந்து, குகப்பெருமானைத் தரிசனஞ்செய்து அங்குசிலநாள் வசித்திருந்து அங்குநின்றும் அரிதினீங்கி, வழியிடையினுள்ள தமது மடாலயங்களில் சென்று அவ்வவ்விடங்களில் வசித்திருந்து, வள்ளியூரையடைந்து திருக்கோயிலிற்சென்று சண்முகப்பெருமானைத் தரிசனஞ்செய்து தமது ஈசானமடாலயத்தையடைந்து அங்கு வசித்திருந்து, கன்னியா

குமரியென்னும் பதியினைச்சார்ந்து தீர்த்தமாடித் திருக்கோயிலிற் சென்று பகவதியம்மையைத் தரிசித்து தமது ஈசானமடாலயத் திற்சென்று அங்கு வசித்திருந்து, பின்னர் சுசீந்திரத்திற்கெழுந் தருளி திருக்கோயிலெய்தி சிவபிரானைத் தரிசித்து தமது ஈசான மடாலயத்தைச் சார்ந்து அங்கு பிரதிட்டாமூர்த்தியாக திருக் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் பஞ்சாக்கரசற்குருமூர்த் தியைத் தரிசித்து பின் இருகுமாரசுவாமித்தேசிகர் குருமூர்த்த ங்கள் பணிந்திறைஞ்சி அங்கு பக்குவச் சீடர்களுக்குத் தீக்கை யாதிகள் செய்துகொண்டு சிலநாள் அமர்ந்திருந்தனர்.

அந்நாளில் திருவனந்தபுரத்தில் அரசுவீற்றிருந்த ஆயில்ய மகாராஜாவென்பவர் தம் ஆஞ்ஞையினால் பிரதானிகள் சிலர், ஞானதேசிகர்பால் வந்துவணங்கித் தமது அரசமாநகருக்கு எழு ந்தருளுமாறுவேண்ட, ஞானதேசிகர் அதற்குத் திருவுளமிசை ந்து சுசீந்திரத்தினின்றும் புறப்பட்டு வழியிடையில் ஆங்காங்கு பிரதானிகள் எதிர்கொண்டு வழிபட்டு மாகேசுரபூசை முதலா யின நடாத்தத் திருவுளத்துவகையெய்திச்சென்று, திருவனந்த புரத்திற்கெழுந்தருளி அங்கு அரண்மனைக்கணித்தான ஓர் அலங் கார மாளிகையில் அமர்ந்தருளினர்.

அங்கு அரசர், தம் ஆணைமேற்கொண்டு மந்திரிமுதலாயி னோர் மாகேசுரபூசை சிறப்புறச்செய்து ஞானதேசிகரை வண ங்கி அரண்மனைக் கெழுந்தருளுமாறு வேண்ட, ஞானதேசிகர் அதற்குத் திருவுளமிசைந்து, சிவிகைமீது ஆரோகணித்துத் துவிதிய ஆசிரியராகிய நமசிவாயதேசிகர் மற்றோர் சிவிகையில் வழக்கப்படி பின்னேவர, தாம் சிவன்கோயிலிற்சென்று சிவபெ ருமானைத்தரிசித்து அங்குநின்றும் அரிதினீங்கி விஷ்ணுகோயி லுக்கெழுந்தருளி பத்மநாதசுவாமியைத்தரிசனஞ்செய்து அங்கு நின்றும் புறப்பட்டு அரசரது அரண்மனைவாயிலை அணுகுதலும் அரசர் தாம் உபப ஞானாசிரியசுவாமிகளையும் எதிர்கொண்டு, உள்ளே அழைத்துச் சென்று, பொற்பீடத்தி லெழுந்தருளச் செய்துஉபசரிப்ப, ஞானதேசிகர் அவ்வரசர்க்கு ஆசீர்வதித்து

இனிய வசனங்களால் அவர் தாம் மகிழ்தரச் செய்தருளினர். †அரசர் அன்புகூர்ந்து உபயஞானாசிரியசுவாமிகளுக்கும் தனித் தனி சிவிகையும், பொற்குடை முதலாகிய வரிசைகள் பிறவும் வழங்கி அவ்வரசமாநகரின்கண் பலவகைக்காட்சிகளோடு பவனி கொண்டருளச்செய்வித்து, மேலும் வேண்டுவன யாவுங் குறை வற முடித்து, ஞானதேசிகர்பால் விடைபெற்றுக்கொள்ள, அக் குருபரர் அங்குநின்றும் புறப்பட்டு சுசீந்திரத்தை யடைந்து அங்குசிலநாள் வசித்திருந்து அங்குநின்றும் அரிதினீங்கிக் கல் லிடைக்குறிச்சியின் வடபாங்கருள்ள திருத்தளிச்சேரியையடை ந்து சிலநாள் அங்கமர்ந்திருந்து, துவிதீய ஆசிரியராகிய நமசி வாயதேசிகசுவாமிகளை அவ்விடத்தமர்ந்து அன்பர்களுக்கு அரு ளுபதேசஞ் செய்யுமாறு பணித்துத்தாம் அங்குநின்றும் புறப் பட்டுத் திருவாவடுதுறையை யடைந்து தமது மடாலயத்திற் கெழுந்தருளி ஞானமூர்த்தியாகிய நமச்சிவாயதேசிகோத்தமரு க்கு நித்திய நைமித்திகபூசை சிறப்புறவியற்றி வழிபட்டுக்கொ ண்டு தம்பாற் சரண்புகும் அன்பர்களுக்குச் சிவதீக்கை முதலா னவை செய்தங்கமர்வாராயினர்.

---

† அரசர் அன்புகூர்ந்து ஞானதேசிகருக்குச் சிவிகை பொற்குடை முதலிய வழங்கியவ்வைதெரிந்து இராமநாதஜமீன்தார் துரைராசாஅவர் கள் ஞானதேசிகருக்கு எழுதியனுப்பிய பாடல்கள்.

குருந்துறைசைவக்கொழுந்தின்றிருப்பணிகைக்
　　கொடுவழுதிகுலத்தோடாண்டு
பெருந்துறைசையோகமுறப்பெற்றவரின்
　　யாஞ்செய்தவப்பேற்றால்வெண்பொன்
திருந்துறைசையத்தினின்றுஞ்சிவஞானத்
　　திருவுருவாய்ச்சேர்ந்தோர்க்கின்பந்
தருந்துறைசைவந்தருள் சுப்பிரமணியகுரு
　　மணியே சாற்றக்கேண்மோ. (க)

திருமுகங்கொண்டனைவர்க்கெச்சிறப்பு
　　மருள்கோதைநல்குந்தேவேதன்பா
லொருமுகங்கொண்டனையிலவனுதவியதோ
　　வடிகள்புகுந்தனைதோவின்ன
விருமுகனிலிறும்பூதிங்கெஃதென்பே
　　னதுநிற்கவென்பாலன்பு
தருமுகமன்விரிகடிதத்தனிப்பாக்களிளிப்
　　பாக்கந்தழைத்தமாதோ. (உ)

அக்காலத்தில் தமது ஆதீனமகாவித்துவானாக அங்கமர்ந்து கல்வி போதித்து வருவாராகிய திரிசிரபுரம் மீனாக்ஷிசுந்தரம் பிள்ளையென்பவர், ஞானதேசிகர்மீது நெஞ்சுவிடுதூதுவென்னும் பிரபந்தத்தை யியற்றி அத்தேசிகர் திருமுன்பு அரங்கேற்றினர். பின்பு சிலபகல்சென்று அவருக்கு ஞானதேசிகர் ஆன்மார்த்த படிகலிங்கபூசை எழுந்தருளப்பண்ணி பூசித்து வருமாறு செய்தருளினர். அப்பொழுது அவர் ஞானதேசிகசுவாமிகள்மீது நூறு செய்யுட்களாலாகிய ஒருபாமாலை இயற்றித் திருச்செவி சாத்தி திருவருள்பெற்றுய்ந்தனர். பின்பு, அவர் தம்பாற் தமிழ்க்கல்விபயின்ற தம்பிரான் சுவாமிகளில் ஒருவராகியும், ஆதீன மகாவித்துவானென்னும் பட்டம் பெற்றவராகியும், துறவறத்திற் சுகமுனிவரை யொத்தவராகியும், குமரகுருபரமுனிவர் குலமரபினராகியும்விளங்கிய குமாரசாமித்தம்பிரான்சுவாமிகள், ஆதீன குலதெய்வமென்று யாவராலும் துதிக்கப்பெறும் திராவிடமாபாஷியகர்த்தராகிய மாதவச்சிவஞானசுவாமிகள் வரலாறு பத்தியமாகப்பாடித் தருகவென வேண்ட *அப்பாடியமுனிவர் வர

*திருவாவடுதுறைஆதீனமகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளையென்பவர் அவ்வாதீன அடியார்களிலொருவராகிய வித்துவான் குமாரசாமிசுவாமிகள் விருப்பத்தின்படி திராவிடமாபாடியகர்த்தராகிய மாதவச்சிவஞானசுவாமிகள் வரலாறு செய்ய ஆரம்பித்தனர் என்பது பின்வருஞ்செய்யுட்களால் இனிது புலப்படும். அவை வருமாறு:—

சிவஞானயோகிகள் வரலாறு.

ஆக்குவித்தோர் பெயர் கூறிய செய்யுட்கள்.

குலவுமுருகக்கடவுள் கருணையினோ டாதனைத்துங் கூடவோர்ந்தே
யுலவுபுகழ்க் குமரகுரு பரமுனிவ னுதித்தமர புதித்த மேலோ
னிலவுபுகழிலக்கணமு மிலக்கியமும் வரம்புகண்ட நிகரொன் றில்லான்
கலவுசிறப் புத்தமநற் குணங்களெலா மோருருக்கொள் காட்சிபோல்வான்.

கூடுபுகழ்க் கோமுத்திக் குருநமச்சி வாயனருள் கொண்ட மேலோன்
பாடுபுகழ்ச் சித்தாந்த பாடியமுற் றொருங்குணர்ந்த பான்மை யான
விடுபுகழ்த் துறவொழுக்கந் தவறாது காத்தோம்பு நெறியில்வல்லோன்
றேடுபுகழ் வளர்குமர சாமிமுனி வான்முனிவர் செயசிங் கேறே.

அன்னமுனி வான்கனிவிற் சிவஞான யோகிவர லாறு முற்று, நன்னர்வன முறப்பாடித் தருகவெனச் சொற்றமொழி நலத்தை யோர்ந்தே, யென்னவலி யுளமெனப்பா டேற்கிசையேன் மறுப்பதற்கு மிசையே னேனுஞ், சொன்னமொழி மறுத்தற மென்றொருவா றோதுதற்குத் துணிபுற் றேனால்.

லாற்றைப் பாங்குபெறவைத்து விரிவகையாற்றும்பாடி வரும் நாட்களில் நம் தமிழுலகஞ்செய்த தவக்குறையானே அதுகாலன் முற்றுப்பெறு திருப்பவிட்டுச் சிவபதமெய்தினர்.

அக்காலத்தில் ஞானதேசிகர், தாதுவருடத்திய தவிர் மாதத்து நிகழும் சூரியகிரகணத்தில் தீர்த்தஸ்நானம் செய்தற்கு மாயூரத்திற் கெழுந்தருளி காவிரிநதியின் தென்கரைப் பாங்கர் ஒருமண்டபத்தில் எழுந்தருளியிருந்தனர். அத்தருணத்தில் மாயூரம் முனிசீப் வேதநாயகம்பிள்ளை யென்னும் பெயரிய ஒருவர் ஞானதேசிகரைத் தரிசித்து இரண்டு செய்யுட்கள் இயற்றித் துதித்தனர்.

அவை வருமாறு:—

வேண்பா.

குருவுங் கிரகணமுங் கூடலாற் கங்குன்
மிருமென் றுளமே வெருவ—னருதுறைசைச்
செப்பரிய மாச்சுப் பிரமணிய தேசிகனை
மப்பரிதி யீங்குகித்த லால். (க)

விருத்தம்.

மாதவச்சுப் பிரமணிய தேசிகமே லோயுவர்ப்பு வாரி மூழ்கு, மாதவன்கீழ்த் திசையுதிக்குஞ் சுடுமனுகு மதியழிக்கு மத்த மிக்குஞ், சாதகமேற் றிசையுதிப்பாய் நிழலளிப்பாய் மதியளிப் பாய் தவாம னுளும், பேதகுணக் கடல்படிவா யத்தமியாய் நினைக்கதிரோன் பொருவா னன்றே. (உ)

பின்பு ஞானதேசிகர் காவிரிநதி நீராடி திருக்கோயிலிற் சென்று மாயூரநாதசுவாமியையும், அபயாம்பிகையையுந் தரிசித்துத் தமது திருநகர்க்கு எழுந்தருளினர். அக்காலத்தில் *வற்கடம்மிகுந்து மாநிலத்தின்கண் மன்பதை வருத்தமுறுவதை ஞானதேசிகர், திருவுளத்தாராய்ந்து அங்குள்ளயாவருக்கும் பசிப்பிணிதீரும்படி அன்னம், ஆடை முதலியவைகள் கொடுத்து

*வற்கடம் பஞ்சம்.

வந்தனர். அதனைப்புணர்ந்த முனிசிப் வேதநாயகம்பிள்ளை யென்பவர் திருவாவடுதுறைக்கு வந்து ஞானதேசிகரைத் தரிசித்துச் சிலசெய்யுட்கள் செய்து துதித்தனர்.

அவை வருமாறு.

கட்டளைக் கலித்துறை.

கேடொன்று மில்சுப் பிரமணி யாதிப நின்னைப்பல்லோர்
காவென்று சொல்வரக் காரும்வஞ் சித்தவிக் காலத்திலே
பூவொன்றும் வாழ வறுசுவை யுண்டி யுதவியுன்றன்
பேவொன்றும் நிற்கச்செய் தாயுனைக் காவெனல் பேதைமையே.

சசியோடத் தோன்றுந் தினகரன் போலவிந் நீணிலத்தோர்
பசியோடப் பஞ்சம்பஞ் சாய்ப்பறந் தோடப் பதார்த்தமெலாஞ்
சுசியோ டளித்துப் புகழ்மே வினனற் றுறைசையில்வாழ்
சசியோடு நேர்முக சுப்பிர மணிய தயாநிதியே. (௨)

தடையில் கொடைச்சுப் பிரமணி யையநிற் சார்ந்தவர்கொள்
கொடையை யவர்சொல வேண்டுங்கோ லோவவர்க்கிசொலு
மிடைசொலுங் கண்டமுங் காதுஞ்சொலுமிரு மாப்புடைய [தே.
நடைசொலுங் கையிற் குடைசொலும் வேறென்ன நான்சொல்வ

படிபடி பாகப்பொன் கொட்டிநெற் கொள்ளுமிப் பஞ்சத்திலே
மிடிபிடி யாக மணியுங் கனகமும் பெட்புறுவோர்
மடிமடி யாக்கட்டிச் செல்லத்தர் தான்பெரு வள்ளலென்றே
குடிகுடி யாகத் தொழுஞ்சுப்ர மண்ய குணாகரனே. (௪)

பானு நிகர்சுப் பிரமணி யாரிய பல்லுயிரை
வானு மறந்தவிந் நாள்ஃசா றுடைபொன் மடிசுரந்து
தேனுவை நீவென்ற தாலா வடுதுறைச் செல்வப்பெயர்
தானுன் பதிக்குத் தகுந்தகுங் காணிது சத்தியமே. (௫)

அம்மையு மத்தனு மாஞ்சுப்ர மண்ய வணகனைத்தான்
சும்மை நிதிகொள் கவிஞர்க ளூரைந் துதிப்பதல்லா

விம்மையி லோர்பொருள் வேண்டாத நாமு மினிதுவந்து
செம்மை யவன்குணம் வாழ்த்துவ மேலவன் சீர்த்திபெற்றே

மாமேக நீசொன்றை யேதருஞ் சுப்ப மணியப்பெயர்ப்
பூமேக மன்னமுஞ் சொன்னமு மின்னமும் பூண்டுகிலும்
வீமேக முட்டும் வளமாடம் பூமி விடைபசுவுந்
தோமேக வேதமு நீதமும் போதமுந் தூவிடுமே. (எ)

எரியொத்த பஞ்ச மிடங்களை யொத்த திடங்கர்பற்றுங்
கரியொத் தனபல் லுயிர்க ளெல்லாமக் கராமடிக்க
வரியொத் தனன்சுப் பிரமணி யைய னரிசக்கரஞ்
சரியொத் தனவவ னீந்திடும் பொன்வெள்ளிச் சக்கரமே. (அ)

வானென் றுதவ வருஞ் சுப்பிர மண்ய வரோதயனே
தானென்று வெண்ணைரன் பாடையிந் நாட்டிற் றலையெடுக்க
வேனென்று கேட்பவ ரில்லாத் தமிழை யினிதளிக்க
நானென்று கங்கணங் கட்டிக்கொண் டாயிந்த நானிலத்தே. (கூ)

பின்பு, முனிசிப் வேதநாயகம்பிள்ளை ஞானதேசிகர்பால் விடைபெற்றுத் தமது ஊருக்குச்சென்று உவப்பத் தலைக்கூடி யுள்ளப் பிரிதல், என்னுந் திருவாக்கிற்கிலக்கியமாக திகழுந் தமது உழுவலன்பினால் அவர் ஞானதேசிகருக்கு இரண்டு செய்யுட்களியற்றியனுப்பினர். அவை வருமாறு:—

சுருதியோ ருருக்கொண் டன்ன சுப்பிர மணிய தேவே
கருதியின் னெருகா னின்னைக் காணலா மெனும வாவாற்
பொருதியென் மனம்பின் னீர்க்கப் பொறையுறு பண்டி பூட்டு
மெருதுகன் முன்னே யீர்க்க வென்பதி யடைந்தேன் மன்னே.

சூர்வந்து வணங்கு மேன்மைச் சுப்பிர மணிய தேவே
நேர்வந்து நின்னைக் கண்டு நேற்றிராத் திரியே மீண்டென்
னூர்வந்து சேர்ந்தே னென்ற னுளம்வந்து சேரக் கானே
னூர்வந்து சொலினுங் கேளே னதனையிங் கனுப்பு வாயே. (உ)

பின்பு, உலகிற் பெதியென்று வழங்குங் கொள்ளைநோய் மிகப்பரவி வருதலைநோக்கி அவ்வேதநாயகம்பிள்ளை ஞானதேசி கரையடைந்து தரிசித்து உலகில் அந்நோய் நீங்குமாறு கருதிப் பிரார்த்தித்து ஒருசெய்யுளியற்றித் துதித்தனர்.

அச்செய்யுள் வருமாறு:—

கட்டளைக்கலித்துறை.

இலக்கண மெய்க்கரை மாத்திரை யாமிவ் வளவுமின்றி
மலக்கன் வினைபிணி யாற்பலர் மாய்ந்தனர் மண்டுமிந்நோய்
விலக்க வருள்புரி மும்மல நோய்கெட வித்தகனாய்
நிலக்க ணமர்சுப் பிரமணி யாநந்த நின்மலனே.

அன்றியும் அவர்ஆதீனவித்துவான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை யென்பவருடன் கலந்து பேசிக்கொண்டிருக்கும் ஓர் தருணத்து இரண்டு செய்யுட்களியற்றி ஞானதேசிகருக்கு அனுப்பினர்.

அவை வருமாறு:—

கட்டளைக்கலித்துறை.

இல்வாழ்வை நீத்தற மேற்கொண்ட நீபிறரில்லகத்துச்
செல்வாழ்வு சற்றும் விரும்பா யென்பாரிது சித்திரமே
புல்வாழ் வுடையென்றன் வீடெங்கு நீபரி பூரணனாய்
நல்வாழ்வுற் றாய்சுப் பிரமணி யாநந்த நற்றவனே.

ஆசிரிய விருத்தம்.

விதியிருந்த பதியெனுஞ்சுப் பிரமணிய தேசிகமெய்ஞ் ஞானக் குன்றே, துதியிருந்த நின்புலவன் சொல்வழியே பல்வழியுந் தோன்று கியென், மதியிருந்தாய் பிரிந்திடவு மனம்பொருந்தா யெனவிருந்தேன் வான்கேமுத்திப், பதியிருந்தா யெனவந்த மாபுலவன் பொய்சொலவும் படித்தான் மன்னே.

பின்பு சிலகாலஞ்சென்று ஞானதேசிகர், தாம் மதுரைமாநகரின்கண்ணுள்ள சைவநேயர்கள் வேண்டுகோளுக்கியைந்து திருவாலவாய்ச் சிவன்கோயில் கும்பாபிடேகத்தரிசனத்தின் பொருட்டு அங்கெழுந்தருளத் திருவுளங்கொண்டு, அவ்வாறே ஓர் சுபதினத்தில் ஆவினருங்கன்றுறையும் ஆவடுதண்டுறையி னின்றும் அரிதினீங்கி, வழியிடையிற் பலதலங்களைத் தரிசித்து மதுரைமாநகரை யடைந்தருளினர். அந்நாட்களில் ஞானதேசிகர் கட்டளையிட்டருளிய வண்ணம் துவிதீய ஆசிரியராகிய நமசிவாயதேசிகசுவாமிகள், திருத்தளிச் சேரியினின்றும் புறப்பட்டு மதுரைமாநகரையடைந்து தமதுஞானதேசிகர் எழுந்தருளி யிருக்குந் திருமடநிலவுந் திருவீதியினை யணுகிச் சிவிகையி னின்றும் இறங்கிவீதியில் நடந்துசென்று அத்திருமடத்தைச் சார்ந்து ஞானதேசிகரை விதிப்படிதரிசித்து அங்கமர்ந்தருளினர்.

பின்பு ஞானதேசிகர், கும்பாபிடேக சுபதினத்தில் துவிதீய ஆசிரியராகிய நமசிவாயதேசிகசுவாமிகளோடு திருக்கோயிலுக் கெழுந்தருளி, கும்பாபிடேகதரிசனஞ் செய்து புறத்தேவந்து, தமது திருமடத்தில் எழுந்தருளியிருந்தனர். பின் சிலநாட் கழித்து அங்குநின்றும் அரிதினீங்கித் திருப்பரங்குன்றத்திற் கெழுந்தருளி, சுவாமிதரிசனஞ்செய்து அங்கு நின்றும் புறப் பட்டு திருநெல்வேலியைச்சார்ந்து அங்கு திருக்கோயிலுக்கெழுந் தருளி சிவபிரானைத்தரிசனஞ்செய்து தமது ஈசானமடாலயத்தை யடைந்து அங்கு சிலநாள் வசித்திருந்து அங்குநின்றும் புறப் பட்டு கல்லிடைக்குறிச்சியின் வடபாங்கருள்ள திருத்தளிச் சேரியை யடைந்து திருக்கோயிலிற் சென்று சுவாமிதரிசனஞ் செய்து தமது திருமடத்திற்கெழுந்தருளி துவிதீய ஆசிரியராகிய கனகசபாபதிதேசிகசுவாமிகள் குருமூர்த்தந்தரிசித்து அங்கமர்ந் தருளுவாராயினர். அங்ஙனம் அமர்ந்தருளிய ஞானதேசிகர், அற்றைநாளிரவில் பவனிவந்து துவிதீய ஆசிரியராகிய நமசிவாய தேசிகசுவாமிகளால் அதிவிசித்திரமாக செய்தருளிய அத்தாணி மண்டபத்தில் வீற்றிருந்து குருதரிசனகாட்சி கொடுத்தருளினர்.

பின்பு சிலநாட்கழித்து ஞானதேசிகர் அங்குநின்றும் புறப்பட்டு செவந்திபுரத்திற் கெழுந்தருளி, அங்கு வேணுவனலிங்க சுவாமிகளால் அதிவிசித்திரமாகப் புதிதாக சமைப்பித்துச் சுப்பிரமணியவிலாசமென ஞானதேசிகர் திருநாமமிட்டு வழங்கப் பெறுவதாகிய அத்திருமடத்தில் வீற்றிருந்து யாவருக்குங் குரு தரிசனக்காட்சி யளித்தருளினர். அத்தருணத்தில் அங்குகூடிய புலமைமிக்க தம்பிரான்சுவாமிகளும் ஏனையோர்களும் ஞான தேசிகர் தம் திருவுளத்துற்ற பெருமகிழ்ச்சியைகண்டு கழிபேரு வகையெய்தித்துதித்துப் *பாடினர்.

---

* அங்ஙனம் தமிழ்ப் புலமைவாய்ந்த தம்பிரான்சுவாமிகளும் ஏனையோரும் பாடிய பாடற்றிரட்டினை சுப்பிரமணியதேசிகர் விலாசச்சிறப் பென பெயர்வழங்குவர் அங்ஙனம் அவர்கள் பாடியபெற்றிமை விளங்க ஆதீனமகா வித்துவான் மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை யவர்களின் மூதன் மாணாக்கரும் கும்பகோணம் புரோவின்சியால்–கல்லீஜ் தமிழ்பண்டிதரு மாகிய தியாகராஜசெட்டியாரவர்களியற்றியசெய்யுட்கள்.

பூமேவு பொழில்புடைசூழ் புகலிவரு கவுணியர்புண் ணியத்தின்
சீர்சா, னாமேவு திருவாக்கா லமண்மாசு கழுவியொளிர் நலத்ததாய,
தூமேவு நீறணிந்து கண்மணிமா லிகையென்றுந் துலங்கப் பூண்டு,
பாமேவு புகழ்படைத்த பெருஞ்செல்வர்க் கிடமாய பாண்டி நாட்டில்.

பாரேந்து மணிச்சுடிகைப் பன்னகவேந் தன்புலவோர் பரிந்து
போற்றும், பேரேந்து வித்தியா ரணியமுனி முதலாய பெரியர் யாரு,
நாரேந்து தன்வயிற்றோன் றப்பெரு மைக்குள்ள நாணவோங்கு, மேரே
ந்து சீரேந்து விக்கிரம சிங்கபுர மெனுந்த லத்தில். (உ)

விதியரியே முதலாயோர் பசுக்களே யொழிவிலின்ப வீடு நல்கும்,
பதிபரம சிவகுருவே யென்றியாருந் தெளிந்துய்யப் பாடி யஞ்செய்
துதிபெருகு சிவஞான முனிவர்தம் பெருமானார் தோன்றப் பெற்ற,
முதியபெருந் தவம்புதுக்கு மாறவேண் டியவோடு முளைத்த சிவன். ()

அன்றியும் அத்திருமடத்தில் ஞானதேசிகர் திருவுருப் பிரதிட்டை முன்னரே செய்துபூசித்துவரும் வேணுவனலிங்க சுவாமிகள் விரும்பியவண்ணம் அச்சுவாமிகள் நித்தியநியமமாக பூசாகாலத்தில் தோத்திரஞ்செய்யும்பொருட்டு ஞானதேசிகர்மீது பத்து திருவிருத்தங்கள்பாடி அதற்குச் சுப்பிரமணியதேசிகர் மாலையென்று பெயர்சூட்டி ஆதின வித்துவான் குமாரசாமி தம்பிரான் சுவாமிகள் அச்சுவாமிகளுக்கு அப்பாமாலையை அளித்தனர்.

அருள்வாய்மை தவமுதல விரதங்கள் பல்லுருப்பா வமைய வோங்குந், தெருண்ஞான மேநிரண்டு விளங்குதிரு வுருவாகச் சிறந்த மேலோன், மருண்மேவ லொழிதருசித் தாந்தசைவ நிலையென்று மருவி நின்ற, பொருண்மேவு முப்புரிதன் றனையடைந்தோர்க் கந்நிலையே புணர்த்து நல்லோன். (ச)

மருத்துறைசேர் தான்றோன்று பதியிலா லயம்விளங்க வகுத்த தன்கட், டிருத்துறைசை யாதீன குலதெய்வ மெனுநாமஞ் சிறக்கப் பூண்டோன், கருத்துறைபா டியமுனிவர் திருவுருவென் றுங்கலினக் கண்டு தாபித், தெருத்துறையும் பரனடியார் திருவுளமே தனக்கிடமா வியைய வாழ்வோன். (ரு)

சாறுவன பரமகுரு நாதனருட் டிருவுருவே கனிபே ரன்பிற் பூறுவன வினையனலர்ப் பூங்கழலே யென்ஞான்றும் புகலக் கேட்பப், பேறுவன வினையறுயர் பெரும்புகழே யென்றுளத்திற் பிறங்கக்கொண் டோன், வேறுவன லிங்கமுனி வர்பிரா னெனுநாம மேவப் பூண்டோன். (சு)

தண்ணியசீ றணிந்துயர்கண் மணிபுனைந்தே யைந்தெழுத்துத் தழைய வெண்ணி, யண்ணியமா சைவர்பல ரிருபாலு நிரைநிரையா வமர்ந்து பூசை, பண்ணியவன் றேர்புரிந்த புண்ணியம்போற் பெருக் கெடுத்திப் பார்கொண் டாட, நண்ணியபல் வளம்பெருக்கி யுயிர்புரக் கும் பொருநைமா நதித்திரத்தில். (எ)

அவை வருமாறு:—

பூமலி நினது திருவருள் குறித்துப் போற்றவும்
போற்றுமெய் யடியார்க்
காமலி பணிசெய் தவரருள் பெறவு மடியனேற்
கின்னருள் புரிவாய்
தேமலி கழுநீ ரலங்கறை வருநீதோட் செம்மலே
சிறியனேன் றனையும்
ஆமலி தாச்செய் தாண்டமெய்த் துறைசைச் சுப்பிர
மணிய தேசிகனே. (௧)

பூமணக்குந் திருமாதும் பொலிதருநான் மறைமணக்கும் புவன மீன்றோ, ளுமணக்குங் கலைமாதுங் கலந்தென்று மொருவாத நளின மாகிக், காமணக்கும் புவிமாது திருமுகம்போ லெஞ்ஞான்றுங் கவின் பெற்றோங்கிப், பாமணக்குஞ் சீர்புனைந்த செவந்திபுர மெனும்பெயர் கொள் பதியின் மாதோ. (௮)

நாலோது முனிவர்கள் பணிந்துபுகழ்ந் தேத்தவரு ஞேண்மை வாய்ந்த, வாலோதென் பெருந்துறைவாழ் குருந்தோகோ முத்திவள ராசோ வினபப், பாலோது நான்மறையி னந்தமோ விளங்குருமிப் படிவ மாகச், சேலோது விழியர்மய லகன்றொளிர்தன் றிருவுளமோ திரிந்த தென்று. (௯)

ஆய்ந்தபெருங் கல்வியறி வொழுக்கமே யிவ்வுருவா யமைந்த தென்ன, வேய்ந்தவெழின் மிளிர்குமா சாமிமுனி வான்றுறவி னிய லோ வாது, வாய்ந்தவா றுமுகமுனி வான்பழனிக் குமாரமுனி வான்பா கத்தைத், தோய்ந்தாவி யிராமலிங்க முனிபரம சிவமுனிமுற் றாயோ ரன்றி. (௧௦)

தன்னுறுபே ரிலக்கணமு மிலக்கியமு மீனாட்சி சுந்த ரப்பேர், மன்னுறுநா வலர்பெருமா னிடையுணர்ந்தெல் லாநலமும் வாய்ந்தன் ஞென்போற், பன்னுகவி சொல்சாமி நாதமறை யோனியற்சண் புகக் குற் றல, மென்னுமுயர் பெயர்புனைந்த கவிராஜன் முதற்பலரு மிய ம்பி யேத்த. (௧௧)

சாற்றுபல் புவனப் பாப்பெலாந் தாயர் சலிப்புற
வவர் வயிற் சார்த
லேற்றுவெங் கொடிய துயரமே யுழக்கு மேழையேற்
கத்துயர் முழுது
மாற்றுபு கருணை வழங்குநின் னடியில் வணங்குத
லன்றிமற் றறியேன்
ஆற்றுபூம் பொழிற்கா விரிசுலாந் துறைசைச் சுப்பிர
மணியதே சிகனே. (உ)

பொன்னாலு மணியாலும் புதியதிரு மடமொன்று புரிந்த தன்கட் டென்னாலுந் துறைசைச்சுப் பிரமணிய குரவர்பிரான் றிருநோக் கென்னு, சொன்னாலு முனிவர்போற் றூய்மையுடை யார் பலருந் தோயு மாறு, மின்னாலு மனையனெழிற் றிருவுருவ மினிதமைத்து விளக்கஞ் செய்து. (கஉ)

நல்லார்க ளுளமகலா வனையகுரு சாமியெழி னலத்த தாய, சொல் லாருங் கொலுத்திருவோ லக்கத்தி லினிதமர்ந்து துலங்கு காட்சி, பல் லாருங் கண்டுயர மானந்த வாரியிடைப் படியப் பண்ணி, வில்லார்தா முறுமின்பம் பலருறச்செய் பெரியரியல் விளக்கினனே. (கங)

சுப்பிரமணியவிலாச சிலாசாசனச் செய்யுள்.

திருவாவடுதுறை ஆதீனவித்துவான்
குமாரசாமித்தம்பிரான்சுவாமிகளியற்றியது.

மன்னுசீர்ச் சாலி வாகன சகாத்த மாயிரத் தெழுசதத் தோடு
மருவிய தொண்ணூற் றொன்பதிச் சுரநல் வருடத்தி லாடிமா மதியிற்
றுன்னுமுத்தேதியாதியாவறுபான் றினத்துட்சொலற்கருமைத்தாய்த்
துவன்றுபல் லங்க மமைதிரு மடத்தைத் தொகுபுகழ்ச் செவந்தியி
[னமைத்துப்
பன்னுநற் றுறைசைப் பஞ்சாக்கரத் தீரெட் டானபிற் றோன்றலென்
[றிப்பார்
பாவுசுப் பிரமணியகுரு மணியின் றிருவுருப் பதிட்டைசெய் தருச்சித்
துன்னுமற் றவன்றன் றிருவருட் பதிட்டை யுளத்திடைச் செய்தன
[னுறைந்தா
னுயர்புகழ்க் காறு பாறுவே ணுவன லிங்கமா தவர்க்கொரு மணியே.

மறைமுத லாய கலையெலாம் வணங்கு மாண்பினர்
தம்மனத் தோங்கி
நிறைதரும் விரிப்பிற் கெட்டிமே லருளு நிமலனீ
யென்றிட றெரிய
குறைபல வுடையே வினைத்தவா காட்சி கொடுத்துநின்
றிருவருள் கொடுத்தாய்
துறைதொறுங் கமல நிலைதருந் துறைசைச் சுப்பிர
மணியதே சிகனே. (௩.)

ஆதியி லுயிர்கட் குடன்முத லுன்று மளித்தனங்
கருணையி னவைசேர்
நீதியிற் கரும மியற்றுமக் கரும நிகழ்வழி
நிகழ்த்துவம் யாமென்
றோதிய நீமுன் னெக்கரு மத்தா லுடன்முத
லளித்தனை யுரைப்பாய்
சோதியே யறவர் சூழ்பெருந் துறைசைச் சுப்பிர
மணியதே சிகனே. (௪)

மகிழுதன் மடவார் போகமே முதலா வகுத்தபன்
முத்தியு மயக்காற்
பொதிமதி யுடையோர்க் காகுமம் மதியிற் பொருந்துபன்
முனிவருக் களிக்கும்
பதிதரு முத்தி யவையல வெனற்கோ பரவுகோ
முத்தியி லுறைந்தாய்
துதிகெழு வளத்தந் நகரமாந் துறைசைச் சுப்பிர
மணியதே சிகனே. (௫)

மதிக்குநின் றிருவா யுதிக்குநால் வேத வழிபயி
லடியவர் சிரத்திற்
பதிக்குநின் கமல பாதமென் சிரத்தும் பதித்துயர்
பங்கயா சனத்து

விதிக்குமா பதிக்கு முறுசெய லென்பால் விலக்கியான்
டருளினை யெந்தாய்
அதிக்குமெய்ப் புலவர்க் கதிக்கும்வான் றுறைசைச் சுப்பிர
மணியதே சிகனே. (௬)

அன்றுகல் லாலி னுன்முனி வரர்க்கா வருளுரு
வெடுத்திவ ணமர்ந்து
மின்றுபன் முனிவர்க் கருளுவா னிந்த வெழிலுருத்
தாங்கியு மெழுதந்
கொன்றுமின் னருள்கா ரணமலால் வேறு வுரைப்பவு
முள்ளதோ வருளாய்
துன்றுபன் முத்தர் சித்தர்வாழ் துறைசைச் சுப்பிர
மணியதே சிகனே. (௭)

உன்னுமோர் கரும முன்னிபாங் குனுற்ற வுயிர்களுக்
கிலேசமக் குளதா
மென்னுமீ பொப்பு முயர்வுமின் மையினு லெழுந்தபே
ரருளினு லியார்க்கும்
பன்னுமின் வரவின் காவினைத் தெரித்தெம் பரிசையே
பரித்திட லெவன்கொ
துன்னுசெந் தமிழா கரமெனுந் துறைசைச் சுப்பிர
மணியதே சிகனே. (௮)

நிலவுமிவ் வுலகிற் பல்வகைப் பிறப்பு ணிகரிலா
மானிடப் பிறப்போ
டுலவுமெய்ச் சைவத் துற்றிடல் பேறென் றுரைப்பர்நின்
திருவடித் தொழும்பிற்
குலவுமிப் பேறே பேறென வடியேன் கொண்டுளங்
களித்தல் சத்தியமே
சுலவுநற் றிருமந் திரமெழுந் துறைசைச் சுப்பிர
மணியதே சிகனே. (௯)

ஆயநால் வேதச் சிரத்தினு மன்ப ரகத்தினு
மருளின்வீற் றிருந்தன்
மேயசீ ரடியேன் விழைந்தவா மேவி விளங்குமிச்
செவந்திமா நகரிற்
பாயசீர் திருத்தா ளூடொறும் பல்காற் பணியவீற்
றிருந்தல்பே ரருளே
ஆயவம் மலர்த்தாள் வாழ்கநற் றுறைசைச் சுப்பிர
மணியதே சிகனே. (௭)

மாலை முற்றிற்று.

பின்பு ஞானதேசிகர், துவிதீய ஆசிரியராகிய நமசிவாய தேசிகசுவாமிகளுடன் நாடோறும் பாவநாசமென்னும் பதியிற் சென்று பொருநைநதிநீராடித் திருக்கோயிலிற்சென்று முக்களா லிங்கரையும், உலகம்மையையுந், தரிசித்து வணங்கிக்கொண்டு, செவந்திபுரத்திற் சிலநாள் வசித்திருந்து, அங்கு நின்றும் புறப்பட்டுத் திருக்குற்றாலம் என்னுந் திவ்வியநகரைச் சார்ந்து சித்திராநதி நீராடித் திருக்கோயிலிற் சென்று அங்கு சிவ பிரானைத் தரிசனஞ்செய்து, தமது திருமடத்திற் கெழுந்தருளி துவிதீய ஆசிரியராகிய முத்தம்பலவாணதேசிகசுவாமிகள் குரு மூர்த்தந் தரிசித்து அங்கு சிலநாள்வசித்திருந்து, அப்பதியினின் றும் அரிதினீங்கிச் சங்கரநாராயணர்கோவிலென்னுந் தலத்தை யடைந்து திருக்கோயிலிற்சென்று சிவபிரானைத்தரிசித்து, தமது திருமடத்திற்கெழுந்தருளி பஞ்சாக்கரதேசிகோத்தமருக்குப் பத் தாவதுபிற்றோன்றலாகிய வேலப்பதேசிகர் குருமூர்த்தந்தரிசனஞ் செய்துகொண்டு அங்குசிலபகல் வசித்திருந்து, அங்குநின்றும் புறப்பட்டு கரிவலம்வந்தநல்லூர் முதலியதலங்களைத் தரிசித்துக் கொண்டு அவ்விடத்து நின்றும் அரிதினீங்கி திருநெல்வேலி யென்னுந் திவ்விய சிவநகரை யடைந்து தம்பாற் சரண்புகும் அன்பர்களுக்குத் தீக்ஷையாதிகள் செய்துகொண்டு சிலநாள் அங்குவசித்திருந்து, திருச்செந்தூர் என்று பெயர்வழங்குஞ் சீரலைவாய் என்னுந் திவ்ய தலத்தையடைந்து சமுத்திரதீர்த்த நீராடித்திருக்கோயிலிற்சென்று சண்முகப்பெருமான்சரணிணைப்

பணிந்து, சாற்றரும் உழுவலன்புடன்தரிசனஞ் செய்து அங்கு சிலபகல் வசித்திருந்து, அங்கு நின்றும் அரிதினீங்கி வழி யிடையிற் பலதலங்களைத் தரிசித்துக்கொண்டு ஆளுடையார் கோயிலெனப் பெயர்வழங்குந் திருப்பெருந்துறையையடைந்து, துவிதீய ஆசிரியராகிய நமசிவாயதேசிக சுவாமிகளோடு திருக் கோயிலிற் சென்று ஆன்மநாதரையும், யோகாம்பிகையையுங், குருந்தமூலநாதரையும், மணிவாசகப்பெருமானையுந் தரிசித்துத், தமது திருமடத்திற் கெழுந்தருளி பின்வேலப்பதேசிகர் குரு மூர்த்தந்தரிசித்துக் கொண்டு அங்கு சிலகாலம்வசித்திருந்தனர்.

அக்காலத்தில், கோயில்கட்டளைப்பணி புரிந்துவரும் சுப்பிர மணியதம்பிரான்சுவாமிகள் ஞானதேசிகர் திருவருளாணைமேற் கொண்டு புதிதாகச் சினகரம் அமைத்து மணிவாசகப்பெருமான் திருவுருப்பிரதிட்டைசெய்து, கும்பாபிடேகஞ் செய்வித்தனர். ஞானதேசிகர், துவிதீயஆசிரியரும், தம்பிரான் சுவாமிகளும், ஏனைய அடியார்களும்,பரிசனங்களும் உடன்வரத்திருக்கோயிலிற் சென்று சுவாமிதரிசனஞ்செய்துகொண்டு அங்கு நின்றும் அரிதி னீங்கி, வழியிடையிற் பலதலங்களைத் தரிசித்து வருகையில், திருப்பனந்தாள் என்னும் சிவநகரிலே அமர்ந்திருக்கும் காசி வாசி இராமலிங்கத்தம்பிரான் சுவாமிகள், ஞானதேசிகர் எழுந் தருளுதலைக் கேள்வியுற்றுவந்து எதிர்கொண்டு, தமது வாசஸ் தானமாகிய அத்திருநகருக்கு எழுந்தருளுமாறு வேண்ட, ஞானதேசிகர்அங்கெழுந்தருளி திருக்கோயிலிற்சென்று சுவாமி தரிசனஞ்செய்து, காசிமடத்திற் கெழுந்தருளி குருபூசை மகேசுரபூசைமுதலானவைகள் அச்சுவாமிகள்சிறப்புற இயற்றத் தாம் துவிதீய ஆசிரியராகிய நமசிவாயதேசிகசுவாமிகள் உடன் வரப்பவனிகொண்டருளிக் குருதரிசனக்காட்சி யளித்தருளினர்.

பின்பு ஞானதேசிகர், அங்கு நின்றும் புறப்பட்டு திருவாவடு துறைக் கெழுந்தருளித் திருக்கோயிலிற் சென்று சுவாமி தரிசனஞ்செய்து, தமது திருமடத்தினை யணைந்து மடத்து வடக்கு வாசலின் மேல்பால்கோயில் கொண்டெழுந்தருளி

யிருக்குஞ்சிவப்பிரகாசவிநாயகரைத் தரிசித்து, உள்ளே சென்று, திருமாளிகைத்தேவரைத் தரிசனஞ் செய்து, ஆதின பிரதமாசாரியராகிய நமச்சிவாயதேசிகோத்தமர் குருமூர்த்தந்தரிசனஞ் செய்து ஒடுக்கத்திற்கெழுந்தருளி யாவருக்குங் குருதரிசனக் காட்சி யளித்தருளினர். பின்னர் ஞானதேசிகர், அங்கு தாம் வந்தசுபதினத்திற்குப்பதினொன்றாவதுதினம் பஞ்சாக்கரதேசிகர் மகாத் தலைநாட்குருபூசை மஹோத்ஸவம் வந்துறுவதை ஆராய்ந்து மூலநட்சத்திரங் கூடியசுபதினத்திலே வழக்கப்படி அன்னக்கொடி யேற்றி நமச்சிவாயமூர்த்திகளுக்கு அந்நாள்முதல் பத்துநாள் வரை ஒவ்வொருநாளும் காலை மாலை யிருபொழுதும் அபிடேகாதி யாராதனையும் மாகேசுர பூசையும் சிறப்புற இயற்றி, மறுநாள் முற்பகலில் நமசிவாயமூர்த்திகளுக்கு நித்திய பூசை வழக்கப்படி செய்து, துவிதீய ஆசிரியராகிய நமசிவாய தேசிகசுவாமிகளும், தம்பிரான்சுவாமிகளும், ஏனைய அடியவர்களும், அன்பர்களும், உடனிருந்து அமுதுகொள, தாம் திருவமுதுசெய்தருளினர். பின்பு ஞானதேசிகர் அன்றையதினம் பிற்பகற் பொழுதெல்லாம் ஆதீனபரமமுதற்குரவராகிய பஞ்சாக்கர மூர்த்தியின் அருளுபதேச அருந்திறன்மாண்பினை விரித்துரைத்து.

* * * * — †"மாலைவா

௭௧. மாமுனிவர்தூய்மை மருவுநறு நீராட்டி
யேமுறுமெய் யொற்றுடை யிட்டதற்பின்—காமன்வலி
௭௨. வென்றதிறங் காட்டி விளங்குறுநற் றூயாடை
யொன்ற வரையி லுடுத்தருளி—நன்றமையு
௭௩. மாதனத்து மேவி யருகமரும் வட்டகையின்
மாதனத்தி னூறும் வயங்குவதாய்—மோதும்
௭௪. பசுமலநீ ருக்கியுயர் பண்பே யருளப்
பசுமலநீ ருக்கியமை பண்பாய்—வசுவி

† இஃதாதீனவித்துவான் மீனாக்ஷிசுந்தரம்பிள்ளையியற்றிய இந்த ஞானதேசிகர் நெஞ்சுவிடுதூது என்னும் நூலிலுள்ளது.

௭௫. னடுத்தவையெல் லாம்புனித மாக்குதிரு வெண்ணீ
றெடுத்தவை யவங்குலவ வேற்றி—விடுத்தசுட

௭௬. ரொன்பான் மணியு மொளிர்தருசிந் தாமணியும்
வன்பார் கவுத்துவ மாமணியு—மன்பி

௭௭. லொருதிரண மாக்கு முருத்திராக் கங்கள்
பொருவில் சிரமுதலாப் பூண்டு—கருது

௭௮. மிருவ ரழுக்கருப்ப வேற்றசடா மோலி
யிருவரிரு கைகொடுப்ப தேற்றே—திருவமரும்

௭௯. 0 மார்ப னயன்காணு மாபரன்றன் கோயிலுக்கு
0 நார்பணவர் தற்சூழ னண்ணியே—ஆர்வமிகுஞ்

௮௦. 0 சிந்தையோ டெம்மான் தெரிசனஞ் செய்துவந்து
0 பந்த மகற்றுபஞ் சாக்கரவர்—கந்தமிகும்

௮௧. 0 செந்தா மரைபோலுஞ் சேவடிகள் பூசனைசெய்
0 தந்தா ரணியோர்க் கருடாவே—சிந்தனைசெய்

௮௨. தெங்கண் மணிமோலி யென்னவொளிர் பாதுகைமற்
றங்கணெதிர் வைப்ப வவற்றிவர்ந்து—துங்க

௮௩. முரசு முழவ முருடு திமிலை
பரசு தடாரி படகம்—விரசு

௮௪. பலவு மெழுந்து பாம்பி முழங்க
நிலவு பிறவு நிகழக்—குலவு

௮௫. திருவா வடுதுறைவாழ் செல்வன்வந்தா னெம்மு
ளொருவா வொருவன்வந்தா னுற்றூர்—மருவு

௮௬. பிறப்புமுழு தொழிக்கும் பேராளன் வந்தான்
சிறப்பருள் செம்மல்வந்தான் றிண்பா—ருறப்புகுந்த

௮௭. துங்க மவிஞான சூரியன்வந் தானுயிரின்
பங்க மறுக்கும் பரன்வந்தா—னெங்கள்

௮௮. குருசாமி வந்தான் குணக்குன்று வந்தா
னருண்ஞான மூர்த்திவந்தா னன்பர்—பெருவாழ்வாந்

---

0 இவ்வடையாளமுள்ளவை இந்நூலாசிரியர் இயற்றியதாகும்.

௮௯. தம்பிரான் வந்தான் றழைகப் பிரமனிய
நம்பிரான் வந்தா னலமாரு—மெம்பிரான்

௯0. வந்தான்வந் தானென் றுமாண்பார் திருச்சின்ன
நந்தா வொலியெழுப்பி நன்குவர—முந்தா

௯௧. தாம்பெருக வாலவட்டந் தாலவட்டம் பற்றி
யாம்பெருக வோர்பான் மலிய—நிரம்பு

௯௨. முழுமதிய மேலமர்வான் முந்திமுயன் றென்ன
வெழுகவிகை செய்யுநிழ லெய்ப்பத்—தழுவு

௯௩. பெரும்புகழ்வெவ் வேறுய்ப் பெயர்ந்து பெயர்ந்து
விரும்பனுறத் துள்ளும் விதம்போ—லரும்பு

௯௪. பவளக்காற் சாமரைகள் பற்பலவு மொய்த்துத்
திவளத் தலைபனிப்புச் செய்ய—விவளவெனக்

௯௫. கோணுக தண்டமொடு கோணலுறு தண்டமு
நாணுறு நீங்கா நலங்காட்டப்—பேணு

௯௬. வலர்மகர தோரணங்க ளாயு மொலியல்
பலவு நெருங்கிப் பரம்பக்—குலவுதிற

௯௭. லோதுவார் பல்லோ ரொருங்குதே வாரங்க
ளோதுவா ராய்த்தாள மொத்தலொடு—போதவெளி

௯௮. வந்து மணிச்சிவிகை வாயோர் களங்கமிலா
விந்துநிறைந் தென்ன வெழுந்தருளி—முந்து

௯௯. மனைதுறந்தார் செஞ்சடிலம் வைத்தாரஃ தின்றி
நிலையு மழித்தலுற்ற நீரார்—புனையுமரைக்

௧00. கீளொடு கோவணத்தார் கேடில்கர பாத்திரத்தா
ராளொடுவாழ் வாயில் லறத்தமர்ந்தார்—நாளுஞ்

௧0௧. சரியை கிரியை தவயோக ஞானம்
விரியவனுட் டிக்கும் விருப்பார்—தெரிய

௧0௨. வுலகம் பழிபா துறவேடம் பூண்டா
ருலகம் பழிக்க வுவப்பா—ரிலகு

௧௦௩. திரிபுன் டாத்தார் திகழ்கண் மணியார்
விரிதரவுத் தூளனமே மேயார்—பரியு

௧௦௪. மானடியார் தொண்டி னமைந்தா ரளவாச்
சீர்புகழ்கோ யிற்பணியே சூழ்வார்—விரிவு

௧௦௫. மடியாருக் கன்னமுத லாதரித்து நல்கு
நெடியார் திபான நிறைந்தார்—கடியார்

௧௦௬. மலர்தொடுப்பார் தீபம் வயக்குவார் மற்றும்
பலர்புகழுஞ் சாத்திரங்கள் பார்ப்பார்—நிலவுபொரு

௧௦௭. ளாய்வார் வினவுவா ரங்கைகொட்டி நட்டமிட்டுத்
தோய்வாரா னந்தத் தொடுகடலில்—வாய்வார்

௧௦௮. துதிபா ரயன்முதலாச் சொல்லும் பிறரை
மதிபா ரருளே மதிப்பார்—கதியா

௧௦௯. ரிவர்மு னனைவோரு மேத்திக்கை கூப்பிக்
கவரடையா நெஞ்சங் கரைந்து—சிவசிவவென்

௧௧௦. றார்ப்பாரோர் சில்லோ ராகரவென் றானந்தம்
போர்ப்பாரோர் சில்லோர் புடைநெருங்க—வேர்ச்சிவிகை

௧௧௧. செம்மையுறு காட்சிச் சிவிகை கொடுத்தடைந்தார்
தம்மை யியக்குவார் தாங்கிவர—வெம்மைக்

௧௧௨. கதிர்பன் னிருகோடி காணவெளிப் பட்ட
முதிர்விற் பெருந்தீப மெய்யப்ப—வதிர்சிலம்பிற்

௧௧௩. பொன்னங்கொம் பன்னார் புகுந்துநீ ராசனஞ்செய்
தன்னம் பெயர்ந்தாங் கபலோதுங்க—முன்னம்

௧௧௪. விரைமலர்கள் சிந்தி விரைச்சாந்தம் வாரிப்
புரையறப்பெய் வாரும் பொலிய—வுரைசிறந்த

௧௧௫. மெய்கண்டான் சந்ததிக்கு மேன்மேல் விளக்கமுறப்
பெய்கண்டா னுப பெருமானே—வையம்

௧௧௬. புகழ வருங்குரவர் போரோறே ஞானந்
திகழ வவதரித்த தேவே—யிகழ்வில்

ககஎ. வரமணியே யெங்கள்பெரு வாழ்வே யருட்சுப்
பிரமணிய தேசிகனே பெட்பி—னுரமணிய

ககஅ. முன்னமே செய்தோ முயங்கு தவத்தையினி
யென்ன குறையுடையோ மென்பாருஞ்—சொன்னகதிர்

ககக. முன்னமிரு ளின்றுமு முற்று முணர்ந்தோய்நின்
முன்னமிரு ளில்லாது முற்றுமென்பார்—நன்னயமார்

கஉ0. சித்தாந்த சைவமன்றிச் சேரமற் றுள்ளவெல்லாம்
சித்தாந்த மேலும் பிறப்பென்பா—ரித்தானி

கஉக. பெற்றபே றுண்டோ பெருவானி னீபயில
வுற்றநா ளாதி யுரையென்பார்—கற்ற

கஉஉ. குருமணியே யாரையுமாட் கொண்டு புரக்க
வருமணியோ வென்று வகுப்பார்—பெருகொளிசால்

கஉங. விண்மணியே ஞான விளக்கே யடியேங்கள்
கண்மணியே யென்று கரைதருவா—ரெண்ணுமுழு

கஉச மாயப் பெருஞ்சாரு வாகன்முத லோருமரு
ளேயப் பொலிவா ரினியென்பார்—தோயும்

கஉரு. பகுதி யளவே பகரைந் திரவோர்
தகுதிவெண்ணீ றென்றணியச் சார்ந்தார்—மிகுதி

கஉசு. யுனியா மெடுத்திங் குரைப்பதென நல்லா
யினிமாறில் சைவமே யென்பார்—கனிபுரியும்

கஉஎ. வேலைபொழிற் றான்பிரமன் வெய்ய நரகிவிடும்
வேலைபொழிற் றானியமன் மேன்மேலுஞ்—சாலவருள்

கஉஅ. வீசி யினைத்துயிர்க்கு மெய்ச்சுப் பிரமணிய
தேசிகன் செய்யுந் திறத்தென்பார்—மாசி

கஉகூ. றிருவா வடுதுறையே திக்கனைத்தும் போற்றப்
பொருவாத தென்று புகல்வா—ரருள்சான்மா

கங0. சில்லா மணியேமற் றிச்சுப் பிரமணியி
தல்லா துரைப்பதுள தாங்கொலென்பார்—வல்லபிரா

௧௩௧. னெற்றிக்க ணித்தமரு ளேய மெவனென்பார்
பற்றிக் கரும்புகொடு பையவந்து—முற்றி

௧௩௨. யொருவே ளுடற்றுமை யோர்ந்தென்பா ரம்மை
யிருவாள் விழியுமிரு கையாற்—பெருகப்

௧௩௩. புதையாமை தேர்ந்தென்பார் பொங்குதலை மாலை
யதையே யொழித்ததென்பா ராவா—கதைமாலும்

௧௩௪. பங்கயனு மூன்போற் பரனும் பரனுமென்
சங்கையடை யாமையாற் றானென்பார்—பொங்கு

௧௩௫. மதியொழித்த தென்னென்பார் மாசிலா ருக்கே
கதியருளற் கென்று கரைவார்—பொதியு

௧௩௬. மிதழி மணந் தோளிருறு தென்னென்பார் செவ்வா
யதுகமழ்த லாலென் றறைவார்—முதுமாறென்

௧௩௭. றேட்டி விட்டதென்னென்பா ரோட்டிவிடா னேனுயிர்
வீட்டி னுறலெவ் விதமென்பா—ரிட்டமுறு [கள்

௧௩௮. மாசடையா னென்னும் வழக்கிலையென் பாரென்று
மாசடையா னென்னல் வழக்கென்பார்—பேசுமொரு

௧௩௯. தோகைபிடப் பாலனெனச் சொல்லாமென் பாரரைசூழ்
தோகையிடப் பாலனெனச் சொல்லுமென்பார்—வாகை

௧௪௰. பரசுகைக்கொள் ளாத படியெவனென் பார்நம்
பரசுகைக்கொள் ளும்பரனே யென்பார்—விரசு

௧௪௧. மருள்விடங்கண் டங்கழித்த வாறென்னே யென்பா
ரருளமுதங் காணென் றறைவார்—தெருளு

௧௪௨. மடிநிலந் தோய்குவதென் னுமென்பார் தோயா
விடினியமன் றண்டகம் மெய்யின்—முடியப்

௧௪௩. படுமே யஃதுணர்ந்து பாரீரோ வென்பா
ரிடுமாறு சென்னிவைம்மி னென்பார்—வடுவரிய

௧௪௪. னென்பதேவ னென்பார்மெய் யேகம ருள்ளிருந்
தன்பி னமுது செய்த தாலென்பா—ரின்பமிகு

௪௯. மிந்தவிதம் யாரு மிபம்பித் துமித்துவரப்
பந்த மகற்றும் பவனிவந்து,

தமது மடாலயத்தினுள் ளெய்தி சிவப்பிரகாச விநாயகரை யுந், திருமாளிகைத் தேவரையுந், திருநமச்சிவாயதேசிகோத்த மரையுந், தரிசனஞ்செய்து, ஒடுக்கத்திற் கெழுந்தருளி ஆசனத் தமர்ந்து துவிதிய ஆசிரியராகிய நமசிவாயதேசிகசுவாமிகள் தமக்கு அபிடேகம், அருச்சனை, அலங்காராதிகள் செய்து நிபாராதனைபுரிய தாம் யாவர்க்குங் குருதரிசனக்காட்சி யளித் தருளினர்.

பின்பு ஞானதேசிகர், துவிதீய ஆசிரியராகிய நமசிவாய தேசிகசுவாமிகளோடு அங்கெழுந்தருளியிருந்து ஞானோபதேசஞ் செய்து வருவாராயினர். அங்ஙனம் ஞானோபதேசஞ் செய்து வரும் நாட்களில் சிதம்பரத்தின்கண் ஆறுமுகநாவலர் தம் கல்விக் கழகத்தில் தலைமை உபாத்தியாயராக அமர்ந்திருந்த யாழ்ப் பாணத்து வடகோவைச் சபாபதிபிள்ளை யென்பவர், திருவாவடு துறையையடைந்து ஞானதேசிகர்பால் மூவகைத் தீக்கையுஞ் சித்தாந்த சாத்திரோபதேசமும் பெற்றுச் சென்றனர். பின்பு அவர் சிலகாலஞ்சென்று ஞானதேசிகரையடைந்து தரிசித்து மெய்கண்ட சாத்திரம், பண்டாரசாத்திரங்களின் நுண்பொருள் ஞானதேசிகரிடத்துக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து சிலபகல் அங்கமர்ந்திருந்தனர். அக்காலத்தில் ஞானதேசிகர் அவர் தம் பிரசங்கசாதுரியத்தை நாடோறும் நன்குணர்ந்து பெரிதும் திருவுளமகிழ்ந்து அவர் தமக்கு நாவலர் என்னும் பட்டாபி தானத்தை அளித்தருளினர்.

பின்பு ஞானதேசிகர், சிலபகல்சென்று துவிதீய ஆசிரிய ராகிய நமசிவாயதேசிகசுவாமிகளை செழியநாட்டின்கண்ணும், சேரநாட்டின் கண்ணுமுள்ள சீடர்களுக்கு ஞானோபதேசம் செய்து வருமாறு பணித்தருள, ஞானதேசிகர்பால் அத்தேசிக சுவாமிகள், பிரியா விடைபெற்று வழியிடையிற் பலதலங்களைத்

தரிசித்துக் கொண்டும், ஆங்காங்கு தம்பால் சரண்புகும் சீடர்களுக்குத் தீக்கையாதிகள் செய்துகொண்டும், கல்லிடைக்குறிச்சியின் வடபாங்கருள்ள திருத்தளிச்சேரிக்குச் சென்று திருக்கோயிலையடைந்து மானேந்தியப்பரையும், வடிவாம்பிகையையுந், தரிசித்துத் தமது திருமடத்திற் கெழுந்தருளி துவிதீய ஆசிரியராகிய கனகசபாபதிதேசிகர் குருமூர்த்தந்தரிசனஞ் செய்து, அத்தலத்தில் சிலகாலம் சீடர்களுக்குத் தீக்கையாதிகள் செய்துகொண்டிருந்தனர். அங்ஙனம் சீடர்களுக்கு ஞானோபதேசம் செய்துகொண்டிருந்த தேசிகசுவாமிகள், அத்திருப்பதியிலே சித்திரைபானுவருடம் தைமாதத்துக் கார்த்திகை நட்சத்திரத்திலே, சிவபரிபூரணமுற்றருளினர். அங்ஙனம் துவிதீய ஆசிரியராகிய நமசிவாயதேசிக சுவாமிகள் சிவபரிபூரணமுற்றருளிய திருவருட்செய்தியை அடியார்சிலர்வந்து ஞானதேசிகர்பால் விண்ணப்பஞ்செய்ய, அதற்கு ஞானதேசிகர், கன்றுபிரிந்த புனிற்றுவினைப்போல திருவுளமிரங்கிப், பின்பு தமது பரமாசிரியரது பாதத்துணைமலரைச் சிந்தித்துக்கொண்டிருந்தருளினர்.

அக்காலத்தில் கேரளதேசத்தின்கண் அரசுவீற்றிருந்த ஆயிலியமகாராசாவுக்குப் பின்முடிசூடிய விசாகமகாராசா என்பவர், காசியாத்திரைசெய்து வருகையில் ஞானதேசிகரைத் தரிசிக்கவிரும்பித் திருவாவடுதுறையையடைந்து, மடாலயத்தின்கண் எய்தி ஆதீனப்பிரதமாசாரியராகிய நமச்சிவாயமூர்த்திகளையும், ஞானதேசிகரையும் தரிசித்துப் பெருமகிழ்வெய்தி இரண்டுதினம் அங்கமர்ந்திருந்து பின்பு ஞானதேசிகர்பால் பிரியாவிடைபெற்றுத் தமது நகரடைந்தனர்.

பின்பு ஞானதேசிகர், தமது ஞானோபதேசமரபு அங்குரித்தற்கோர் களைகண்ணாகிய துவிதீய ஆசிரியர் நியமனஞ் செய்யத் திருவுளங்கொண்டு, தமது திருக்கூட்டத்துத்தம்பிரான்களோடு உசாவி, அவர்களும் தாமும் நன்காராய்ந்து மதிக்கப்பெற்ற ஒருவரும், தம்பால் மூவகைதீக்கையுஞ் சித்தாந்த சாத்திரோபதேசமும் பெற்றவரும், துலாலூர் வடுகநாதபண்டார

மெனைபவர் புத்திரரும், அருணாசலமென்னும் பிள்ளைத்திரு நாமமும், அம்பலவாணனென்னும் தீக்ஷாநாமமும் உடையவரு மாகிய ஒருதம்பிரான்சுவாமிகளுக்குச்சர்வசித்துவருடம் தைமீ பதின்மூன்றாந்திகதியில் ஆசாரியாபிடேகஞ்செய்ய நிச்சயித்து பத்திரிகைபிரசுரித்தும், ஞானதேசிகர், தமது திருமேனிப்பாங் கினை நன்காராய்ந்து குறித்தசுபதினத்திற்கு முன்னரே அவ் அம்பலவாணத் தம்பிரான் சுவாமிகளுக்கு விதிப்படி ஆசாரியா பிடேகஞ்செய்து தாம் சர்வசித்துவருடம் மார்கழிமாதம் இரு பத்தைந்தாந் திகதியில் நிகழும் ஸ்திரவாரமும் சுவாதி நக்ஷத் திரமும் அமரபக்ஷம் நவமியுங் கூடியதாகிய சுபதினத்திலே சிவபரிபூரணமுற்றருளினர். இந்த ஞானதேசிகர் சிவஞான சித்திக்கு ஓர் பதவுரையுஞ்செய்தருளினர். இதுபின்னதுந்நிறுத்த லென்னும் உத்தி.

இந்த ஞானதேசிகர், சீகண்டபரமசிவன் அருளுபதேசம் பெற்ற திருநந்திதேவர்மரபில் இருபத்தாறுவது பிற்றோன்றல் என்பதூஉம்; இந்த ஞானதேசிகர்க்கு பத்தொன்பதாவது முற் றோன்றலாகியும், திருநந்திதேவர்க்கு எட்டாவது பிற்றோன்ற லாகியு முள்ளார் உமாபதிசிவாசாரியசுவாமிகள் என்பதூஉம், இத்தேசிகோத்தமருக்குத் துவிதீய ஆசிரியர் நமசிவாயதேசிக சுவாமிகள் என்பதூஉம், இவ்வாசிரியசுவாமிகளுக்கு முற்றோன் றலாகியும், பிற்றோன்றலாகியுமுள்ளார் அம்பலவாணதேசிகர்கள் என்பதூஉம், திருநந்திமரபில் இருபத்தைந்தாவது பிற்றோன்ற லாகிய அம்பலவாணதேசிகசுவாமிகளாகிய தமது ஞானசிரியர் பால் மூவகைத்தீக்கையுஞ் சித்தாந்தசாத்திரோபதேசமும்பெற்ற வராகிய திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம்பிள்ளை யென்பவருக்கு இத்தேசிகோத்தமர் தமது ஆதினமகாவித்துவானென்னும் பட் டாபிதானங்கொடுத்தருளினர் என்பதூஉம், அவருக்குப் படிக லிங்கபூசை எழுந்தருளப்பண்ணிக் கொடுத்தருளினர் என்பதூ உம், பிறவும் பின்வருஞ் செய்யுட்களால் இனிது விளங்கும்.

அவை வருமாறு:—

ஞானதேசிகர்மீது

திருவாவடுதுறை ஆதீனம் மகாவித்துவான்

மீனாக்ஷிசுந்தரம்பிள்ளை அவர்களியற்றிய

நெஞ்சுவிடுதூது.

வரமணிமா டத்தா வடுதுறைவா முஞ்சுப்
பிரமணிய தேசிகன்பாற் பெட்புற்—றுரமணியி
னுய்ந்துதஞ்ச மாயொருகோட் டண்ண லருட்கிலக்கு
வாய்ந்துநெஞ்சே தூதுசென்று வா.

* * * —உரவாரும்

உ௫உ. உன்னைப்போல் வேறுதுணை யுண்டோ குரவர்பிரான்
றன்னைப்போல் வேறொருவர் தாமுளரோ—வன்னை

உ௫௩. யனைய குரவர்பிரா னுன்ற மரபு
நினைய வகுத்துரைப்ப னீகேள்—புனையவரு

உ௫௪. காமர் கயிலையிற்சீ கண்ட வுருத்திரன்பா
லேமவருள் பெற்றநந்தி யெம்பெருமான்—றேமில்

உ௫௫. வழியே வருசனற்கு மார முனிவர்
பழியேது மில்லாத பண்பிற்—கொழியருள்சால்

உ௫௬. சத்திய ஞான தரிசனிகள் யாவோருந்
துத்தியம் செய்பரஞ் சோதியார்—நித்தியமார்

உ௫௭. மெய்கண்ட தேவர் விளங்குமரு ணந்தியார்
பொய்கண்ட யாரும் புனைமருஞ்சீர்—மொய்கடந்

உ௫அ. தைவாழ் மறைஞான சம்பந்தர் தாளின்மதி
கைவா முமாபதியார் காட்சிமிகு—செய்ய

உ௫௯ வருணமச்சி வாய ரமைசித்த ராய
கருளில் சிவப்பிர காசர்—தெருள்செய்

உ௬௦ குருநமச்சி வாயர் குலவுமறை ஞானர்
திருவம் பலவாண தேவர்—மருவு

உ௬௧ முருந்திர கோடியா சொப்பில்வே லப்பர்
திருத்தி யினிதருளச் செய்து—பொருத்து

உ௬௨ மிருகுமா சாமிகன்மா சில்லா மணியா
மருமை யிராமலிங்க ரன்பார்—பெருமையிரு

உ௬௩ வேலப்ப ரென்று மிளிர்திருச்சிற் றம்பலவர்
பாலக்க ணில்லம் பலவாணர்—சால

உ௬௪ வருள்சுப் பிரமணிய ரம்பல வாணர்
தெருள்சுப் பிரமணிய தேவர்—பொருள்சான்

உ௬௫ மாபு நிலைபிறுவால் வார்த்தைநீ பேசப்
பரவு சமயம் பகர்வேன்.

ஸ்ரீசேக்கிழார் பிள்ளைத்தமிழ்.

பாயிரம்.

குருவணக்கம்.

ஓங்குகயி லாயபரம் பரைநந்தி யடிகட் குருமரபெட்டாவ துயிற் றோன்றலா யெங்க—ளுயர்திருவா வடுதுறைச்சுப் பிரமணிய குரவற் குற்ற பத்தொன் பதாவதுமுற் றோன்றலாய்ப் பொலிந்து,

தேங்குசிவப் பிரகாச முதலியவாய் மலர்ந்து திகழுமா பதிசிவனே குன்றையுற மேவித்—திருந்துமோர் வளங்கொண்டு பெருமையின்மேலாகிச் சிறத்தலாற் செம்மேனிக் குமரவேளொத்தும்,

பாங்குபெறத் துறைக்கையொடார் கோட்டத்த னுய பயிற்சி யினக் குமாவேடிருத் தமைய னெத்தும்—பாவுசேக் கிழா னெனும்பேர் பரித்தவினக் கணேசப்பண்ணவனே யினிதுயிர்த்த திருத்தாதை யொத்தும்,

வீங்குபுகழ் படைத்தவருண் மொழித்தேவன் புராணம் விரித்துரைத்தா னவனடிதாழ்ந் தென்னறிவிற் கேற்ப—மேய பிள்ளைத் தமிழெனவொன் றுரைப்பலஃ தறிவான் மிக்கவர்தங் குழாத்தினுக்கு மிக்கநகை தருமே.

தேடுகயி லாயபரம் பரைத்துறைசை மேயநமச் சிவாயன் றன்னைக், கூடுதன்முன் னுள்ளபதி ஞல்வருமுற் றேருன்றலெனக் கொண்டா ரவ்வா, றூடுதவிர் தரக்கொண்டும் பிற்றேருன்ற லென வுங்கொண்டுவக்குங் கோமான், நீடுபெரும் புகழுமைசுப் பிர மணிய குருமணியை நினைந்து வாழ்வாம்.

திருவாவடுதுறை ஆதீனம் வித்துவான்

சபாபதிநாவலரவர்களியற்றிய

செய்யுள்.

அருட்பெருங் குருவா யம்பல வாண வமலனு ளப்பில்பே ருளின், அளித்தவா சிரிய வொருதனி முதன்மை யப்பா னேகொளவருளி, இருட்பெருங் கடலி னுமையெடுத் தாள வேன்றுநம் விபூதிகளாகி, யெழுந்த ளபா சுப்பிர மணிய னென் னிலரவருள்யா மொன்றுப்ப், பொருட்பெற வாரே மவர்க்கெ லாம் பரமாய்ப் பொருந்திடு சம்புபக் கடனைப், புகரற நின்ற் சிவ குரு வாவேம் போதரா தாசங்கை யிதன்கட் டெருட்பெற வுண ர்தி சென்றடி யேமைத் தெருட்டிமெயப் பூரணமுற்றுய்த், திருத் தத துறைசைச் சுப்பிர மணிய தேசிக ராசசின் மயனே.

திருவாவடுதுறை ஆதீன கர்த்தராய் வீற்றிருந்தருளியஇச் சுப்பிரமணிய தேசிகசுவாமிகளிடத்தும் அவ் ஆதீனமகா வித்து

வான் மீனாட்சிசுந்தரம்பிள்ளை அவர்களிடத்துங் கல்விபயில் மாணவர்களிற் சிறந்தவரும், சென்னை, பிரஸிடென்ஸி காலேஜ் தமிழ்ப்பண்டிதருமாகிய உத்தமதானபுரம் வே. சாமிநாதையர் அவர்களால் இயற்றிய ஸ்ரீமீனாட்சி சுந்தரம்பிள்ளை பிரபந்தத் திரட்டின் உரிமையுரை.

நேரிசை ஆசிரியப்பா.

பூமலி துணர்ச்சினைக் காமலி கூலப்
பொன்னிமா நதிபாய் சென்னிநாட் டிடைவளம்
நிறையூ ராய வுறையூர்க் குணபாற்
கருமுதிர்ந் தயவுறு மொருமக ளனூரறத்.
தாயான செல்வன் றங்குமாந் தலமாய்த்
துரிசிரா திலங்குந் திரிசிரா மலையில்
உதித்தொளி மிகுத்தே கதித்துறு மணியும்
மலர்தொறு நறவுகொள் வண்டின மேய்ப்ப
பலரிடைக் கல்வி பயின்றோங் கண்ணலும்
யாவரு மென்று மேவரும் புலமை
வாய்ந்துநூல் பலமிக வாய்ந்துகிளை ரேந்தலும்
சுவைசெறி பனுவல்க ளவைபல வியப்ப
எளிதிற் பாடிய வளிகிளர் குரிசிலும்
புவித்தலம் வியப்பச் சிவத்தல புராணம்
பலசெய் தோங்குசீர் படைத்தசி ரியனும்
நலமா ணாக்கர் பலபேர்ப் புரந்தே
அன்னவர் குழாத்திடை நன்னர் மேவி
நூல்பல பயிற்றிச் சால்புறு பெரியனும்
அருத்திகூ ரெனைபரு கிருத்திநூல் பலசொற்
றல்ல லகற்றிய நல்லிசைப் புலவனும்
நன்றிபா ராட்டுநர் நபோநா யகமும்

நிலமலை நிறைகோன் மலர்நிகராய்
மாட்சிசால் புகழ்மீ னாட்சிசுந் தரம்பே [ரெறி
ருடையனுங் குவளைத் தொடையனுஞ் சுவை
இதிலுள நூலெலா மிரும்புமா கவிஞனு
மாயவன் றனைத்தன தவைக்களத் தலைவனாச்
செய்தவ னெவனோ கைதவமிலாது
சொன்மழை சொரியுமச் சுகுணமா மலைபாற்
பொன்மழை பொழிந்தருள் பூத்தவ னெவனோ
செய்யுன்மற் றிவன்போற் செய்குநர் யாரிவன்
செய்யுள்போ லினித்தில தெரியின்மற் றவையென்
றுணருமா றெவர்க்கு முரைத்தவ னெவனோ
பன்மா ணவர்கட் கின்மாணணியூ
னுடுக்கையா திகளளித் துறுதரந் தெரிந்தே
யிலக்கியம் பலவு மிலக்கண மைந்து
ஞானநூல்களு நவின்றவ னெவனோ
வடமொழி தென்மொழி வாய்ந்தபன் னூல்கள்
கற்றவர் சிரகர கம்பிதஞ் செயவாங்
குற்றதுன் பொருளெடுத் துரைத்தவ னெவனோ
ஆதுலர்க் கெய்ப்பில் வைப் பாயவ னெவனோ
என்னுள மகலா திருப்பவனெவனோ
எண்ணிய தலத்திடு புண்ணிய னெவனோ
திரிகூ டப்பெயர்ச் சிலம்பயற் றோன்றித்
துறைசையம்பறுசெய் நிறைதவப் பபனுச்
செப்புற மெய்ப்புகழ்ச் சுப்பிர மணிய
தேசிகப்பெயர்கொடு திகழ்ந்தவ னெவனோ
அன்பருக் குலவா வின்பரு ளமித்தந்
தீபகம் போன்றவ னெவனோ வவன்றன்
ஞாபகச் சின்னமா நன்கிதை
அன்புட னுரிமை யாக்குவ னினிதே.

திருவாவடுதுறை ஆதீனவித்துவான்
மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள்
இயற்றிய
திருவிடைமருதூர் திரிபந்தாதி

குருவணக்கம்.

கட்டளைக்கலித்துறை.

பெரும்புங் கவர்புகழ் கோமுத்தி வாழ்சுப் பிரமணிய
வரும்புங் கவன்பதம் யான்றொழ வென்கை யருட்குறியோன்
றிரும்புங் கரைய வெடுத்தளித் தானதை யேத்தல் செய்வேன்
கரும்புங் கனியு மெனவன்பு சாருங் கதியுமுண்டே.

ஷை உத்தமதானபுரம்
வே. சாமிநாதையர் அவர்கள்
ஞானதேசிகரைத் துதித்த பாடல்கள்

வெண்பா.

ஞானசம் பந்த னென்பே னன்கமைவா கீசனென்பேன்
ஈன முறு சுந் தரனென்பேன்—மானமணி
வாசக னென்பேன் வரசுப் பிரமணிய
தேசிகனை நாயேன் றினம். (௧)

சுந்தர மூர்த்தியென் றுந் தூயமெய்கண் டானென்றும்
முந்தறிஞர் சொல்லு முறைக்கேற்ப—எந்தமையும்
பேதிலா தாள்சுப் பிரமணிய தேசிகன்றான்
சோதிநாள் சேர்ந்தானந் தோ. (௨)

சருவசித்தாண் டிற்றனுமா தத்திருபத் தைந்தில்
வருசனியோன் பான்திதி சுவாதி—திருநாளாம்
பேரனவு சீர்ச்சுப் பிரமணிய வள்ளல்பரி
பூரண மான பொழுது. (௩)

திருவாவடுதுறை ஆதீனம்
ராயசம்-பொன்னுசாமிசெட்டியார் அவர்கள்
இயற்றியது.

ஏர்தருசாலிவாகனசகாப்தமாயிரத்தெண்சுதத்தோடு
சார்தருபத்திற்சருவசித்தாண்டுதகுமதிதனுவிருபத்தைந்
தார்தருதேதிசோதிநாடிரமாமணிகிளர்வாரமித்தினஞ்சீர்
சேர்தருதுறைசைச்சுப்பிரமணியதேசிகன்பூரணதினமே.

வெண்பா.

வாழிதுறைசை துணை வந்தபிள்ளை யார்மலர்த்தாள்
வாழியவன் றந்தையுனை மற்றுமுள்ளோர்—வாழியவே
வாழிகயி லாய மரபுநீ டூழியினும்
வாழிகுரு லிங்கசங்க மம்.

வாழ்க நந்தி பிரானடி வண்மலர்
வாழ்க மெய்கண்ட தேவன் மலர்ச்சரண்
வாழ்க பஞ்சாக் கரகுரு வரன்பதம்
வாழ்க நந்தி மரபென்றும் வாழியே.

சுப்பிரமணியதேசிகர் சரித்திரம்,
முற்றிற்று.

மெய்கண்டதேவர் திருவடிவாழ்க.
சிவஞானயோகிகள் திருவடிவாழ்க.